# தேவாய் நதி தீரம்

ஸ்ரீ வேணுகோபாலன்



Edited By A.K

# முகப்பு உரை

ஸ்ரீவேணுகோபாலன்

தாய்லாந்து நமக்குக் கிழக்கே 3200 கி.மீ. யில் இருக்கும் நாடு!

இயற்கை வளம் ததும்பும் அழகு நாடு!

மக்களும் அழகு நிரம்பியவர்கள்

இந்த நாடு புத்த மதத்தைக் கடைப்பிடிக்கும் நாடு!

ஆனால் அதற்கு முன்பாக இங்கே இந்து மதம் பரவி அதன் பண்புகளும் ஒழுக்க முறைகளும் மக்களின் அன்றாட வாழ்க்கையில் ஆழ்ந்து பதிந்துவிட்டன.

இந்த நாட்டிற்கு நான் பலமுறை சென்றிருக்கிறேன். கடைசி முறை பாங்காக் சென்ற போது, பிரசித்திப் பெற்ற குவாய் நதி வரை போய் வந்தேன்.

இந்த நதியும், இதன் பாலமும் ஏற்கெனவே ஒரு ஆங்கில படத்தில் வந்து அழியா வரம் பெற்று விட்டன.

"The Bridge on the River Kwai"

பிரசித்திப் பெற்ற அந்தப் பாலத்தைப் பார்ப்பதற்காக பாங்காக்கிலிருந்து 320 கி.மீ. பிராயாணம் செய்து போயிருந்தேன்.

இப்போது அது ஒரு யாத்திரைத் தலமாகப் போய் விட்டது.

Edited By A.K

காரணம் இரண்டாவது உலக யுத்தத்தின் போது, ஜப்பானியர்கள் தென் கிழக்கு ஆசியாவின் பெரும் பகுதிகளைப் பிடித்துக் கொண்டு பர்மா வரை வந்து விட்டார்கள்.

இனி அவர்கள் இந்தியாவுக்குள் நுழைய வேண்டியது தான். இதற்கான ஆயத்தங்களைச் செய்ய ஆரம்பித்தார்கள். தாய்லாந்திலிருந்து பர்மாவுக்கு நிலமார்க்கமாகச் செல்ல, நடுவே மலைத் தொடரைத் தாண்ட வேண்டும்.

அது கடினமான காரியம்.

ஜப்பானியர்கள் இதற்கு ஆலோசனை செய்தார்கள்.

ஏற்கெனவே தாய்லாந்தில் உள்ள கஞ்சன்பரி வரை ரயில் பாதை இருந்தது.

இந்தப் பாதையை அதற்கு அப்பால் நீட்டி மலைகளை கடந்து போய் பர்மாவை அடைய விரும்பினர்.

யோசனை தோன்றிய நேரம், இரண்டாம் உலக யுத்த நேரம்!

ஆட்களும் கிடையாது, பொருள்களும் அதிகம் கிடைக்காத நேரம்.

ஜப்பானியர் தங்கள் ஆசியப் படையெடுப்பில் ஆயிரக்கணக்கான யுத்த கைதிகளைப் பிடித்திருந்தார்கள். இதில் வெள்ளைக்காரர்கள் அதிகம். பெரும்பாலும் இளம் வயதினர்.

இவர்களைத் தவிர மலேஷியாவில் ரப்பர் தோட்டங்களில் வேலை செய்யும் தமிழர்களையும் பிடித்துக் கொண்டு வந்தார்கள். (கிட்டத்தட்ட 60000 பேர்கள்)

வெள்ளையர்களையும், இந்தியர்களையும் இந்த ரயில் பாதை போடும்படி பலாத்காரம் செய்தார்கள்.

Edited By A.K

இரவு பகலாக இவர்கள் கடும் உழைப்பு உழைக்க வேண்டும்.

ஆனால் போதிய உணவு, இவர்களுக்குக் கொடுக்கப் படவில்லை. இதனால் பட்டினியால் வாடி வாடி, ஆயிரக்கணக்கானவர்கள் மாண்டார்கள்.

இவர்களது சடலங்களை இந்த குவாய் நதிக் கரையோரம் புதைத்தார்கள்.

பின்னர் யுத்தம் முடிந்தது, பிரிட்டனும், அமெரிக்காவும் வென்ற பிறகு. இந்தப் புதைகுழிகளில் இந்த இரு தேசத்தாரும் சரியான சின்னங்கள் வைத்து முறைப்படுத்தினார்கள்,

இறந்தவர் பெயர்களையும், வயதையும், நாட்டையும் புதைகுழி ஒவ்வொன்றின் மீதும் பொறித்து வைத்தார்கள்.

ஆயிரக்கணக்கான கல்லறைகள் நிறைந்த இடம் இந்த குவாய் நதி தீரம்.

அதைப் பார்ப்பதற்குச் சென்றேன் நான்.

அந்தக் கல்லறைகளை பார்ப்பதே ஒரு வேதனையான சோக அனுபவம்.

அதைச் சுற்றிப் பார்த்த பிறகுதான், தாய்லாந்து சரித்திரத்தை நான் படிக்க ஆரம்பித்தேன்.

தமிழ்நாட்டுக்கும் தாய்லாந்துக்கும் உள்ள தொடர்புகள் சிறிது சிறிதாகத் தெரிய ஆரம்பித்தன.

'ஒரு சித்திரக் கதை எழுதலாமே' என்று நினைத்தேன்.

அதன் விளைவுதான் இந்தக் குவாய் நதி தீரம் என்ற சரித்திர நாவல்.

Edited By A.K

# 1

பூரண சந்திரிகையின் மெல்லிய அழகு அந்த டிசம்பர் இரவை யௌவனமாக்கிக் கொண்டிருந்தது.

அந்தச் சிறு நகரமும், அதை அடுத்த இயற்கை வெளிகளும் பாலாக மூடிக் கிடந்தன.

நடுநிசி கடந்த வேளை.

ஒரு திடுக்கிடலுடன் விழித்துக் கொண்டேன். எப்போதும் ஆழ்நித்திரையில் லயித்திருப்பவன் நான்!

என் அதள பாதாள தூக்கத்திலிருந்து ஏதோ ஒன்று எழுப்பி வெளியே விரட்டி வருவது போலிருந்தது.

கண்களைக் கசக்கிக் கொண்டு திக் பிரமையில் சுற்றமும் பார்த்தேன்.

அந்த இரவு எனக்கு ஒரு பயங்கர அனுபவத்தைத் தரப்போகிறது என்று தெரியாது.

எழுந்து வந்து மூங்கில் சன்னல் வழியே உலகைப் பார்த்தேன்!

கஞ்சன்பரி என்ற அந்தச் சிறுநகர் ஒரு மோன நிலையில் உறைந்து கிடந்தது.

நகரைச் சுற்றி இருந்த இயற்கைக் கூட ஒரு நிசப்த லயிப்பில் தோய்ந்திருந்தது.

தூங்கும்போது கூட இந்தச் சப்தம் எனக்குள் கேட்டுக் கொண்டிருந்ததாக நினைப்பு.

அறையின் கதவை மெல்ல மூடினேன்.

'ரிவர் குவாய்' ஹோட்டலை விட்டு வெளியே வந்தேன்.

Edited By A.K

'ஹாய்' என்று சத்தம் கேட்டது.

திரும்பிப் பார்க்க, பகலில் என் சுற்றுலாவுடன் வந்த இஸபெல் என்னும் பெண் புன்னகை அழகுடன் என்னை நோக்கி வந்தாள்.

'யுத்த சமாதிகளுக்குப் போப் போறீங்களா!' என்று கேட்டாள்.

பெரிய ஆச்சரியம் எனக்கு ஏற்பட்டது. ஏனெனில் அங்கேதான் நான் போக ஆசைப்பட்டிருந்தேன்.

'எப்படி தெரியும்?' என்று ஒரு பிரமிப்புடன் கேட்டேன்.

'நீங்கள்தான் அந்த வழிகாட்டியை விடாமல் கேட்டுக் கொண்டிருந்தீர்களே!' என்றாள்.

உண்மைதான்!

'இங்கே சுமார் ஏழாயிரம் சமாதிகள் இருக்கின்றன! புதைக்கப்பட்டவர்கள் யாவரும் யுத்த காலக் கைதிகள்! இவர்கள் சாதாரணமாக இறக்கவில்லை! பட்டினியால் இறந்தார்கள்! அதனால் அவர்களது ஆவிகள் விடுதலை ஆகாமல் இங்கே சுற்றிக் கொண்டிருக்கின்றன! இதை எங்கள் புத்த குருமார்கள் சொன்னார்கள்! உங்களில் உள் சித்தச் (ஸைச்) சலனம் பெற்றவர்கள் இந்த ஆவிகளினால் பாதிப்பு அடைவார்கள்! இங்கே இவர்கள் தனியாக வரக்கூடாது! அதுவும் இரவினில் இரவு நேரங்களில் இங்கே அழுகுரலும் கூச்சலும் அடிக்கடி கேட்பதாக உள்ளூர்க்காரர்கள் புகார் கொடுத்திருக்கிறார்கள்! எச்சரிக்கை!' என்று வழிகாட்டி கூறியிருந்தார்.

Edited By A.K

அப்போது நானும், இன்னும் சிலரும் வழிகாட்டியிடம் கேள்விகளாகக் கேட்டோம்.

அதை வைத்துத்தான் இஸபெல் என்னை எடை போட்டிருக்கிறாள்.

"மேடம்! நான் அங்கேதான் போகிறேன்! என் உள் சித்தத்தில் சில துடிப்புகள் ஏற்படத்தான் செய்தன!" என்றேன்.

"ஹேய்! பியர்! இவர் அந்த சமாதிக்குப் போகிறார்" என்று உள்ளே பார்த்து அவள் கூறினாள்.

லவுஞ்சில் ஒரு மூட்டை போல் போர்வை போர்த்தி உட்கார்ந்திருந்த ஒரு இளைஞன், ஒரு தீவிர முகத்துடன் எங்களை நோக்கி வந்தான்.

இஸபெல்லுக்கு அந்தச் சமாதி இடுகாட்டைப் போய்ப் பார்க்க வேண்டும் என்று ஆசை! ஆனால் பியருக்குப் பயம்!

இவர்கள் சிறிது நேரம் வாதித்து விட்டு என்னைப் பின் தொடரத் தீர்மானித்திருந்தார்கள்.

வெளியே இறங்கி ஸயேங் சுடா சாலையில் தெற்கு நோக்கி நடந்தோம்.

ஒரு ரயில் பாதை மௌனமாக எங்கள் கூடவே வந்தது. எனக்கே மனசில் ஒரு திக் திக் துடிப்பு தலை எடுத்துக் கொண்டிருந்தது. சாலையில் நாங்கள்தான் மூன்று உயிர் இயக்கங்கள்! பனி ஒன்று உதிர்ந்து மாயப் பொடிப் போல எங்கும் உலவியிருந்தது. சாலை தனி வழியாக எங்கோ போய்க் கொண்டிருந்தது. இடுகாட்டின் அறிகுறியாக அந்த நெடிய மரங்கள் கண்ணில் பட்டதும், பியர்! 'வேண்டாம், இஸபெல்!' அவள் கையைப் பற்றி இழுத்தான்.

Edited By A.K

இஸபெல் அவனை விடாப்பிடியாக இழுத்தாள்! இருவரும் பிரெஞ்சில் சண்டை போட்டுக் கொண்டார்கள்.

இடுகாட்டின் காம்பவுண்டை நெருங்கினோம்! எங்கள் உரையாடல்கள் அத்தனையும் நின்று விட்டன.

நான் அதன் வாசலுக்குப் போனேன். 'இஸா உள்ளே போகாதே! என்று பியர் அவளை வலுக்கட்டாயமாக நிறுத்தினான்.

அந்த இடுகாடு வெறும் மண்பூமிதான்' எனினும் ஏதோ ஒரு வித்தியாசத்தில் அது தோன்றியது. பிரமித்துப் பல கணங்கள் நின்றேன்.

உள்ளே நுழைந்தேன்.

இரண்டடி வைத்திருப்பேன்.

ஒரு தீனமாக அழுகுரல் என்னைத் தடும் என்று நிறுத்தியது. வேகமாக ஒரு உணர்வு என்னுள் குளிர் பாய்ச்சி ஓடியது. மிரட்சி அடைந்தாலும் அங்கேயே நின்றேன். ஒரு முறை திரும்பிப் பார்த்தேன். வாசல் பக்கம் இஸாவையும் பியரையும் காணவில்லை. அழுகுரலைக் கேட்டு ஓடி இருக்க வேண்டும்.

நான் வேர் விட்டது போல் இறுகி நிற்க, சில விநாடிகள் அழுகை மறைந்தது.

என் கண்கள் அப்போது இடது புறமாகத் திரும்பின.

எனக்குப் பிரமையா, பாதிப்பா, அல்லது அச்ச உணர்ச்சியா, தெரியவில்லை.

அங்கே மண்டி வளர்ந்திருந்த ஒரு செடிக் கொத்தின் பின்னணியில் ஒரு உருவம் போல் தெரிந்தது.

Edited By A.K

என் சுவாசங்கள் நின்றன.

நடுக்கமிடும் நெஞ்சுடன் அந்தப் பக்கமே என் பார்வையை ஊன்றி வைத்தேன்.

பனி கலந்து பாதி தெரிந்தும் தெரியாமலும் இருந்தது அந்த உருவம்.

அசட்டுத் தைரியம் ஒன்று என்னைப் பற்றிக் கொண்டது.

கையைத் தூக்கி அங்கே நோக்கி 'ஹோ' என்றேன்! என் சப்தமே எனக்குத் தைரியம் கொடுக்கும் என்று நம்பிக்கை!

அடுத்த கணம் செடிகளின் வடிவங்களிலிருந்து விடுபட்டு அந்த உருவம் எழுந்தது.

சாதாரண உருவம் அல்ல!

பெரிய ஆகிருதியுடன் உருவம்!

நல்ல வீதியான அகலங்களில் நின்றது.

உயரமும் நெடிது.

நான் யோசிப்பதற்குள், அது ஆட்டமாகக் காலை ஒவ்வொன்றாக வைத்து என்னை நோக்கி வர ஆரம்பித்தது.

உடம்பின் புஜப் பகுதிகளும் பெரிதாக ஒரு தேர் தொம்பட்டம் போல ஆடின!

அந்த உருவம் 'ரொபாட்' போல நடையில் மெல்ல மெல்ல என் திசையில் வந்தது.

Edited By A.K

'ஸ்வத்தி!' என்று அது வாய்விட்டுக் கூறியதும்தான், என் பீதி அமிழ ஆரம்பித்தது.

'ஸ்வத்தி' என்பது ஒரு வரவேற்புச் சொல் என்று தெரியும்.

புன்னகை அந்த உருவ முகத்தை அழகு செய்ய வில்லை! பரந்த முகமும் பூஞ்சை மீசையும் அதன் தலையில் இருந்த அதுங்கிய குல்லாயும் என் மனதைப் பெரிதும் கிளறின.

ஒரு திபேத்திய லாமா போல் தென்பட்டது உருவம்! நிச்சயம் தாய்லாந்தியராக இருக்க முடியாது.

இரு கைகளையும் சேர்த்து விநயமாக ஒரு கும்பிடு போட்டேன்.

'நமஸ்காரம்' என்று வடமொழியில் சொல்லி, 'இங்கிலீஷ் தெரியுமா?' என்று கேட்டேன்.

தலை அசைத்தார் அவர்.

'நீங்கள் யார்?' என்றேன்.

'ஒரு புத்த பிட்சு' என்றார் மெல்லமாக.

'நீங்கள் ஏன் இந்த அர்த்த ராத்திரியில் இங்கே வந்திருக்கிறீர்கள்?' என்று கேட்டேன்.

சிறிய மிளிர்வுடன், இதே கேள்வியை நான் உன்னிடம் கேட்க முடியுமே!

'நீங்கள் யார்?' என்றார்.

'நான் இந்தியன்' என்று பெயர், ஊர், சொல்லி,

'சும்மா இந்தச் சமாதிகளைப் பார்க்க வந்தேன்' என்றேன்.

Edited By A.K

அவர் என்னை ஆழ்ந்து பார்த்தார். "நீ காரணம் இல்லாமல் வரவில்லை! காரணம் இல்லாமல் உலகில் எதுவுமே நடக்காது!" என்றார்.

"காரணம் எதுவும் இல்லை சுவாமி! காரணமில்லாமல் தான்வந்திருக்கிறேன்!" என்றேன்.

"அப்படியில்லை. காரணம் உனக்குத் தெரியாது! உனக்குப் புரிந்து கொள்ள முடியாது!" என்றார்.

"அப்படிக்கூட ஒரு நிலை உண்டா?"

"ஆமாம்! இல்லாவிட்டால் இங்கே இந்த நிர்மானுஷ்யம் பிரதேசத்திற்கு எங்கெங்கோ தேசத்தில் உள்ளவர்கள் வந்து உயிர் விடுவார்களா?" என்றார்.

"அவர்கள் யுத்தம் செய்ய வந்தவர்கள்!" என்றேன்.

மெல்லச் சிரித்தார் அவர்.

"அந்தக் காரணத்தையும் தாண்டி இன்னொரு காரணம் இருக்கிறது."

"அப்படியா சுவாமி! என்ன காரணம்?"

"அவர்களது முன் பிறவிகள்."

திடுக்கிட்டேன் நான்.

முன் பிறவிகளா?

"நீ ஒரு இந்தியன்! அதனால் சுலபமாக இதைப் புரிந்து கொண்டிருக்கிறாய். முன்பிறவி வினைதான் காரணம்."

"அதெப்படி சுவாமி, தம் முன் வினைப்படி யாராவது ஒருவர் இங்கே வந்து இறக்காலம். ஆயிரக்கணக்கான பேர்

வந்திருக்கிறார்களே! இவர்கள் எல்லோரும் ஒரே பொது முன் வினை இருந்திருக்குமா?"

"ஏன் இருக்ககக்கூடாது?

திடுக்கிட்டேன்!

அவர் தொடர்ந்தார்.

"நீ ஆங்கிலப் படிப்பு படித்தவன்! மேலை நாட்டு போதிப்பு உன் தலையில் ஏறியுள்ளது! அதனால்தான் முன் வினையை நம்பும் இந்தியனாக இருந்தும் அந்தக் கேள்வியைக் கேட்கிறாய்?" என்றார்.

நான் பதில் சொல்லவில்லை.

"இத்தனை ஆயிரம் பேர் இங்கே வந்து இறந்தார்களே அதற்கும் காரணம் உண்டு. 'ஆயிரம்' என்ற கணக்கைக் கண்டு மலைத்து விடாதே.

ஒரு பூகம்பம் வருகிறது. ஆயிரக்கணக்கானவர்கள் இறக்கிறார்கள். ஒரு வெள்ளம் வருகிறது ஆயிரக்கணக்கானவர்கள் மடிகிறார்கள். ஆயிரங்கள் கூட்டமாக இறக்கிறார்கள் என்பதற்காக நீ மலைத்து விடக்கூடாது! நிச்சயம் இவர்களுக்கு ஒரு முன் வினை உண்டு! அது ஒரு கூட்டான முன்வினையாகக்கூட இருக்கலாம்!"

"கூட்டான முன்வினை உண்டா சுவாமி!"

"ஏன் இருக்க முடியாது?"

"உங்களுக்குத் தெரியுமா?"

"தெரிந்துதான் பேசுகிறேன்".

"தயவு செய்து என்னிடம் சொல்லலாமா?"

Edited By A.K

'தாராளமாகச் சொல்லுகிறேன்!' என்றவர் என்னை ஒரு முறை பார்த்து தலையை ஆட்டிக் கொண்டார்.

'அதற்கு முன் ஒரு விஷயம்! சற்று முன் ஒரு அழுகுரல் கேட்டாய் அல்லவா?' என்றார்.

'ஆமாம் சுவாமி! ஒரு பெண்ணின் அழுகுரல்!'

'கேட்டாய் அல்லவா? அவள் எங்கே இருக்கிறாள் என்று பார்!'

நான் பிரமை அடித்தவன் போலத் திரும்பினேன். சமாதி பூமி முழுவதையும் பார்த்தேன்! ஒரு நிர்மானுஷ்யம்! யாரும் தென்படவில்லை. தூரத்தில் இருப்பார்களோ என்று உள்ளே நடக்க முற்பட்டேன்! அவரும் என் பின்னோடு நடக்க எனக்குத் தைரியம் ஏற்பட்டது.

இடுகாட்டின் அகல வாக்கில் போகும் போது, சற்றுத் தொலைவில் ஒரு நிழல் உருவம் தெரிந்தது.

மெல்லமாக அருகில் போனேன்! நான் போன சமயமும், ஆகாயத்தில் சற்று முன் மூடியிருந்த மேகம் விலகிய சமயமும் சரியாக இருந்தது! என் கண்களை நம்ப முடியவில்லை. அங்கே பளீரிட்ட நிலவொளியில் ஒரு இளவரசி நின்று கொண்டிருந்தார்! இளவரசிதான்! தலையில் கிரீடமும், கழுத்தில் அரசகுல ஆபரணங்களும் அணிந்திருந்தாள்! பிரமிக்க வைக்கும் அழகு!

மனம் குழம்பியது!

எனக்கே எதாவது நடந்து விட்டதா? நான் காலத்தின் முன்னும் பின்னும் போகிறேனா? என்னை இந்தப் புத்த பிட்சு ஏதாவது செய்துவிட்டாரா?

Edited By A.K

பல கேள்விகளும் பல கவலைகளும் தோன்ற, 'சுவாமி! இதென்ன, கண்ணால் நம்ப முடியவில்லையே! இவள் ஒரு அரச குலப் பெண்ணா?' என்றேன்.

'ஆமாம்! இவள் அரசகுமாரிதான்! இதே நாட்டில் வாழ்ந்தவள்தான்!'

'சுவாமி! இந்தப் பழங்கால அரசகுமாரிய ஒந்த இருபதாம் நூற்றாண்டு உலக யுத்த சமாதிக குக்கும் இவளுக்கும் என்ன சம்பந்தம்?'

'சம்பந்தம் இருக்கிறது! இல்லாவிடில் இங்கே வந்து நிற்பாளா? சமாதியில் அழுவாளா?' என்று சொல்லி

'சுநந்தா!' என்று அவளை அழைத்தார்.

அந்த அழைப்பைத் திடீர் என்று கேட்டால் போல் அவள் திடுக்கிட்டுத் திரும்பினாள்.

## 2

அந்த முழு நிலவு மேலைப் புறத்தில் சரிந்து கொண்டிருக்க, வெளிச்சம் எங்கும் ஒரு மருட்சியாகி விட்டது.

அந்த நேரத்தில் சுநந்தா என்ற சரித்திர இளவரசி அங்கு நின்றது என் உள் சித்தத்தைப் பெரிதும் பாதித்து விட்டது.

நானே நிஜமோ என்ற கிலேசமும் சந்தேகமும் எழுந்தன.

இதற்குள் அரசகுமாரி ஒரு பூ நிலா போல் எழுந்தாள். நீர் படிந்த கண்களுடன் திரும்பினாள். 'சுவாமி!' என்று நடுங்கும் கரங்களைக் கூப்பினாள்.

Edited By A.K

'இங்கே வராதே என்று எத்தனை முறை சொல்வது! போ, போ, வெளியே!' என்று கடுமையாகப் பேசினார். புத்தலாமா!

சுநந்தா தயங்கியவாறு நடந்தாள். புத்தலாமா அவள் பின்னால் போக, நான் மவுனமுடன் அவரைப் பின்பற்றினேன்.

சுநந்தா சர சர என்று நடந்து மறைந்தாள்.

வாசலின் உட்புறம் இருந்த சிமெண்ட் பெஞ்சில் அவர் அமர நானும் அமர்ந்தேன்.

லாமா ஒருவித வழிபாட்டில் இறங்கினார்.

மந்திர உச்சாடனங்கள் மெலிதாக குவாய் நதிச் சலனம் போல் வந்தன.

பிரெஞ்சுப் பிரயாணிகள் வெளியே இருக்கிறார்களா, என்ன ஆனார்களோ? தெரியாது.

புத்தக் குருவையே பார்த்துக் கொண்டிருந்தேன்.

கற்சிலை போல அவர் இப்போது ஆகிவிட்டதால் உச்சாடனங்கள் நின்று விட்டன.

ஒரு அசைவு இல்லை.

இடுகாட்டில் அஃறிணையோடு ஒன்றாகி விட்டார்.

கடந்த சம்பவங்களை நினைத்தேன். ஆச்சரியமாகவும், அற்புதமாகவும் தோன்றின. அதே நேரம் இந்தப் புத்த குரு மீது எனக்கு மதிப்பு கூடியிருந்தது. அவரிடம் ஏதோ சக்தி இருக்கிறது. ஏதோ ஒரு வித்தியாசத் திறமை. அசாதாரணத் திறமை!

Edited By A.K

நான் படித்த, சிந்தித்த விஞ்ஞானங்கள் அனைத்தும் இவர் முன் சிதறிக் கொண்டிருந்தன.

காலத்தை இவர் வசப்படுத்தியவர் என்று தோன்றியது. கடந்தது. நிகழ்வு எதிர் வரவு எல்லாவற்றையும் இவரால் இப்படி வேண்டுமானாலும் திருப்ப முடியும் என்று நினைத்தேன்.

என் மனசில் முன்பு இருந்த அச்சம் சிறிது தணிந்திருந்தது.

கண்ணை எப்போது திறப்பார் என்று காத்திருந்தேன்.

'சகோதரா!' என்று குரல் கேட்டதும், திடுக்கிட்டு பார்வையை இறக்கினேன்.

'ஒரு புத்த லாமா கோபமாகப் பேசக்கூடாது. அப்படிப் பேசிவிட்டால் அந்த வார்த்தை ஏற்படுத்திய வினையை அவர் தமது தியானத்தால் அழிக்க வேண்டும். அதைத்தான் நான் செய்தேன்!' என்றார்.

'ஏன் சுவாமி! தாங்கள் ஒரு லாமாவா?' என்றேன்.

'ஆமாம் திபேத்திலிருந்து வந்திருக்கிறேன். லாமா 'அநரிகா டோண்டுப்' என்பது இந்தப் பூத உடலுக்கு இடப்பட்ட நாமம்'.

'தாங்கள் இங்கே மடத்தில் வாழ்கிறீர்களா?'

'இல்லை!

'வேறு எங்கே?'

இங்கே இந்த இடுகாட்டில்தான்!'

Edited By A.K

அந்த வார்த்தை என்னைக் கலக்கியது. இவர் ஒரு ஆவியா? இங்கே இந்த இடுகாட்டில் உள்ள ஆவி உலகை நான் பார்த்துக் கொண்டிருக்கிறேனோ!

அந்தக் கேள்வியையே அவரிடம் கேட்க நினைத் தேன். நிறுத்திக் கொண்டேன்.

அவர் என்னைப் புன்னகை குலையாமல் பார்த்தார்.

'உன் யோசனைக்கு நான் பதில் சொல்கிறேன்' என்று கூறி 'நீ பார்த்திருப்பது எல்லாம் உண்மை! உனக்கு ஏற் பட்ட அனுபவங்கள் எல்லாம் உண்மை!' என்றார்.

திரும்பவும் எனக்கு அதிர்ச்சி.

என் மனத்தில் எழுந்த கேள்வியை அவர் அறிந்து கொண்டு விட்டாரே!

'சுவாமி! என் மனதை எப்படி அறிந்தீர்கள்?'

அவர், தம் உடலை நெகிழ்த்தி, 'உனக்குச் சந்தர்ப்பம் வரும் போது சொல்கிறேன்! இனிமேல் நீ இங்கே இருக்க வேண்டாம்! நான் ஆற்றங்கரைக்குப்போகிறேன்! பிரம்ம முகூர்த்தம் வந்து விட்டது! குளித்துவிட்டு தியானத்தில் அமர வேண்டும்! என்றார்.

அவர் எழுந்திருக்க, நானும் எழுந்தேன்.

'ஏன் சுவாமி, நான் ஏன் இங்கே இனி இருக்கக் கூடாது?' என்றேன் தாபத்தோடு.

அவர் திரும்பினார்.

'உன் மனத்தின் பலத்தைப் பொறுத்தது அது! இங்கே உன்னை வீழ்த்தக்கூடிய துர் ஆவிகள் இருக்கின்றன!'

Edited By A.K

'அப்படியா?'

'ஆமாம்!'

'அப்படியானால் நீங்கள் இங்கே ஏன் வருகிறீர்கள் சுவாமி?'

'அதுவா? ...... அதை ..... சொல்ல வேண்டாம்..... என்று நினைக்கிறேன் ஏனெனில் நீ கலங்கி விடுவாய்!'

'ஏன் சுவாமி?'

'நீ படித்திருக்கிறாய்! ஒன்று கேட்கிறேன்! இரண்டிலிருந்து ஐந்து போகுமா?'

'ஏன் இதைக் கேட்கிறீர்கள் சுவாமி?'

'ஒரு காரணத்திற்குத் தான்! ஒரு சிறு பையன் தன் தந்தையைப் பார்த்து இரண்டிலிருந்து ஐந்து போகுமா? என்று கேட்கிறான். தந்தை என்ன பதில் சொல்வார்?'

'போகாது என்பார்!'

'சரி! பெரிய பையன் அதே கேள்வியைக் கேட்டால் அந்தத் தந்தை என்ன சொல்வார் தெரியுமா? இரண்டிலிருந்து ஐந்து போகும்! மைனஸ் மூன்று என்பார்?'

என் அறிவில் நுண்ணிய கீறல் ஏற்பட்டது. ஏதோ தத்துவத்தை அவர் சொல்லப்போகிறார் என்பது புரிந்தது.

'அவரவர் பக்குவங்களுக்கு ஏற்பதான் விடை அமையும்! பக்குவம் குறைந்தவர்கள் அதைப் புரிந்து கொள்ள முடியாது!'

'அப்படியானால் சுவாமி...'

Edited By A.K

'உனக்குப் பக்குவம் காணாது!' உடனே புரிந்து கொள்ள முடியாது! பல கோட்டைகளை நீ அழித்து வெளி வரவேண்டும்.

வாசலை நோக்கி நடந்தார். பின்பற்றினேன்.

சாலையைக் கடக்கும் போது இரு பக்கமும் பார்த்தேன். பிரெஞ்சுப் பயணிகளைக் காணவே இல்லை.

அவர் நதியை நோக்கிப் போக நானும் பின்பற்றினேன்.

என்னை விட்டு மறைந்து விடுவாரோ என்ற பயம் இருந்தது. அவரது எட்டிப் போடும் நடைக்கு ஈடுகொடுத்துச் சென்றேன். எனக்கு எத்தனையோ கேட்க வேண்டி இருந்தது. முக்கியமாக இந்தக் குவாயில் வந்து இறந்தவர் பற்றி.......

'சுவாமி! சுவாமி!' என்று கத்தினேன்.

திரும்பினார்.

'அந்த அரசகுமாரி யார்? அந்த இடுகாட்டிற்கு ஏன் வந்தாள் சுவாமி?'

'அது பெரிய கதை ஆயிற்றே' என்றார்.

'சுவாமி! இதை நான் அவசியம் தெரிந்து கொள்ள வேண்டுமே!' என்றேன்.

தலையை ஆட்டிக்கொண்டே பள்ளமாக இறங்கும் பாதையில் சென்றார்.

சிறிது நேரத்தில் குவாய் நதிக்கரை கண்களில் புலப்பட்டது.

Edited By A.K

ஒரு பெரிய கல் மீது அவர் உட்கார்ந்தார். நான் எதிரே சிறிது கல்லில் அமர்ந்தேன்.

'இந்த ஆறு சிறிது தூரம் போனதும் இதில் ஒரு சிற்றாறு கலக்கிறது. பிறகு இரண்டும் கை கோத்து ஒரு பெரிய நதியில் போய்க் கலக்கிறது!

நீ அட்லஸ்களில் பார்த்தால் அந்தப் பெரிய நதியை 'மெகாங்' என்று அழைப்பார்கள்.

இந்த நாட்டின் மிகப் பெரிய ஆற்றின் பெயர் 'சவோ ப்ரயா' இந்த ப்ரயா ஆறு வெகுதூரம் வரை கப்பல் போக்குவரத்துக்கு லாயக்கு. முற்காலத்தில் கப்பல்கள் இதில் மிதந்து வரும். அப்படிப்பட்ட கப்பல் ஒன்றில்தான் இந்தப் பெண் சுநந்தா பயணித்து வந்தாள். அப்போது அவள் ஒரு அரசகுமாரி அல்ல! உங்கள் நாட்டு கலிங்க தேசத்திலிருந்து புறப்பட்டு வந்தவள் அவள். மூன்று மாதங்களாகக் கப்பலில் வருகிறாள். அது 'தாரிணீ' வகைக் கப்பல்!

வழியில் எத்தனையோ ஆபத்துக்களைத் தாண்டி இங்கே சவோப்ரயா முகத்துவாரம் வரை வந்துவிட்டது.

அதன் பிறகு தான் அந்தப் புயல் திடீரென்று புறப் பட்டது.

கடவுள் தான் விதி என்னும் நியமத்திற்காக, அதை ஊதியிருக்க வேண்டும்.

இந்த மரக்கப்பல் அந்த நதியின் முகப்பு அருகே ஊசலாடியது.

சுநந்தாவும், அவருடன் வந்த இரண்டு ஆண்களும் மூன்று பெண்களும் அந்த திடீர்ச் சோதனையை கண்டு பயந்து விட்டார்கள்.

Edited By A.K

மழையும் பீறிட்டு ஆரம்பித்தது. அலையிடையே சிறு துரும்பு போல் அவர்கள் கப்பல் ஊஞ்சல் ஆடியது.

கப்பலின் அடித்தளத்திலே வயதான ராஜ குலப் பெண்மணி ஒருத்தி அழகிய பூக்கம்பளம் விரித்து அதன் மீது திண்டுகளுக்கு இடையே அமர்ந்திருந்தாள். கப்பலின் ஆட்டத்தைக் கண்டு, அவள் திகைப்புடன் இரு புறமும் பார்த்தாள். அவளிடம் போய்,

'மகாராணி! சொல்லுங்கள்! நாம் கரை செல்வோமா? செல்வோமா?' என்று அந்த இளம் பெண் புலம்பினாள்.

சுநந்தாவின் அணிமணிகள் அலங்கோலமாக ஆடின!

அப்போது படீர் என்று சத்தம் கேட்க, பாய்மரத்தைத் தாங்கும் பெரிய தூண் இரண்டாக முறிந்து விழுந்தது.

மேல் தளத்தில் ஏதோ ஒன்று விழுந்து உருண்டது.

'ஐயோ!' என்று எங்கும் குரல்கள்.

# 3

**க**தையில் நான் மூழ்கி இருக்க, 'தம்பி! சற்று இரு! பிரம்ம முகூர்த்த ஜாமத்திலே நான் ஸ்நானம் செய்ய வேண்டும்! அது முடிந்து தியானம் செய்து விட்டு வருகிறேன்! இரண்டு மணி நேரங்கள் ஆகும்! நீயும் உன் இருப்பிடம் வரை போய் வரலாம்! நான் இங்கே இருப்பேன்!' என்றார் லாமா அநகரிகா!

என்னால் மறுப்பு சொல்ல முடியவில்லை. எழுந்து, மனத்தில் கனத்துடன் மேலே சாலையில் ஏறினேன்.

எண்ணங்களுடன் சிறிது தூரம் நடந்து சென்றிருப்பேன்.

'ஹாய்' என்று பழக்கக் குரலில் என்னை இழுத்து நிறுத்தியது.

Edited By A.K

சாலையோரம் இருந்த இரட்டைப் புளியமரத்தின் அடிவாரத்திலிருந்து முதலில் இஸபெல்லும் அடுத்து பியரும் முறையாகத் தோன்றினார்கள்.

கவலை விரிந்த கண்களுடன் இஸா என்னை ஒரு முறை பார்த்து,

"நீங்கள் சரியாக இருக்கிறீர்களா?" என்று நடுக்கமுடன் கேட்டாள்!

நான் முழுதாக இருக்கிறேனோ என்ற ஐயத்துடன் பியர் என்னை ஒரு முறை வலம் வந்தான். அவன் முகம் இரவுப் பனியில் வெளிறி இருந்தது.

"நான் சரிகாயகத்தான் இருக்கிறேன்!" என்றேன் இஸாவை நோக்கி.

அவளது ஆச்சரிய விழிகள் இன்னும் பெரிதாகின.

"அந்த அழுகுரலை நீங்கள் கேட்கவில்லையா?" என்றாள் இஸா நடுக்கத்துடன்.

"கேட்டேனே! நீங்களும் கேட்டீர்களா?" என்றேன்.

"ஐயோ கேட்டோம்! பயம் எங்களை உறைத்து விட்டது! இடுகாட்டுக்குள் வர விருப்பமில்லை! இங்கேயே உங்களுக்காக உட்கார்ந்துவிட்டோம்" என்றாள் அவள்.

"ஏன்! உள்ளே வந்திருக்கிறதுதானே! உங்களுக்கு நூதன அனுபவம் கிடைத்திருக்குமே" என்றேன்!

"அப்படியா? என்னென்ன பார்த்தீர்கள் உள்ளே! ஆவிகள் உங்களைச் சும்மா விட்டனவா?" என்று கேள்விகளை அடுக்கினாள் இஸா!

Edited By A.K

'வாருங்கள்! சொல்கிறேன்!' என்று அவர்களை அழைத்து குவாய் ஓட்டலுக்குப் போனேன்!

விடிய இன்னும் ஒரு மணி நேரம் இருந்தது! அதற்குள் நானும் குளித்து விடலாம், பின்னர் லாமாவை பார்க்கப் போகலாம் என்று நினைத்தேன். என் விருப்பத்தை தெரிவித்ததும் சரி என்றார்கள். அவர்களும் குளித்து விட்டு என்னோடு அந்த லாமாவைப் பார்க்க வருவதாகவும் கூறினார்கள்.

6.30 மணி.

நான் அறையிலிருந்து வெளிப்பட்டு காப்பி பார்லரில் அமர்ந்தேன். இஸாவும், பியரும் புது ஆடைகள் உடுத்தி வந்துவிட்டார்கள்.

ஒரு சூடான காப்பி முன் நான் நடந்ததை எல்லாம் அவர்களுக்கு விவரித்தேன்.

திறந்த வாய் மூடாது அதிசயப் பார்வையுடன் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

எங்கள் அருகே யூனிபார்ம் தரித்த ஓட்டல் சிப்பந்தியும் நின்று, எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்தார்.

நான் முடித்ததும், அந்தச் சிப்பந்தி ஆங்கிலத்தில் பேசினார். 'இந்த வட்டாரத்தில் எவ்வளவு பேர் அந்த இரண்டாவது உலக யுத்தத்தில் இறந்தார்கள் தெரியுமா?' என்று கேட்டார்.

'இருபதாயிரம் பேர்!' என்றாள் இஸா!

'பதினெட்டாயிரம் பேர்! யுத்தக் கைதிகள், பிரிட்டிஷ் காரர்கள். சீனர்கள், ஆஸ்திரேலியர்கள், இந்தியர்களும் உண்டு' என்று சிப்பந்தி சொல்ல,

Edited By A.K

எனக்கு ஒரு சிறு பெருமை ஏற்பட்டது

'இவர்கள் அனைவரும் தேச நாடுகளுக்காகப் போரிட வந்தவர்கள்! இந்த வீரர்களை ஜப்பானியர்கள் வளைத்துப் பிடித்து கைதிகள் ஆக்கிவிட்டார்கள்! இந்தக் கைதிகளுக்குப் போதிய உணவு கொடுக்காமல் இங்கே ஒரு புதிய ரயில் பாதை போடச் சொல்லி சாக அடித்தார்கள்! பசியாலும் பிணியாலும் இறந்தவர்கள் பதினெட்டாயிரம் பேர்கள்! இது மட்டுமல்ல! இன்னொரு இரண்டு லட்சம் பேரும் இறந்தார்கள்.

'அவர்கள் யார்?' என்று கேட்டான் இஸா.

'பெரும்பாலும் அவர்கள் மலேஷியா, இந்தோனிஷியா, பர்மா ஆகிய தேசங்களில் வசித்தவர்கள்! சாதாரண குடும்ப வாழ்க்கையில் இருந்தவர்கள்! இவர்கள் எல்லோரையும் 'கூலி' கொடுக்கிறேன் என்று சொல்லி இங்கே அழைத்து வந்தார்கள்! சாக அடித்தார்கள்' என்றார் சிப்பந்தி.

'இதில் இந்தியர்கள் கிடையாதா?' என்றேன் நான்.

'ஏன் கிடையாது? மலேசிய ரப்பர் தோட்டம் முழுதிலும் தமிழர்களே வேலை பார்த்தார்கள்! அவர்களைப் பயமுறுத்தி இந்த ரயில் போடும் வேலைக்கு இழுத்து வந்தார்கள்! அப்படி வந்த தமிழர்கள் எண்பதினாயிரம் பேர்! அவர்களில் அறுபதினாயிரம் பேர் பட்டினியால் இறந்தார்கள்.'

அந்தச் செய்தி எனக்கு அதிர்ச்சியைத் தந்தது.

'இரண்டு லட்சம் பேர்களை எங்கே புதைத்தார்கள்?' என்றேன் நான்.

Edited By A.K

'யுத்தக் கைதிகள் மட்டுமே ஒழுங்காகப் புதைக்கப் பட்டார்கள். மற்றவர்கள் பற்றி யாருக்கு என்ன கவலை! பெயர் தெரியுமா, விலாசம் தெரியுமா? ரயில் பாதைப் பிரதேசத்தில் பெரிய பெரிய குழிகளில் அவர்களைப் போட்டு மூடிவிட்டார்கள்.'

எங்களிடையே சிறிது நேரம் மௌனம் எழுந்தது.

"அந்த ரயில் பாதையை ஏன் போட்டார்கள்?" என்றாள் இஸா!

'ஜப்பானியர்கள் அப்போது பர்மா வரை பிடித்து விட்டார்கள்! இந்தியா அவர்களது குறி! அதற்காகத் தளவாடங்களைக் கொண்டு போக இந்த ரயில் பாதை உதவும் என்று நினைத்தார்கள். இந்தக் கஞ்சன்புரியிலிருந்து மலைப்பிரதேசம் வழியே பர்மாவுக்குத் தடம் போட நினைத்தார்கள்!'

"அதை முடித்தார்களா?"

'எங்கே முடியும்? வேலை செய்யும் ஆட்களைத்தான் முடித்தார்கள். அதற்குள் உலக யுத்தம் முடிந்து எல்லா அகதிகளுக்கும் முற்றுப்புள்ளி விழுந்துவிட்டது' என்றார் சிப்பந்தி.

ஓட்டலைவிட்டுக் கிளம்பினோம்.

லாமா குவாய்க் கரையில் காத்திருந்தார்.

எங்களைப் பார்த்ததும் 'ஹோய்' என்று ஒரு சத்தம் போட்டார்.

பகல் வெளிச்சத்தில் அவர் முகத்தை நன்றாகப் பார்த்தேன்.

Edited By A.K

அவரது ஒரு புருவங்களுக்கும் இடையே நாமக்கோடு போல் ஒரு கீறல் தெரிந்தது. உயரவாட்டில் ஒரு கண் மூடியிருப்பது போல!

இதுதான் மூன்றாவது கண்ணா?!

ஒரு சந்தேக உணர்வு என்னிடம் எழுந்தது.

எல்லோரையும் புல் தரையில் அமர்த்தினார் லாமா!

தாமும், தமது கொழுத்த ஆடைகளுடன் எதிரே உட்கார்ந்தார்.

இஸாவையும் பியரையும் விசாரித்தார். கொஞ்சம் சிரித்துப் பேசினார். "கீழை நாடுகளில் பெரும் கோயில்களையும், வித்தியாச மக்களையும் பார்த்தால் மட்டும் பிரயோசனம் இல்லை என்றார்! இங்குள்ள தத்துவ வாழ்க்கைகளை நீங்கள் அறிய வேண்டும்!" என்றார்.

சிறிது நேரம் அவர்களிடம் "அமானுடம்" பற்றிப் பேசினார்.

'நீங்கள் மனதில் வலுவற்று இருக்கிறீர்கள்! இந்த இடுகாட்டு பூமிக்கு வந்தால் உங்களுக்கு ஏதாவது ஏற்படும்! நீங்கள் ஒழுங்காக உங்கள் நாட்டுக்குத் திரும்பமாட்டீர்கள்! எனவே திரும்பிப் போவதே நல்லது!' என்று கூறி அவர்களைச் சற்று வற்புறுத்தி அந்த வெள்ளைக்கார ஜோடியை ஒட்டலுக்கு அனுப்பி வைத்தார்.

பிறகு அவர் பார்வை சற்றுத் தொலைவில் இருக்கும் இடுகாட்டின் மீது விழுந்தது.

"என்ன செய்வேன்? சுநந்தா மீண்டும் வந்து விட்டாளே!" என்றார்.

Edited By A.K

திரும்பிப் பார்த்தேன்! என் கண்களுக்கு யாரும் தெரியவில்லை.

வாமா என் மீது ஒரு பார்வை வீசினார்.

'நான் இச்சைப் பட்டால்தான் ஆவிகள் உனக்குத் தெரியும்! இவள் இன்னும் பூலோகத்திலேயே உழன்று கொண்டிருக்கிறாளே! இவளைக் கரையேற்ற முடியவில்லையே!' என்று அலுத்துப் போய்க் கூறினார்.

'வா! கதையை எங்கே விட்டேன்? ஓ........!...........

'தாரீணி கப்பலுக்கு வா!' என்று என்னைப் பார்த்துக் கூறினார்.

கதையை ஆரம்பித்தார் ...........................

இந்திய நாட்டினர் அப்போதே பருவக் காற்றின் தன்மையை அறிந்துவிட்டார்கள்! காற்று அனுகூலமாக இருக்கும் காலத்தில் பாய்மரம் விரித்து கடலின் நடுக்குறுக்கே தைரியமாகக் கப்பலைச் செலுத்துவார்கள்.

நான் சொன்னேனே அந்த தாரீணி கப்பல் அப்படித்தான். உங்கள் நாட்டிலிருந்து 'சொர்ண பூமி' யைப் பார்த்து வந்து கொண்டிருந்தது! இப்போதுள்ள மலேஷியாவில் ஆரம்பித்து வியட்நாம் வரை உள்ள பிரதேசத்திற்கு உங்களவர்கள் 'சொர்ணபூமி' என்ற பெயர் வைத்திருந்தார்கள்.

இந்தப் பூமிகளில் அந்த நாளில் தங்கம் கொழிக்கும்! இன்றும் வண்ண வண்ணக் கற்கள் ஏராளம் கிடைக்கும்.

கலிங்கத்திலிருந்து வந்தவர்கள்தான் அப்போது தாய்லாத்தில் ஆட்சி செய்து கொண்டிருந்தார்கள்.

Edited By A.K

கடல் கடந்தால் என்ன, சமுத்திரம் கடந்தால் என்ன? விட்டு வந்த தாய் நாட்டை அவ்வளவு எளிதில் மறந்துவிடுவார்களா?

அதனால்தான் தம் அரச குலத்தவர் மகனுக்கு கலிங்க தேசத்திலிருந்து பெண் எடுக்கவேண்டும் என்று நினைத்தார்.

இதற்காக தூதுவர்களை கலிங்க நாட்டுக்கு அனுப்பி இருந்தார்கள்.

கலிங்க மன்னருடன் பேசி, அழகும் அறிவும் செறிந்த அரச குமாரியைத் தேர்ந்தெடுத்து அவளை தாய்லாந்திற்குக் கப்பலில் அழைத்து வந்து கொண்டிருந்தார்கள்.

கலிங்கத்து அரசன் பத்து கப்பல்களை ஒரு அரசகுமாரியோடு அனுப்பி வைத்தான்.

ஆயுதம் நிறைந்த துணைக் கப்பல்கள் பிரயாணிக் கப்பல்கள் எனப் பல வகைகள் அவற்றிடையே இருந்தன!

தாய்லாந்துக் கடலில் வரும்போதுதான், ஒரு பெரும் புயலும் மழையும் கப்பல்களை அலைக்கழிக்க ஆரம்பித்தன. கப்பல்கள் முகத்துவாரத்தில் தத்தளித்தன.

தனித் தனியாகச் சிதறிப் போயின. பல மூழ்கின. அவை போன இடம் தெரியவில்லை. தாய்லாந்தின் 'சவோப்ரயா' நதியை பாரத தேசத்தவர்கள் 'மேனாம்' என்று அழைப்பார்கள்!

இந்த நதி கடலில் போய்ச் சேரும் இடத்தில் ஆங்காங்கே மணல் திட்டுகள் உண்டு.

மழை அடித்த நிலையில் மூழ்கியிருந்த ஒரு மணல் திட்டின் மீது தரை தட்டி அந்தத் 'தாரிணி' இனக் கப்பல் நின்று விட்டது.

Edited By A.K

பிறகு ஒரு புறமாகச் சரியவும் ஆரம்பித்தது.

உள்ளே இருந்த ராஜ குடும்பத்தினர்களுக்கு இந்தக் கப்பல் பிரயாணம் புதிய அனுபவம்!

கப்பல் ஒரு புறமாகச் சரிந்து விட, அவர்களால் நிற்கவும் முடியவில்லை. உட்காரவும் முடியவில்லை. தவழவும் முடியவில்லை. இதில் மேல்தளம் வந்திருந்த அரசகுமாரி பிடிப்பு இல்லாமல் திடீரென்று உருண்டு வெளியே கடலில் விழுந்து விட்டாள்.

மற்ற அரசகுலப் பெண்கள் அதைப் பார்த்து கூக்குரலிட்டார்கள்.

# 4

தாய்லாந்தின் பூர்விக நகரங்களில் ஒன்றான சுகோதயா நகரம் சீரும் சிறப்புமாக வளர்ந்து கொண்டிருந்த பதின்மூன்றாம் நூற்றாண்டின் மத்திய காலம் அது.

யாம் நதிக்கரை ஓரம் அரச அரண்மனை, ஒரு வைர இழை போல ஜொலித்துக் கொண்டிருந்தது.

மாடங்களில் சந்திரகாந்தக்கல் பதிக்கப்பட்டு, நிலவொளி போன்ற அழகை வீசிக் கொண்டிருந்தது.

உள்ளே தனது விஸ்தார கூடத்தில் ராம கம்பீரன் என்ற அந்த இளம் அரசகுமாரன் விநயத்தோடு அந்த ஏட்டுச் சுவடிகளை எடுத்து மரப் பேழைகளுக்குள் அடுக்கி வைத்தான். ராமாயண ஏட்டுச் சுவடிகள் அவை.

அவற்றின் மீது வெள்ளித் துளிகள் போன்ற மல்லிகைப் பூக்களைத் தூவிவிட்டு, மண்டியிட்டு நமஸ்கரித்து சிறிது நேரம் பிரார்த்தனையில் ஈடுபட்டான்.

பின்னர் லேசாகக் கசியும் நீர்த்திரையுடன் அருகே உக்கிராண அறைக்குள் மெதுவாகச் சென்றான்.

Edited By A.K

அங்கே நிழல் போல் நின்றிருந்த தாதி அவசரமாக விலகிக் கொள்ள, உள்ளே போய் பிறைக்கதவைத் திறந்து அதிலிருந்து செப்புத் திறவுகோல் ஒன்றை எடுத்து வெளியே வந்தான்.

நீண்ட நடையில் நடந்து தெற்கத்திக் கூடத்தின் வாசலில் வந்து நின்றான்.

தயக்கமுடன் அந்த அரசகுமாரன் கூடத்துக் கதவைத் திறந்து உள்ளே சென்று, சாளரங்களைத் திறந்து விட்டான்.

புதுமைக் காலை ஒளி உள்ளே வெள்ளமிட்டுக் கொண்டு பாய, கூடத்தின் சுவர்களில் பெரிய பெரிய ஓவியங்கள் யாவும் உயிர் அழகுகளாகத் தெரிய ஆரம்பித்தன.

மேற்குச் சுவரில் நடு மையமாக இருந்த ஒரு ஓவியம் மட்டும் பட்டுத் திரையிட்டு மூடப்பட்டிருந்தது.

அருகே சென்று திரையை மெல்ல பயபக்தியோடு விலக்கி விட்டான்.

எப்போதுமே அந்த அதிர்ச்சி அவனுக்கு நேர்ந்திருக்கிறது.

இப்போதும் அது நேர்ந்தது. சிறிது நேரம் வரை இமைக்க முடியாமல் நின்றான்.

சித்திரத்தில் அப்படி ஓர் அதிசய அழகி நின்று கொண்டிருந்தாள்.

வதனம் முழுதும் பதனமான நிலா! இரு கண்களிலும் ஒரு நட்சத்திர ஒளி சஞ்சரித்துக் கொண்டிருந்தது. விழி மருங்கில் விளைந்த மருட்சி நெஞ்சைச் சுருக்கிட்டு இழுப்பது

Edited By A.K

போலிருந்தது! அவளது மெல்லிய தோளில் கூந்தல் வழிந்து, முன்னும் பின்னும் அருவிக்கடலாக விழுந்து கொண்டிருந்தது.

இந்தப் பூமிக்கு சொந்தமில்லா அப்சாஸ் போல் விளங்கினாள்.

ராம கம்பீரன் வைத்த கண்களாக அவளைப் பார்த்தான்.

பின்னால் சில அடிகள் சென்று, பட்டு மெத்தையுடன் கூடிய ஒரு சிறிய ஆசனத்தில் அமர்ந்து கொண்டான்.

அவன் கண்களில் அபரிமிதமான ஆர்வம் எழுந்து அந்தச் சித்திரத்தை நோக்கிப் போயிருந்தது.

மனசில் மென்மையான எண்ண அலைகள் எழுந்து கொண்டிருந்தன.

'என் மனத்தை கவர்ந்தவளே! உன்னைப் பார்த்தாலும் துன்பமே! பார்க்காவிட்டாலும் துன்பமே! நீ நிச்சயம் உயிருள்ள பெண் என்று எனக்குத் தெரியும்! நீ நிஜம் இல்லாவிடில் ஒரு ஓவியனுக்கு உன்னைப் போன்ற சித்திரம் வரையக் கற்பனையே தோன்றி இராது!

முறுவலை முதிர விடாது இளசாக வைத்திருக்கிறாய். என்றைக்கு என்னை நோக்கி முழுவதுமாக முறுவலிப்பாய்?

மானிடத்தைச் சார்ந்த அழகைப் பெறவில்லை நீ! நீ ஒரு மோகினி!

உன்னை நான் மறக்கவே இயலாது.

உன்னை மனசில் தினமும் தியானித்து உடல் நலிந்து வருகிறேன்.

Edited By A.K

என் துன்பம் அறியவில்லையா நீ!

எங்கிருக்கிறாய் நீ!'

கூடத்தின் உள்ளே அரசகுமாரன் இப்படிப் பிரலாபித்துக் கொண்டிருக்க,

'ராமா!' என்று அழைத்தவாறு அங்கே வந்தாள் அவனது தாயான சியாம் தேசத்து ராணி.

காலடி கேட்டதும் ராமகம்பீரன் கண்விழித்துத் திரும்பிப் பார்த்தான். தாயைக் கண்டதும், சடக்கென்று ஆசனத்திலிருந்து எழுந்து முன் வந்து,

'அம்மா! நமஸ்காரம்!' என்று அவள் பாதங்களைத் தொட்டுவிட்டு நிமிர்ந்தான்.

அவனை ஆதுரத்துடன் தன் மீது சரித்துக் கொண்டு, 'ராமா! இப்படி உன்மத்தனமாக இருக்கிறாயே! ஓவியத்தில் எழுதிய பெண் உயிரோடு வருவாளா! இன்னும் முரண்டோடு இருக்கிறாயே!' என்று தலையைத் தடவியவாறு கூறினாள்.

அபயாதேவி என்ற அந்த மகாராணிக்குப் பெரும் குறை அது ஒன்றுதான்! முதல் இரண்டு மகன்களைப் பற்றி அவள் பெருமைப் பட்டுக்கொள்ள முடியாது. இந்த மூன்றாவது மகன்தான் அறிவும் ஆற்றலும் அழகும் நிரம்பி இருந்தான்.

இந்தச் சின்ன வயதில்கூட தந்தையுடன் போர்க்களம் சென்று புகழ் பெற்றவன் அவன்.

தத்துவம், சமயம், கலை, எதிலுமே ரசனையும் ருசியும் உள்ளவன்.

Edited By A.K

இப்படிப்பட்ட ஒரு அருமையான குமரன் ஏன் இப்படி ஒரு மனநோய் கொண்டு விட்டான்?

யாரோ ஒரு ஓவியன் கொண்டு வந்து கொடுத்த சித்திரத்தில் மனத்தைப் பறிகொடுத்து விட்டானே!

பரத நாட்டுக் கோயிற் சிற்பங்களை மட்டும் எழுதி வரவில்லை அந்த ஓவியன்! சோழ, பாண்டிய, ஒய்சள ராஜ வம்சத்தாரது தோற்றங்களையும் வரைந்து வந்திருந்தான். ராஜ உத்தியோகஸ்தர்கள், பண்டிதர்கள், குடும்பத்தாரது ஆண் பெண் ஓவியங்களையும் எழுதிக் கொண்டு வந்திருந்தான்.

இதில் ஒரு குறிப்பிட்ட ஓவியத்தில் ராம கம்பீரனுக்கு ருசி விழுந்துவிட்டது என்பதை யாரும் எதிர்பார்க்கவில்லை.

அந்த ஓவியத்தை மட்டும் அவன் தனியாக எடுத்துப் போய், தெற்குக் கூடத்தில் வைத்து அதைக் கிட்டத்தட்ட வழிபாடு செய்கிறான் என்பது முதலில் அரசிக்குத் தெரியாது. அரசருக்கும் தெரியாது.

அவனுக்கு மணப்பெண் தேட ஆரம்பித்தபோதுதான் அது தெரிய வந்தது.

"இந்தா, சொல்றதைக் கேள், ராமா! எவ்வளவோ விஷயத்திலே ஞானத்தோடு இருக்கிறாய்! அந்த ஓவியன் யாரைப் பார்த்து இதை எழுதினானோ? அந்தப் பெண் உண்மையக இருந்தால் அவளுக்கு இதற்குள் திருமணம் கூட ஆகியிருக்கும்! தவிர, பரதநாடு என்ற பெரிய கண்டத்தில் அவளை எங்குப் போய்த் தேடுவது? அவளை மறந்து விடு!" என்று கூறினாள் அபயாதேவி.

Edited By A.K

ராமகம்பீரன் கேட்டதாகத் தெரியவில்லை. 'அம்மா! இந்த விஷயத்தில் என்னை விட்டுவிடு! பரதநாட்டுக்குத் தான் தூதர்களை அனுப்பியிருக்கிறதாகச் சொன்னீர்களே! அவர்கள் திரும்பி வந்த பிறகு பார்ப்போம்' என்று வருத்தத்தோடு கூறினான்.

அந்தத் தூதர் குழு இன்னும் வந்து சேரவில்லை அவர்கள் என்ன ஆனார்கள் என்றும் தெரியவில்லை. இந்தக் கவலைதான் அரசிக்கு.

'அவன் ஒரு முடிவுக்குள் உடனே வரவேண்டும். இல்லாவிட்டால் நான் இந்த ராஜ்யத்தை துவராபதி வம்சத்தாரிடம் ஒப்படைத்துவிட்டு, துறவியாகப் போகப்போகிறேன்' என்று கண்டிப்பாகக் கூறியிருந்தார் மன்னர்பிரான்.

உறுதியும் கண்டிப்பும் உள்ளவர் அவர். எந்தக் கடினமான முடிவுக்கும் வரக்கூடிய துணிவு உள்ளவர்.

'ராமா, கேள்! நீ இது போல ஒரு வருஷமாகப் பிடிவாதத்தில் இருக்கிறாய். உன் தந்தை எவ்வளவு கோபமாக இருக்கிறார் என்பது உனக்குத் தெரியாது. அவரைத் தினம் தினம் சமாதானப் படுத்துவதே எனக்குப் பெரிய பாடாகிவிட்டது. இப்போது நீ மணம் செய்ய ஒரு முடிவுக்கு வரவேண்டும். இல்லாவிடில் நான் விஷம் அருந்தி உயிர் துறக்கச் சித்தமாக இருக்கிறேன்!' என்றாள் அரசி கடுமையாக.

திடுக்கிட்டான் ராமகம்பீரன்.

தான் கேட்பது உண்மையா என்பது போல் சந்தேகத்துடன் அவனைப் பார்த்தான்.

Edited By A.K

அதே நேரம் திடீரென்று வாசலில் எக்காளம் ஊதும் சத்தம் காதுகளைப் பிளந்து கொண்டு கேட்டது.

விஷ்ணுலோகத்திலிருந்து (ஒரு சின்ன ராஜ்யம் அது) சம்பந்தம் பேச, ஒரு தூதர் குழு அரண்மனைக்குள் வந்து கொண்டிருக்கிறது என்பதை அறிவிக்கும் சின்னம் அது.

இந்தக் குழு வரப்போவதை ஏற்கெனவே அறிந்திருந்த மன்னர் கையில் வாளை உருவிக் கொண்டு, "எங்கே அந்த மகன்? எங்கே ராம கம்பீரன்?" என்று கர்ஜித்தவாறு அந்தப்புரத்துக்குள் வந்து கொண்டிருந்தார்.

கதையை இங்கே நிறுத்திய புத்தலாமா என்னை ஏறிட்டுப் பார்த்தார்.

"உன் மனதில் எழும் கேள்வி எனக்குத் தெரியும். எல்லாப் பெயர்களும் இந்தியப் பெயர்களாக இருக்கிறதே என்று பார்க்கிறாய். அப்படித்தானே?" என்றார்.

"ஆமாம் சுவாமி! தாய்லாந்தில் இத்தனை இந்தியப் பெயர்கள் உண்டா?"

"எல்லாப் பெயர்களுமே இந்தியப் பெயர்கள்தான்! புத்தபிரான் பிறக்கும் முன்பே இந்திய வம்சத்தினர் இங்கே வந்து விட்டார்கள்! இந்தத் தேசத்தில் வாழ ஆரம்பித்தவர் அவர்கள்தான்! இந்தக் கதை நிகழும் பதின்மூன்றாம் நூற்றாண்டுக் காலத்தில் இந்திய வம்சத்தினரே இங்கே ஆண்டார்கள். இந்தியப் பெயர்கள் சற்றே மருவி ராமகம்பீரன் என்பதை இங்கே ராமகம்ஹேங் என்றார்கள்.

சுகோதயத்தை சுகோதோய் என்பார்கள்.

விஷ்ணு லோகத்தை 'பிட்ஸனுலோக்' என்பார்கள்.

Edited By A.K

சியாம் என்ற இந்த நாட்டின் பெயரே 'சியாம்' (கரு நீல நிறம்) என்ற வார்த்தையிலிருந்து வந்தது.

நான் திகைக்க,

'வா! விட்ட கதையைத் தொடர்கிறேன்!' என்றார்.

# 5

**பு**த்தலாமா அநாகரிகா தொடர்ந்தார்.

ராஜா இந்திராதித்தர் அறுபது ஆண்டுகளைத் தாண்டியவர். உள் நோய்கள் பல அவரது பொன் உடலை வருத்திக் கொண்டிருந்தன.

சயாம் நாட்டிலேயே முதல் முறையாக ஒரு வலுவான தனி ராஜ்யத்தைப் படைத்த பெருமை அவருடையது! இன்னும் அவர் கண்களும், அறிவும் எதிர் காலத்தை நினைத்து என்னென்னவோ எண்ணிச் சுடர்த்துக் கொண்டிருந்தன.

மன்னர் இந்திராதித்தர் அது போன்ற ஆத்திரத்தை வெகு அரிதாகத்தான் அடைவது வழக்கம். மன்னர்களுக்கே உரித்தான ஒரு முக்கிய கவலைதான் அவரை வாட்டி யிருந்தது.

தமக்குப் பின் ராஜ்யத்தை ஆளப் போகிறவர் யார்? ரத்தக் களறி எதுவும் இல்லாமல் ஒழுங்காக மகுடம் மற்றவர்க்கு மாறுமா?

மூன்று குமாரர்கள் அந்த மன்னருக்கு. முதல் பிள்ளை பத்து வயது நிரம்புவதற்குள் கொடிய நோய் ஏற்பட்டு மறைந்து விட்டான்.

இரண்டாவது பிள்ளை நல்ல தோற்றமும், உயரமும் இருந்தாலும், புத்திசாலித்தனம் போதாதவன். பல ஆசிரியர்களைக் கொண்டு பயில்வித்தும் மனத்தில் அதிகம் கல்வியைத் தேக்கிக் கொள்ள முடியாதவன்.

Edited By A.K

ஒரு முறை பாடத்தை சரியாக ஒப்பிக்காதது கண்டு, இந்திராதித்தர் அவனைப் புளிய மிளாறினால் வீறி விட்டார்.

மகன் இரண்டு நாட்கள் எழுந்திருக்கவே இல்லை. ராஜ வைத்தியர்கள் அவனை அணுகக்கூடாது என்று மன்னர் கட்டளை பிறப்பித்து விட்டார்.

ஐந்து நாட்கள் கழித்து இந்திராதித்தர் மேன்மாடத்தில் அமர்ந்திருக்கும் போது,

ராணி அபயாதேவி அவரிடம் தயக்கத்துடன் வந்து,

'பிரபு! மகன் பரமாதித்தன் ஆபத்து நிலையில் இருக்கிறான்!' என்று தெரிவித்தாள்.

திடுக்கிட்ட மன்னர், அரண்மனை அந்தப்புரம் சென்று, கட்டிலில் கிழிந்த நாறு போல் இளைத்துப் படுத்திருக்கும் மகனைப் பார்த்து, அந்தக் கணமே துவண்டு விட்டார்.

காய்ச்சல் தாங்காது அவன் புலம்புவதைக் கண்டு தமது கடுமைதான் அவனை அவ்வளவு தூரம் பாதித்து விட்டது என்பதை உணர்ந்தார். வைத்தியர்களை வரவழைக்க அனுப்பிவிட்டு, மகன் அருகில் அமர்ந்து 'பரமா!' என்று அழைக்கத் தொடங்கினார் ஆதங்கத்துடன்.

மெல்லக் கண்ணை அவிழ்த்த பரமாதித்தன், மன்னரைக் கண்டதும் நடுக்கம் அடைந்து தடுமாறிக்கொண்டே,

'அப்பா! என்னைப் பொறுத்தருளுங்கள் அப்பா! எனக்குக் கல்வி ஏறாது அப்பா! நான் அறிவில் கூர்மை இல்லாதவன். மந்த புத்தி உள்ளவன். என்னைக் கல்வி

Edited By A.K

கற்க விட்டு சோதனை எதுவும் செய்யவேண்டாம் அப்பா! என்னை என் போக்கிலேயே தயவு செய்துவிடுங்கள். நான் எப்படியாவது வாழ்ந்து கொள்கிறேன். எனக்குப் பட்டமும் மகுடமும் வேண்டாம். நான் அதற்குத் தகுதி இல்லாதவன். என்னை அதற்காக இம்சை செய்து படிக்க வைக்காதீர்கள்' என்று புலம்பலாகக் கூறிவிட்டான். மன்னரே கண்கலங்கிவிட்டார்.

பின்னர் பரமாதித்தனுக்கு நினைவு போய்விட்டது.

இரண்டு நாட்கள் நினைவு திரும்பவில்லை. தமது தண்டனைதான் மகனை அந்த நிலைக்குக் கொண்டு வந்து விட்டது என்று எண்ணிய மன்னர், மனத்தில் பெரிதும் தாபத்தில் உருகியதோடு, எல்லாத் தெய்வங்களையும் வேண்டிக் கொள்ள ஆரம்பித்தார்.

ஒரு வாரம் வரை மகன் பரமாதித்தன் இழுபறி நிலையில் இருந்தான். மன்னர் உணவு சரியாக உட்கொள்ளாமல் பித்துப் பிடித்தவர் போல் இருந்தார். ராஜகாரியம் எதையும் பார்க்கவில்லை. அவருடன் சேர்ந்து அரண்மனை ஜனங்களே கவலைப்பட்டார்கள்.

நல்லவேளையாக ஒன்பதாம் நாள் பரமாதித்தனுக்கு நினைவு திரும்பியது. மெல்ல மெல்ல அவன் தேறி வர ஆரம்பித்தான்.

அதே நேரத்தில் மன்னர் இந்திராதித்தனுக்கு மனத்தில் ஒரு எண்ணம் விழுந்துவிட்டது. அடுத்த பட்டத்துக்கு பரமாதித்தன்தான் வரவேண்டும். எப்படியும் அவன் நாட்டை ஆளவேண்டும் என்று நினைத்து விட்டார்.

தமது நெருங்கிய மந்திரி ஸ்ரீசந்திரனை (தாய்லாந்தில் ஸி சான்) அழைத்து, பரமாதித்தன் பின்னே உறுதுணையாக

Edited By A.K

நின்று அவனை அரசாள வைக்க வேண்டும்; கடைசிவரை அவனைக் கைவிட்டு விடக்கூடாது என்று சத்தியம் செய்து வாங்கிக் கொண்டார்.

இந்த நிலையில்தான் மூன்றாவது மகன் ராமகம்பீரன் மகா அறிவாற்றலும், திறமையும், சாதுர்யமும் கொண்டிருப்பதைக் கண்டு மன்னருக்கே சில சந்தேகங்கள் தாமாக எழும்பின.

இரண்டாவது மகன் மீது விழுந்த அதீத பாசத்தால் மூன்றாமவன் பட்டத்திற்கு வர மன்னர் விரும்பவில்லை.

ராமகம்பீரனுக்கு சீக்கிரமே மணம் செய்வித்து, அவனை ஏதாவது பிரதேசத்துக்கு ராஜப்பிரதிநிதி ஆக்கி விட வேண்டும் என்று மன்னர் எண்ணம் வைத்திருந்தார்.

ஆனால் ராமகம்பீரன் தனது திருமணத்துக்கு இடம் கொடாமல் எது எதையோ சொல்லித்தட்டிக் கழித்து வருகிறான் என்பது அவர் கோபத்தை வரவழைத்தது.

எனவேதான் உறையிலிருந்து வாளைக் கழற்றிய வண்ணம் தெற்கத்திக் கூடத்துக்கு சரசர என்று போக ஆரம்பித்தார்.

அதே நேரம், ஏதோ அசம்பாவிதம் நிகழ்ந்து கொண்டிருக்கிறது என்று ராணி அபயாதேவி (அபய்டேவி)யின் உட்புலனுக்குத் தெரிந்து விட்டது.

எக்காளச் சத்தம் அவளுக்கு மற்றொரு அறிகுறியாக வந்துவிட, தெற்கத்திக் கூடத்தை விட்டு வெளியேறி நீண்ட படைப்பகுதியை நோக்கும்போது, அரண்மனை நிசப்தமாகி விட்டதையும், நடையில் பரக்கப் பரக்க இரண்டு தாதிகள் ஓடி வருவதையும் கண்டு கொண்டாள்.

Edited By A.K

மன்னர் கோபத்துடன் வந்து கொண்டிருக்கிறார் என்பதைக் கேள்விப்பட்டதும், 'ராமா' என்று அழைத்து கூடத்துள் ஓடினாள்.

'போ! போ! உடனே ஓடிவிடு! இல்லாவிடில் அவரது வாளுக்கு இரை ஆவாய்!' என்று மூன்றாம் மகன் ராமகம்பீரனைப் பார்த்துப் பரபரப்புடன் கூறினாள்.

கம்பீரன் சற்றே ஆச்சரியத்துடன் அவள் மீது விழியைப் பதித்தான். நுண்ணிய அறிவுக் கூர்மையில் நடப்பதை எல்லாம் நொடிப் பொழுதில் அறிந்து விட்டான்.

'போ! ராமா! போ!... இங்கே நிற்காதே! நின்றால் அந்த விஷ்ணுலோகத்துப் (தாய்லாந்து மொழியில் பிட் சனுலோக்! ராஜ்யத்தின் ஒரு பிரிவான பிரதேசம்) பெண்ணை மணம் செய்து கொள்வதாக வாக்களித்து விடு! இல்லாவிட்டால், உடனே வெளியே போ!' என்று பதட்டத்துடன் கூறினாள் ராணி அபயா.

ராமகம்பீரனிடம் எந்த அவசரமும் எழவில்லை. அதற்கு மாற்றாக அவன் முகத்தில் ஒரு சஞ்சலமற்ற உறுதி தான் தெரிந்தது கண்களில் சலனம் சிறிதுமில்லாமல் அவளை ஆழ்ந்து நோக்கினான்.

அபயாதேவி உடனே அவனை வலுக்கட்டாயமாக வெளியே தள்ளத் தொடங்கினாள்.

அதே நேரத்தில் வாசலில் காலடி ஓசைகள் கனமாகக் கேட்க, 'ராமா' என்று மன்னர் வாசலில் கர்ஜனை செய்த வண்ணம் நின்றார்.

அவரது பதட்டம் அவர் உடலைக் கிடுகிடுக்க வைத்தது. கைகளும் கால்களும் ஆட்டமிட்டன. மீசை கீழே தொங்கிய நிலையில் நடுக்கமிட்டது.

Edited By A.K

'அப்பா, நமஸ்கரிக்கிறேன்!' என்று கைகளைக் கூப்பி வளைந்தான் ராமகம்பீரன்.

'உன் நமஸ்காரத்தை உடைப்பிலே போடு! இப்போது சொல்! இந்தப் பெண்ணை மணக்கச் சம்மதிக்கிறாயா, இல்லையா?' என்று வெப்பத் துண்டுகளாக வார்த்தைகளை வீசி எறிந்தார் மன்னர்.

அவரையே சற்று நிதானித்துப் பார்த்து, 'தந்தையே! பொறுத்தருளுங்கள்! தாங்கள் இட்ட கட்டளையை இப்போது ஏற்றுக்கொள்ள என் மனம் சங்கடப்படுகிறது...' என்று சொல்லும் போதே மன்னர் ஆத்திரம் தாங்காதவராய்,

'என்ன சொன்னாய்? துரோகி! குலத் துரோகி!' என்று இரைந்து, வாளை உயரத் தூக்கி அவனை நோக்கிப் பாய்ந்தார்.

ராணி அபயாதேவி அந்த நிலையைக் காணப் பெறாமல், திடீர் என்று துள்ளி எழுந்து, மன்னரின் முன்னால் கைகளைப் பிரித்து நின்று,

சுவாமி! பொறுங்கள்! பொறுங்கள். கோபம் உங்கள் கண்களை மறைக்கிறது! தங்கள் செய்கை தீராத பழியைத் தரும். நிறுத்துங்கள்!' என்று கூறித் தடுக்க முற்பட்டாள்.

மன்னர் அவளை ஒரு புறம் தள்ளி முன்னே போக முற்பட, தாவி எழுந்து மகன் முன்னால் போய் நின்ற அவள்,

'சுவாமி! கொல்லுங்கள்! மகனைக் கொல்வதற்கு முன் அவனைப் பெற்ற இந்த அநியாயத் தாயாரை முதலில் கொல்லுங்கள்!....' என்று கண்களில் உறுதி வீச, அதி தீவிரத்துடன் கூறினாள் அவள்.

Edited By A.K

மன்னர் செவியில் அவள் கூறிய வார்த்தைகள் எதுவுமே விழவில்லை.

அவர் உடல் ஒரு பதட்டப் பிழம்பாக மாறிவிட்டது.

கோப உக்கிரகத்தில் கண்களின் முன் தீக் கொழுந்துகள் துள்ளி ஆடின.

நியதி, நேர்மை, தானம் என்று எதுவுமே காற்றிலே தூசியாக எகிறும் ஒரு ஆவேச நிலை!

மன்னரின் வாள் ஆவேச வேகத்தில் மேலிருந்து கீழே இறங்கியது.

'சவோ ப்ரயா' என்று தாய்லாந்தியர் அழைக்கும் அந்த மாநதிக்கு மேனாம் என்ற பெயரும் உண்டு! (நதிகளுக்குத் தாய் என்று பெயர்)

மிகவும் ஆழம் நிறைந்த நதி. சயாஸ் வளைகுடாவில் சமுத்திரத்தில் கலக்கும் இடத்தில் நதியின் அகலம் மிகப் பெரியது. ஒரு கரையிலிருந்து பார்த்தால் மறுகரை தெரியாது.

இந்த முகத்துவாரத்தில் நதியினால் காலம் காலமாகக் கொண்டு குவிக்கப்பட்ட மணல் மேடுகள் ஏராளமாக உண்டு.

அவற்றில் பல வெளியே தலை நீட்டித் தெரிந்து கொண்டிருந்தாலும், பல நீருள் மூழ்கியபடியே இருக்கும்.

இந்த விவரங்களைத் தெரிந்து கொண்ட அனுபவம் வாய்ந்த மாலுமிகள்தான் இந்த இடங்களில் கப்பலைச் செலுத்தத் தகுதியானவர்கள்.

Edited By A.K

பரத நாட்டிலிருந்து வந்த மாலுமிகள் பலருக்கு இந்த முகத்துவாரத்தில் கப்பல்களைச் செலுத்திய அனுபவம் உண்டு.

அவர்கள் பயணித்து வந்த துணைக் கப்பல்கள் சூறாவளியில் வெவ்வேறு திசையில் சிதறிவிட்டன.

எனவேதான் அரசகுலப் பெண்கள் பயணித்து வரும் அந்த அம்ச முகத்துக் கப்பலில் அந்த முகத்துவார அனுபவஸ்தர்கள் யாருமில்லை.

அதை ஓட்டிவரும் அனுபவமில்லா மாலுமிகள் போதிய கவனத்தைக் கடைப்பிடிக்கவில்லை.

பாய்மரம் தாங்கும் கூம்பு உடைந்து விட்டதால் சீக்கிரம் கரை காணவேண்டும் என்று அவர்கள் எண்ணினார்கள்.

அந்த அவசரத்தில்தான், மூழ்கிக் கிடக்கும் மணல் மேடு ஒன்றில் கப்பலைச் சிக்கும்படி செய்து விட்டார்கள்.

சமுத்திர நீரின் உட்சுருங்கும் தன்மையால் கப்பல் நேராக நிற்காமல் சரியவும் ஆரம்பித்துவிட்டது.

அவரவர்கள் தாங்கள் தங்கள் உயிரைக் காக்க, கப்பலின் விலாப் பலகைகளைத் தீவிரமாகப் பிடித்துக் கொண்டு அப்படியே அசையாது நின்று விட்டார்கள்.

கப்பலின் அதிபதியான விஜயரங்கன், மெல்ல கப்பலின் முகப்பு நோக்கி ஊர்ந்து போய் வெளிப்புறத்தை உற்று நோக்கினான்.

வெளிக்காட்சி அவன் கண்களை விரிய வைத்தது.

Edited By A.K

பாயும் காற்றுப் பெருக்கைப் பொருட்படுத்தாமல் ஏராளமான சிறு படகுகள் கப்பல் பக்கம் வந்து கொண்டிருந்தன.

கப்பலிலிருந்து உருண்டு வெளியே விழுந்த பொருட்களையும் பெட்டகங்களையும் அவை போட்டி போட்டுத் தம்தம் படகுகளில் ஏற்றிக் கொண்டிருந்தன.

ஏற்கெனவே பொருட்களை ஏற்றிய பல படகுகள் கரையை நோக்கி ஓடிக் கொண்டிருந்தன.

விஜயரங்கனுக்கு ஒரு விஷயம் சட்டென்று புலனாகி விட்டது.

அந்த மா நதியின் முகத்துவாரம் எந்த ராஜ்ய ஆணைக்கும் உட்படாத நிலையில் இருந்தது.

கரையில் வாழும் கடல் கொள்ளையர்கள் ஏராளமாக வாழ்ந்து, யார் ஆணைக்கும் கீழ்ப்படியாமல் இருந்தார்கள்.

அவர்கள்தான் கப்பலை அணுகிக் கொள்ளை அடிக்கிறார்கள் என்று தெரிந்தது.

இந்த நிலையில் அவர்கள் எப்போது கப்பலில் ஏறி உள்ளே வருவார்களோ என்று ஒரு பயமும் எழ ஆரம்பித்தது.

# 6

இந்திராதித்தர் வீசிய வாள் வீச்சு நேராக ராணி அபயாதேவி மேல் விழுந்திருக்கும்!

அதற்குள் மின்னல் பாய்ச்சலில் ராமகம்பீரன் பாய்ந்து, ஒருகையால் அரசரைத் தள்ளிவிட்டு மறுபுறம் ஓடினான்.

Edited By A.K

அவன் எதிர்பார்த்தது நடந்தது. இந்திராதித்தர் ஏற்கனவே வயதானவர். அந்தத் திடீர்த் தாக்குதலை அவர் எதிர்பார்க்கவில்லை.

உடல் தானாகத் திரும்ப, தமது வேகத்தைத் தாமே தாங்காமல் கீழே விழுந்தார்.

'அருமைத் தந்தையே!' என்று கூறி, மறுகணம் ராமகம்பீரன் அவர் அருகே பாய்ந்து சென்று அவரை எழுப்பி நிறுத்த யத்தனித்தான்.

'என்னை விடு! விடு என்னை, துரோகி!' என்று இந்திராதித்தர் கூச்சல் இட்டவாறு அவனைப் புறம் தள்ளினார். அவனது கைப்பிடிக்குள் அகப்பட அவர் விரும்பவில்லை.

இதற்குள் சத்தம் கேட்டு அந்தப்புரப் பெண்கள் பலர் ஓடிவர, ராணி அபயாதேவி கீழே தடுமாறியபடி மெல்ல மெல்ல எழுந்து கணவரை நோக்கிச் சென்றாள்.

மன்னர் தம் உடம்பை நிலைநிறுத்தவே முடியாமல் தத்தளிக்க, ராணியின் சமிக்ஞையில் சில பெண்கள் அவரைத் தூக்கி நிறுத்தினார்கள்.

ராணி உடனே, 'பல்லக்கு கொண்டு வாருங்கள்!' என்று கட்டளை இட்டாள்.

சீக்கிரமே அந்த வாகனம் வந்தது. நடுவில் பீடமும் அதன் மீது பட்டு மெத்தையும் கிடந்தது. பீடத்தின் கீழே உள்ள கால்களில் நீண்ட மூங்கில் கழிகள் கட்டப்பட்டிருந்தன.

பீடத்துச் சாய்வில் மன்னர் சாய்ந்து கொள்ள, பெண்கள் அந்தக் கழிப்பகுதியைத் தூக்கினார்கள்.

ராமகம்பீரன் சற்று பயந்து மன்னர் அருகே செல்ல, 'என் முன் நிற்காதே போ!' என்று துச்சமாகப் பேசினார் அவர்.

Edited By A.K

அந்தக் கூடம் சீக்கிரம் சூன்யமாகிவிட்டது.

ராமகம்பீரன் மனத்தில் சிந்தனைகள் கனத்துக் கொண்டு வந்தன.

மன்னர் தனது சொந்தத் தந்தையாக இருந்தாலும், தன்னிடம் ஏனோ ஒழுங்காக நடந்து கொள்வதில்லை என்று அவனுக்குத் தோன்றியது.

'உடனே திருமணம் செய்து கொண்டாகவேண் ஆயிற்று!' என்று இப்படி வைராக்கியம் வைக்கிறாரே. எதற்கு?

அவனுக்குக் கூடத்தில் இருப்புக் கொள்ளவில்லை.

அந்தப்புரத்துக்கு அடுத்து உள்ள தனது சொந்தக் குடியிருப்புப் பகுதிக்குச் சென்று, களைப்போடு அமர்ந்து கொண்டான்.

மனத்தில் ஒரு பயமான எண்ணம் தோன்றிக் கொண்டிருந்தது. இது போன்று ஒரு சம்பவம் அரண்மனையில் நிகழ்ந்தது இல்லை! இது ஏதோ விபரீதத்தைக் கொண்டு விடியப் போகிறதே என்று எண்ணினான்.

சிறிது நேரம் சென்றபிறகு காலடிகள் கேட்க, திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான்.

மந்திர யுதிஷ்டிரர் (பியா யுதிட்டீரா) அங்கே நிற்பது கண்டு, 'வாருங்கள், வாருங்கள்!' என்று கூறி எழ முயன்றான் ராமகம்பீரன்.

அவனைச் சிரமப்பட்டு அமர்த்திவிட்டு யுதிஷ்டிரர் மவுனமாக நிற்க, அவரது ஈரமான கண்களைப் பார்த்து சற்றே யோசித்த ராமகம்பீரன், 'என்ன மகாமந்திரி! தாராளமாக கூறுங்கள்! தயங்க வேண்டாம்!' என்றான்.

Edited By A.K

பலமுறை வற்புறுத்திய பிறகு யுதிஷ்டிரர் கம்மலான குரலில் பேசத் தொடங்கினார்.

'சுவாமி! பேச நா எழவில்லை. இருந்தும் அரச கட்டளையைக் கூறுவது என் கடமை. தாங்கள் இந்த அரண்மனையை விட்டுப் போகவேண்டும். அரச குலத்தையும் துறக்க வேண்டும்!' என்று கூறிக் கொண்டிருக்கும்போதே அழுகையில் உடைந்தார் மகாமந்திரி.

அம்ச முகத்துக் கப்பல் மேனாம் நதி முகத்துவாரத்தில் மணல் மேட்டில் சிக்கி, சிறிது சிறிதாகச் சரிய, அதில் நிலை தடுமாறி வெளியே கடல் நீரில் விழுந்த அரசகுமாரியின் பெயர் ரத்ன தாரா!

கடல் நீரில் விழுந்த சிறிது நேரம் வரை அவளுக்கு நினைவு தத்தளித்த நிலையில் இருந்தது. பிறகு அவளுக்கு ஏற்பட்ட பயத்திலேயே அந்த நினைவு முழுவதுமாக மறைந்து விட்டது.

மீண்டும் வெகு நேரமா, வெகுநாட்களா, அவளுக்குத் தெரியவில்லை. சிறிது சிறிதாக நினைவு திரும்பும்போது மனசில் அந்த பீதி எழுந்தது.

கடலில் விழுந்தோமே, பிழைத்து விட்டோமா? கப்பல் மாலுமிகள் நீரில் குதித்து, என்னைக் காப்பாற்றி விட்டார்களா?

அப்படியானால் உயிர் தப்பி விட்டோமா?

கனமாக மூடியிருந்த கண்களை முயற்சி செய்து மெல்லிதாக விழித்துப் பார்த்தாள்.

Edited By A.K

எங்கும் இருட்டாக இருந்தது. ஒரே நிசப்தம்! மனிதர் குரலே கேட்கவில்லை.

கப்பலில் கேட்டது போல் சூறாவளிச் சத்தம் எதுவும் இல்லை. உடம்பில் குளிரும் தெரியவில்லை.

அப்படியானால் அவள் இருக்குமிடம் கப்பல் இல்லையா?

கண்களை அகலமாக விழித்துப் பார்க்க நுண்ணியதாகக் கேட்ட சுவர்க்கோழிச் சத்தங்கள் மட்டுமே அவளைத் திகைக்க வைத்தன. உடம்பில் குளிர் ஏறவில்லை. பல போர்வைகளைப் போட்டு யாரோ மூடியிருந்தார்கள்.

கண்களைச் சுற்றி சுற்றி வரப் பார்த்தாள். இரவு நேரம் என்று நன்றாகத் தெரிந்தது. எங்கே இருக்கிறோம்?' இங்கே எப்படி வந்தோம்?

போர்வைகளை விலக்கி எழுந்து சற்றுத் தள்ளி இருந்த சாளரத்தை நோக்கினாள். அதன் அருகே போய் வெளியே பார்த்தபோது எங்கும் மினுமினுப்பாக இருள் தெரிந்தது. மரங்களும் செடிகளும் நெருக்கி அடித்து வளர்ந்திருந்தன. வேறு எதுவுமே பார்வையில் படவில்லை.

இவள் இருப்பது சற்று உயரமான பகுதி என்று புரிந்தது. ஒரு வீட்டின் மாடியாக இருக்கலாம்.

ஆச்சரியம்! வீடு முழுவதும் உறுதியான மரத்தால் இழைக்கப்பட்டிருந்தது. காரைச் சுவர்களே தென்பட வில்லை. மூலையில் மண் பானைகளும், வெண்கலப் பாத்திரங்களும் வரிசையில் தெரிந்தன.

மலர்களின் வாசம் உள்ளே மிருதுவாக வந்து கொண்டிருந்தது.

Edited By A.K

பொழுது விடியவில்லை. விடிந்தால் என்ன என்று தெரிந்துவிடும் என்று நினைத்தாள் அவள்.

காலை விடிந்தபோது, வாயில் திறக்கும் சப்தம் கேட்டது. ஆவலுடன் எதிர் நோக்க, ஒரு வயதான பெண்மணி உள்ளே மெதுவாக நுழைந்தாள்.

இடுப்பில் சுற்றிவர ஒரு ஆடையும், மேலே தோளில் ஒரு தனி ஆடையும் போட்டிருந்தாள். அதன் வர்ணங்களே வித்தியாசமாய் இருந்தன.

பார்க்க நல்ல சிவந்த நிறத்தில் தென்பட்டாள்.

அவள் உடனே பேச ஆரம்பிக்க, ரத்ன தாராவுக்கு எதுவும் புரியவில்லை. அது வேற்று மொழியாக இருந்தது.

திரும்பத் திரும்ப அந்தப் பெண்மணி எதையோ கேட்கிறாள் என்பதை அறிந்த ரத்னதாரா, அவள் கேட்டது தனக்குப் புரியவில்லை என்று சைகை காட்டினாள்.

அதைப் புரிந்து கொண்ட அந்தப் பெண்மணி தலையை ஆட்டிவிட்டு கதவைச் சாத்திவிட்டு மீண்டும் வெளியே போய்விட்டாள்.

ரத்னதாராதிக் பிரமையுடன் அமர்ந்திருக்க, போன சிறிது நேரத்தில் அந்த வயதானவள், ஓர் இளம் பெண்ணுடன் திரும்பி வந்தாள்.

"அம்மா! என் பாஷை புரியுமா?" என்று அந்தப் பெண் கேட்டதுமே அவளுக்குத் தூக்கி வாரிப் போட்டது.

"புரியும், புரியும்! நீங்கள் யார்? இது என்ன இடம்? நான் எப்படி இங்கே வந்தேன்?" என்று கேட்டாள்.

Edited By A.K

'என் பெயர் முதாங்! பழைய பெயர் முத்தரசி! இந்த ஊரின் பெயர் பக்னாம்!'

'அது எங்கே இருக்கிறது?'

'இங்கே நதிக்கரையில்!'

ரத்ன தாராவுக்கு அந்தப் பயங்கரக் காட்சிகள் திடீரென்று நினைவுக்கு வந்தன.

எழுந்து போய் வெளிச்சத்தில் வெளியே பார்த்தாள். செழிப்பான மரங்களும், செடிகளும் சுற்றிவர நிரம்பிக் கிடந்தன.

அவைகளைத் தாண்டி தாராவால் எதுவும் பார்க்க முடியவில்லை.

'எங்கள் கப்பல் என்ன ஆயிற்று?' என்று கேட்டாள் திகைத்தவாறு.

'தெரியாது!'

'என்னை யார் காப்பாற்றினார்கள்?'

'தெரியாது'

ரத்னதாராவுக்குச் சிறிது சிறிதாக திகைப்பு கூடியது. வந்த பெண் 'முதாங்' பிறகு கீழே போய் சில கலயங்களையும், பாத்திரங்களையும் ஒரு கூடையையும் எடுத்து வந்தாள்.

குவித்து, உணவு அருந்தி விட்டு சித்தமாக இருக்கச் சொன்னாள்.

கதவை வெளிப் பக்கம் தாழ் போட்டுக் கொண்டு போய்விட்டாள்.

Edited By A.K

ரத்னதாரா எழுந்து கலயத்தைப் பார்த்தாள். அதில் நிறைய நீர் இருந்தது. கூடையில் துணிகள் இருந்தன. பாத்திரத்தில் கூழ் போன்று ஏதோ இருந்தது.

என்ன செய்வது என்று சிறிது நேரத்தை ஓட்டி விட்டு, பின்புறம் சென்று பார்த்தாள்.

அங்குள்ள கதவைத் திறக்க கீழே மரப்படிகள் இறங்கிக் கொண்டிருந்தன. முற்றம், ஓடை எல்லாம் இருப்பதைப் புரிந்து கொண்டாள்.

அந்தப் பகுதியைத் தாண்டி விடமுடியாதபடி, உயரமான மரவேலி ஒன்று சுற்றிவர அணைத்திருந்தது.

கனத்த தேக்கு மரத்தால் ஆனது என்று தோன்றியது!

இது என்ன இடம்? யார் இங்கே இருக்கிறார்கள்?

வயிற்றைக் கிண்டியது. மெல்ல கீழே இறங்கினாள். அங்கே தொட்டிகளில் நீர் நிறைந்து இருந்தது.

சீக்கிரம் பல் துலக்கி, குளித்துவிட்டு, கூடையில் இருந்த நீண்ட நீல நிறத் துணியை எடுத்துப் புடவையாக உடுத்திக் கொண்டாள்.

பிறகு மேலே ஏறி, பாத்திரத்தில் இருந்த கூழைச் சிறிது முகர்ந்து பார்த்தாள்.

பரிச்சயமான உணவு போல் தோன்ற, மெல்ல நாவினால் சூப்பிப் பார்த்தாள். அரிசிக் கஞ்சிதான் என்று நன்றாகப் புரிந்தது. உப்பும் காரமும் போட்டு ஒரு வித மொறு மொறுப்பில் இருந்தது. மோரின் வாசனைகூட நெடித்தது.

Edited By A.K

உண்டு முடித்த சிறிது நேரத்தில் அந்த முதாங் என்பவள் திரும்பி வந்தாள்.

'வாருங்கள் போகலாம்!' என்று சொல்லி, வாயில் கதவைத் திறக்க, அங்கேயும் கீழே இறங்க மரப்படிகள் தென்பட்டன.

கீழே நான்கு திடகாத்திரங்கள் – முற்றிலும் அன்னியர்கள் நின்று கொண்டிருந்தார்கள். இடுப்பில் பஞ்ச கச்சம் போல் துணி! மார்பில் குறுக்காக ஒரு துண்டு! தலை முக்காலும் மொட்டை! முன் பகுதியில் மட்டும் உரோமங்கள் கொழுத்து வளர்ந்து சீவப்படாமல் அப்படியே தொங்கிக் கொண்டிருந்தன. ஆளுக்குக் கையில் ஒரு ஈட்டி வைத்திருந்தார்கள்.

'இவர்கள் யார்?' என்றாள் அவள்.

'இந்த வேலைக்காரர்கள் உங்களை அழைத்துச் செல்வார்கள்!' என்றால் முதாங்.

'எங்கே?'

'தெரியாது!'

'அரண்மனைக்கா?'

'தெரியாது!'

அவளுக்கு வெறுப்பும் கோபமும் ஏற்பட்டது.

'முதாங், எனக்கு இவர்களுடன் போக விருப்பம் இல்லை. எங்கள் ஆட்கள் எங்கே?'

'தெரியாது!'

ரத்னதாரா அவள் கைகளைப் பற்றினாள்.

Edited By A.K

"சொல்! எங்கள் ஆட்கள் ஆண்களும், பெண்களும் வந்தார்களே! அவர்கள் எங்கே? கப்பலின் கதி என்ன ஆயிற்று?" என்று அரற்றிக் கொண்டு கேட்டாள்.

முதாங்குக்கு இருபத்தைந்து வயது இருக்கும். தலையை வாரி முடித்திருந்த விதம் விநோதமாக இருந்தது. நாரதர் போல கூம்பலாக மேலே தூக்கி உச்சிக் கொண்டை போட்டிருந்தாள். சுற்றிவர பளபள என்ற கூந்தல் செழித்து பம்மென்று வீக்கமாகத் தெரிந்தது.

"அம்மா! இந்த ஊர்த்தலைவர் உங்களைப் பார்க்க இருக்கிறார். அவருக்குத்தான் எல்லா விஷயங்களும் தெரியும். எனக்கு மற்ற எதுவும் தெரியாது." என்றாள் முதாங்.

"கடவுளே! இதென்ன சோதனை?" என்று நினைத்தாள் ரத்னதாரா.

கீழே மெல்ல இறங்கினாள். தரையில் நின்றபோது தான் சற்றுத் தள்ளி ஒரு இரட்டை மாட்டு வண்டி நிற்பது தெரிந்தது.

பார்ப்பதற்கு அதுவும் புதுமையாகத் தெரிந்தது.

சக்கர நடுவில் குடங்கள் மத்தளங்களைப் போல் பெரிது பெரிதாகத் தெரிந்தன. சக்கரங்களுக்குக் குறுக்குக் கால்கள் நிறைய இருந்தன. வண்டி மீது வர்ணமிட்ட முரட்டுத் துணிகளால் ஒரு கூடாரக் கூடை போட்டிருந் தார்கள்.

வெள்ளை மாடுகள் இரண்டும் பரிதாபமாகப் பார்க்க ரத்னதாரா அதில் ஏறி அமர்ந்து கொண்டாள்.

Edited By A.K

புரியாத நாடு, புரியாத மக்கள், புரியாத பாஷை என்று நினைக்கும் போது தாபமும் துக்கமும் உடனே எழுந்தன.

வண்டி நகர, வண்டிக்காரன் மாட்டை ஓட்டுவதற்காக குர் குர் குர் என்று ஓசை எழுப்பிக் கொண்டிருந்தான்.

வண்டி தடத்தில் ஓட ஆரம்பித்தது.

# 7

"சகோதரா!" என்று அன்பொழுக அழைத்தார் புத்தலாமா அநகரிகா!

சயாம் தேச சரித்திரத்திலேயே நிறைய இந்தியப் பெயர்களை உதிர்க்கிறேனே என்று எண்ணி விட வேண்டாம்.

சயாம் என்பது இந்தியாவின் மறு பக்கம்!

இதைச் சரித்திரக்காரர்கள் நிறைய உணர்த்தவில்லை.

ஒரு தேசத்தின் சரித்திரம் அந்த தேசத்தில் மட்டும் கிடைப்பதல்ல. அண்மை நாடுகளிலும் அதன் பரிணாமம் சிதறியிருக்கும். அந்த நாடுகளிலும் சென்று ஆய்ந்தறிந்தால் நம்மிடையே விட்டுப் போன செய்திகள் ஆயிரம் தெரியவரும்.

புத்தர் பிறப்பதற்கு முன்பே இந்திய கண்டத்திலிருந்து வடக்கத்தியர்களும் தெற்கத்தியர்களும் சயாம் நாட்டில் குடியேறத் தொடங்கி விட்டார்கள்.

வடக்கத்தியர்கள் இமயத் தொடர்களில் கணவாய்கள், பள்ளத்தாக்குகள், நதிப் படுக்கைகள் வழியில் சயாமின் வடபகுதியை அடைந்தனர்.

Edited By A.K

தெற்கத்தியர்கள் கப்பல் கட்டிச் சென்று கடாரம் (மலேஷியாவில் தற்போதைய கேடா) ஜாவகம் (ஜாவா) சமுத்திரத்தீவு (சுமத்ரா) இவைகள் வழியே சயாமின் தெற்குப் பகுதியில் குடியேறி பிறகு ராஜ்யங்களையும் ஸ்தாபித்து விட்டார்கள்.

தெற்கத்தியர்கள்தான் ராஜ்யம் ஸ்தாபித்ததில் முதன்மையானவர்கள்.

சயாமின் தேசத்துப் பூர்விகக் குடிகளும், சீன தேசத்து யுன்னான் மாகாணத்திலிருந்து வந்தவர்களும் இந்தியர்களோடு பல நூற்றாண்டுகள் கலந்து ஒரு புது இனத்தை ஏற்படுத்தி விட்டார்கள்.

தமிழ், வடமொழி, பாலி இவைகளில் பெரும்பான்மைக் கலப்புள்ளதாக மாறியது இவர்களது மொழி!

இந்தியச் சமய வாழ்வின் பெரும்பான்மைச் சடங்குகளும் அவர்களிடம் ஐக்கியமாகி விட்டன.

பழைய நாட்களில் கலிங்கர்களும், தெலுங்குச் சோழர்களும் பல்லவர்களும் சயாமில் நிறையத் தொடர்பு வைத்திருந்தார்கள்.

பல்லவ இன வம்சத்தார் சயாம் பகுதிகளைப் பல தலைமுறைகளாக ஆண்டு வந்தார்கள்.

இந்தக் கதை ஆரம்பிக்கும் போது இந்திய கண்டத்தில் சோழ ராஜ்யம் பலவீனப்பட்டு விட்டது.

பாண்டியர்கள் உச்சம் பெற்றிருந்த நேரம்!

சோழ வம்சத்தின் கிளை வழியே வந்தவர்கள்தான் இந்திராதித்தன் வம்சத்தினர்.

Edited By A.K

பல தலைமுறைகள் வாழ்ந்ததில் சயாமியர்களாகவே மாறியவர்கள்.

இருப்பினும் தங்களது மூதாதையர் நாடு சோழ நாடு தான் என்பதை அவர்கள் மறந்தவர்கள் அல்ல!

**ம**காமந்திரி யுதிஷ்டிரர் கூறியதைக் கேட்டதும், புன்னகை அன்றி வேறு எதுவும் கொள்ளவில்லை ராமகம்பீரன்.

மாறுதலாக மந்திரியான அந்த முதியவரை நோக்கி, "மகாமந்திரிகளே! தாங்கள் ஏன் வேதனை அடைகிறீர்கள்? ஏன் கண் கலங்குகிறீர்கள்? இதை எல்லாம் அரச வம்சத்தினரிடையே எதிர் பார்க்க வேண்டியதுதானே! இந்தக் கணமே அரச குலத்தைத் துறக்கிறேன்! அரண்மனையை விட்டுப் போய்விடுகிறேன்! அவ்வளவு தானே!" என்று எழுந்தான்.

மகாமந்திரிக்குத் துக்கம் நெஞ்சை அடைத்தது. ராமகம்பீரன் அப்படிச் சொல்வான் என்று எதிர்பார்க்க வில்லை. ஒரு குடும்பத்தின் துக்க நிகழ்ச்சி ஒன்றை நேரில் பார்க்கிறோமே என்ற மனவேதனைதான் அவரிடம் இருந்தது.

"மன்னரிடம் போய்ச் சொல்லுங்கள், மகாமந்திரி! எனது வந்தனங்களையும், நமஸ்காரங்களையும் அவரிடம் தெரிவிக்கிறேன் என்று! நானே போய் நேரில் கூறுவேன். ஆனால் என்னைக் கண்டாலே அவருக்கு எழும் கோப உணர்வை அவரால் தாங்க முடியாது. வயது ஆகிவிட்டவர் அவர். இன்னும் பல காலம் நன்கு வாழ வேண்டும். வருகிறேன்!" என்று சொல்லி வெறும் தனி மனிதனாகக் கிளம்பினான் அவன்.

Edited By A.K

மகாமந்திரி அவனைத் தடுத்து மறுநாள் காலை வரை இருந்து செல்லுமாறு கேட்டுக் கொண்டார்.

ஆனால் ராமகம்பீரன் அந்த விஷயத்தைக் கேட்பதாக இல்லை. உடனே போக வேண்டும் என்று பிடிவாதம் பிடித்தான்.

நேராகத் தாயாரிடம் விடைபெறுவதற்கு அந்தப்புரம் சென்றான்.

வழியில் அங்கங்கே தாதிகள் பிரமை பிடித்த பதுமைகள் போல் நின்றார்கள். எங்கும் நிசப்தம் பரவி, அரண்மனையின் கலகலப்பு அத்தனையும் போன இடம் தெரியாமல் ஆகிவிட்டது.

விளக்குகள் கூட ஜொலித்து எரியாமல் துக்கம் கொண்டாடுபவர்கள் போல் நீண்ட புகைகளைச் சொரிந்தவாறு எரிந்தன.

அந்தப்புரத்தின் பல பகுதிகள் சூனியமாகவே இருந்தன.

தொங்கும் கூண்டில் இருந்த ராஜகிளி கூட அவனைக் கண்டு எந்தச் சத்தமும் செய்யாமல் இருந்தது.

அரசரின் தனிக்கூடம் அருகே வரும் போதுதான் அங்கே பேச்சுக் குரல்கள் கேட்டு சற்றே நின்றான் அவன்.

"உங்களை மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன். அரச குலத்தை அவன் விட்டு விடட்டும்! ஆனால் அரண்மனையில் மட்டும் அவனைத் தங்க அனுமதியுங்கள்!" என்று அவனது தாயார் அழுகையுடன் கூறுவது கேட்டது.

"இந்தா! இந்த விஷயத்தில் தலையிடாதே! ஒரு சம்பவம் போதும், உன் பிள்ளை என்ன செய்வான் என்பது

Edited By A.K

தெரிய! என்னைத் தள்ளிவிட்டானே. நான் விழுந்த அடி எனக்கு அல்லவா தெரியும்! ஒரு தந்தையை இவ்விதத்தில் தள்ளியவன் நாளை சிங்காதனத்திலிருந்தும் தள்ளி விடுவான். பகவான் கருணையில் தப்பினேன். இல்லா விடில் எலும்பு முறிந்திருந்தால் என் கதி அதோகதிதான். இப்போதே வைத்தியர் சொன்னதைக் கேட்டாயா? நான் எழுந்திருக்க மூணு மாதம் ஆகுமாம்!'' என்று சீற்றத்தில் கூறினார் மன்னர்.

ராணி அபயாதேவி ஏதோ கூற முயல, ''இதோ பார். இவன் இருந்தால் இங்கே நமது குலத்தில் பட்டத்துக்குப் போட்டி ஏற்பட்டு ரத்தக் களறி உண்டாகி விடும். அதற்கு நான் சம்மதியேன்! நீ இதற்கு மேல் பேசாதே! என் ஆணை ஆணைதான்!'' என்றார் மன்னர்.

ராமகம்பீரன் பிறகு தன் தாயாரின் விம்மும் குரலைக் கேட்டான்.

சிறிது நேரம் வரை கண்கள் கலக்க முற்று அங்கேயே நின்றான். பிறகு மனத்தில் ராமகதையை நினைத்துப் பார்த்தான்.

தந்தையின் ஆணையால் அந்த ராமருக்கும் அது போன்ற கதி ஏற்பட்டிருக்கும் அல்லவா! அவர் என்ன செய்தார்?

சிறிது கூட மனம் தளராமல் அரச வாழ்க்கையின் சுகங்களை நினைத்துப் பாராமல், தன் சொந்தத் தாயாரைப் பிரியும் துக்கத்தை சிறிது கூடப் பாராட்டாமல், அயோத்தி நகரை விட்டுச் செல்லவில்லையா?

அதைப் போல அவனும் செய்ய வேண்டியதுதானே!

Edited By A.K

மனதில் உறுதி பூண்டவனாய் சற்றே திரும்பி, தன் தாய் தந்தையர் இருந்த சயன அறையை நோக்கிக் கை கூப்பி நமஸ்கரித்தான்.

பின்னர் எதையும் பொருட்படுத்தாமல் விறு விறுப்பாக, அந்தப் பெரிய அரண்மனையைக் கடந்து வெளியே செல்லத் தொடங்கினான்.

ஆசார வாசலுக்கு வந்தான்.

மனதில் ஒரு அழுகையான பொருமல் வர அதை அடக்கிக் கொண்டான்.

'யார் வாழ்க்கையைத்தான் விதி விட்டு வைக்கிறது! நான் மூன்றாவது மகனாகப் பிறந்ததே விதி. அதிலும் அறிவாளியாகப் பிறந்ததது மற்றொரு விதி. இந்த இரண்டுமாகச் சேர்ந்து என்னை இந்த அரண்மனையை விட்டுத் துரத்துவதும் விதி' என்று நினைத்தான்.

படிகளை விட்டிறங்கி தடதடவென்று நடந்துபோக ஆரம்பித்தான்.

யாராவது சேவகர் அருகில் வந்தாலும் ''போங்கள்... போங்கள்'' என்று விரட்டினான்.

வெளிப் பூங்காவைக் கடந்து, வெளி மதிலைக் கடந்து, ராஜதானி வீதியைக் கடந்து சுகோதய நகருக்குள் நுழைந்தான்.

நடுநிசியை நெருங்கியிருந்த நேரம் அது! கலகலப் பான வீதிகள் யாவும் நிசப்தமாகிவிட்டன.

சூதாட்ட வீதிகளில் மட்டும் அங்கங்கே உச்சமான சத்தங்கள் கிளம்பிக் கொண்டிருந்தன.

நாட்டியக்காரிகளின் கச்சை கட்டிய பாடல்களின் சிற்சில வரிகள் மட்டும் காற்றில் மிதந்து வந்து காதில் விழுந்தன.

Edited By A.K

இனி எங்கே போகலாம் என்று யோசிக்கும் போது, தோளில் ஒரு கை வலுவாக விழுந்தது.

திரும்பிப் பார்த்தபோது, சேனாபிமுகர் (சேனைத் தலைவன்) சுந்தரடேல் (சுந்தர தேவர்) நிற்பதைப் பார்த்தான்.

வயதில் பழுத்தவர். போர்களில் கீர்த்திப் புண்களை ஏற்றவர். மன்னர் அபிமானத்திற்கு மிகவும் பாத்திய மானவர்.

"சேனாபிமுகரே! என்ன?" என்று சுபாவமாக ராமகம்பீரன் வினவ ஆரம்பித்தான்.

ஆனால் சுந்தரத்தேவர் தம் நரை மீசையுடன் சிரித்தாரே தவிர, எதுவும் பேசவில்லை.

அந்தச் சிரிப்பிலும் ஏதோ விபரீத அர்த்தம் தொனிக் கிறது என்பது ராமகம்பீரனுக்குத் தெரிந்து விட்டது.

தனது இயல்பான புன்னகையை உடனே விடுத்து, சுற்றும் ஒருமுறை பார்த்தான். எட்டத்து நிழலில் ஐந்தாறு அரச சேவகர்கள் நிற்பது கண்டு அவன் கால்கள் கீழே அழுந்தின.

அவன் வாய் மூட, கண்கள் இரண்டும் கூரியவை யாகப் பார்த்தான்.

அந்தக் கணங்களில் எழுந்த மௌனம் உள்ளத்தை ஏதோ செய்தது.

சுந்தரத்தேவர் பேசாதது அவனுக்கு வெறுப்பை எழுப்ப, கோபமும் உடனே கொதித்தது.

மற்ற சமயங்களில் அவன் முன்னால் நிமிர்ந்து நிற்கவும் பயப்படும் சேனாபிமுகர் அவர்!

"என்ன, சொல்லுங்கள்! சேனாபதியே! தயக்கம் எதுவும் வேண்டாம்.! என்றான் ராமகம்பீரன்.

Edited By A.K

"பொறுத்தருள வேண்டும், யுவராஜரே! தங்களைச் சிறையில் வைக்க வேண்டும் என்று உத்தரவு!"

"என்னையா? உத்தரவா? யார் பிறப்பித்தார்கள்?"

ராமகம்பீரன் மனத்தில் எண்ணங்கள் பலவாறாகப் பறந்து சென்றன.

சுந்தரத் தேவரின் கை மீண்டும் சுவாதீனமாக அவன் தோளில் விழுந்து அவனது வலது கையை பற்றியது.

'என்ன! என்னை இவர்கள் என்ன செய்கிறார்கள்? சாதாரண நிலையில் என் மேனியை இவர் தொடுவாரா? இப்போது சுபாவமாகத் தொட்டு என்னை இழுக்கிறாரே!' என்ற எண்ணம் உச்சந் தலைக்கு உஷ்ணமாக ஏறியது.

வலுவோட விழுந்த சுந்தரத் தேவரின் கையை ஒரு முறை விலக்க, "இந்தாருங்கள்! திமிரக்கூடாது!" என்று தேவர் கோபக் குரலில் கட்டளையிட்டார்.

நிழல் தட்டுள் இருந்த சேவகர்கள் துள்ளி எழுந்து அங்கே வந்தார்கள்.

ராமகம்பீரன் தன் முயற்சிகளை நிறுத்தினான்.

அவனைச் சேவகர்கள் பிடித்து இழுத்து ஆற்றின் பக்கம் சென்றார்கள்.

ஒரு சிறு படகில் ஏற்றினார்கள். இரு சேவகர்களும், சுந்தரத் தேவரும் ஏறிக் கொண்டார்கள்.

"சீக்கிரம் ஓட்டு" என்று கட்டளை இட்டார் தேவர்.

நிலா ஒளியை சிள்சிள்ளாக்கிய படி, படகு நகர்ந்தது.

அழகான ஒலி இழைகள் படகின் இரண்டு புறமும் வழிந்துகொண்டு சென்றன.

கரைசிறிது சிறிதாக விலகியது. நடு ஆற்றுக்குள் படகு வந்து விட்டது.

Edited By A.K

ராமகம்பீரனின் மனம் புழுப் போல் துவண்டது.

என்ன அநியாயம்? ராஜ கட்டளையைத்தான் அவன் சிறிதும் பிறழாமல் நிறைவேற்றுகிறானே! இந்த நிலையில் ஏன் இப்படி பலாத்காரத்தை அவன் மீது பிரயோகிக்கிறார் கள்! எங்கே அவனைக் கொண்டு போகிறார்கள்?

அப்போது திடீரென்று பாட்டு ஒன்று இழுத்தது. ஒட்டக்காரர்களின் பாட்டு.

பாடியது ஒரு பெண்! நிலா வெளிச்சத்தில் அவள் தெரிந்தாள்.

அழகான இளம் வயதுப் பெண். இடையில் சிறிதே கொசுவம் இட்ட நீலத் துணியைச் சுற்றி இருந்தாள்.

மேலே ஒரு சிவப்பான துணி அவளது மார்பின் குறுக்கே ஓடியிருந்தது.

அவளது வலது தோளும், கழுத்தும் முகமும் நிலவில் வெகு இளசாகத் தெரிந்தன.

துடுப்பை மாறி மாறிப் போட்ட வண்ணம் அவள் பாடிக் கொண்டிருந்தாள்.

பாடலா அது! அல்லது சோகத்தின் பிழிவா! குரல் ஏன் இவ்வளவு வேதனை ஒலிக்கிறது?

பாட்டின் இழைகள் வழிந்து அவன் உள்ளே சென்று மனத்தில் தாங்க முடியாத தாபத்தைக் கிளப்பிவிட்டன.

# 8

**ஒரு பாதி நாளில் விதி அவனிடம்**
**என்னமாய் விளையாடிவிட்டது!**
**காலையில் அரண்மனை வாசம்;**
**இரவுக்குள் சிறைவாசமா?**

அந்த ஓடப் படகு நதி நடுவில் நிறைய வெள்ளி வரிகளை விரித்துக் கொண்டு சென்றது.

ஓடக்காரி ஒரு இளமைக்காரி!

அந்த நடுநிசி அவள் உள்ளத்தை ஏதோ ஒரு விதத்தில் வருடி இருக்க வேண்டும். தனது துக்கம் தோய்ந்த குரலில் அவள் அந்தப் பாடலைப் பாட ஆரம்பித்து விட்டாள். அந்தப் பாடலில் அப்படி ஒரு சோகம் எப்படி வந்து ஒட்டிக் கொண்டது?

சிங்க புரத்துக்காரி
        சின்ன ஓடம் வைத்திருந்தாள்
நாளும் நாளும் அக்கரை போய்
        நாயகரைத் தேடி வந்தாள்!
போனவனைக் காணவில்லை
        ஆயிரம் நாள் ஆயிப்போச்சு!
மறைந்து எங்கே போனானோ
        மங்கை என்னை மறந்தானோ?
எண்ணி எண்ணி ஓட்டுகிறேன்
        'மேனாம்' தாயின் மடி மேலே
வாழ்க்கை என்னும்
        ஓடத்தைத்தான்! என்
        வாழ்க்கை எனும் ஓடத்தைத்தான்!

எங்கேயோ, யாரோ, ஏதோ ஒரு துக்கத்தை நினைத்து மனம் உருகிப் பாடுவது போலிருந்தது. ஓடம்கூட அந்த துக்கத்தை உணர்ந்துவிட்டது! சலசலப்பு அளிக்காமல் மெல்லிதாக நீரை விலக்கிய வண்ணம் ஓடியது.

ராமகம்பீரன் மனம் அப்போது எதிலும் பதியவில்லை. பல விதத்தில் எண்ணங்களிட்டுக் குழம்பிக் கொண்டிருந்தது.

பகலிலிருந்து தனக்கு நடந்ததை நினைத்துப் பார்த்தான்! எல்லாம் ஆச்சரியங்களாக இருந்தன. ஒரு பாதி நாளில் விதி அவனிடம் நிறைய விளையாடி விட்டது. இல்லாவிடில், காலையில் அரண்மனையில் இருந்தவனுக்கு இரவுக்குள் அதை விட்டு நீங்கும் கதி ஏற்படுமா?

ஒரு விதத்தில் அவனுக்குக் கோபம் வந்தது. அரண்மனையில் எங்கே சந்தித்தாலும், "பிரபு!" என்று குழைந்து கை குவிக்கும் இந்தச் சேனாதிபதி சுந்தரத்தேவர் இங்கே இப்போது இந்த வேளையில் அப்படியே மரத்துப் போனகட்டை போல இருக்கிறாரே! இதைப் போய் எங்கே சொல்வது?

என்னைச் சிறை வைக்கப் போகிறார்கள்! உண்மை தான்! ஆனால், அதற்காக என்னை எங்கே கொண்டு செல்கிறார்கள். அதையாவது என்னிடம் சொல்லக்கூடாதா?

ஓடம் தன்பாட்டில் ஓடிக்கொண்டிருந்தது. ஓடக்காரி உணர்ச்சி வசத்தில் வரிசையாக ஆறு பாட்டுகள் பாடிவிட்டாள்!

பிறகு ஏன் அவள் திடீரென்று நிறுத்தினாளோ!

ஓ!... அந்தச் சிறைக் கூண்டுகளை கண்டதும் நிறுத்திவிட்டாளோ?

இடது கரை ஓரம் வரிசையாக அந்தப் பயங்கரங்கள் தொங்கிக் கொண்டிருந்தன.

நதியில் நீட்டிக் கொண்டிருக்கும் ஒரு நீள மரக்கொம்பு முனையில் தொங்குபவை இந்தக் கூண்டுகள்!

நதிக்கரையில் ஒரு மரத் தூணை நட்டு, அதன் உச்சியில் ஒரு மரக் கொம்பைப் பொருத்தி இருப்பார்கள். இந்தக் கொம்பு நதியை நோக்கி ஐந்தாறு அடி நீண்டிருக்கும். (தூண்டில் கொம்பு போல) இதன் முனையில்தான் அந்த மரக் கூண்டுகள் தொங்கிக் கொண்டிருக்கும்.

இந்தக் கூண்டின் அடிப்புறம் நதி நீருக்கு இரண்டு அடிமேல் இருக்கும். இந்தக் கூண்டுகள்தான் சிறைகள்.

நதி ஓரத்தில் இந்தக் கூண்டுப் பிரதேசத்தைக் கண்டாலே ஓடங்களும், படகுகளும் விரைவாக அந்த இடத்தை விட்டு விலகிச் சென்று விடும்! கூண்டில் அடை பட்டு வாடி வதங்கும் குற்றவாளிகளைக் காணச் சகியாமல் ஓடி விடுவார்கள்.

Edited By A.K

இந்தக் கூண்டுகளைப் பார்த்ததும்தான் ராம கம்பீரனுக்கு யோசனைகள் திடீரெனக் கிளம்பின.

திடீரென்று திரும்பி "சுந்தரத் தேவரே!" என்று கர்ஜனை புரிந்தான். குரலின் உத்வேகம் தாங்காததுபோல ஓடமே ஒரு ஆட்டம் ஆடியது.

ஓடக்காரி துடுப்பை ஒரு கணம் நிறுத்திவிட்டு திகைப்புடன் ராமகம்பீரனைப் பார்த்தாள்.

"சுவாமி!" என்று தாழ்ந்த தொனியில் குரல் கொடுத்தார் சுந்தரத் தேவர். அந்தச் சமயம் நதி நடுவில் சென்ற ஓடம் இடது பக்கம் திரும்ப ஆரம்பித்தது.

"இதெல்லாம் என்ன? என்னை எங்கே கொண்டு செல்கிறீர்கள்?" என்று இடி முழக்கமாகக் கேட்டான் ராம கம்பீரன்.

"எங்கேயும் இல்லை பிரபு!" இங்கே தனி மாளிகை வாசத்திற்குத் தங்களை அழைத்துப் போகிறோம்!" என்று தழைந்த குரலில் கூறினார் தேவர்.

"அங்கேதான் நான் இருக்க வேண்டுமா?"

"ஆமாம் சுவாமி, மன்னரே கட்டளை இட்டிருக்கிறார்! இங்கே சித்தபுரத்தில் தங்களை வைத்து விட்டு வரச் சொன்னார்"

"ஏன்? நகரத்தில் நான் இருக்கக்கூடாதா? நிசப்தமாக இருந்து விடுவேனே! அவருக்கு எந்தவிதத் தொல்லையும் தரமாட்டேனே!"

"சுவாமி, தங்கள் அருமையான குணங்கள் எனக்குத் தெரியும். ஆனால், நகரத்தின் பக்கமே இருக்கக் கூடாது! அதற்கு அப்பால் ஒரு மாளிகை பார்த்து அங்கே விட்டு விட்டு வர வேண்டும் என்று சொன்னார்! எனக்கே இதில் மனக் கசப்புதான் பிரபு! இந்த ராஜ்யம் எங்கே போய்க் கொண்டிருக்கிறது, தெரியவில்லையே! நம் முன்னால்

Edited By A.K

தலையெடுத்த இந்த ராஜ்யம் சீக்கிரத்தில் நசித்து விடுமோ? சுவாமி! எனக்கு இந்தத் தளபதி உத்தியோகமே தேவையில்லை! நான் திரும்பிப் போனதும் மன்னரிடம் தெரிவித்து விட்டு, வடக்கே போவதாக இருக்கிறேன்!''

சுந்தரத் தேவர் மெல்ல மெல்ல வார்த்தைகளைக் கூறினார். முதிர்ந்த அனுபவம் பெற்றவர் அவர்! அவரே இவ்விதம் நொந்து பேசுவது ராமகம்பீரனுக்கு இதமாக இருந்தது.

'ஓகோ! மன்னர் என்னைத் தலை நகர் பக்கமே இருக்கக் கூடாது என்று நினைக்கிறாரோ! அவ்வளவு கோபமா! என் மீது?'

''சரி, தேவரே! இந்தக் கூண்டுப் பிரதேசத்து நிலப்புறத்திலே வெறும் காடுகள் அல்லவா இருக்கின்றன? இங்கு ஏன் ஓடத்தைத் திருப்புகிறீர்கள்?''

''பிரபு, தாங்கள் சொல்வது சரியே! இந்தக் காடுகளைத் தாண்டிவிட்டால் செழித்த கரும்புத் தோட்டங்களும் நெல் வயல்களும் இருக்கின்றன. அங்கேதான் சித்தபுரம் என்ற கிராமம் இருக்கிறது. அங்கே சித்திரானந்தர் என்று ஒரு பெரிய பிரபு இருக்கிறார். அவரது மாளிகை ஒன்றில்தான் தாங்கள் தங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது'' என்று கூறினார் தேவர்.

ராமகம்பீரன் மௌனமாகிவிட்டான். மேலே பேச வில்லை.

ஓடம் கரை நோக்கிச் சென்றது. அந்தக் கூண்டுப் பிரதேசத்தைச் சற்றே தாண்டி, கரையோரமாக நெருங்கியது.

கரையிலிருந்து நதிக்குள் பல அடிதூரம் வரை நீட்டிய மரப்பலகை வாராவதி ஒன்று அங்கே தென்பட்டது.

அதன் அருகே ஓடம் நின்றதும், ஒவ்வொருவராக பலகை மேடையில் ஏறினார்கள்.

Edited By A.K

கரையோரம் ஜனசந்தடியோ, குடியிருப்போ எதுவும் இல்லை! நாவல் மரங்கள் செழித்து வளர்ந்து இருளை மேலும் தீவிரமாக்கியிருந்தன.

கரை வந்தது. அங்கே ஏற்கெனவே அரச சேவகர்கள் குவிந்து நிற்பது ராமகம்பீரனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

அவர்களிடையே சுந்தரத் தேவர் தனியாகப் போய்ப் பேசிவிட்டு வந்த பிறகு, "பிரபு, வாருங்கள் குதிரை ஒன்று தங்களுக்குச் சித்தமாக உள்ளது! அதில் ஏறினால் சீக்கிரம் கிராமத்தை அடைந்து விடலாம்!" என்று கூறினார்.

ஒரு கறுப்பு நிறக் குதிரை மரத்தோரம் நின்று கொண்டிருந்தது. அதில் ராமகம்பீரன் ஏறி அமர்ந்து கொண்டான். முன்னாலும் பின்னாலும் காவலாளிகள் குதிரைகளில் செல்ல, அவன் தன் பயணத்தை மேலும் துவக்கினான்.

காட்டுக்குள்தான் அந்தத் தடம் சென்றது. காவலர்கள் அதில் லாவகமாகப் போவதைப் பார்த்தால், ஏற்கெனவே இந்த இடங்களில் நன்கு பழகியவர்கள் போலத் தோன்றியது. அங்கங்கே இடைவெளிக்கு வரும்போதுதான், தன்னோடு வருபவர்களை ராமகம்பீரன் கவனிக்க முடிந்தது. கவனித்ததில் ஒரு விஷயம் அவனுக்கு வியப்பைக் கொடுத்தது.

சுந்தரத்தேவரை அங்கே காணவில்லை! அதற்கு மாறாக, தலைமை ஸ்தானத்தில் மற்றொருவர் குதிரையில் போவதை உணர்ந்தான். அவர் முகத்தை இன்னும் அவனால் சரியாக கவனிக்க முடியவில்லை. ஏதோ கடமையில் கண் வைத்தவர் போல் அவரும் திரும்பவே இல்லை.

பொழுது புலரும்போது காடுகளின் விளிம்பில் அந்தக் கல் கட்டிடத்தைப் பார்த்ததும் ராமகம்பீரனுக்குத்

Edited By A.K

திகைப்பாக இருந்தது. ஒரு மாளிகை போல் அது தோற்றம் காட்டவில்லை.

எனினும், அங்கேதான் குதிரை வீரர்கள் போய் நிற்பதைப் பார்த்ததும், அவன் யோசனை அதிகமாகியது.

கட்டிட வாசலில் எல்லோரும் நின்றதும் குதிரையி லிருந்து ராமகம்பீரன் கீழே குதித்துச் சுற்றி வரப் பார்த்தான்.

மாளிகையின் வாசல் போன்று இல்லை அது! அதன் பயங்கரக் கதவுகளைத் திறப்பதற்கே பல பேர் தேவைப்பட் டது! உள்ளே இருட்டாக ஏதோ பகுதிகள் தெரிந்தன.

திகைப்படைந்த ராமகம்பீரன் பார்வையைத் திருப்ப, அங்கே அந்தத் தலைவர் எந்தவித உணர்ச்சியும் இல்லாமல் அவனைப் பார்ப்பது தெரிந்தது.

அவரைப் பார்த்ததுமே அவனுக்கு நினைவு வந்து விட்டது: ராஜ்யத்தின் ஒற்றர் படைத் தலைவர்களில் ஒருவர் சுப்பிரமணியர் (சுவாங்) என்று பெயர். சிற்சில சமயங்களில் மன்னரோடு அவர் இருப்பதை அவன் பார்த்திருக்கிறான்.

சுப்பிரமணியர் அவனை நெருங்கி, "சுவாமி, யோசிக்கவேண்டாம்! இங்கே சில நாழிகை தங்கி இளைப்பாறி விட்டு, மேலே போகப் போகிறோம்! வாருங்கள்! உள்ளே வந்து ஓய்வு எடுங்கள்!" என்று கூறினார்.

நெற்றியில் சுருக்கமுடன் ராமகம்பீரன் படிகளில் ஏறினான். அவன் அடிகள் சற்றே தடுமாறின. உள்ளே புழுக்கலான வாடை வீசியது! வெளிச்சம் எதுவும் தென்பட வில்லை. கல் பரவிய நடை நீண்டதாகப் போய்க் கொண்டிருந்தது.

"இங்கேயா நாம் தங்கப் போகிறோம்!" என்று பதட்டத்துடன் கேட்டான் அவன்.

Edited By A.K

"ஆமாம், சுவாமி!"

அவர் கூறிய மறுமொழி அவனைச் சற்று திகைக்க வைத்தது. ஏனெனில் அவர் தொனியில் சுரத்து இல்லை. கண்கள் அலங்க மலங்க, "எங்கே அவர், சுந்தரத் தேவர்?" என்று குரலில் கரகரப்புடன் கேட்டான் அவன்.

"அவர் போய் விட்டார், சுவாமி! வாருங்கள் உள்ளே!"

சுதம் சுதம் என்று நெஞ்சு வெட்டிக் கொள்ள, அடி மேல் அடி எடுத்து வைத்தான். ஒரு அடிக்கு அடுத்த அடி பிறழ ஆரம்பித்தது! வரிசையாகக் கதவுகள் தெரிந்தன. அவற்றின் அடிப்பகுதியிலிருந்து வந்த நெடி அவனைத் திடுக்கிட வைத்தது.

"இதென்ன இடம்? என்னை எங்கே கொண்டு போகிறீர்கள்? சொல்லுங்கள்! சொல்லுங்கள்!" என்று இரைந்த அவன், திடீரென்று வெளியே நோக்கித் தாவினான்.

ஆனால், அவன் மீது அத்தனைக் காவலர்களும் பாய்வார்கள் என்று எதிர் பார்க்கவில்லை.

"சொல்லுங்கள்! இதென்ன இடம்? நான் இந்நாட்டு மன்னரின் மகன்! என் தாயாரை நான் பார்க்க வேண்டும்! சொல்லுங்கள், இது என்ன இடம்?" என்று அவன் கத்த, அவனைப் பலரும் சேர்ந்து வலுக்கட்டாயமாகப் பிடித்து, ஒரு கதவைத் திறந்து அதன் உள்ளே இருட்டில் இழுத்துப் போய் கருணை இல்லாமல் படீரென்று தள்ளினார்கள்.

கீழே அவன் விழுந்து கொண்டிருந்தான்.

* * *

அதே நேரம் சேனாதிபதி சுந்தரத் தேவர் சுகோதயம் நகரம் திரும்பி அரண்மனையில் ராணி அபயாதேவி முன்னால் நின்று,

Edited By A.K

''மகாராணி! இரவு முழுதும் யுவராஜாவைத் (ராமகம்பீரன்) தேடிவிட்டேன். கிடைக்கவில்லை. எங்கே போனாரோ தெரியவில்லை. நாலு புறத்திலும் ஆட்களை அனுப்பித்திருக்கிறேன்!'' என்று பணிவுடன் கூறிக் கொண்டிருந்தார்.

# 9

**என் தந்தையா அப்படிச் செய்தார்? தன் சொந்த மகனையா சிறைக் கிடங்கில் தள்ளினார்? அதற்குப் பதிலாக என் தலையை வெட்டி எறிந்திருக்கலாமே?**

புத்தலாமா தமது வியர்வை முத்துக்களை துடைத்துக் கொண்டார். அவர் ஆழ்ந்த கண்கள் கலங்கி, முகத்தில் நிழலாக ஒரு சோகம் வீசியிருந்தது.

''தம்பி!'' என்றார் என்னை நோக்கி அப்படி விளிக்கும்போதே, என் மனசில் உள்ளவற்றை அவர் புத்தகம் போல் படித்திருக்க வேண்டும் என்று நினைத்தேன். என் ஊகம் சரியே! ஏனெனில் என் மனசில் தோன்றிய கேள்விக்கு மறுமொழி தருவதுபோல் பேச ஆரம்பித்தார்.

''சயாம் நாட்டு சரித்திரத்தில் இந்தியர் பெயர்களாக நிறைய நான் உதிர்ப்பதைக் கண்டு மலைத்து விடாதே!

ஏற்கெனவே சொல்லிவிட்டேன், பாரத தேசத்து இனங்கள் பலவும் வெகு காலம் முன்பே இங்கே வந்து சேர்ந்து விட்டன! எங்கள் புத்தபிரான் பிறப்பதற்கு முன்பே கூட அவர்கள் இந்த மண்ணை மிதித்து விட்டார்கள்.

அதனால் சகுனம் பார்ப்பதிலிருந்து திருமணம் செய்வது வரை எல்லாவித இந்தியச் சடங்குகளும், அதற்கு உரிய மந்திரங்களும் இங்கே வந்து குவிந்து விட்டன.

இங்குள்ள ஜனங்கள் எதை மறந்தாலும் மறப்பார்கள்; தங்கள் வழிவழி வந்த இந்தியச் சடங்குகளையும்,

Edited By A.K

மந்திரங்களையும் மறக்கமாட்டார்கள். தவிர, முன் காலங்களில் பல வம்சங்கள் முழு இந்தியப் பெயர்கள் தாங்கியே இங்கே ஆட்சி செலுத்தின. (இப்போது இருக்கும் மன்னர்கள் 'பூமிபால் அதுல்ய தேஜா' என்று பெயர் பூண்டுள்ளார்)

இதேபோலத்தான் பதின்மூன்றாம் நூற்றாண்டில் இந்திராதித்தர் அவர்களுள் ஒருவர்! அவர்தான் இந்த சயாம் நாட்டின் பகுதிகளை இணைத்து ஒரு பலமான ராஜ்யத்தை முதன் முறையாக உண்டு பண்ணியிருந்தார்'' என்று கூறிய லாமா மேலே கதையில் இறங்கினார்.

ஓடக்காரி மிச்ச இரவில் அங்கேயே தங்கி இருந்தாள்.

ஓடத்தின் பலகையில் நீளப் படுத்து, மேலே தெரிந்த கார்த்திகை நட்சத்திரக் கூட்டத்தை வினோதமாக பார்த் திருந்தாள்.

போனவர்கள் திரும்பி வருவார்கள் என்று ஒரு ஆசை அவளிடம் இருந்தது.

பிரயாணிகளில் அந்த நரை மீசை வைத்த வயோதிகர் தான் அவள் ஓடத்தை அந்தத் துறைக்குச் செல்லும்படி சைகை காட்டிக் கொண்டு வந்தார்.

இப்போது பேசாமல் இறங்கிப் போய்விட்டார்.

எனவேதான் அவர்கள் திரும்பி வரலாம் என்று காத்திருந்தாள்.

ஒரு உல்லாசமான தூக்கமும் தூக்கமில்லாத நிலை யிலும் அவள் இருந்த சமயம், பொழுது பூக்கத் தொடங்கியது.

தளிர்ச்சிவப்பில் கீழ்வானம் முழுதும் புன்னகை விரிந்து கொண்டிருந்தது.

மெல்ல மெல்ல சோம்பலையும் தூக்கத்தையும், பிரமைகளையும் விட்டு எழுந்தாள் அவள்.

Edited By A.K

நீண்ட துடுப்பை எடுத்து, கரையில் ஒரு குத்துக் குத்தி ஓடத்தை தண்ணீருக்குள் ஓடச் செய்தாள்.

பிறகு சலப் சலப் என்ற சத்தங்களினிடையே, நதிப் பிரவாகத்தை நோக்கிச் சென்றாள்.

அவளது கண்டத் தொனியிலிருந்து மெல்லிய சோக இழையூடு, ஒரு விரகப் பாட்டு வெளிப்பட்டு, அந்தக் காலை நேரத்தையே பூரண துக்கமாக்கியது.

**யா**ரோ அவனைத் தள்ளியபோது, அரசகுமாரன் ராமகம்பீரனுக்கு ஏற்பட்ட உணர்ச்சிகளைச் சொல்ல முடியாது!

தனக்கா இப்படி நடக்கிறது! தனக்கே தானா?

திரும்பத் திரும்பக் கேட்டுக் கொண்டான்.

கீழே கீழே போவது போன்ற நினைப்பில் நெஞ்சம் பதறியது. ஏதாவது நீர்க் கசத்தில் தன்னைத் தள்ளி விடுகிறார்களோ! ஒரே இருட்டாக இருக்கிறதே!

சில விநாடிகள்தான்! எனினும் ஏதோ யுகத்தின் நீளம்போல இருந்தது அனுபவம்.

எங்கே வாழுகிறோம் என்று நினைக்கும்போதே, பாதங்கள் இரண்டும் நல்ல கரடான பாறை மீது மோதி மடிந்ததும்தான் வலியும் மூச்சும் சேர்ந்து வந்தன.

இரு கால்களாலும் கைகளாலும் தரையை இறுகப் பிடித்தான். முன் எது பின் எது என்று தெரியவில்லை. அவ்வளவு கன இருட்டு!

மேலே நோக்கி அண்ணாந்து பார்த்தான். எதுவும் தெரியவில்லை. ஒரே இருட்டு மயம்!

ஒரு கோபத்தில் மேலே நோக்கிக் கத்தினான்: "யார் அங்கே! நான் அரசகுமாரன் ராமகம்பீரன்! என்னை ஏன் இங்கே தள்ளி இருக்கிறீர்கள்? —யார் அங்கே? மேலே

கேட்கிறீர்களா? நான்தான் ராமகம்பீரன்! இந்த ராஜ்யத்து மன்னன் மகன்! என்னை ஏன் இங்கே தள்ளினீர்கள்? உடனே என்னை எடுத்து வெளியே விடுங்கள்! இல்லாவிடில் விபரீதம் ஏற்படும்..."

கிட்டத்தட்ட இதே வார்த்தைகளை திரும்பத் திரும்ப சொல்லிக்கொண்டே இருந்தான்.

ஒரு நாழிகை நேரம் அல்ல; பல நாழிகை வரை வாய் ஓயாமல் சொல்லிய பின் அவனுக்கே சலிப்பு ஏற்பட்டது.

யாரும் அவனைக் கேட்பதாகக் காணோம்! யாரும் மேலே இல்லையா? இல்லாவிடில் வேண்டுமென்றே கேட்காமல் இருக்கிறார்களோ! எங்கும் ஒரு பொட்டு வெளிச்சம் இல்லையே! அவனைத் தள்ளிவிட்டு எல்லோரும் போய் விட்டார்களோ!

உள்ளே இருட்டு ஒரு திடப்பொருள் போல குமைந்தது. தன் பாதமே தனக்குத் தெரியவில்லை.

மெல்ல மெல்ல நினைக்கும்போது அது ஒரு சிறைக்கிடங்கு என்று தெரிந்ததும், மனம் வெடித்துச் சிதறியது.

உடம்பின் உள் தண்டில் ஒரு ஆடிக் காற்றின் ஆட்டம் எழுந்தது.

ஒவ்வொரு அணுவும் தனியாகப் பதறத் தொடங்கின.

"ராமா!" என்று ஒரு நீளமான குரல் கொடுத்தான் அவன். "உன்னைத் தினம் தொழுதுவிட்டுத்தான் ஒரு காரியம் செய்ய ஆரம்பிக்கிறேன். உன் பக்தன் அல்லவா நான்! எனக்கு இப்படி ஒரு சோதனை தந்தாயா! இது நியாயமா?" என்று புலம்பினான் அவன்.

உள்ளே பலமுறை சுற்றிப் பார்த்தான். எதையும் பார்க்க முடியவில்லை உணரத்தான் முடிந்தது. காறையால் பூசப்பட்ட பலமான சுவர்கள் தன்னை தடுத்துள்ளன என்று தெரிந்ததும் மீண்டும் ஒரு ஆர்ப்பரிப்பாகக் கோபம் எழுந்தது.

Edited By A.K

''என் தந்தையா இப்படிச் செய்தார்! தன் சொந்த மகனையா சிறைக்கிடங்கில் தள்ளினார்! அப்பா மகா மோசமான எதிரிக்குக்கூட இப்படி ஒரு தண்டனை தரக்கூடாது அப்பா! அதற்கு மாறாக என் தலையை வெட்டி இருக்கலாமே! நீங்கள் எனக்கு இந்த மகாத் துயரைத் தரலாமா? நான் என்ன துரோகம் செய்துவிட்டேன் தங்களுக்கு! யுத்த காலத்தில் தங்களுக்கு உதவிய ஒரே குமாரன் நான்! உங்களுக்கு என்னைப் பிடிக்கவில்லை என்று அறிந்து பட்டம் எனக்கு வேண்டாம் என்று சொல்லி விட்டேனே! அரச குலத்தைத் துறக்கவும் மனம் சம்மதித்தேனே! அப்படிப் பட்டவனுக்கா இந்தக் கொடுமைத் தண்டனை?

சுப்ரமண்யரே! ஒற்றர் குலத்தலைவரே! என் தந்தை கொடூரமாக இருந்தாலும், தாங்கள் கொடூரமாக இருக்கலாமா?

அவர் என்னைக் கிடங்கில் போடச் சொன்னாலும், தாங்கள் என்னை அப்படிச் செய்யலாமா? சாதாரணக் கூண்டுச் சிறையில் அடைத்திருந்தாலும் மகிழ்ச்சி அடைந்திருப்பேனே!

என்னை இப்படி வெளிச்சம் இல்லாத பாழில் போட்டு வைக்கலாமா?

அவ்வளவு தூரத்துக்கு நான் கொடுமையானவனா? தர்ம நெறிகளைப் பேணுகிறவன் என்று உங்களுக்குத் தெரியாதா?

நீங்கள் எனக்கு நியாயத்தைச் செய்ய வேண்டாமா?

சுப்ரமண்யரே! ஏன் பேசாமல் இருக்கிறீர்கள். பேசுங்கள்! பேசுங்கள்!''

இரைந்து கத்தினான் அவன். ஆனால் பலன்தான் பூஜ்யம்!

ஒரு துக்கத்தில் சிக்கி விட்டால் மனம் வெறுமனே இராது. நடந்தது நடவாதது என்று எதையும் வாயில் போட்டு மென்று கொண்டிருக்கும்.

எவ்வளவோ படித்தவனாக இருந்தும்கூட ராமகம்பீரனும் அந்த நேரத்தில் தன் வசம் இழந்து பிரலாபித்துக் கொண்டிருந்தான்.

Edited By A.K

பிறகு களைத்துப் போய் கீழே பாறைத் தரையில் அமர்ந்து கொண்டான்!

பாறையில் ஒருவித ஈரம் தங்கி இருந்தது. உடம்பை அது ஊசி போல் துன்புறுத்தியது.

எனினும் அயர்வு ஒன்று அவன் மீது கனமாக விழ, தரையில் உடம்பைச் சாய்த்துக் கண்ணயர்ந்தான் அவன்.

நாழிகை ஓடியது! எத்தனை நாழிகைகள் என்று கணக்குத் தெரியாது.

துர்ச் சொப்பனம் ஒன்று விட்டு விட்டு அவனைத் துரத்தியது. அரண்யத்தில் தவிர்க்கிறான் அவன்! நேரே எதிரில் ஒரு புலி உறுமல் வருகிறது. அருகே புதரில் மறையலாம் என்று பார்த்த போது, அங்கே நீண்ட சர்ப்பங்கள் தெரிகின்றன.

பின்னால் கால்களை வைத்தவாறு நகர்ந்து போகிறான். போய்க் கொண்டிருக்கும் போதே அந்தத் திடீர்ப் பள்ளத்தாக்கு அவனுக்குத் தென்பட்டு விடுகிறது.

அதன் விளிம்பில் அவன் நிற்க, யாரோ அவனைத் தள்ளிவிட......

அ...ம்...மா... என்று குரல் அவனிடமிருந்து வெளி வருகிறது.

கண்களைத் திறந்து பார்க்க, இருள்...இருள்...இருள். தான் அரண்மனையில் இல்லை, சிறைக் கிடங்கில் இருக்கிறோம் என்ற நினைவு கொக்கிகளுடன் கொடூரமாக அவனை நோக்கி வருகிறது.

கண்களைக் கசக்கிப் பார்க்கிறான். நினைவு வந்து விட்டது. இன்னும் அந்தச் சிறைக் கிடங்கில்தான் இருக்கிறான் அவன்!

அப்போது...

Edited By A.K

திடீரென்று காதுகளில் ஏதோ முணுமுணுப்பு விழுந்தது. அது வரும் திசையில் மெல்லக் காலை வைத்துப் போய்ப் பார்த்தான். அரை அடி அகலத்தில் சின்ன ஓடை! அந்த ஓட்டத்தின் முணுமுணுப்பு அது!

பாறையின் ஒருபுற இடுக்கிலிருந்து தோன்றி, மறுபுறத்தில் பாறைப் பொந்தில் மறைந்து கொண்டிருந்தது. ஒரு தாகம் இப்போது உத்வேகத்துடன் புரண்டு வர, நீரை சேந்தி எடுத்து அள்ளிப் பருகினான் அவன்.

சுகோதயநகர் அரண்மனையில் ராணி வாசத்தில் ராணி அபயாதேவி துக்கத்தில் குலைந்து போயிருந்தாள்.

எதிரே சுந்தரத்தேவர் தலைக்குனிந்து, கண்களைப் பலமுறை கொட்டிக் கொண்டிருந்தார்.

"என்ன அநியாயம், மகா மந்திரி! மன்னர்தான் கோபத்தில் சொல்லி விட்டார். இவன் இப்படிக் கண் காணாமல் போய்விடுவதா? இந்த நேரத்தில் எங்கே இருக்கிறானோ? என்ன கஷ்டப்படுகிறானோ?" என்று புலம்பியவாறு கூறினாள் அவள்.

"ஆமாம் அம்மா! யுவராஜாவைப் போல இந்த பூலோகத்தில் பார்க்க முடியாது! அப்படி ஒரு உன்னத குணம்! உன்னத நடத்தை! எல்லாவற்றையும் விட சொல் தவறாதவர்! தந்தையின் ஆணையை சிரமேல் எடுத்து விட்டார். இப்படி யாருடைய கண்ணுக்கும் தெரியாமல் மறைய வேண்டுமா? வருத்தமாக இருக்கிறதே! தங்களிடமாவது சொல்லிக் கொண்டு போகக்கூடாதா? புஹூம்.... புஹூம்..." என்று தொண்டை அடைத்துக் கூறினார் தேவர்.

அரண்மனையின் 'விமான் மேக்' (மேகவிமானம்) என்று அழைக்கப்படும் அந்தப் பகுதியின் முற்றத்தில் ஒரு குதிரை வந்து நிற்கும் ஓசை அப்போது கேட்டது!

மேல் உத்தரியத்தை எடுத்துக் கண்களைத் துடைத்தவாறு, குலுங்கும் உரோம வயிற்றைக்

Edited By A.K

காட்டியவாறு தமது பஞ்சகச்சத் துணியில் பாதி அழுக்குக் கறைகளோடு உள்ளே வந்தார் சுப்பிரமணியர் என்ற ஒற்றர் படைத் தலைவர்.

''மகாராணி'' என்று நெஞ்சு பொறுக்காதவர் போல சிறிது நேரம் தலையைத் தொங்கப் போட்டார்.

''யுவராஜாவை எங்கும் காணவில்லை! நாங்கள் தேடும் நேரத்தில் நகரத்துக்கு வெளியே ஒரு ஜாமத்திற்கு அப்பால் தனியாகக் குதிரை வீரன் ஒருவனைக் கண்டோம்! குதிரை வீரனின் ஆரோகணிப்பு முறை எங்களுக்கு யுவராஜா பற்றிய சந்தேகத்தைக் கிளப்பியது! நிற்கச் சொன்னோம், கத்தினோம், சைகை செய்தோம். நிற்காமல் அவன் பறந்து போவதைப் பார்த்ததும்தான் எங்களுக்குச் சந்தேகம் கூடியது!

அவனை விரட்டிப் பிடிக்க குதிரை வீரர்களை அனுப்பினோம். விடியும் போதுதான் வீரர்கள் திரும்பி வந்தார்கள்! அவர்கள் கண்களுக்கு அகப்படாமல் அந்த வீரன் மறைந்துவிட்டான் என்று கூறிவிட்டார்கள்!'' என்று வருத்தமுடன் கூறினார் அவர்.

ராணியார் தன் முகத்தை இரு கைகளாலும் மூடினார்.

# 10

**...உச்சியில் ஒரு தீவர்த்தி வெளிச்சம். சுவர் ஓரமாக ஒரு கயிறு நழுவி நழுவி உள்ளே இறங்கியது. ஊஞ்சலா அது? தன்னை வெளியே எடுக்கும் முயற்சியா? ராம கம்பீரன் பரவசப்பட்டான். ஆனால்....**

ஒரு கம்பளிப் போர்வை போட்டு மூடியது போல உலகம் நிசப்தமாகிவிட்டது. நிழல்களும் நீண்டு நீண்டு பூமியின் வியாபகங்களை மூட ஆரம்பித்தன.

ராமகம்பீரன் தனது கிடங்கில் ஆயாசத்துடன் அமர்ந்திருந்தான்.

Edited By A.K

பல முகூர்த்த நேரம் அவன் மேலே நோக்கி கூப்பாட்டிற்கு மேல் கூப்பாடாகப் போட்டு விட்டான்.

தொண்டை அத்தனையும் வறண்டு, கழுத்து நரம்புகள் வலி எடுக்கத் தொடங்கிவிட்டன.

இனிமேலும் கத்துவதில் ஒரு பிரயோசனமும் இல்லை என்பதைக் கண்டு கொண்டான்.

கிடங்கு தனது இருட்டை வஞ்சத்தோடு அவ மீது பொழிந்து விட்டது.

அப்பா! நிசப்தத்திற்கு எல்லை வேண்டாமா! அப்படி ஒரு இறுக்கமான கர்ப்ப மௌனம் அங்கே பரந்துவிட்டது.

பலமுறை அரண்மனையைப் பற்றி நினைத்தான்.

இதற்குள் தனது தாயாருக்கு செய்தி போய்ச் சேர்ந்திருக்காதா?

சேர்ந்தால் விடுவாளா அவள்! பாரத நாட்டு ராஜகுலத்தவள் ஆயிற்றே! போர்க்கொடி தூக்கி மன்னர் முன்னால் போயிருக்க மாட்டாளா?

'பிள்ளையை விடுதலை செய்கிறீர்களா, அல்லது மேனாமில் விழுந்து உயிரைத் துறக்கவா?' என்று கேட்டிருப்பாள்.

இந்நேரம் என்னை இந்தக் கிடங்கிலிருந்து விடுவிக்க ராஜசேவகர்கள் விரைந்திருப்பார்கள்.

சேனாதிபதி வேறு மன்னரைப் போய் மிரட்டியிருப்பார்! அந்தப் பாலகன் ராமகம்பீரனை உடனே அரண்மனைக்கு அழைத்து வர உத்தரவு இடுகிறீர்களா அல்லது நான் என் பதவி துறந்து போய்விடவா?

ஆமாம்... கண்டிப்பாக மன்னரை அவர் போய்க் கேட்டிருப்பார்.

Edited By A.K

அதை நினைக்கவே ராமகம்பீரனுக்கு மகிழ்ச்சி எழுந்தது. அந்தச் சூழ்நிலையில் கூட உதடு ஓரம் ஒரு புன்னகை பாதியாக வந்தது.

ஆமாம். இதற்குள் அரண்மனையே திமிலோகப் பட்டிருக்கும்.

இன்னும் சிறிது நேரத்தில் அந்த சிறைக் கிடங்கின் வாசலில் அத்தனை பேரும் வந்து விடப் போகிறார்கள்.

''சுவாமி சுவாமி'' என்று கிடங்கின் உச்சியிலிருந்து கூவப் போகிறார்கள்.

தன்னை மேலே தூக்க ஒரு ஊஞ்சல் பலகையை தாம்புக் கயிற்றில் கட்டி கீழே இறக்கப் போகிறார்கள்.

நான் மேலே போவேன்!

முதல் காரியம், அந்த சுப்பிரமணியர் எங்கே? ஒற்றர் தலைவனா நீர்! எனக்கு மறுமொழி சொல்லக் கூட உமக்கு யோக்கியதை இல்லையா! யாரோ சொன்னார் என்று என்னை கிடங்கில் போட்டு விட்டாயே!

அப்புறம் என்னை ஏறெடுத்தும் பார்த்தாயா? என்று கேள்விகளாகக் கேட்கப் போகிறேன்.

கேட்டால் மன்னர் கட்டளை என்பார்! 'எப்போதும் மன்னர் கட்டளைக்கு நூற்றுக்கு நூறு கீழ்ப்படிந்திருக் கிறீரா?' என்று சீறி விழுவேன் நான்.

'மன்னர் என்னை சிரச்சேதம் செய்யச் சொன்னால் செய்து விடுவீரா?' என்று கூப்பாடு போடுவேன். அசந்து விடுவான் அவன்!

வரட்டும், வரட்டும்! எல்லோருக்கும் பாடம் வைத்திருக்கிறேன். அவரவர் உண்மைச்சாயம் இப்போது வெளுக்கப் போகிறது...

என்று கோபமான நினைவுகளில் அவன் வதங்கி நொறுங்கிக் கொண்டிருந்தான்.

Edited By A.K

சீக்கிரத்தில் அவன் உடம்பில் சோர்வு விழ ஆரம்பித்தது. உடலிலிருந்த வலு அவனை விட்டு வடியத் தொடங்கியது.

கீழே அமர்ந்தான்.

கண்களை வெறுமனே மூடிக்கொண்டான்.

எப்போது மேலே ஓசை கேட்கப் போகிறது என்ற ஆவல் மனசுள் அவனை அறியாமல் ஒரு சுருதி பே ஓடிக் கொண்டிருந்தது.

நாழிகை, நாழிகை, நாழிகை.... அத்தனை நாழிகள் ஓடிவிட்டன என்பதை ஓரளவு உணர்ந்தான்.

வயிற்றிலும் சுருட்டிக் கொண்டு ஒரு காந்தல் எழுந்து கொண்டிருந்தது.

என்ன வேதனை இது! எனக்கு இது வேறு வேண்டுமா? தூ, அற்பப் பசியோ தூரப் போ!

அனாதி காலம் என்பார்கள்.

அதை அப்போதுதான் அவனால் அனுபவிக்க முடிந்தது.

நேரம் என்பது நகர்கிறதா, நகர்ந்து விட்டதா, அல்லது அவனுக்கு ஜாடை காட்டாமலே ஓடிவிட்டதா என்று தெரியவில்லை.

அல்லது நேரம் இம்மியளவும் நகராமலேயே நின்று விட்டதா!

உள்ளே புழுக்கம் வேறு கொத்தி எடுத்தது. உடம்பை அசைக்கக் கூட விழியில்லை! இரண்டு எட்டு நடந்தால் சுவர் மோதியது.

கடவுளே! இது போல் ஒரு நரகம் வாய்க்க வேண்டுமா?

கூண்டில் அடைபட்டு மிருகம் போல் ஆனான். வெகுண்டும், சீறியும் எந்த இயக்கமும் செய்ய முடியாமல் மனத்தில் வீங்கிக் கொண்டிருந்தான்.

Edited By A.K

அன்றைய பகல் முழுதும் போய் விட்டது அவனுக்குத் தெரியாது.

இருட்டும் வேளை வந்து விட்டது என்று தெரியும்.

கிடங்குக்கு உச்சியில் ஒரு அடிக்கு ஒரு அடியாக ஒரு திறப்பு மட்டும் உண்டு!

யாரும் அதன் வழியே தப்ப விடாதபடி அந்தத் திறப்பின் குறுக்கேயும் நெடுக்கேயும் கம்பிகள் ஓடிக் கொண்டிருந்தன.

அந்தச் சின்னப் பகுதி வழியே வெளிச்சம் உள்ளே வரவேண்டும். நடுப் பகலில் மட்டும், வெளிச்சம் இறங்கி கீழே தரை வரை தொடுவதுண்டு!

ஆனால், கிடங்குகள் இறங்கும் போதே அந்த வெளிச்சம் முக்காலும் பலவீனமாகி, வெறும் தேம்பல் போலத் தரையில் விழுந்து விடும்.

அந்த சொற்ப வெளிச்சமும் அற்ப நேரம்தான் இருக்கும்.

பிறகு சுவர் ஓரம் வழியே மேலே ஏற ஆரம்பித்து விடும்.

ராமகம்பீரன் உள்ளே அகப்பட்ட முதல் தினத்தில் வானம் மூட்டமாகவே இருந்து விட்டதால் இந்தத் துளி அளவு வெளிச்சம் சுகம்கூட அவனுக்குக் கிடைக்கவில்லை.

திடீரென்று சத்தம் கேட்டு அவன் மேலே நோக்கியபோது அவனுக்கு ஒரு கணம் பரவசமே ஏற் பட்டது.

வெளிச்சம் ஒன்று உச்சிக்கு சற்றுக் கீழே உள்ள திட்டி வாசல் மூலம் உள்ளே வந்து ஆட்டம் ஆடியது.

தீவர்த்தி வெளிச்சம் அது என்று அவனுக்கு உடனே புரிந்தது.

Edited By A.K

அடுத்தது குரல் வரப்போகிறது. அவனை அழைக்கப் போகிறார்கள் என்று நினைத்தான்.

ஆனால் அது வராமல் போகவே, அதிர்ச்சி அடைந்து மேலே பார்த்தான்.

அங்கே கயிறு கட்டி ஏதோ ஒரு பொருள் சுவர் ஓரமாக இறங்கிக் கொண்டிருந்தது.

ஊஞ்சலா அது! அவன் விடுதலைக்கு ஆட்கள் வந்து விட்டார்களா?

மனம் பரவசத்தில் துள்ளியது.

ஆனால் அந்தப் பொருள் கீழே இறங்க இறங்க, அவன் ஆசை நிராசை ஆகியது.

அது ஊஞ்சலின் அளவே இல்லை! ஒரு அடி நீளம் தான் அந்தப் பொருளின் மொத்த நீளமே.

சுவர் ஓரம் நழுவி நழுவி வந்து கொண்டிருந்ததைப் பார்த்தால் ஏதோ அனுப்புகிறார்கள் என்று தெரிந்தது.

இறங்க இறங்க, அந்தப் பொருள் ஒரு மண் ஓடு என்று தெரிந்தது.

மண் ஓட்டைக் கயிற்றில் தொங்க விட்டு, ஓட்டின் மேல் இரண்டு மண் கலயங்கள் வைத்திருந்தார்கள்.

சற்று முன் அவனிடம் எழுந்த ஆனந்தம் அத்தனையும் சிதறி விட்டது.

ஓட்டு ஊஞ்சல் கீழே தரையைத் தொட்டுக் கொண்டு நின்றது.

மேலே தெரிந்த அற்ப வெளிச்சங்களினால்தான் அவன் அந்த கலயங்களைப் பார்க்க முடிந்தது.

ஓ! உணவா?

Edited By A.K

அந்த நினைவு அவன் பிடரியில் படீர் என்று அடித்தது.

கண்களில் அவனை அறியாமல் நீர் சுரந்தது. மனத்தைப் பிழிந்து கொண்டு துயர் ஒன்று கிளம்பி நெஞ்சைக் குலுங்க வைத்தது.

அவனால் தாள முடியவில்லை! அழுகை இப்போது பிழிந்து வந்தது.

கண்களில் கையை வைத்து நீரை வழித்து விட்டான்.

மேலே வந்திருந்த யாரோ அந்தக் கயிற்றை ஆட்டுவது போலிருந்தது.

அதாவது, அந்தக் கலையங்களை எடுத்துக் கொள்ளச் சொல்கிறார்கள்!

ஒரு கோபம் அவனுக்குள் பீறி வந்தது. அவர்களைப் பார்த்து, "யாரங்கே!" என்று ஒரு கூச்சலை விடுத்தான்.

ஒரு பட்சி போல அது அவனது வாயிலிருந்து கிளம்பி, மேலே எவ்வி, எவ்விப் போயிற்று.

"யார் அது! இங்கே இருப்பது ராஜகுமாரன், தெரிந்து கொள்ளுங்கள்! ராமகம்பீரன் நான்! என்னை அனாவசிய மாய்ச் சிறை வைத்துவிட்டீர்கள்! உடனே என்னை வெளியே இழுங்கள்! இல்லாவிடில் பழிக்குப் பழி வாங்குவேன்!

என் தந்தையார் கோபத்தில் ஏதேனும் சொல்லி யிருப்பார்!

அதை முழுதும் நம்பிவிடாதீர்கள்!

என்னை இந்தக் கிடங்கில் தள்ளுகிறேன் என்று அவரிடம் தெரிவித்தீர்களா? அல்லது என் தாயாரிடம் தெரிவித்தீர்களா?

Edited By A.K

போங்கள்! உடனே தெரிவியுங்கள்! சுப்ரமணியா! ஏ சுப்ரமணியா!

உடனே விசாரித்து உண்மையை அறிந்து கொள்ளுங்கள்!

நான் சொன்னதைக் கேட்டீர்களா? கேட்டீர்களா?

சேவகர்களே கேட்டீர்களா...?

தொண்டை வீறிக் கொண்டு எழுந்த வார்த்தைகள் அத்தனையும் விருட்டென்று எகிறி ஒரு அம்பு உக்கிரகத்தில் மேலே தெறித்து ஓடின.

அவன் கேட்ட வார்த்தைகள் கடைசியில் நெடில்கள் சுவரில் மோதி பிரதித் தொனிகளைக்கூட எழுப்பின!

ஆனால்....

பயன் ஏதும் இல்லை.

மேலே இருந்து இரக்கத்துக்குக் கூட ஒரு வார்த்தை வரவில்லை.

அதை அவன் உணர்ந்தபோது, சுவீர் என்று வயிற்றில் உஷ்ணம் பற்றியது.

முகத்தை அண்ணாந்து அண்ணாந்து பார்த்தான்!

ஆனால் ஒரு வார்த்தை ஒரு சின்ன மூச்சின் ஒலி, ஒரு சுவாச ஒலி எதுவுமே வரவில்லை.

ஆத்திரம் கொதித்து எழ, "அடப் பாவிகளே! அநியாயம் அநியாயம்" என்று உரக்கக் கத்தி ஆத்திரத்தில் காலை மடித்து மேலே நோக்கி எம்பி எம்பி குதித்தான்.

கால்தான் வலித்தது!

ஒரு சத்தம் வரவில்லை.

Edited By A.K

கோபம் பீறிக்கொண்டு வர கயிற்றைப் பிடித்து ஒரு ஆட்டம் ஆட்டினான்.

ஒட்டு ஊஞ்சலிலிருந்து கலையங்கள் இரண்டும் கீழே உருண்டன!

ஒன்றில் கஞ்சியும், இன்னொன்றில் மோரும் வைக்கப்பட்டிருந்தன.

அவைகள் இரண்டும் கீழே வெள்ளையாக வழிந்து ஓடின.

சிறிது நேரத்தில் கயிறு மேலே இழுக்கப்பட்டது. கலையங்களை விட்டுவிட்டு கயிறு மேலே நகர்ந்தது.

"பாவிகளா! ஏ பாவிகளா!" என்று கத்தினான் ராமகம்பீரன்.

திடீரென்று கயிற்றை பற்ற நினைத்து அதை இறுகப் பிடித்தான்.

கயிறு சாதாரண நார்க் கயிறு! திரி போன்று மெல்லிதாக இருந்தது.

அவன் பலாத்காரமாக அதைப்பற்றியபோது, அது உயரத்திலிருந்து அறுந்து கீழே வளையங்களாக விழுந்தது.

பல சுருள்களாக விழுந்த அந்த மெல்லிய கயிற்றை வேதனையாகப் பார்த்தான் அவன்.

வழிந்து ஓடும் கஞ்சி மெல்லிதாக ஒரு உணவு வாடையை வீச நெஞ்சத்தில் துக்கம் பொங்கி சுவரோரம் சாய்ந்தான் அவன்.

மறுநாள் பகல் நேரத்தில் சூரியோதயம் நகரத்திலே தண்டோரா ஒலியைக் கேட்டு அங்கங்கே ஜனங்கள் கூட்டம் கூட்டமாக நிற்க ஆரம்பித்தார்கள்.

Edited By A.K

அரச கட்டளை எல்லாமே நகரில் முரசு கொட்டித்தான் தெரிவிப்பது பழக்கம்.

எனவே தண்டோரா ஓசை கேட்டதுமே அத்தனை பேரும் நின்றுகொண்டு முரசுக்காரர் என்ன சொல்கிறார் என்பதைக் கேட்க ஆரம்பித்தார்கள்.

நெருக்கி அடித்த அங்காடிகள் இருந்த வீதியில் முரசுக்காரன் ஒரு குதிரை மீது வந்திருந்தான்.

குதிரை மீது அவன் அடித்திருந்த முரசின் சத்தம் கும் கும் கும் குமா என்று வீதிகளையும் வீடுகளையும் அதிர வைத்துக் கொண்டிருந்தது.

ஆவலுடன் ஆண் பெண்கள் அனைவரும் தங்கள் தங்கள் காரியங்களை நிறுத்திவிட்டு, முரசுக்காரர் அருகே சுற்றி நின்று கொண்டார்கள்.

"இதனால் சகலமானவர்களுக்கும் தெரிவிப்பது என்னவென்றால்.....

டுன் டுன் டன் டைன்! டைன் டைன்!

ராஜவம்சத் திலக சூரிய வம்சத்திலக மகாராஜா ஸ்ரீ... ஸ்ரீ... ஸ்ரீ... இந்திராதித்த தேவ தேவர் அறிவிப்பு...

கும்... குமா.. கும்... குமா...

இப்பவும் அரசகுமாரர் சூரிய வம்ச குலதிலகம் ராமகம்பீர ராஜகுமாரர் அரண்மனையை விட்டு வெளியேறியுள்ளார்.

இந்த வேளை பரியந்தம் அவர் அரண்மனைக்கு திரும்பாததாலே, ராஜ மகாராஜவும், மகாராணியரும் மெத்தவும் வியாகூலப் பட்டிருக்கிறார்கள்.

ஊரிலே அத்தனை இடங்களுக்கும் ஆளவிட்டு ராஜகுமாரரைத் தேடும்படி உத்தரவாயிருக்கிறது.

Edited By A.K

பொதுஜனம் நமது ராஜகுமாரரை எங்கே காண நேர்ந்தாலும், உடனே அது பற்றி ராஜ அதிகாரிகளுக்குச் செய்தி கொடுக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்!

கும் குமா... கும் குமா... கும் குமா....."

ஒருமுறை முரசுக்காரன் அறிவிக்க அதற்குள் மேலும் மேலும் கூட்டங்கள் வந்து சேர்ந்து முண்டியடிக்க ஆரம்பித்தன.

"இந்தாம்மா! என்னைப் போட்டு ஏன் இவ்வளவு இடிக்கிறே! தள்ளித்தான் போயேன்!" என்று சீறிய ஒரு நடுத்தர வயதுப் பெண்மணி பளிச் சென்று வெற்றிலைச் சாற்றை சற்றுத் தள்ளி உமிழ்ந்து விட்டு கூட்ட இடுக்குள் தனது கனத்த உடம்பை மீண்டும் திணிக்கத் தொடங்கினாள்.

அவளால் தள்ளப்பட்ட இளம் பெண் அவளை ஒரு முறை முறைத்து விட்டு வேறு பக்கம் போய்க் கூட்ட இடுக்கில் நுழைய முயல,

அதற்குள் முரசுக்காரன் அறிவிப்பை ஆரம்பித்து விடவே மேலே செல்லாமல் அப்படியே நின்று விட்டாள்.

செய்தி காதில் விழ விழ அந்த இளம்பெண்ணின் கண்கள் மேலும் சுருங்க ஆரம்பித்தன! 'டொப் சான்' (சந்திராதேவி) இந்த இளம் ஓடக்காரி சுறு சுறு என்று எதையோ நினைத்து பிரமித்து நின்று விட்டாள்.

பிறகு கனத்த நினைவுகளுடன் மெல்லமாக அவள் அடிமேல் அடி வைத்துப் போக ஆரம்பித்தாள்.

கூட்டத்தின் மறுபுறம் இருந்த குதிரை வீரன் அவளை குறித்த இலக்கு போல் பார்த்துக் கொண்டிருந்தான்.

Edited By A.K

# 11

அன்று சுகோதயக்காரர்களுக்குச் சந்தை நாள்! கிராமங்களிலிருந்து அத்தனை பொருள்களும் நகரத்தில் வந்து குவிந்திருந்தன. வியாபாரிகள் பாட்டுப் பாடிக் கொண்டே சரக்கை விற்றார்கள்.

உணவுக் கடைகளில் ஏகக் கூட்டம்! வெந்த சோறு முதல் வெந்த காய்கறி, பலவகைக் குழம்புகள் எல்லாமே விற்கப்பட்டன. மண்டிகளில் மளிகைப் பண்டங்கள் ஏராளமாகக் குவிந்து கிடந்தன. சீனத்திலிருந்து வந்த சர்க்கரை (சீனி) மூட்டைகளில் நிரம்பி இருந்தன.

பூக்களை நாறு சிறிதுகூடத் தெரியாமல் தொடுத்துப் பெண்கள் விற்றுக் கொண்டிருந்தார்கள். தாய்லாந்தியர் பூ கட்டும் அழகே தனி!

வெற்றிலை பாக்குக் கடையில் இளம் தளிர் வெற்றிலைக்கு ஏகக் கூட்டம்.

ஓரமான இடத்தில் கண்ணில்லாத வயோதிகர் தமது 'பிபட்' (நாதஸ்வரம்) வாசித்துக் கொண்டிருந்தார்.

அருகில் ஒரு சிறு பையன் பராக்கு பார்த்துக் கொண்டே, அசுவாரசியமாக ஜால்ராவில் தாளம் போட்டுக் கொண்டிருந்தான்.

தாய்லாந்தியருக்கு ஸோங்க்ரந்த் (வருடப்பிறப்பு) சீக்கிரம் வந்து கொண்டிருந்தது.

'ஸோங்க்ரந்த் என்பது நீங்கள் கொண்டாடும் சங்கராந்திதான்' என்றார் லாமா.

"நீங்கள் தை மாதப் பிறப்புக்கு அந்தப் பெயரைக் கொடுத்திருக்கிறீர்கள்.

அவர்கள் சித்திரைப் பிறப்புக்குக் கொடுத்திருக் கிறார்கள்.

Edited By A.K

சங்கராந்தி என்றால் சூரியன் ஒரு ராசியிலிருந்து ஒரு ராசிக்குப் போகிறான் என்பதுதான்.

ஓடக்காரி டெப்சன் (சந்திராதேவி) சந்தையில் தாமரைப் பூக்களை மட்டும் வாங்கிக் கொண்டு புறப்பட்டாள். முகத்தில் புன்னகை புன்னகையாக வந்து கொண்டிருந்தது.

இரவு ஓடத்தில் வந்த அந்த இளைஞனை நினைத்துப் பார்த்தாள். என்ன அழகான முகம்! நினைப்பதற்குக்கூட என்ன பரவசமாக இருந்தது.

ஆமாம்! அவனைப் பார்த்தால் அசல் ராமகம்பீர ராஜா போல் இருந்தது இல்லையா?

ஆமாம் ஆமாம்! ஆனால், அந்த ஓடத்தில் வந்தபோது கிரீடம், ஆபரணம் எதுவும் இல்லையே!

இப்போது தண்டோரா போட்ட செய்தியை நினைத்தால்.

அது... அந்த இளைஞன் ராமகம்பீரனாக இருக்குமோ!

சந்தேகம் வந்ததுமே, அவளுக்கு உடலில் பரபரப்பு ஏற்பட்டது! அவளைச் சுற்றி இருக்கும் அத்தனை கூட்டமும் மாயமாக மறைந்து போனதுபோல் ஒரு உணர்வு!

வீட்டுக்குப் போய் உடனே பாட்டியிடம் விஷயத்தைக் கூறவேண்டும் என்று நினைத்தாள்.

"பாட்டி, பாட்டி! நேற்று ராத்திரி ராமகம்பீரன் என் ஓடத்தில் வந்தார். சித்தான் கிராமக்கரையில் இறங்கிட்டார்."

நினைவுகள் பரபரக்க, சந்தையில் எதையும் வாங்காமல் அவள் அவசரமாக ஏக,

"கூன் சன், கூன் சன்" என்று குரல் கேட்டது.

Edited By A.K

(கூன் என்பது உபசார வார்த்தை! 'திரு' போல)

அது யாரிடமிருந்து வருகிறது என்று அவளுக்குத் தெரியும். அந்தப் பாழாய்ப்போன சோம்பேறி சீனன்தான்.

'டேய்! டம் குங்! இனிமேல் பின் தொடர்ந்தாயோ, உனக்கு இதுதான்'' என்று கன்னத்தில் ஒரு அடி அடிக்க ஆசை!

ஆனால், இரக்கம்தான் அவளை அப்போது நிறுத்தி வைக்கும்!

இப்போது அவன் கண்ணுக்குப் படாமல் போக நினைத்துப் படபடவென்று நடந்து எட்டத்தில் கூட்டம் நின்றிருந்த பகுதியில் போய் நுழைந்து நிழலில் சற்று ஒதுங்கினாள்.

இரண்டு சுவாசங்கள்கூட சரியாக விடவில்லை! அதற்குள் அழுக்கு இடுப்புத் துணிமட்டும் கட்டிய அந்த சீனப்பையன் சங்கோசமாய்க் குழைந்து கொண்டு அவள் முன்னால் நின்றான். அவள்மீது அவனுக்கு ஒரு மோகம் என்பது அவளுக்குத் தெரியும்! இந்த உதவாக்கரைக்கு அதற்குள் கல்யாண நினைப்பா? சீ! என்று டெப்சன் சொல்லிக் கொண்டாள்.

டெப்சன்னுக்கு எக்கச்சக்க கோபம் எகிறி வந்தது. ''டேய்! என்ன சொன்னேன்! என் பக்கம் வராதேன்னு சொன்னேனா..... ஏன் வந்தே?'' என்று தீப்பொறிக் கண்களோடு கேட்டு, கீழே கிடந்த சுள்ளிக் கம்பு ஒன்றை எடுக்க,

''ஐயோ! நான் உன் பின்னாலே வரல்லே... அவன்தான் வரான்! அவன் தான் வரான்!'' என்று கத்திக் கொண்டு தன் பின்னால் பார்த்தான்.

சற்றே யோசித்த டெப் சன் அவன் பார்த்த திசையைப் பார்த்தாள். யாரும் தென்படவில்லை.

Edited By A.K

"பொய்யா சொல்றே?" என்று அவள் கேட்க,

"இல்லை கூன் சன்!" அந்த சேவகன் வரான்! ராஜ சேவகன்!" என்று வியப்புடன் கூறினான் அவன்.

ஒரு தயக்க விழி அவளை நிறுத்தியது! கண்களைச் சுருக்கியது!

அந்த வெகுளியான சீனன் வந்து சொல்லும் வார்த்தைகள் உண்மையில் பலமுறை அவளைக் காப்பாற்றி இருக்கிறது.

கூட்டத்தின் வழியே பார்க்க முடியாததால், அங்காடிகளின் பின்னாடி வழியாக அவள் போய்ப் பார்க்க,

குதிரையில் இருந்து ராஜ சேவகன் இறங்கி அலங்க மலங்க அங்கும் இங்கும் பார்ப்பது தெரிந்தது.

பளீர் என்று அங்கிருந்து ஓட்டப் பாய்ச்சலில் இறங்கி, மேல் ஆடை படபடக்க, குறுக்கு வழிகளில் புகுந்து சாடி, பல குடியிருப்புக்களின் பின்புறங்களின் வழியாகத் தோட்டங்களையும் தாண்டிக் கொண்டு மறைந்து போனாள் அவள்.

அந்தப்புரம் கிளுகிளுத்துக் கொண்டிருந்தது.

இத்தனை நாளும் இருந்த நிசப்தம் போய் பழைய சலசலப்பு இப்போதுதான் ஏற்பட ஆரம்பித்திருந்தது.

முற்றங்கள், தாழ்வாரங்கள், தோட்டங்கள் எல்லா இடங்களிலும் பெண் பரிவாரங்கள் நிறையத் தென்பட்டார்கள்; நடமாடினார்கள். பல நாட்களுக்குப் பிறகு சிரிப்பும் கேலிகளும் அங்கே நிலவ ஆரம்பித்தன.

பெண்கள் எங்கே சந்தித்தாலும், ஒருவர் அருகில் ஒருவர் போய் ஏதாவது பேசிக் கொண்டார்கள்.

Edited By A.K

கொஞ்சம் வயதானவர்கள், மற்ற பெண்களுக்குக் கட்டளை இட்ட வண்ணம் இருந்தார்கள்.

'அந்தத் துணியைக் கழற்றி வேறு துணி எடுத்து வா!'

''கூன் ஸய்! ஏ, கூன் ஸய்! சொல்றது காது கேட்கலியா! விசிறியிலே மயிலிறகு போதாது! தோட்டக்காரர்கிட்டே இறகு வாங்கிக் கோத்து வை!''

''இந்தா கூன் ப்ளாய்! நகை வியாபாரி வந்தால் உள்ளே அனுப்பு! நேற்றைக்கு வருவதாகச் சொன்னாங்களே!''

பல பேருக்குப் பல குரல் கொடுத்து வேலைகளை ஏவிக் கொண்டிருந்தாள் மாயி ஸவனா! (திருமதி சொர்ணா)

அந்தப்புரத்தில் அனுபவம் வாய்ந்த மூதாட்டி அவள்!

பெண்கள் மட்டும் இருந்த அந்தப்புர உள்சுற்றுக்கு 'சிவாலய்' என்று பெயர்!

அங்கேதான் ராணிகள் தங்கி வந்தார்கள். மகாராணியார் ஒருத்தி மட்டுமே! மற்றவர்கள் ஆறு பேர்களும் வெறும் ராணி என்ற பெயர்களைச் சூட்டிக் கொண்டு, மகாராணியார், மகாராஜா இடும் கட்டளைகளை மற்றவர்களுக்குத் தெரிவித்துக் கொண்டிருந்தார்கள்.

மாலையில் ராணி சுமத்ரா, மாயி ஸவனாவை உள்ளே அழைத்துப் போனாள்.

மேன் மாடத்திற்குப் போய், தனியாக ஒரு உப்பரிகை ஓரம் அமர்ந்து கொண்டார்கள்.

''மாயி ஸவனா! என்ன சொல்கிறீர்கள்? இந்த முடிசூட்டு விழா ஒழுங்காக நடக்குமா!'' என்று கிசுகிசுத்தாள் ராணி சுமத்ரா.

Edited By A.K

தனது பெரிய உடம்பை நகர்த்தி, ராணியார் பக்கம் நகர்ந்தாள் மாயி!

"கூன் சுமத்ரா! எனக்கு இது பொல்லாத வேளை யாகத் தோணுது! மகாராணி அபய் தேவ் ரொம்பக் கவலையிலே விழுந்திருக்கிறாங்க!" என்றாள்.

"ஏன் கவலை? முதல் பிள்ளை இறந்து போயாச்சு! இரண்டாவது பிள்ளை பட்டம் கட்டறது முறை தானே!" என்று அங்கலாய்த்தாள் ராணி சுமத்ரா. சுமத்ராவுக்கு முப்பத்தைந்து வயது இருக்கும்! நல்ல பால் நிறம்! கண்கள் இரண்டும் சுனைகள் போல இருண்டு தெரிந்தன.

அழகான பச்சை நிற கீழ் ஆடையைத் தரித்து, மேலே அழகான பச்சை பட்டுத் துணியை இடது தோளில் சார்த்தி, பின்புறம் கொண்டு போய் இடுப்புத்துணியோடு சேர்த்து விட்டிருந்தார். உடம்பு முழுதும் நகைகள் பளீர் பளீர் என்று வீசின.

"அதற்கு இல்லை! மன்னருக்கே உடம்பு சரியில்லை! அந்த நேரத்தில் இந்த முடி சூட்டு விழாவை வைத்துக் கொள்ள வேண்டாமே! மகாராணியார் இதைத் தான் கூறுகிறார்!"

"ஏன்! மன்னரிடமே அவர் அதைப் பற்றிப் பேசுவதுதானே?"

"பேசினாராம்! ஆனால் மன்னர் அதற்கு ஒத்துக் கொள்ளவில்லையாம்!"

"என்ன ராஜரிகக் காரணமோ, யார் கண்டார்கள்?"

"முன்னர் போல் மன்னர் சுபாவமாகப் பேசவில்லை யாம். அதுவும் ஒரு கவலை, மகாராணிக்கு!"

"ஏன், என்னவாம்?"

"மன்னர் முன்னர் போல் இல்லை. மாறியிருக்கிறார். பேச்சும் வித்தியாசமாகப் பேசுகிறார். என்ன காரணம் என்று தெரியவில்லை என்று வேதனைப்படுகிறார் மகாராணி"

Edited By A.K

''ஏன், கூன் ஸவனா! மன்னர் அப்படியா மாறி இருக்கிறார்?''

''எனக்குத் தெரியவில்லை மாயி! அவர் படுக்கையில் படுத்ததிலிருந்து பார்த்ததில்லை! நான் மட்டுமில்லை! என்னைப் போன்ற பரிவாரப் பெண்கள் யாருமே பார்த்ததில்லை''

''அப்படியா! மன்னரை யார்தான் கவனித்துக் கொண்டு இருக்கிறார்கள்?''

''புது வைத்தியர் வந்திருக்கிறாரே! அவர்தான் நான்கு மருத்துவப் பெண்களைக் கொண்டு விட்டிருக்கிறார். மன்னர் உடலைக் கண்ணும் கருத்துமாகப் பாதுகாக்கிறார்கள்! யாரையும் எளிதில் உள்ளே விடுவதில்லை. மகாராணியார் மட்டும் விதிவிலக்கு! இந்த சட்ட திட்டம் இருந்தால்தான் மன்னர் பிழைப்பார் என்று வைத்தியர் கூறுகிறார்! தேவையில்லாத விஷயங்களில் மன்னர் இந்த நிலையில் குழப்பிக் கொள்ளக்கூடாது என்கிறார்!''

''அதுவும் சரிதானே! சில வைத்தியர்கள் சொந்தத் தாயாரைக் கூட நோயாளியிடம் அனுமதிக்க மாட்டார்கள்!''

''அப்படியில்லை மாயி! மன்னர் மாறி வருகிறார் என்று சொல்லி வருகிறார், மகாராணி!'' என்றாள் ஸவனா.

ராணி சுமத்ரா அதன் பிறகு பேச்சில் அதிகம் ஈடுபடவில்லை.

பொதுப்படையாகப் பேசிவிட்டு இருவரும் எழுந்தார்கள்.

இருட்டிக் கொண்டிருந்தது.

மேற்கே சுக்ரன் பளீர் என்று வானத்தில் தைத்துக் கொண்டான்.

Edited By A.K

அரண்மனை முற்றம் எல்லாம் தீபங்கள் சுடர்த்து ஒரே பொன் மயமாகிவிட்டது.

ராணி சுமத்ரா மற்ற ராணிகளைச் சந்திக்கப் போனாள். கீழே இறங்கி, முற்றத்தில் நடக்கும்போது, பரிவாரப் பெண்கள் "மாயி! சுவத்தீ" என்று வணங்கி வழி விட்டார்கள்.

'ஹூம்! வாழ்க்கையில் பிறந்தால் மகாராணியாகப் பிறக்க வேண்டும்! வெறும் ராணியாகப் பிறந்து என்ன பயன்!' என்று நினைத்தவாறு அவள் சென்றாள்.

# 12

சீக்கிரத்தில் தனக்கு விடுதலை கிடைக்கும் என்று நினைத்தது போக, காலம்தான் செல்கிறது என்று அறிந்த போது, ராமகம்பீரன் மனத்தில் பயமும் விரக்தியும் தோன்றின.

கிடங்குக்குள் வருடம் ஆனது போல் தோன்றியது. நாட்களை எண்ண முடியவில்லை. வெளிச்சம் இல்லாத தால் நாட்களை வரையறுக்கவும் முடியவில்லை!

வெளிச்சம் படாமல் உடம்பு வெளிறிப் போய் விட்டது.

ஒழுங்கான உணவும் உண்ணாமல் உடல் நலிந்து விட்டது.

அடிக்கடி மனத்தில் எழுந்தது ஆத்திரந்தான்!

ஒரு புத்திரன் செய்ய வேண்டிய கடமைகளை ஒழுங்காகச் செய்து வந்தவன் அவன்!

தனது அண்ணனும், இரண்டாவது ராஜகுமாரனு மான பரமாதித்தன்தான் பதவிக்கு வரவேண்டும் என்பதை பூரணமாக நம்பியவன் அவன்.

அந்த அண்ணனுக்காக எந்த உதவியும் செய்யக் கூடிய மனோநிலையில் இருந்தவன் அவன்!

Edited By A.K

அப்படிப்பட்ட ஒரு உத்தம பிள்ளையை மன்னர் இப்படி ஒரு கொடுமையான தண்டனைக்கு உள்ளாக்கி விட்டாரே!

என்ன அநியாயம் இது?

வெளிச்சமே இல்லையே அம்மா! சாதாரணப் பூச்சி போல இருட்டிலேயே இருக்கிறேனே! அம்மா, உங்களுக்குப் புரியுதா? இதன் கொடுமை தெரிந்துமா மன்னர் என்னை இங்கே அனுப்பியிருக்கிறார்? அம்மா இது நியாயமா, அம்மா? அடிக்கடி நினைத்துக்கண்ணீர் சிந்தியது. மனதுள் வேட்கை ஒரு நெருப்பு போல் தகித்தது! அம்மா அம்மா என்று அடிக்கடி அரற்றினான்.

சிறிது சிறிதாக உடம்பு பலவீனமாகி வந்தது. அதை உணர முடிந்தது.

தாயார் விட மாட்டாள். அழுது ஆர்ப்பாட்டம் பண்ணி விடுதலை வாங்கித் தருவாள் என்று நினைத்து நினைத்து அந்த நினைப்பும் இப்போது வெறுமையாகி விட்டது.

யாரும் அவன் உதவிக்கு வரவில்லை.

இனி சுதந்திரம் கிடைக்கும் என்ற உணர்வு சிறிது சிறிதாகச் சிதைந்து வந்தது.

ஆமாம்! தாயார் உட்பட எல்லோரும் அவனை மறந்து விட்டார்கள் என்று நினைத்தான்,

மனத்தில் ஒரு ஆக்ரோஷம். ஏதாவது செய்ய வேண்டும் என்று அபார வேட்கை எழுந்தது.

ஆனால், அவனால் என்னதான் செய்ய முடியும்!

சுவர்கள் கனத்த சுவர்கள்! திட்டி வாசல் என்னும் சிறிய வாசல் மேலே வெகு உயரத்தில் இருந்தது. அவன் கண் பார்வையைத் தாண்டி இருந்தது. எம்பிக் குதித்தாலும் அதனை அடைந்துவிட முடியாது!

Edited By A.K

அதை அடைய எந்த வழியும் இல்லை!

உணவு வரும் வேளை எல்லாம் அவன் கத்திப் பார்த்தாலும், எந்தவித மறுமொழியும் இல்லை! யாரும் அவனைக் கவனிக்கவும் இல்லை! கிடங்குக்குள் யாரும் முகம் நீட்டவும் இல்லை.

அவனை எல்லோரும் ஒதுக்கி விட்டார்கள்! வாழ்க்கையின் எல்லைக்கே ஒதுங்கி விட்டான்.

இந்த நிலையில் வாழ்க்கை ஒரு நரகம் ஆகிவிட்டது. இதிலிருந்து விமோசனம் இல்லை என்று தீர்மானமாகத் தெரிந்தது.

இதை நீட்டிக்கொண்டே போவதில் என்ன பயன்?

சிறுகச் சிறுக உடம்பு நலிந்து, மெலிந்து அணு அணுவாய் இறப்பதைவிட, ஏன், அவ்வளவு அவஸ்தைகளை வளர விடுவானேன்! உயிரை முடித்துக் கொண்டால் என்ன?

திடீரென்று இந்த எண்ணம் தோன்றியது! நினைக்க நினைக்க அதுதான் சரி என்றும் பட்டது!

அதற்குக் கூட இந்தக் கிடங்கில் வழி இல்லையே! எங்கே கயிறு கட்டுவது? எங்கே தூக்குப் போடுவது?

ஏன் சுவரில் தலையை மோதி அடித்து இறந்தால் என்ன? அது சீக்கிரம் மரணத்தைக் கொண்டு வந்து விடுமே!

அந்த நினைப்பு மனத்தில் அலைந்தது. திடமாய் மாறுவதற்கு அவகாசம் எடுத்தது.

கடைசியில் அவன் முனைந்து விட்டான். அதுதான் வழி என்று நினைத்து விட்டான். வலப்புற சுவர் அதற்கு வாட்டமாக இருந்தது. இடது புறம் சென்று எம்பிப் பாய்ந்துபடீர் என்று தலையைச் சுவரில் மோத அடித்தான்.

Edited By A.K

வலி! அதிர்ந்து உடம்புள் ஓடியது.

ஆனால், நினைத்த அளவுக்கு வலி இல்லை. அது ஏமாற்றமாக இருந்தது. யோசித்ததில் காரணம் புரிந்தது.

கிடங்கின் அகல நீளங்கள் சில அடிகள்தான் இருந்தன. போதுமான அளவு ஓடி வருவதற்கு வழியில்லை. அதனால் சரியாக மோத முடியவில்லை. எனினும் மனம் பின்னடையவில்லை!

திரும்பத் திரும்ப இது போலச் செய்தால் மண்டை கீறி இரத்தம் நிறைய வந்துவிடும்.

அதனால் சுயநினைவு போய்விடும்!

அந்த நிலையில் அப்படியே இறந்து விடலாம் என்று எண்ணினான்.

பணால்.... பணால்....

சுவரில் பல முறை வந்து மோதினான்.

அதிர்ச்சிகள் அத்தனை கணுக்களிலும் ஓடின! தலையில் சிதைவு ஏற்பட்டு இரத்தம் கசிந்தது.

கையில் இரத்தத்தின் பசபசப்பைப் பார்த்ததும் மனசில் ஒரு அடங்காத வெறி எழுந்துவிட்டது.

பணால்... பணால் மேலும் இரண்டு முறை மோதினான்.

அதற்குள் அசாத்தியமாக மூச்சு இரைத்தது! உடம்பில் வலு இல்லை. எல்லாம் தொய்ந்து போன தோலாகத் தோன்றியது.

திரும்ப எழுந்திருப்பது கஷ்டமாக இருந்தது.

உள்ளே ஒட்டமில்லாத புழுக்கக் காற்று. மூச்சு காணாமல் பெருமூச்சுகளாக விடவேண்டி வந்தது. அதுவே, நெஞ்சில் பெரிய வலியைக் கொடுக்க, தரையில் மெல்லச் சாய்ந்தான்.

Edited By A.K

அப்போது...

அவன் செவி எதையோ கேட்டது!

அது என்ன சத்தம்?

முதலில் பிரமை போல இருந்தது.

அதைச் சரியாகக் கேட்க வேண்டும் என்று நினைத்தான்.

ஆனால், அவனது சுவாச இழைப்பு அதைத் தடை செய்தது.

அந்தக் குறுகிய கிடங்கில் அந்த இழைப்புக்கு ஒரு எதிரொலி தோன்றி சத்தத்தைப் பெரிதாக்கிக் கொண்டிருந்தது.

சிரமப்பட்டு மூச்சை சிறிதே நிறுத்திப் பார்க்க, முதலில் கேட்ட சத்தம் தெளிவாகக் கேட்டது. வலது சுவரில் யாரோ சுரண்டுவது போலச் சத்தம்!

அது எப்படி எழுகிறது?

எழ முயன்றான்! முடியவில்லை. உடம்பு துணி போல் கழன்று விழுந்தது! தன் இஷ்டப்படி உடம்பு நடவாது என்பதை முதன் முதலில் அறிந்தான்.

அதிசயமாக இருந்தது அந்த அனுபவம், மீண்டும் மூச்சை அடக்கினான். அதே சுரண்டல் சத்தம் கேட்டது.

மனதில் ஒரு துடிப்பு எழுந்தது.

மெல்ல உடம்போடு நகர்ந்து நகர்ந்து சுவர் ஓரம் போனான்.

சுவர் பரப்பில் காதை வைத்துக் கொண்டு கேட்டான்.

முதலில் சத்தம் ஏதும் வரவில்லை. மனம் ஏமாற்றம் அடைந்தபோது, திடீரென்று திரும்ப அந்தச் சுரண்டல் கேட்டது!

ஆவல் ததும்ப, காதைச் சுவரில் வைத்து அழுத்தினான்.

Edited By A.K

சுரண்டுகிற சத்தம்தான். சுவரின் மறுபுறம் யாரோ சுரண்டுகிறார்கள்.

அந்தப் பக்கம் யாராவது இருப்பார்களோ?

சுறு சுறு என்று அறிவு வேலை செய்தது.

இங்கே வரிசையாகப் பல கிடங்குகள் இருக்கலாம்! ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு ஆள் இருக்கலாம்!

அவர்கள் குற்றவாளிகளாகவும் இருக்கலாம்! தன்னைப் போல அப்பாவிகளாகவும் இருக்கலாம்.

மறுபுறத்தில் யாரோ இருக்கிறார்கள்.

அவர்கள் சுரண்டுகிறார்கள்!

சுரண்ட முடியுமா?

சுரண்டினால் பலன் உண்டா?

எப்படிச் சுரண்டினார்கள்?

சட்டென்று நினைவுக்கு அந்த ஓட்டாஞ்சில்லுகள் அங்கே கிடப்பது தெரிந்தது.

அவனுக்கு உணவு அனுப்பப்படும் வெறும் குழிவான ஓடுகள்!

அவற்றில் ஒன்றிரண்டு உடைந்து உணவு சிதறி இருக்கிறது.

அந்தச் சில்லுகளைத் தேடி எடுத்தான்.

அவசரமாக வந்து, வலது சுவரில் சுரண்ட ஆரம்பித்தான்.

சுரக்... சுர்ரக்...

முதலில் கை வலித்தது! பிறகு சுரக் சுரக் என்று பல முறை சுரண்டி, சற்று காத்திருந்தான்.

Edited By A.K

அடுத்த புறம் சுரண்டல் கேட்கிறதா என்று பார்த்தான் கேட்கவில்லை.

திரும்பவும் ஆத்திரமாக சுரக் சுரக் என்று வலுவோடு பல விநாடிகள் சுரண்டி விட்டுச் சற்று நிறுத்தினான்.

மறுக்ஷணம் அவன் முகம் பிரகாசமாகியது.

சுரண்டல் சத்தம் திடீரென்று வந்தது.

எத்தனையோ நாட்களுக்குப் பிறகு மனதில் ஒரு மகிழ்ச்சியே ஏற்பட்டது.

பெரிய உற்சாகம் குமிழ்த்தது.

ஓட்டுச் சில்லை எடுத்து சுரக் சுரக் செய்து நிறுத்தினான்.

அடுத்த புறத்தில் அவன் செய்தது போல் செய்து விட்டு சத்தம் நின்றது.

அவன் இப்போது ஆறு பெரிய 'சுரக்' குகள் உண்டாக்கினான்.

அடுத்த புறமும் ஆறு பெரிய சுரக்குகள் கேட்டன.

வியப்பு ஏற்பட்டது.

தோல் வாத்தியக்காரர்கள் போட்டி போட்டு வாசிப்பார்களே, அது போல இருக்கிறதே என்று நினைத்தான்.

திரும்ப நான்கு சத்தங்கள் உண்டாக்கினான்.

அங்கேயும் நான்கு!

இரண்டு.

அங்கேயும் இரண்டு.

இவன் நிறுத்தினான். மறு பக்கமும் நிசப்தம்.

Edited By A.K

ஒரு மவுனத்திற்குப் பிறகு, திடீரென்று மறுபுறம் சத்தம் ஆரம்பித்தது.

அவனும் உடனே அதற்கு ஒப்பாக சத்தம் செய்தான்!

அப்பா! என்ன மகிழ்ச்சி!

ஒரு பாதாளச் சிறைக்குள் கூட மனிதனுக்கு இந்த மகிழ்ச்சி ஏற்படுமா?

அடுத்த கிடங்கில் யாரோ இருக்கிறார்கள். அவர்கள் அவனுடன் தொடர்பு கொள்ள விரும்புகிறார்கள்.

புரிந்து விட்டது!

தொடர்பு ஏற்பட்டால்...

ஒருவர் இருப்பதை விட இருவர் இருந்தால்...

அது ஒரு மலை போன்ற பலம் இல்லையா?

அப்படி நினைத்திருக்கும்போதே பார்வை அந்தச் சுவர் மீது விழுந்தது.

அந்த இருட்டிலும் சுவரில் ஏதோ வித்தியாசம் தோன்றியிருப்பது தெரிந்தது.

மெல்ல நகர்ந்து போய், தனது பதட்டமிடும் கையை அந்தப் பகுதிச் சுவரில் வைத்துப் பார்த்தான்.

அந்தப் பகுதியில் சுவர் தேய்ந்து குழி விழுந்திருந்தது.

மனதில் மேலும் உற்சாகம்.

ஆனால் அதற்குள் கைகள் பதட்டம் எடுத்தன. கைகளுக்கு சக்தி அவ்வளவுதான்.

நீண்ட இளைப்போடு சுவரில் சாய்ந்து கொண்டான்.

மறுபுறம் அப்போது அந்தச் சுரண்டல் பேசியது.

ஆனால், அவன் அந்தப் பேச்சுக்கு மறு பேச்சுக் கொடுக்கவில்லை.

கண்களை மூடி மெள்ள உறக்கத்தில் விழுந்து விட்டான்.

Edited By A.K

அந்தப்புரத்தின் 'சிவாலய்' என்ற அறை அந்த உட்பகுதியுள் மகாராணியார் முன்னிலையில் அவளது இரண்டாம் குமரன் பரமாதித்தன் நின்று கொண்டிருந்தான்.

''அம்மா! இந்த முடி சூடல் வேண்டாம் அம்மா! நான் மன்னர் ஆகத் தகுதி இல்லாதவன்! ஏதோ என் மீது தாபப் பட்டு அப்பா இதைச் செய்ய வேண்டாம். எனக்கு ராஜரீகம் எதுவுமே தெரியாது! அப்பாவிடம் சொல். அம்மா!'' என்றான் கண்களில் நீர் உதிர்த்துக் கொண்டு.

மகாராணி அபயாதேவியின் கண்கள் விறைத்துப் போய் நின்றன.

முகம் மெதுவாக நிழலாக இருண்டது.

நெடுநேரம் மவுனத்தில் இருந்து விட்டாள்.

அவள் உடம்பில் எந்தச் சலனமும் இல்லை.

ஆனால் பரமாதித்தன் விசிக்கத் தொடங்கியதும், அவள் மெல்லமாகத் திரும்பினாள்.

''இந்தா பரமாதித்தா!'' என்றாள். ''நமக்கு இப்போது விதி விளையாடுகிறது! நீ பட்டம் வேண்டாம் என்கிறாய்! உன்னை நோக்கிப் பட்டம் வருகிறது.''

''வந்தால் நான் அதை ஏற்றுக் கொண்டால்தானே அம்மா! வேண்டாம் என்று சொன்னால்...''

''அப்படி எதுவும் செய்யாதே! அப்படிச் செய்தால் உனக்கும் சோதனை விளையும். நம் குடும்பத்துக்கும் விளையும்!'' என்று மெல்லிதாகக் கூறினாள் அவள்.

''அம்மா! நீங்கள் ஒருத்தர் தான் அப்பாவிடம் தைரியமாகப் பேசுவீர்கள்! பேசுங்கள்! முதலில் தம்பி ராம கம்பீரனைத் தேடச் சொல்லுங்கள்! அவன் வந்தால் நானே வற்புறுத்துகிறேன்! அவனுக்கு முடி சூட்டுங்கள்!'' என்று கூறினான் பரமாதித்தன், தாயாரின் கைகளைப் பிடித்துக் கொண்டு.

Edited By A.K

தாயார் இன்னும் குனிந்த தலையை நிமிரவில்லை.

''அப்படி எல்லாம் சொல்லாதே, பரமாதித்தா! உன் அப்பாவின் குணம் உனக்குத் தெரியும்! சமீப காலத்தில் அவர் நான் சொன்னதைக் கேட்பதே இல்லை! அவருக்குள் ஒரு கெட்ட ஆவி புகுந்தது போல இருக்கிறது. ராமகம்பீரன் காணாமல் போய்விட்டானே! அவனைப் பற்றி அவர் சிறிது கூடக் கவலைப்படவில்லை! நான்தான் அங்கங்கே ஆட்களை அனுப்பி அவனைத் தேடி வருகிறேன்! இந்த நிலையில் நீ வேறு பிரச்னையான எதையும் செய்து விடாதே! நான் சொல்வதைக் கேள்! நீ முடிசூட்டிக் கொள்! உன்னை யாரும் கைவிடமாட்டார்கள்! மன்னரே உன் பின்னால் இருந்து கொண்டு நீ செய்ய வேண்டியதைச் சொல்லித் தருவார்! தவிர உனக்கு நல்ல சேனாதிபதி சுந்தர பாண்டிய தேவர் இருக்கிறார். ஒற்றுத் தளபதி சுப்பிர மணியன் இருக்கிறார். ஏன் கவலைப்படுகிறாய்? இனி இது போல ஆண்மைத் தனமில்லாத புலம்பலைப் புலம் பாதே!'' என்றார்.

அவர் வார்த்தைகள் ஒவ்வொன்றும் அழுத்தமாக நிதானமாக விழுந்தன.

அதே நேரம் அந்தக் கூடத்து வாயிலில் யாரோ நுழைந்து வருவதைக் கண்டு ராணியாரின் கண்கள் விரிவாகின.

# 13

நிழலிலிருந்து உற்பணிந்து வந்தவள் குன் ஸவனா!

மகாராணி அருகில் வந்து ''மகாராணி சமூகத்தில் விண்ணப்பம்!'' என்று சொல்லி மகாமந்திரி ஸ்ரீராமதாசரின் வருடாந்திர திதி அடுத்த தினம் வருவதாகவும் அதைக் கொண்டாட யாரும் முயற்சி எடுக்கவில்லையே! என்றும் கூறிவிட்டுப் போனாள்.

அந்த சியாம் ராஜ்யம் ஸ்தாபிதம் ஆக வழி வகுத்தவர் அந்த ஸ்ரீராமதாஸர் என்பவர்! அபார புத்திமான்! எதிர்

Edited By A.K

காலம் என்ன நடக்கும் என்று இப்போதே ஊகிக்கக் கூடியவர்! மன்னர் இந்திராதித்தர் குடும்பத்தினருக்கு குரு போன்று விளங்கியவர்!

இரண்டு ஆண்டுகளுக்கு முன்புதான் ஸ்ரீராமதாசர் இறந்திருந்தார்.

அவர் குடும்பம் இல்லாதவர்! எனவே மன்னர்தான் அவர் இறந்ததற்கான கிரியைகளைச் செய்தார். முதல் வருடம் திதியையும் கொண்டாடினார்.

இந்த வருடத்தில் திதி அடுத்த நாள் வருவதாக இருந்தது. மன்னர் யாதும் செய்யவில்லையே என்று கவலை ஏற் பட்டு மகாராணியிடம் வந்திருந்தாள் குன் ஸவனா!

''ஆகட்டும், கவனிக்கலாம்!'' என்று சொல்லி மகாராணி குன்ஸவனாவைச் சமாதானப்படுத்தி அனுப்பி வைத்தாள்.

ஆனால் இதைப் பற்றி ஏற்கெனவே மகாராணிக்குக் கவலை உண்டு. மன்னரிடமிருந்து நிதி பற்றி செய்தி ஏதாவது வரும் என்று பகல் முழுதும் காத்திருந்தாள். வராமல் போகவே அவளுக்கு வேதனை அதிகரித்தது.

மகாமந்திரி ஸ்ரீராமதாசரின் உதவிகளை மன்னர் நன்கு தெரிந்தவராயிற்றே ''அவர் என் தந்தைக்குச் சமம்'' என்று கூறியவராயிற்றே, அவருக்குத் திதி கொடுக்காமலிருந் தால் அது பாபம் அன்றோ!

மன்னர் ஏன் இப்படி இருக்கிறார்!

ஆத்திரம் கொதித்து வர, மனசில் ஒரு உறுதி எடுத்து, பரபர என்று மன்னர் தங்கி இருக்கும் ரகுவம்ச மஹாலை நோக்கி அவசரமாகச் சென்றார்.

கூடவே இரண்டாவது மகனும் சென்றான்.

அங்கே ஏற்கெனவே வாசலில் சேனாதிபதி சுந்தரபாண்டியத் தேவர், மற்றும் இதரர்களும் அவர்களைப்

Edited By A.K

பார்த்ததும் வணங்கிவிட்டு, "நாங்களே உள்ளே போக முடியவில்லை! இன்னும் இரண்டே இரண்டு தினம் பொறுங்கள் என்றார்கள்.

"இல்லை என்னை விடுங்கள், நான் அவரைப் பார்க்க வேண்டும்!" என்று கூறி அவள் உள்ளே போக முயல,

அந்த அறையில் கதவு உள்ளிருந்து தடால் என்று அவள் முகத்தில் மூடப்பட்டது!

அது மகாராணியின் கோபத்தைக் கிளப்ப,

"என்ன சேனாதிபதியாரே! உள்ளே இருப்பது யார்' என்ன தைரியத்தில் இப்படிக் கதவை அடைக்கிறீர்கள்? திறக்கப் போகிறீர்களா இல்லையா?" என்று சினத்துடன் கேட்டாள், மகாராணி.

"எனக்குந்தான் கோபம் வருகிறது! உள்ளே மருத்துவர் ஏன் இவ்வளவு கடுமையாக இருக்கிறார்! உள்ளே யாரையும் விடுவதில்லையே! எங்கே! யார் அங்கே!" என்று இரைந்தார், சுந்தரபாண்டியத்தேவர்!

காவலாளிகள் யாரும் இல்லை.

ஒரு நாள் அல்ல, இருநாள் அல்ல! ராமகம்பீரன் அந்தச் சுவரின் காறையை தினமும் சுண்டிக் கொண்டிருந்தான், காறை காறையாக இன்னும் வந்து கொண்டிருந்தது. சுவர் ஒரு கோட்டைச் சுவர் போல் பெரிய கனத்தில் இருந்தது முடிவே வராது போல் தோன்றியது.

அவனால் முடிவதில்லை. அடிக்கடி களைத்துப் போய், கீழே படுத்து விடுவான்.

அந்த நேரத்தில் மறுபுறத்துச் சுரண்டல் சத்தம்தான் அவனுக்குப் பெரிய உற்சாகத்தை உண்டு பண்ணும்.

வெறி வந்தால் போல எழுந்து, பரபர என்று சுரண்ட ஆரம்பிப்பான்.

Edited By A.K

காறைகள், சிதறிச் சிதறி நாலாப்பக்கமும் உதிரும். அவ்வளவுதான் சுவர் லேசில் கரைவதாக இல்லை.

வாரங்களா? மாதங்களா?

நாட்கள் எண்ணுவதைக் கூட விட்டுவிட்டான். விரக்தி வந்து விட்டது அவனுக்கு!

முகத்தில் தொட்டுப் பார்த்தால் பெரிய தாடி வளர்ந்து விட்டது. தலையிலும் ஏராளமான உரோமங்கள் வளர்ந்து விட்டது.

தவிர உடம்பில் ஒரு இளைப்பு தோன்றிவிட்டது. வயிறு விழுந்து குழி விழ ஆரம்பித்தது.

விலா எலும்புகள் தெரிய ஆரம்பித்தன. கண்கள் ஆழ்ந்து பாதிச் சுருக்கமாய்ப் பார்த்தன.

இனி விடுதலை வரும் என்ற நம்பிக்கை குறைந்து விட்டது.

இத்தனை நாளும் அர்த்தமில்லாமல் அப்படி நினைத்திருந்தோம் என்று நினைத்தான்.

அந்த சுவரும் நெக்கு விடாமல், காறை காறையாக மட்டும் உதிர்ந்து கொண்டிருக்கவே, மனத்தில் பெரிய சூன்யம் உருவானது.

சுவரில் துவாரம் விழுந்தாலும், அவனுக்கு விடுதலை கிடைக்கவா போகிறது?

நினைக்க நினைக்கத் துக்கங்கள் கனக்கத் தொடங்கின.

வாழ்க்கை இப்போது அர்த்தமற்றதாகத் தோன்றியது. தன்னை மாய்த்துக்கொள்வதை விட வேறு எதுவும் தெரியவில்லை.

தொடர்ந்து பலநாட்கள் எதையுமே செய்யாமல், எதையும் மனத்துள் போட்டு வைக்காமல், அப்படி ஒரு உயிர்ப் பிணம் போலக் கிடந்தான். சுவரில் மோதக்கூட இப்போது சக்தி இல்லை.

Edited By A.K

கடவுளிடம் பிரார்த்தனை செய்தான்.

''இந்த உயிர் போகவேண்டும்! அது எளிதாகப் போக வேண்டும். அவஸ்தைப்பட வைக்காதே!''

அன்று ஒரு தூக்கத்திலிருந்து எழுந்த போது வித்தியாசமாக இருந்தது.

ஏதோ சத்தம்தான் அவனை எழுப்பிவிட்டது.

எழுந்ததும், அந்த சத்தத்தில் காரணம் தெரிந்தது.

சுரண்டல் சத்தம் தான். ஆனால் அது எப்படி இவ்வளவு அதிக ஓசையைக் கொடுக்கிறது?

ஒரு வேளை சுவரின் கனம் குறைந்து விட்டதா?

ஒரு புத்துணர்ச்சி வந்தது! சட்டென்று எழுந்தான். அந்த ஓட்டுச்சில்லை எடுத்து, வேகமாக சுரண்ட ஆரம்பித்தான்.

மறுபுறமும் வேலை நடைபெறுவது தெரிந்தது. அதன் ஓசை முன்னரை விட அதிகமாகக் கேட்டது.

ராமகம்பீரன் மனசில் உற்சாகம் துள்ளியது. மறைந்து போன அத்தனை வலுவும் திரும்பி வந்துவிட்டது.

'உக்கு உக்கு' என்று மூச்சு இறைத்துக் கொண்டு கண்களை மூடி ஒரு வெறியன் போல தோண்டிக் கொண்டே போக,

திடீரென்று கையில் ஒரு மாறுதல் தெரிந்தது.

சடக்கென்று கண்களைத் திறந்து பார்த்தான்.

ஆகா, இது என்ன?

காறையில் எல்லாம் போய்விட்டன!

அதன் இடத்தில் செங்கல்கள் தென்பட்டன!

இவற்றை உடைக்க வேண்டுமா என்று கவலையுடன் கையை நீட்டி ஒரு கல்லை அழுத்திப் பார்த்தார்.

Edited By A.K

அது ஆடுவது தெரிந்தது. சற்றே அதிகமாக அசைக்க அது கையோடு வந்தது.

இன்னும் இரண்டு செங்கல்களை எடுக்க, இப்போது துவாரம் ஒன்று விரிந்தது.

அதன் வழியே மறுபுறம் தெரிந்தது.

கண்களை நெருக்கி உற்றுப் பார்த்தான். ஒரே இருள் மயம்! எந்தச் சத்தமும் கேட்கவில்லை.

மறுபுறத்தில் யாராவது இருக்க வேண்டுமே. அவர்கள் தானே சுரண்டி இருக்க வேண்டும்?

துவாரம் அருகே போய் 'ஹோய்' என்றான்.

மறுமொழி இல்லை.

வியப்பாக இருந்தது.

யாரும் இல்லையா? 'ஹேம்!' என்றான்.

சத்தம் வரவில்லை.

துவாரத்தில் நுழைய விரும்பினான், அதற்காகச் சில செங்கல்களை எடுக்க வேண்டி வந்தது.

எடுத்து அப்பால் வைத்து, உடம்பை மெல்ல நுழைத் தான்.

துவராத்தின் நுனிகள் உடம்பைக் கீறின.

எனினும் கீழே படுத்தவாறு உடலை உள்ளே தள்ள முயற்சித்தான்.

சிறு பிரயத்தனங்கள்தான்! முடிவில் உடல் முழுவதும் மறுபுறம் போய்விட்டது. உள்ளே தடுமாறி எழுந்து நின்றான்.

இருட்டு கண்ணைக் கொத்தியது. எதுவுமே தெரிய வில்லை.

ஆனால் புழுக்கம் இங்கே குறைவாக இருந்தது. இடம் சற்று வெம்மையாக இருந்தது.

Edited By A.K

கீழே தரையில் நிறைய ஒட்டாஞ்சல்லிகள் இரைந்து கிடந்தன.

பல நாட்கள் இங்க வேலை செய்திருக்கிறார்கள் என்று தெரிந்தது.

ஆனால் யாரையும் காணவில்லையே! கண்களை இழுத்து விழித்துப் பார்த்தான்.

இன்னும் இருட்டு, அது கொடுமையாகவே இருந்தது. நேரம் போனால் தன்னால் பார்க்க இயலும் என்று தோன்றியது.

''ஹோய்!'' என்றான்.

''யார் அங்கே?'' என்றான்,

அவன் குரல்களே எதிரொலித்தன.

ஒருவேளை இங்கே யாருமில்லையா?

அல்லது இருந்தவர்கள் விடுதலை ஆகிவிட்டார்களா?

அல்லது தப்பித்து விட்டார்களா?

கைகளை அங்கும் இங்கும் துழாவ ஆரம்பித்தான்.

அப்போதுதான் அவன் கண்கள் அந்த இருட்டுக்கு பழக்கமாகிறது.

மெல்லிசாக, மிக மெல்லிசாக சுற்றுப்புறம் பசைக்க ஆரம்பித்தது.

கனவு போல் அந்தக் கிடங்கின் நீள அகலங்கள் தெரிந்தன.

அவன் கிடங்கை விட இது சற்று விஸ்தாரமானது! ஓடைச் சலசலப்பு கூட இங்கே குறைவு.

பார்வை வலது புறம் திரும்ப அங்கே அவர் அருகே ஒரு சின்ன மேடையே இருந்தது.

Edited By A.K

அந்த மேடை மீது..... பார்வை போனதும் அப்படியே நின்றது.

யாரோ அதில் படுத்திருந்தார்கள்.

அடிகளை மெல்ல எடுத்து மேடை அருகே போய் குனிந்து பார்த்தபோது ஒரு வயோதிகர் தெரிந்தார்.

நீண்ட வெள்ளை தாடி! உடம்பு மெலிந்து அத்தனை விலா எலும்புகளும் தெரிந்தன.

அந்த உருவம் இழுத்து இழுத்து மூச்சு விட்டது.

''ஹோய்!'' என்றான் மெதுவாக.

உருவம் பேசவில்லை.

''ஹோய்!'' என்றான் சற்று உரத்து.

அதற்கும் மறு பேச்சு இல்லை.

பின்னர் அவர் உடலைத் தொட்டுப் பார்த்தான். சலனம் இல்லை.

மயங்கி இருக்கிறாரோ! என்று நினைத்தான்.

சுவர் ஓரமாக உள்ள ஓடைக்குச் சென்றான். நீரை முகர்ந்து வந்து முகத்தில் லேசாகத் தெளித்தான்.

ஒரு சின்ன சலனம்.

உடம்பு நெளிந்தது.

அவன் திகிலுடன் நிற்க, அந்த வயோதிகர் கண்கள் மெல்ல மெல்ல பிரிந்தன.

நம்பாதவர் போல அவனைப் பார்த்தார்.

திடுக்கிட்டு எழ முயற்சித்தார். எழ முடியவில்லை. உடம்பு தள்ளாடியது.

''எழுந்திருக்க வேண்டாம்! அப்படியே இருங்கள்!'' என்றான் அவன்

ஏதோ பேச முயன்றார்.

பேச்சு முதலில் வரவில்லை. பிறகு மெல்ல மெல்ல இரும்பிக்கொண்டு "தாங்கள் யார்?" என்று கேட்டார்.

"ஐயா! நான் அடுத்த கிடங்கில் இருப்பவன்!" என்றான் அவன்.

"கிடங்கு, அடுத்த கிடங்கு...ஓ..." என்றார்.

எல்லா நினைவுகளும் திரும்பி வந்தது போல் ...ந்தது

"நீங்கள் யார்? உங்களை ஏன் கிடங்கில் அடைத்தார்கள்?" என்று கேட்டார் அவர்.

"ஐயா! நான் ஒரு நிரபராதி! கொள்ளை அடித்தவன் ஒருவன் இருக்க என்னைக் கொண்டு வந்து இங்கே தள்ளி விட்டார்களே!" என்றான் அவன்.

"கொள்ளையா?"

"ஆமாம்!"

"சாதாரணக் கொள்ளைக்கு இங்கே தள்ள மாட்டாங்களே?"

ராமகம்பீரன் திடுக்கிட்டான்.

"ஏன் பெரியவரே! கொள்ளைக்காரனை இங்கே அடைக்க மாட்டார்களா? என்னை அடைச்சிருக்கிறார்களே!"

"நீங்கள் பொய் சொல்கிறீர்கள்" என்றார் பெரியவர்.

அடுத்த கணமே அவன் மனம் வெகுவாகத் துவண்டது! அனாவசியமாய் ஒரு பொய் சொல்லிவிட்டோமே என்று நினைத்தான்.

"இது கொள்ளையர்கள் அடைக்கும் இடம் இல்லை அப்பா! எதிராளிகளை அடைக்கும் இடம்"

"யாருடைய எதிராளிகள் பெரியவரே?"

Edited By A.K

'ஹஹ்ஹஹா' என்று மெல்லிய சிரிப்பு ஒன்று சிரித்தார் அவர். அந்த நிலையில் சிரிப்பதுகூட ஆச்சர்யமாக இருந்தது.

''யார் எதிராளியா? என்று கேட்டாய்! நல்ல கேள்வி! யார் உங்களை அடைத்தார்களோ அவர்தான் அவர்களது எதிராளி''

அவன் கண்கள் விரிந்து பார்த்தன.

அந்தக் குரல், அந்தப் பெரியவரின் குரல். அதை எங்கேயோ கேள்விப்பட்டிருக்கிறோமே! என்று நினைத்தான்.

யார் அவர் என்று அதிசயக் கண்களுடன் அவரைப் பார்த்துக் குனிந்தான்.

அடுத்தகணம், ''சுவாமி!'' என்று பரிதாபத் தொனி அவனை விட்டுப் பறந்தது.

# 14

குகை போன்ற இருள் தேங்கிய கிடங்கில், ராமகம்பீரன் அந்தத் தாடி மீசை உருவத்தை உற்று நோக்கினான். உருவத்தின் உடல் மெலிந்து சுருகு போல் இருந்தது. அதன் கண்கள் ஆழ்ந்து ஏதோ துருவத்து நட்சத்திரம் போல மினுமினுத்தன.

''சுவாமி! தாங்கள் மகாமந்திரி ஸ்ரீராமதாசர்தானே?'' என்று பொருமல் குரலில் ராமகம்பீரன் வினவினான்.

அந்த மெல்லிய மனிதர் மெல்லச் சிலும்பினது போல் இருந்தது. அவர் கண்கள் இரண்டும் நேர்க்கணைகளாக அவன் முகத்தில் விழுந்தன.

தொண்டையைச் சரி செய்து ஏதோ கூற முயன்றார். கழுத்தின் பரு எலும்பு மேலும் கீழும் கொட்டையாக நகர்ந்தது. ஆனால் குரல் சரியாகக் கேட்கவில்லை.

அவர் காதருகே போய் கம்பீரன் வார்த்தைகளைக் கிரகித்துக் கொள்ள முயன்றான்.

Edited By A.K

"சுவாமி! தாங்கள் யார்? ஸ்ரீராமதாசர் தானே! நான் காண்பது கனவு இல்லையே!" என்று அவர் கைகளைப் பற்றிக்கொண்டு ஆதுரத்துடன் கேட்டான்.

பெரியவர் முகம் பிரசன்னமாகியது. மெல்லிய இழை போன்ற குரலில், "ஆமாம், நான் ஸ்ரீராமதாசர்தான்!" என்றார், பதட்டக் குரலுடன்,

"சுவாமி! தாங்கள் இறந்து விட்டதாகக் கருதினோமே! தங்கள் பிரேதத்தை ஆற்றில் கண்டு எடுத்தோமே! தங்களுக்குச் சென்ற ஆண்டு கூட திதி நடத்தினோமே!" என்று வரிசையாகக் கூறிக் கொண்டே போனான் கம்பீரன்.

"நானா இறந்து விட்டேன்! சதி! அந்தப் பாழாய்ப் போனவனின் சதி!"

"யார் சுவாமி?"

"அந்தச் சேனாதிபதி சுந்தரபாண்டியத் தேவன் இருக்கிறானே, அவனைத்தான் சொல்கிறேன்!"

திடுக்கிட்டு அவர் கையை ராமகம்பீரன் பற்றிக் கொண்டான்.

சிறிது நேரம் இருவரும் மாறி மாறி பேசிக் கொண்டார்கள்.

மகாமந்திரி தமது துயரமான விருத்தாந்தத்தைக் கூறினார்.

காலையில் ஒருநாள் சூரியோதயத்திற்கு முன்னர் திக்கரைக்கு அவர் குளிக்க வரும் வேளையில் மேலே திட்டி வாசல் திறக்கும்போது பேச்சை நிறுத்திவிடுவார்கள்.

அங்குள்ள சுவர்களில் ஒட்டுச் சலி கொண்டு பெரிது பெரிதாக புதிய எழுத்துக்கள் எழுதி அவன் உருவாக்கிய வரி வடிவைக் காண்பிப்பான் ராமகம்பீரன்!

"அருமை! அருமை!" என்று அதைப் பாராட்டிப் பேசுவார் பெரியவர்.

Edited By A.K

நாட்கள், வாரங்கள் என்று ஓடின. கம்பீரன் ஒரு விஷயத்தை உணர ஆரம்பித்தான்.

அவனோடு பேசுவதில் ராமதாசர் தெம்பு அடைந்தாலும் அவரது உடல் சிறிது சிறிதாக க்ஷீணமாகிக் கொண்டிருந்தது.

முன்பைவிட இருமல்கள் அதிகமாக உருண்டு வந்தன.

உடம்பு எக்கி, இருமினார் அவர். மூச்சு விட முடியாமல் நெஞ்சைப் பிடித்துக் கொண்டு துடித்தார். சமயத்தில் கீழே பாறையில் புரள்வார்.

ஒருநாள் காலையில் எழுந்ததும் அவர் மிகவும் வாட்டம் அடைந்திருந்தார். கம்பீரனை அருகில் அழைத்தார்.

"கம்பீரா! நேற்று இரவு எனக்கு ஒரு யோசனை உதித்துவிட்டது! நீ வெளியே போய்விடலாம்!" என்றார் அவர்.

"எப்படி சுவாமி!" என்றான் அவன்.

"உன் கிடங்கு ஆழம் நிறைந்தது! என் கிடங்கு அவ்வளவு ஆழம் இல்லாதது! என் கிடங்குக்கு வாசல், இதோ பதினைந்து அடி உயரத்திலே இருக்கிறது! உன் கிடங்கில் வாசல் இருபது அடிக்கு மேல்!

இந்தக் கிழம் எங்கே தப்பிக்கப் போகிறது என்று நினைத்துத்தான் என்னை இந்தக் கிடங்கில் போட்டிருக்கிறார்கள்.

இங்கே சுவர் ஓரம் ஒருவர் மீது ஒருவர் ஏறி நின்று சற்று எம்பினால் அந்தத் திட்டி வாசலின் விளிம்பைப் பற்றி விடலாம்.

பிறகு காவலாளி அந்த வாசலைத் திறக்கும்போது அவன் வாயைக் கட்டிவிட்டு வெளியேறிவிடலாம்!" என்றார் பெரியவர்.

"சரி சுவாமி! நீங்கள் என் தோள் மீது ஏறி எம்பிப் போய் விடுங்கள்! நாட்டுக்குத் தாங்கள்தான் மிக முக்கியம்! நீங்கள் போனால்தான், நடந்த அக்கிரமங்களை வெளியே

Edited By A.K

சொல்லி பாதகர்களைச் சிறையில் தள்ளலாம். என்னையும் விடுவிக்கலாம்'' என்றான் கம்பீரன்.

பெரியவரின் நெஞ்சு தழதழத்தது. கண்கள் ஈரம் பாரித்தன.

''அப்பா கம்பீரா! இனி நெடுநாட்கள் நான் வாழமாட்டேன்! வெளிச்சமில்லாத, காற்று இல்லாத கிடங்கில் இரண்டு வருடங்கள் அடைந்து கிடந்ததில் என் தேகம் இற்றுப் போய்விட்டது. நல்லவேளை உன்னைச் சந்தித்தேன்! நீ இளைஞன்! நீ வெளியே போவதுதான் முறை!'' என்றார்.

அவரது எலும்பு விரல்களைப் பற்றினான் கம்பீரன்.

''சுவாமி! இப்படித் தாங்கள் கூறுவதற்கு நன்றி உடையவனாக இருக்கிறேன். ஆனால் தாங்கள் சம்மதித்தாலும் என் கனத்தைத் தாங்கள் தாங்க மாட்டீர்கள்! தங்கள் உடல் தாங்காது!'' என்றான் கம்பீரன்.

பெரியவர் முகத்தில் மெல்லிய சிரிப்பு தோன்றியது. ஆனால் அது அவர் சதையற்ற முகத்தை விகாரமாகக் காட்டியது. கம்பீரன் மனத்திலும் அது பரிதாபம் உண்டாக்கியது.

''அதை யோசிக்காமல் இருப்பேனா, கம்பீரா? எனது யோசனையே வேறு!''

''என்ன சுவாமி?''

''நான் அதிக நாள் வாழ மாட்டேன்! இனிமேல் போகப் போக எனக்கு தேக உபாதைகள் நிறைய ஏற்படும். மிகவும் கஷ்டப்படுவேன். அப்படி அணு அணுவாக நான் இறப்பதை விட உன்னிடம் ஒரு வேண்டுகோள் விடுக்கிறேன்! என்னைக் கொன்று விடு!''

''சுவாமி!'' என்று வீறும் குரல் அவனிடமிருந்து பாய்ந்தது. ''அந்தப் பாதகத்தை நான் செய்வேனா சுவாமி! தங்களைக் கொன்று நான் என்ன சாதிக்க முடியும்!''

''கலங்காதே! ராஜரீக வாழ்க்கை என்றால் பல கொடுமையான காரியங்கள் செய்ய வேண்டிவரும்!

Edited By A.K

என்னைக் கொன்று விடு! கொன்றால் எப்படி நீ தப்பிக்க முடியும் என்று கேட்பாய்! இறந்து போன என் தேகத்தை ஒரு நாள் வைத்திரு! அது ஒரு கட்டையாகிவிடும். கை, கால்கள் எல்லாம் விறைத்துப் போய்விடும். என் உடலை ஒரு ஏணி போல் இந்தச் சுவரில் நிறுத்தி வை! என் தோளில் ஏறி திட்டி வாசலைப் பிடி! உயிர் இருக்கும்போது தாங்காத இந்த உடல் உயிர் போன பிறகு உன்னைத் தாங்கிக் கொள்ளும்'' என்றார்.

கம்பீரனால் அதை நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை.

''சுவாமி! தங்களைக் கொன்றுவிட்டு எனக்குக் கிடைக்கும் விடுதலை வேண்டாம்! நிச்சயம் வேண்டாம்!'' என்று தேம்ப ஆரம்பித்தான்.

ரத்னதீபா அந்தப் பல்லக்கில் போகும்போது எத்தனையோ நினைவுகள் வந்து மோதின. இந்த தேசத்திற்கு வந்து எத்தனை மாதங்கள் ஓடிவிட்டன! எத்தனை சம்பவங்கள் இங்கே நடந்து விட்டன!

தனது சோழ வள நாட்டையும் தனது அன்பு மிகுந்த பெற்றோர்களையும் நினைத்தாள். தந்தை தமது பாரம்பரிய ராஜ கௌரவத்தில் இப்போது இல்லை! மாமன்னர்கள் வரிசையாக ஆண்டு வந்த சோழராஜ்யம் தற்போது பாண்டியர் கையில் போய்விட்டது. ராஜ பதவி இழந்த அவள் தந்தை தனது மகளையாவது ஒரு மன்னருக்கு வாழ்க்கைப் பட வைக்க வேண்டும் என்ற எண்ணத்தில் தான் கடல் கடந்து செல்ல அனுமதித்து விட்டார்.

இங்கே கப்பல் தரை தட்டி அதனை அடுத்து நடந்த அசம்பாவிதங்கள் அத்தனையும் அவருக்கு எங்கே தெரியப் போகிறது?

அடிக்கடி பல்லக்கின் திரையை விலக்கி வெளிப்புற வனப்புகளைப் பார்த்தாள்.

என்ன அழகாக இருந்தது, இந்த சியாம் தேசம்!

Edited By A.K

எங்குப் பார்த்தாலும் பளிச் பளிச் என்று ஆறுகள் மின்னுகின்றன.

கொஞ்ச தூரம் போனால் போதும் ஒரு ஆறோ, கால்வாயோ குறுக்கிட்டு விடும். அங்கே ஓடத்தில் பயணம் செல்ல வேண்டும்.

என்ன இன்பமாக இருந்தது அது. அதுவும் அந்த 'டெப்சன்' என்று சியாம் பெண் பாடும் போது. வரும் வழியில் தண்டு இறங்கிய 'கியாங்' என்ற ஊரில் தான் அந்தப் பெண் இவளது பரிவாரத்தில் சேர்ந்து கொண்டாள்.

சின்னப் பரிவாரம்தான் அது!

இந்த நாட்டில் ரத்ன தீபாவுக்கு திரும்பவும் ராஜ மரியாதை கிடைத்ததில் பெருமகிழ்ச்சி ஏற்பட்டது.

ஆனால் இந்த மரியாதைகளை யார் தருகிறார்கள்? அவளை எங்கே இட்டுச் செல்கிறார்கள் என்பவை எல்லாம் அவளுக்குப் புதிராகவே இருந்தன.

புளிய மரங்கள் ஏராளமாகச் சூழ்ந்த இடம் ஒன்றில் அவர்கள் உணவுக்காக நின்றபோது, பல்லக்கை விட்டு அவர் இறங்கினாள்.

"டெப்சன்" என்று மென்மையாக அழைக்க, அந்தப் பெண் தனது பட்டுடைச் சரசரப்புடன் கம்பீரத் தோற்றத்தில் அவள் அருகே வந்து நின்றாள்.

"டெப்சன்! நான் விரும்பியதை அறிந்து கொண்டாயா? எனக்கு இந்தப் பரிவாரமும் பல்லக்கும் தந்தவர் யார்? நாம் எங்கே போய்க் கொண்டிருக்கிறோம்?" என்று கேட்டாள்.

டெப்சன்னின் முகம் அழகான சந்திரிகை போல வெண்மையாகத் திகழ்ந்தாலும் அதில் ஒரு சோகம் சின்ன ரேகையாக ஒட்டியிருந்தது.

ஆனால் ஆச்சரியம்! அந்த சோகமே அவளுக்கு நிறைய அழகு தருவதாக இருந்தது.

Edited By A.K

பாவம்! உயிருக்கு உயிரான பாட்டியை விட்டு வந்திருக்கிறாளாம்!

அந்தப் பெண்ணுக்கு என்ன கஷ்டமோ!

டெப்சன் அவள் அருகே வந்து அமர்ந்தாள்.

# 15

**கடலில் விழுந்த ரத்னதாராவைக் காப்பாற்றியது யார்?**

**கடற் கொள்ளைக்காரர்களா?**

அந்த சியாம் பெண் 'டெப்சன் ஒரு நளின அன்னம் போல நடந்து வந்தாள்.

அவள் முகத்தில் நிலவிய சாந்தியும் அவளது கம்பீர அழகும் ரத்னதாராவைப் பெரிதும் கவர்ந்தன! பவுர்ணமி யின் நடுநிசி ஒளி போல அவள் மீது ஒரு வெள்ளி நிறம் விகசித்தது.

அந்த இளம் பெண் டெப்சன் யாத்திரை தொடக் கத்தில் அவர்கள் குழுவோடு வரவில்லை.

நடு வழியில்தான் எங்கேயோ வந்து சேர்ந்திருக் கிறாள்!

வந்த இரண்டு தினங்களிலேயே அவளை ரத்ன தாராவுக்கு மிகவும் பிடித்துவிட்டது. வெகுளித்தனமான புன்னகையோடு, "குன் தாரா! குன் தாரா!" என்று அவளை (ரத்னதாராவை) அன்புடன் அழைத்தாள்.

அந்தக் குரல் என்ன இனிமையாக இருந்தது!

அந்தப் பெண் அழகாகப் பாடுவாள் என்பது மேலும் சில தினங்களில் தெளிவாகிவிட்டது.

அப்போது அவர்களது யாத்திரைக் குழு மேனாம் உபநதியான சந்திரப் பிரபா ஆற்றை அடைந்திருந்தது.

ஆற்றின் அகலமும் மணல் நிறைந்திருந்த கரையும் தாராவுக்கு தனது நாட்டின் காவேரியை நினைவுபடுத்தியது!

சிலு சிலு என்று கடல்காற்று குளிர்ப் பதமாக அந்த யாத்திரி சாலையைத் தொட்டு விட்டுச் சென்றது.

Edited By A.K

இரவு போஜனம் அதன் கரையில்தான் நடந்தது.

எல்லாரும் உணவு அருந்திவிட்டு, வெள்ளி விரித்த அந்த மணற் பரப்பில் தங்கள் உடல் சுமைகளை மனமார இறக்கி வைத்து உருண்டார்கள்.

நித்திரையும் அவர்களைக் கடல் காற்று போல மெல்லியதாக வந்து முத்தமிட்டுச் சென்றது.

அப்போதுதான் டெப்சன், தாராவுடன் மணல் விளிம்பு சென்று குமிழ்களாகச் சிரிக்கும் நதி நீரில் காலை ஊன்றி நின்று கொண்டாள்.

வானம் வெறும் நீலமாய் நிசப்த யோகத்தில் இருந்தது.

டெப்சன் என்ன பரவசத்தில் இருந்தாள் அப்போது!

நதியைப் பார்த்தாள்! ஆகாயத்தைப் பார்த்தாள்! இரு புறமும் மண்டிக் கருமைப் புருவங்களாகத் தெரியும் காடுகளைப் பார்த்தாள்.

பாட ஆரம்பித்தாள்!

தாராவின் கண்கள் கவர்ந்து கொண்டு அவளை நோக்கின.

மெல்லிய இசை இழைகள் அந்தப் பெண்ணிடமிருந்து அவிழ்ந்து வந்தன.

ஆ– இது 'ஷண்முகப் பிரியா'வா?

ஆச்சரியம்! அந்த அரச குமாரியை அந்த இழைகள் முழுவதுமாகக் கவர்ந்தன.

காவேரிக்கரையில் சித்ரா பௌர்ணமி அன்று நாதஸ்வரத்தில் 'ஷண்முகப்பிரியா' கேட்டது போலிருந்தது.

ஆனால்....

இங்கே, கடல் கடந்த தூர தூரமாகியுள்ள இந்த நாட்டில் அந்த ராகத்தின் விளிம்போரச் சாயங்கள் புதுமையாக மாறி இருந்தன. அதுவே புதுமையான மெருகுபோல்

Edited By A.K

அவளுக்குத் தோன்றியது. ஷண்முகப்பிரியாவுக்கு இன்னும் புது நகைகள் அணிவித்தது போல் இருந்தது.

அந்தக் கணமே ரத்னதாராவுக்கு அங்கே சுவர்க்கம் உதிர்ந்து விட்டது. அதை அவளால் மறக்கவே முடியாது.

இரவு தூக்கமெல்லாம் நல்ல நல்ல கனவுகள் வந்து நர்த்தனமாடின.

காலையில் எழுந்த பிறகு கூட அங்கங்கே புரியாத திசையிலிருந்து அந்த ராக நறுக்கங்கள் திடீர் திடீர் என்று கேட்டு மறைந்தன.

இந்த நாட்டுக்கு வந்த இத்தனை நாட்களில் அப்போது தான் அவள் முகத்து துக்கங்கள் யாவும் மறைந்து, முறுவல் புதிய உதயமாக ஒட்டிக் கொண்டது.

'டெப்சன்' என்ற அந்த இளம் பெண் ரத்னதாராவுக்கு அத்யந்தம் ஆகிவிட்டாள்.

இண்டு நாட்கள் மேலும் பயணம் தொடர்ந்தது.

ரத்னதாராவின் கூர்மை அறிவில் ஒரு சந்தேகம் ஜனித்தது.

அவர்களது யாத்திரைக் குழு பொதுவான சாலையை விடுத்து மறைவான, தனியான, ஆள் நடமாட்டமில்லாத சாதாரண வழித் தடங்களில் சென்று கொண்டிருந்தது.

வெவ்வேறு நேரங்களில் திடீர் திடீர் என்று வனப் பிராந்தியத்துக்குப் போய் மறைந்து கொண்டது.

இந்த யாத்திரை ஒரு மர்மமான முறையில் யாருக்கும்கண்ணில் படாமல் போவது போல இருந்தது.

ஏன் இப்படிச் செல்கிறது!

இந்த யாத்திரையே அவளுக்காகத் தானே நடக்கிறது.

அவளை எங்கே கொண்டு செல்கிறார்கள்?

இப்படி ரகசியமாகப் போவதன் காரணம் என்ன?

மேலும் தினங்கள் செல்ல, மீண்டும் ஒரு வெளிச்சமான பகலில் யாத்திரை செய்து முடித்து, ஒரு பரந்த வெளியில் தண்டு இறங்கிய பிறகு,

ரத்னதாரா டெப்சனைக் கனிந்த குரலில் அழைத்தாள்.

Edited By A.K

டெப்சன்னும் இள அன்னம் போல் நடந்து வந்தாள். தாராவின் அருகில் முறுவல் முகத்தோடு அமர்ந்து கொண்டாள்.

சிறிது நேரம் பொதுவாகப் பேசிவிட்டு,

''டெப்சன் நாம் இப்போது எங்கே போய்க் கொண்டிருக்கிறோம்?'' என்றாள் தாரா. அவள் குரலில் கவலை தோய்ந்த அக்கறை இருந்தது.

''குன் தாரா! எனக்கும் முழுதுமாகத் தெரிய வில்லை! எனது ஊகத்தின்படி நாம் 'சாங் மாய்' ராஜ்யத்துக்குப் போயக் கொண்டிருக்கிறோம்!''

'அது எங்கே இருக்கிறது?''

''வடக்கே, சியாம் ராஜ்யத்தைத் தாண்டி—''

''சியாம் ராஜ்யத்தைக் கடக்கப் போகிறோமா?''

''ஆமாம்! இப்போது கடந்து கொண்டுதான் இருக்கிறோம்''

தாராவிடமிருந்து ஒரு பெருமூச்சு வெளிப்பட்டது!

''ஏன் குன் தாரா! சியாம் ராஜ்யத்தில் யாரையாவது தெரியுமா?''

''எனக்கா?... யாரும் தெரியாது!''

''அப்படியானால் இந்த தேசத்திற்கு ஏன் வந்தீர்கள்?''

'சீனம் வரை போவதாகப் புறப்பட்டோம். மேனாம் முகத்துவாரத்தில் ஒரு மண் தீவில் எங்கள் கப்பல் தரை தட்டி விட்டது!''

அப்புறம்?''

''கப்பல் ஒருபுறமாகச் சரிந்து தண்ணீருக்குள் நான் விழுந்து விட்டேன்!''

''எப்படித் தப்பினீர்கள்?''

Edited By A.K

"அதுதான் தெரியவில்லை. யாரோ என்னைக் கரை சேர்த்துவிட்டார்கள்!"

"கடல் கொள்ளைக்காரர்களா?"

"இங்கே அவர்கள் இருக்கிறார்களா?"

"மேனாம் முகத்துவாரத்தில் இருக்கிறார்கள். கடற்கரை ஓரங்களில் வாழ்கிறார்கள்! கப்பல் ஏதாவது எக்கச்சக்கத்தில் அகப்பட்டுக் கொண்டால் போதும், சூறையாடி விடுவார்கள்!"

"இவர்களை அடக்குவார் யாரும் கிடையாதா?"

"அடக்குவாரில்லை. குன் ரத்னா! இந்தக் கொள்ளையர்கள்தான் உங்களைப் பிடித்தார்களா?"

"தெரியவில்லை! என்னை விசாரித்தபோது, நான் ராஜ வம்சம்; மகாராஜா இந்திராதித்தர் எங்களை அழைத்த தன் பேரில் பரத நாட்டிலிருந்து வந்திருப்பதாகத் தெரிவித்தேன். அப்படிச் சொன்னதிலிருந்து எனக்கு மரியாதை கொடுத்தார்கள்! ஆனால் என்னை மொத்தம் நான்கு இடங்களுக்கு மாற்றிவிட்டார்கள்!"

"உங்களிடம் எதுவும் சொல்லவில்லையா?"

"இல்லை! யாரும் எதுவும் என்னிடம் பேசவில்லை."

டெப்சன் புருவத்தை உயர்த்தி யோசனையில் ஆழ்ந்தாள். அவளருகே நெருப்பு ஏற்றி உலைப் பானைகள் அவை மீது ஏறிக் கொண்டன. சமையல் தொடங்கி விட்டது.

"டெப்சன்!" என்று திரும்ப அழைத்தாள்.

"நீ இவர்கள் குழுவில் வேலை செய்பவளா? தொடக்கத்தில் உன்னை நான் பார்க்கவில்லையே! எப்படி திடீரெனச் சேர்ந்துகொண்டாய்?" என்றாள் ரத்னதாரா.

Edited By A.K

டெப்சன்னின் இளம் கண்களில் இலேசாக ஒரு நிழல் தட்டியது.

"குன் தாரா! நான் சியாம் தேசத்துப் பெண். நான் ஒரு சிக்கலில் அகப்பட்டுக் கொண்டேன். என்னை அரச சேவகர்கள் தேட ஆரம்பித்தார்கள். அதை அறிந்ததும் நான் ஊரை விட்டே ஓடி தெற்கே வந்து விட்டேன்!"

"உனக்குச் சொந்தம் யாரும் கிடையாதா?"

"உண்டு, ஒரு பாட்டி மட்டிலும் உண்டு. அவளை விட்டுவிட்டு வந்துவிட்டேன். அதுதான் என்னைப் பெரிதும் பாதிக்கிறது. பல மாதங்கள் போய் விட்டன! பாட்டியைப் பார்ப்பதற்காகத்தான் இந்தக் குழுவில் சேர்ந்திருக்கிறேன்" என்றாள் அவள்.

"அந்தப் பாதகத்தை நான் இந்த ஜன்மத்தில் செய்ய மாட்டேன்!" என்றான் ராமகம்பீரன்.

ஸ்ரீராமதாசரின் கைகளைப் பிடித்துக் கண்களில் ஒற்றிக் கொண்டான்.

"இந்தா கம்பீரா, நான் சொல்வதைக் கேள்! ராஜ்ய பரிபாலனத்தில் கெட்டது நல்லது யோசிக்கக் கூடாது! எது பெரும்பாலாருக்கு நல்லதோ அதைத் தான் யோசிக்க வேண்டும்! ராஜ்ய நீதியிலே நான் சொல்லியிருக்கிறது. 'ராஜா ராஷ்ட்ர கிருதம் பாபம்! ராஜபாபம் புரோகிதம்'.

அதாவது நாடு செய்யும் பாபங்கள் எங்கள் ராஜாவைச் சேரும்! ராஜாவின் பாபம் அவனுக்கு உபதேசிக்கிற குருவைச் சேரும்!

இப்போது இந்த நாட்டின் குருவே சொல்கிறேன். இந்தக் காரியத்தை நீ செய்! உன்னைப் பாபம் அடையாது!

அதற்கும் மாறாகப் புகழ்தான் எனக்கும்!" என்று மெல்லிய குரலில் அழுத்தமாகக் கூறினார் ஸ்ரீராமதாசர்.

ஆனால் அவர் வார்த்தைகளை கம்பீரன் மனதில் போட்டுக் கொள்ளவே இல்லை. "சுவாமி! சுவாமி!

Edited By A.K

என்னை விட்டு விடுங்கள்! அந்த ஒரு காரியம் மட்டும் செய்யமாட்டேன்!'' என்று கூறினான்.

''கேள், கம்பீரா! உன்னை இந்தக் கிடங்கில் தள்ளியது உன் தந்தை என்று தானே முதலில் நினைத்தாய்.''

''ஆமாம் சுவாமி!''

''நான் சொன்ன பிறகுதானே இதைச் செய்தது சேனாதிபதி சுந்தர பாண்டியத் தேவர் என்று தெரியும்?''

''ஆமாம் சுவாமி!''

''நான் இந்த சுந்தர பாண்டியத் தேவரை சில காலமாக கவனித்து வருகிறேன். அவரது போக்குவரத்துகளை அறிந்து வரும்படி அங்கங்கே ஆட்களை நிறுத்தியிருந்தேன்! பாண்டித் தேவரின் தொடர்புகள் நிறையத் தெரியவந்தன. அவருக்கே இந்த ராஜ்யத்தின் மீது ஆசை என்பது தெரியத் தொடங்கியது! அவரைத் தக்க தருணத்தில் கையும் களவுமாகப் பிடிக்க வேண்டும் என்று காத்திருந்தேன். ஆனால் அவன் என்னை முந்திவிட்டான்! அவனது திட்டத்தில் என்னை அகற்றுவதுதான் அவனது முதல் வேலை என்று தோன்றியிருக்கிறது. என்னை அவன் சிறை செய்து விட்டான்!''

''ஏன் சுவாமி, அதைச் செய்தது அவன்தான் என்று எப்படிக் கண்டு கொண்டீர்கள்!''

''பாண்டித் தேவருக்கு சோழ நாட்டு வாசனை திரவியங்களில் பிரியம் அதிகம்!

சோழ நாட்டில் சுகந்தத் தைலம் என ஒன்று செய்வது உண்டு. மயிலாடு துறைக்காரர்கள் இதைச் செய்வார்கள். இதைத்தான் அவன் தலையில் தேய்த்துக் கொள்வான்.

என் கண்களைக் கட்டி இந்தக் கிடங்குக்குள் கொண்டு வந்தபோது இங்கே இந்தக் கட்டடத்து வாசலில் அவன்

Edited By A.K

நின்று கொண்டிருந்தான். என்னைச் சேவகர்கள் அழைத்துப் போனபோது, அவனும் இதரரும் என் பக்கத்தில் வந்தா பார்த்தார்கள். அப்போது அந்த சுகந்த மணத்தை நான் உணர்ந்து விட்டேன். அவரைத் தவிர, வேறு யாருமே அதை உபயோகிப்பதில்லை என்று அவர் அறியவில்லை! அவரும், அவரது சகாக்களும் சைக பாஷையில் பேசினார்கள். பேசினால் அவரது குரலை நான் கண்டு பிடித்து விடுவேன் என்று பயம்!

அப்போதுதான் எனக்கு ஆக்ரோஷம் வந்தது.

அவனை விட்டு விடக்கூடாது என்று நினைத்தேன். கட்டியிருந்த என் கைகளை ஒரு தூக்குத் தூக்கி, அருகிலிருந்த அவன் கை மீது வைத்தேன்! அவன் கையில் உள்ள கங்கணம் மீது சரியாக விழுந்தது. அதை உடனே சுற்றி வர அவசரத்தில் தொட்டுப் பார்த்துவிட்டேன்!

நம் அரசர் இந்திராதித்தர் பாண்டித் தேவருக்குக் கொடுத்த கங்கணம் அது. விஷ்ணுபுரிப் போரில் அதை அவருக்கு அளித்தார்!

அதை உணர்ந்ததுமே, ''ஏய், பாண்டித் தேவா! தெரியும் உன் துரோகம்! நீ சீக்கிரம் அகப்படுவாய்!'' என்று கத்தினேன்.

உரத்த குரலில்தான் கூவினேன். வெகு தூரம் அது கேட்டிருக்க வேண்டும்! யார் யார் கேட்டார்களோ! என் கண்ணைக் கட்டி விட்டிருந்ததால் என்னால் பார்க்க முடியவில்லை.

கத்திய மறு வேளையில் என் பிடரியில் விழுந்த அழுத்தமான அடி என்னைக் கீழே தள்ளியது.

தடுமாறி விழுந்தேன். என்னைச் சரசர என்று உள்ளே இழுத்துச் சென்றார்கள்.

அந்தக் களேபரத்தில் என் கண்கட்டு அவிழ்வதை அவர்கள் கவனிக்கவில்லை!

Edited By A.K

அவிழ்ந்துவிட்டது. விழித்துப் பார்த்தேன். இருட்டான பகுதி அது! எல்லோரும் என் இரு புறமும் வந்து கொண்டிருந்தார்கள். அவசரமாகக் கண்களை வீசிப் பார்த்தேன். சேனாதிபதி பாண்டித் தேவர் நன்கு தெரிந்தார்.

சில கணங்கள்தான். அதற்குள் என்னைக் கால்புறம் கீழாகக் கிடங்கில் இறக்கி விட்டார்கள்!

"டேய், சுந்தர பாண்டி! விட மாட்டேன் உன்னை! இங்கே உயிரை விட்டாலும், ஆவியாக வந்து உன்னை பொசுக்குவேன்" என்று கூறினேன்.

எனது ராமபிரான் என் சபதத்தை நிறைவேற்ற முன் வந்துவிட்டார். இல்லாவிட்டால் தன் பெயர் உள்ள உன்னையே இங்கே அனுப்பி இருப்பாரா!

எனவேதான் சொல்கிறேன்!

இது ஒரு அற்புதமான சந்தர்ப்பம்! மகத்தான சந்தர்ப்பம்.

நாம் இருவருமே இவனைப் பழி வாங்காவிட்டால் வேறு யாரும் செய்யப் போவதில்லை! வேறு யாருக்கும் அவனது அக்கிரமங்கள் தெரியப் போவதும் இல்லை!

ஆகவேதான் ராமகம்பீரா, நான் சொல்வதை அலட்சியப்படுத்தாதே! என்னைக் கொல்! நான் ராமநாமத்தைக் கூறிக்கொண்டே பிராணனை விடுகிறேன்.

அதன் பிறகு நீ வெளியேறுவதற்கு இடையூறுகளைத் தாண்ட வேண்டியிருக்கும்.

இவைகளுக்கு எல்லாம் உன்னிடம் உடல் பலம் போதுமானதாக இருக்கும் போதே இவற்றில் நீ முனைய வேண்டும்.

அதனால்தான் சொல்கிறேன்! சிறிதும் மனம் கலங்காதே! என்னைக் கொல்! இந்த இடத்தை விட்டு

Edited By A.K

உடனே வெளியேறு! துரோகிகளைப் பிடி! கம்பீரா... கேள்! எழுந்திரு! போ! வேகமாகப் போ..."

ஸ்ரீராமதாசர் அந்த நேரம் பேச்சை முடித்து விட்டு. கீழே தரையில் அமிழ்ந்தார்.

அவரது நெஞ்சின் படபடப்புகள் வெளியே 'தப் லப்' என்று சத்தங்களை இரைத்தன.

ராமகம்பீரன் திடுக்கிட்டு அவரது முகத்தை உற்று நோக்கினான்.

# 16

டெப்சன் என்னும் தேவி சந்திராவுக்குக் கடந்த மாதம் முழுதும் முடிவில்லாத சொப்பனங்களாகத் தோன்றின.

ஓ! அவளது கிராமத்தைவிட்டு வந்து எவ்வளவு நாளாயிற்று! பாட்டி என்ன செய்கிறாளோ? யார் அவளுக்கு வெற்றிலை இடித்துக் கொடுக்கிறார்களோ? யார் பாய் போடுகிறார்களோ? யார் அவள் ஊறுகாய்களை உலர்த்துகிறார்களோ!

உண்மையில் அந்தப் பாட்டி அவளது சொந்தப் பாட்டி அல்ல. அனாதையாக இருந்த டெப்சனை எடுத்து வளர்த்தவர்.

அவளிடம் பாசம் அளவில்லாமல் இருந்தது. ஆனால் அவளை விட்டு இப்போது ஓட வேண்டி வந்தது. காரணம், அரச சேவகர்கள் அவளை இரைப்பிராணி போல் வேட்டையாடிக் கொண்டிருந்தார்கள்.

தனக்கு அவ்வளவு திறமை, வலு, சாமர்த்தியம் இருக்கும் என்று அவள் நம்பியவள் அல்ல! ஆனால் மறைந்து கிடந்த திறமைகள் அத்தனையும் அந்த பயங்கர ஆபத்து வேளையில் அவளைக் காப்பாற்ற ஓடி வந்தன.

சுவாசத்தை நிறுத்த வைக்கும் கொடூர நிகழ்ச்சிகள் அவை. ஒவ்வொன்றிலும் மயிரிழையில் தப்பி, தெற்கே

Edited By A.K

காம்போஜ (கம்போடியா) ராஜ்யத்தை நோக்கி அப்போது ஓடிக் கொண்டிருந்தாள்!

அவளை ஏன் பிடிக்க வருகிறார்கள்?

அவளது பாட்டி கூறியிருந்தது. "டெப்சன்! நல்ல வேளை, நீ ராத்திரி இராமல் போயிட்டே! சேவகங்க வந்து'நீ எங்கே இருக்கே? எங்கே போனே? என்ன செய்யறே?' என்று கேள்விகளாகக் கேட்டுத் துளைத்தாங்க! நல்ல வேளை, நீ திரும்பி வரலை! அந்தச் சேவகங்க இந்த வட்டாரத்திலே மாறுவேடத்தில் நான்கு தினங்கள் சுற்றிக் கொண்டிருந்தாங்க. என்னம்மா! என்ன நடந்தது? ஏதாவது தப்புக்காரியம் செஞ்சியா?" என்று கேட்டிருந்தாள்.

"போம்மா! எதுவும் செய்யலையே!" என்றாள் டெப்சன்.

பாட்டி அனுபவம் மிகுந்தவள். அவளை விடவில்லை. "இல்லை யாராவது வேண்டாத மனிதர்களைப் படகில் ஏற்றினாயா?"

"ஆமாம் பாட்டி! ஒரு இரவில் வந்து ஒருவர் 'படகு வேண்டும். சித்தமாக வைத்திருங்கள்' என்று சொன்னாரே, நான் அதை ஓட்டிப் போய் இரவு முழுதும் வராமல் நீங்கள் கவலைப்பட்டுக் கொண்டிருந்தீர்களே! ஞாபகமிருக்கா?" என்று கேட்டாள்.

"ஆமாம்! அன்னிக்கு யார் வந்தாங்க? யாரை ஏத்திட்டுப் போனே?" என்று கேட்டாள் பாட்டி.

"ராஜாங்க ஆட்கள் போல இருந்தது பாட்டி! ஒருத்தர் ராஜகுமாரர் போல நல்லா இருந்தார். அவரைப் பிடிச்சு இழுத்துபட்டுப் போனாங்க!" என்றாள் டெப்சன்.

"ஆ" என்று வாயை விரித்தாள் அனுபவசாலியான பாட்டி. "இதில்தான் ஏதோ மர்மம் இருக்கு! நீ யாரையோ ஏத்திட்டுப் போனியே, அந்த விஷயம் ஒரு ரகசியம். யாருக்கும் தெரியாமல் காக்கப்பட வேண்டிய விஷயம். இது உன் மூலமா வெளியிலே போயிடலாம்னு அவங்க நினைச்சிருப்பாங்க! உன்னைப் பிடிச்சுட்டுப் போக வந்திருப்பாங்க!" என்றாள் கலக்கத்துடன்.

Edited By A.K

''என்னைப் பிடிச்சு...'' என்று இழுத்து நிறுத்தினாள் டெப்சன்!

''பிடிச்சு உன்னை வெட்டிப் போட்டுடுவாங்க! அல்லது கிடங்கிலே தள்ளுவாங்க.''

பாட்டி அன்று இரவு முழுதும் யோசித்து ஒரு முடிவுக்கு வந்தாள். காலையில் எழுந்தவுடனேயே டெப்சன் தெற்கே காம்போஜம் போய்விட வேண்டும். அங்கே அவர்களுக்குத் தெரிந்தவர் வீட்டில் தங்கி இருக்க வேண்டும்.

பாட்டியிடம் காலையில் பிரியாவிடை பெற்று அவள் தெற்கு நோக்கிக் கிளம்பினாள்.

காம்போஜத்தில் உள்ள ஓம்கார் நகருக்கு (அங்கோர்)க்கு அவள் செல்ல வேண்டும்! வழியில் மறைந்து மறைந்து செல்ல வேண்டியதாயிற்று. ராஜ சேவகர்கள் எங்கும் அவளைத் தேடிக் கொண்டிருந்தார்கள்.

அவள் தந்திரம் செய்து யாத்திரிகர்கள் கூட்டத்துடனும், வியாபாரிகள் கூட்டத்துடனும் போகத் தொடங்கினாள். ஆனால் இளம் பெண்ணாக இருந்ததால் பல பிரத்யேக வழியில் கஷ்டங்கள் வந்தன.

சிவநகரம் பக்கத்தில்தான் ஒரு பயங்கரக் கஷ்டம் ஏற்பட்டது. ஒரு வியாபார கோஷ்டியில், மத்திய வயது வியாபாரி ஒருவனின் காமக் கண் அவள் மீது விழுந்தது. அவளைப் பார்க்கப் பார்க்க அவனுக்குப் பசி ஏறுவது போல் இருந்தது. அந்தப் பெண் தனியாக வருவதை அவன் புரிந்து கொண்டு விட்டான் என்று தெரிந்தது.

நடுநிசியில் அவன் அவளைத் தேடி வந்து விட்டான். காலடி ஓசை கேட்டு அவள் திடுக்கிட்டு எழுந்து பார்க்க, அவனைப் பார்த்ததும், துள்ளி அடித்து ஓட, அவன் விரட்டிக் கொண்டேவர.... நல்ல வேளை, அந்த மணற்பாங்கான பூமியைத் தாண்டி மர அடர்த்தியுள் வீசி அடித்து ஓடினாள்.

Edited By A.K

மரங்கள் இடையே இருட்டில் தட்டுத் தடுமாறி, கடைசியில் அங்கே கூடாரங்கள் இருட்டிருந்த மற்றொரு கோஷ்டியோடு சேர்ந்து விட்டாள்.

அங்கே சுற்றிவரத் தரையில் படுத்திருந்தவர்கள் வீரர்கள் போல் தோன்றினார்கள். அவர்களது ஆயுதங்கள் அவர்கள் அருகில் கிடந்தன. சற்றுத் தள்ளி வெள்ளைத் துணியில் ஒரு வேலி கட்டப்பட்டிருந்தது. அதன் அடிப்புறத்தில் நுழைந்து உள்ளே போனாள். அங்கேயும் நடுவில் பெண்கள் நிறைய பேர் உறங்கிக் கொண்டிருந்தார்கள். யோசிக்க அவசரம் இல்லை! அவளும் அங்கே பலருக்கு இடையே படுத்துவிட்டாள்.

காலையில் எழுந்தபோதுதான் அது ஒரு ரகசிய காம்போஜன நாட்டுக் கோஷ்டி என்றும், ஒரு அழகான பெண்ணை அந்த கோஷ்டி அழைத்துச் செல்கிறது என்றும், அவர்கள் 'சங்மாய்' ராஜ்யத்துக்குச் செல்கிறார்கள் என்றும், போகும் போது சியாம் ராஜ்யத்தின் வழியாகப் போக வேண்டியுள்ளதால், யார் கண்ணிலும் படாமல் மறைந்து மறைந்து செல்கிறார்கள் என்றும் தெரிய வந்தது.

மறுநாள் காலையில் எழுந்த போது, அடுத்த தண்டு எங்கே இறங்குவது. அங்கே மறைவாக இருக்க இடம் உண்டா என்பது பற்றிப் பேச்சு எழுந்தது.

அப்போது டெப்சன், "அப்படி இடம் இருக்கிறது. நான் அழைத்துப் போகிறேன்" என்று கூறவே, மற்றவர்கள் பிரமிப்பில் அவளைப் பார்த்தார்கள்.

மேனாம் நதி தீரம் முழுவதிலும் அவள் படகுவிட்டுப் பழகியவள். எனவே கரையோரங்கள் எங்கங்கே ஊர்கள் உள்ளன, எங்கங்கே காடுகள் உள்ளன என்றெல்லாம் அவளுக்குத் தெரியும். எனவேதான் அவள் வழிகாட்டியாக வரச் சம்மதிக்க, அவர்களும் ஏற்றுக் கொண்டார்கள். கோஷ்டி புறப்பட்டது.

Edited By A.K

டெப்சன்னுக்குத் திரும்பவும் சியாம் ராஜ்யத்தில் பயணம் செய்கிறோமே என்று கவலை! எனினும் தக்க பாதுகாப்பு இருப்பதால் தைரியமாகச் செல்லலாம் என்ற நினைப்பு வந்து விட்டது.

அவர்கள் யாத்திரை அந்தச் சித்தன் கிராமத்தை நெருங்க நெருங்க டெப்சன்னின் மனம் விறுவிறுக்க ஆரம்பித்தது.

**ஸ்ரீ**ராமதாசரின் களைப்பு மிகுந்த தேகத்தையும், அவரது நீண்ட சுவாசங்களையும் ராமகம்பீரன் கவலையோடு கவனித்துக் கொண்டிருந்தான்.

எந்த நிமிடமும், அவர் போய் விடுவாரோ என்று மனம் வருந்தியது. அருகில் ஒரு சிலை போல் அமர்ந்து, பெரியவரது கைகால்களைத் தேய்த்துவிட ஆரம்பித்தான். ராமபிரானை மனத்துள் நினைத்து அவரது நாமங்களையும் மாறி மாறிச் சொல்ல ஆரம்பித்தான்.

பல நாழிகைகள் சென்று பிறகு ராமதாசர் நிலையில் மாறுதல் தெரிய ஆரம்பித்தது.

அது அவனுக்கு ஊக்கத்தை அளிக்கத் தொடங்கியது. ஒரு வாரத்தில் ராமதாசர் பூரணமாக முன்னேறி எழுந்து அமர்ந்து விட்டார்.

எழுந்த ஸ்ரீராமதாசர் சில நாட்கள் மௌனத்தில் இருந்தார். அவர் எதையோ ஆழ்ந்து யோசிப்பது போல இருந்தது. அல்லது தியானத்தில் இருக்கிறாரோ என்பதும் புரியவில்லை.

பிறகு திடீரென்று ஒருநாள் அவனை அழைத்துப் பேசினார்.

"கம்பீரா! உன் உறுதியைக் கண்டு மகிழ்கிறேன். எனினும், நான் என்ன விரும்பினேன்! இரண்டு மாதங்கள்

Edited By A.K

கழிந்து போகும் உயிரை இப்போதே போக்கி விடலாம் என்று நினைத்தேன். நீ அதற்கு இசையவில்லை. நல்லது. நான் எப்போதாவது இறந்து போவேன் என்பதை ஒத்துக் கொள்கிறாயா?'' என்றார்.

''அது உண்மைதான்! ஆனால் அதற்காக முன்னாலேயே மாய்ப்பது சரியில்லை என்று எண்ணுகிறேன்'' என்றான் கம்பீரன்.

''சரி, இருக்கட்டும். நான் எப்போதாவது இறந்து போவேன்! அதுவும் இந்தக் கிடங்கில்தான் இறப்பேன்! அப்போது நான் சொல்லிக் கொடுத்த திட்டத்தை ஏற்று நீ வெளியேற வேண்டும். சரிதானே?''

''செய்கிறேன், சுவாமி!''

''என் உடல் புனிதமானது: அதன் மீது பாதங்களை வைக்கக் கூடாது என்றெல்லாம் நினைக்காதே!''

''அந்தக் கொடிய வார்த்தைகளை இப்போது சொல்லாதீர்கள் சுவாமி!''

''சொன்னால் தவறாகாது! நீ இசைந்தாலும் தவறாகாது! நீ வெளியேறு! இந்த நாடு நலம் பெற வேண்டும்! அதற்கு நீதான் அரசன் ஆக வேண்டும்! 'பட்டத்துக்கு வர நான் அருகதை இல்லாதவன்; நான் மூன்றாவது பிள்ளைதான்' என்று கூறிவிடாதே!''

கம்பீரன் தயங்கியவாறு ''சுவாமி! அது நடக்கும்போது பார்த்துக் கொள்ளலாமே!'' என்றான்.

''அப்படிச் சொல்லாதே! நீ எனக்கு மன ஆறுதலும், நான் இறந்த பிறகு ஜீவனுக்கு ஆறுதலும் கொடுக்க விரும்புகிறாயா, இல்லையா?''

''விரும்புகிறேன் சுவாமி!''

''அப்படியானால் இப்போது சத்தியம் செய்து கொடு! நீ வெளியே போனால், இந்த ராஜ்யத்தின் துரோகிகளை

Edited By A.K

முறியடிப்பாய்; இந்த ராஜ்யத்தில் சிங்காசனத்தை ஏற்றுக் கொள்வாய் என்று சொல்'' என்றார்.

கம்பீரன் அவரைக் கனிவுடன் பார்த்தான். ''சுவாமி! தாங்கள் படித்தவர். அறிஞர். தாங்கள் இப்படிக் கூறலாமா? இந்த ராஜ்யத்தை ஏற்க நான் பிறப்புப்படி தகுதி இல்லாதவன்! அதை ஏற்று நான் என்ன சுகம் காக்கப் போகிறேன்?''

''அப்படிச் சொல்லாதே! இந்த ராஜ்யத்தை அரசாள உன்னை அன்றி வேறு யாருக்கும் தகுதி இல்லை. நீ இதை ஏற்கத்தான் வேண்டும்! நீ ஆண்டால்தான் துரோகியை அழிப்பாய்! பகைவர்கள் உன்னிடம்தான் பயம் கொள்வார்கள்! உனக்கு இந்த ராஜ்யத்தை ஆள எல்லாத் தகுதியும் இருக்கிறது. ஒரு நெருக்கடி வந்தால் இதை நீ செய்யத்தான் வேண்டும்!'' என்றார்.

தழுதழுத்தான் கம்பீரன். ''சுவாமி இப்படி ஏன் என்னை ஏவுகிறீர்கள்? எனக்கு.... எனக்கு...''

''இந்தா கம்பீரா! எதுவும் நீ சொல்லாதே! நீ என்னை மதித்தால் இது என் கட்டளை!''

''சுவாமி! தயவுசெய்து இப்படிக் கூறாதீர்கள்! நான் வெளியே போனால் நமக்குத் தொல்லை தந்தவர்களைக் கொன்று விடுகிறேன். மற்றபடி ராஜ்யத்துக்கு...''

''இல்லை கம்பீரா! நான் சொல்வதை நீ கேட்டுத்தான் ஆகவேண்டும். என்னைக் கொல்வதைத்தான் நீ ஏற்கவில்லை! நான் கூறும் இதையாவது ஏற்கத்தான் வேண்டும்! வெளியே போனால் நீதான் இந்த ராஜ்யத்தின் சிங்காசனத்தில் ஏற வேண்டும்! இது என் கட்டளை! இதை நீ மதிக்கிறாயா?''

கம்பீரன் கண்களில் நீர் பீறி வந்தது. ராமதாசரின் கைகளைப் பற்றிக் கொண்டான். ''சுவாமி! தங்கள் கட்டளைகளை நிச்சயம் நிறைவேற்றுகிறேன். சுவாமி!

Edited By A.K

தங்களை வெகுவாக மதிக்கிறேன். இது ஸ்ரீராமபிரான் சாட்சியாக நான் அளிக்கும் சத்தியம்!'' என்று கூறினான்.

ராமதாசரின் சதை ஒட்டிய முகத்தில் மகிழ்ச்சி, ஒரு சிறு சுடர் போல மின்னியது.

''கம்பீரா! நீ வாழ்க்கையில் நிறையக் கீர்த்தி பெறுவாய்!'' என்று ஆசை வழங்கினார் அவர்.

பின்னர் ஒரு மாதம் வரை கம்பீரனுக்கு ராமாயணத்திலிருந்தும், மகாபாரதத்திலிருந்தும் நல்ல சுலோகங்களை எடுத்துக் கூறி, நல்ல நெறிகளைப் போதித்து வந்தார்.

ஒரு தினம் கம்பீரன் வெகுநேரம் உறங்கி விட்டிருந்தான். பின்னர் திடுக்கிட்டு எழுவது போல் எழுந்தான். கிடங்கு மடையின் நீரால் கண்களையும் முகத்தையும் துடைத்துக் கொண்டு, ராமதாசரின் அருகே வந்தான். அவர் தமது கால்களை நீட்டி நிம்மதியாக உறங்கிக் கொண்டிருந்தார்.

அவர் தாமாக எழட்டும் என்று அவன் காத்திருந்தான். நாழிகைகள் ஓடின. அவர் எழவில்லை என்று தெரிந்ததும், யோசித்தவாறு அவர் அருகே போய், 'சுவாமி' என்றான்.

வழக்கமாக உடனே எழுந்து விடுவார் பெரியவர். ஆனால் பலமுறை 'சுவாமி' என்றழைத்தும் அவர் எழாது போகவே, அவரைத் தொட்டு 'சுவாமி' என்றான்.

பிறகு நெஞ்சில் கை வைத்தான். உடலை உலுக்கினான். மகாமந்திரி ஸ்ரீராமதாசர் மரணமாகி இருந்தார்.

# 17

சீக்கிரத்தில் மேனாம் நதி அடிக்கடி அவர்கள் வழியில் வர ஆரம்பித்தது.

நதியில் செதிள் செதிளான பச்சை நீரைப் பார்க்கும் போது, டெப்சன் பிரமை பிடித்தது போல நின்றாள்.

உண்மையில் யாத்திரை கோஷ்டி நதி ஓரம். போக நேரும் போதெல்லாம் அவள் திரும்பத் திரும்ப இடது பக்கம் திரும்பி அந்த நதியையே பார்த்தவாறு சென்றாள்.

Edited By A.K

நதி மேல் அவளுக்குப் பாசம் ஏற்பட்டிருந்தது.

அதைப் பிரியும் போதெல்லாம் கண்களில் நீர் பொட்டு திரண்டு வந்தது.

புறப்பட்டதிலிருந்து பன்னிரண்டாம் முறை தண்டு ஒரு புன்னைவனத்திடயே இறங்கியது.

மர நிழல்கள் நீண்டு ஒன்றை ஒன்று வெட்டி சதுரங்கச் சட்டம் போல் செய்திருந்தது.

''குன் தாரா! நான் ஆற்றங்கரை வரை போய்விட்டு வருகிறேன்'' என்று சொல்லி மின்னலாய் அங்கிருந்து மறைந்தாள் டெப்சன்.

மேனாம் ஒரு முகூர்த்த தூரத்திலிருந்தது. துள்ளியும், ஆடியும், குதித்தும், தாவியும் சென்றாள் அவள்.

இடையில் சிறு சிறு இழைகளாக அவள் பாட்டின் முணு முணுப்பு இறக்கை விரித்துப் பறந்தது.

அவளுக்குப் பரிச்சயமான பிரதேசம் அது!

படகுப் பிரயாணங்களில் அந்த எல்லை வரை வந்திருக்கிறாள்.

அவளது கிராமத்திலிருந்து நல்ல தூரங்கள் அவை! இரண்டு பகல்கள் தாண்டினால்தான் அங்கே வர முடியும்!

எத்தனையோ ஓடக்காரப் பெண்களும் அங்கே வந்திருக்கிறார்கள். பொதுவாக நேர்த்திக் கடனுக்காக அங்கு வருவார்கள்!

தங்களுக்கு நல்ல கணவன் கிடைக்க வேண்டும் என்று விரதம் எடுப்பார்கள்.

அங்கேதான் அந்த தேவசேனா வாட் (கோயில்) இருந்தது.

கோயிலுக்கு என்ன பெயர் இருந்தாலும் பெரும்பாலும் புத்த தேவரின் சிலைகள்தான் உள்ளே வீற்றிருக்கும்.

Edited By A.K

கோயிலுக்குப் பெயரை நல்கும் வேறு மூர்த்தியின் சிலை அங்கே இருக்காது! அதை எங்கேயாவது அப்புறப்படுத்தி இருப்பார்கள்! அல்லது அதன் பீடத்தை மறைத்தே புத்த சிலையை எழுப்பி இருப்பார்கள். இருபது ஆண்டுகளுக்கு முன்பு இங்கே வந்திருந்த கிழக்கத்திய பர்மிய இனந்தான் அப்படி மாற்றத்தை ஆரம்பித்தது என்று ஜனங்கள் பேசிக் கொண்டார்கள்.

ஆனால் இந்த தேவசேனா வரட்டும் இன்னும் பல வ்ாட்களும் இன்னும் அப்படி மாறவில்லை. பூர்வத்தில் இருந்த சிலையோடு அப்படியே இருந்து விட்டன.

தேவசேனாபதி கையில் வேலுடனும், தலையில் கிரீடத்துடனும் இருப்பார். அழகான மூன்றடி உயரம்! பின்னால் தோகையைத் தாழவிட்டுக் கொண்டு மயில் ஒன்று நின்று கொண்டிருக்கும்.

தேவசேனாபதி என்ற அந்த மூர்த்தியின் கண்கள் தான் என்ன அழகு!

அதுவும் உடம்பெல்லாம் சந்தனம் பூசி கண்களில் சிறிது வழிந்து எடுத்திருப்பார்கள்.

அய்யோ, அந்த அழகு! தேவசேனா உங்களையே பார்த்து, ''என்ன வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டிருப்பார்.

சந்தடி இல்லாத நிர்மானுஷ்ய கோயில் அது! ஷஷ்டி அன்றுதான் பூஜைக்கு வருவார்கள்! அவரவர்கள் ஏதாவது காணிக்கை செலுத்தி விட்டுப் போய்விடுவார்கள்.

அந்தத் தனியாக நிற்கும் கோயிலைப் பார்த்ததும் டெப்சன் கண்களில் மகிழ்ச்சி அடித்தது.

''தேவசேனா, தேவசேனா!'' என்று அழைத்தாள்.

முன்னிலும் துள்ளிக்கொண்டு, ஆனந்த பிரவாகத்துடன் ஓடினாள்.

மணல் மீது அவள் ஓடினாள்! சீக்கிரத்தில் தேவசேனா வாட்டின் படிகளில் ஏறினாள்.

Edited By A.K

கோயிலில் கதவுகள் இல்லை. ஒரு காலத்தில் சிறப்பும் சீரும் பெற்றிருந்த புனித்ததலம்.

தேவசேனா அவளைப் பார்த்து முறுவல் இடுவது போலிருந்தது. கண்கள் இதோ திறந்து அவளை அழகாகப் பார்த்தன.

மண்டியிட்டு அமர்ந்தாள். கைகளைத் தூக்கிச் சேர்த்து வணங்கினாள்.

சிறிது நேரம் பிரார்த்தனை செய்தாள். பிறகு எழுந்தாள்.

வாயிலைத் தாண்டினாள். வெளியே மணலில் ஒரு குதி குதித்தாள். பிறகு புன்னை வனம் நோக்கி ஓட ஆரம்பித்தாள்.

முதல் வரிசை மரங்களைத் தாண்டி உள்ளே போனதும் மூச்சு இழைத்து நின்றாள்.

''ஹரா! மாயி டெப்சன்! நீங்கள் எப்படி இங்கே இருக்கிறீர்கள்! அங்கே உன் பாட்டியும் இதரர்களும் தேடிக் கொண்டிருக்கிறார்களே!'' என்ற சத்தம் கேட்டது.

திரும்பினாள்! அவளது அடுத்த கிராமத்தைச் சேர்ந்த கர்ணம் குன்லுவாங்! திடுக்கிட்டு பல கணங்கள் எதுவும் சொல்லாமல் இருந்தாள்.

பிறகு, ''குன் லுவாங்! தெற்கே எங்களுக்குத் தெரிந்தவர் வீட்டுக்குப் போய்விட்டுத் திரும்பிக் கொண்டிருக்கிறேன். நாளை போய்விடுவேன்!'' என்று கூறினாள்.

அடுத்த நொடி அங்கு இராமல் வேகமாக மரங்களுக்குள் புகுந்து மறைந்து விட்டாள்.

இழைத்துக் கொண்டு தண்டுக்கு ஓடி வந்த பிறகுதான், ரத்னதாரா அவளுக்காகக் காத்திருப்பது தெரிந்தது.

''கூன் தாரா! எனக்கு ஆபத்து வந்துவிட்டது! தெரிந்தவர் ஒருவர் என்னை அடையாளம் கண்டு விட்டார்!'' என்று கூறினாள்.

Edited By A.K

ரத்னதாரா முதலில் அவனை சமாதானப்படுத்தினாள். "இத்தனை நாழிகை உன்னைக் காணவில்லையே! கவலைப்பட்டுவிட்டேன்!" என்று கூறி,

"உனக்கு என்ன நேர்ந்தது! சொல், நான் உன்னைக் காப்பாற்றுகிறேன்" என்றாள் தாரா.

டெப்சன் தனக்கு நடந்த கதையை சற்று விரிவாகக் கூறினான்.

"ஓ! என்று கூறிய தாரா, "யாரோ ஒரு முக்கிய மனிதரை சேவகர்கள் அழைத்துப் போவது உனக்குத் தெரிந்துவிட்டது! உன்னைத் தேடுகிறார்கள் இல்லையா?" என்றாள்.

"ஆமாம்! ஓடத்தில் முதலில் அந்த மனிதரைப் பார்த்தபோது, அவரை எல்லோரையும் போல ஒருவர் என்று நினைத்தேன். சிறைக் கூண்டுக்கு குற்றவாளிகளை அப்படி அழைத்துப் போவதை அடிக்கடி பார்த்திருக்கிறேன். ஆனால் இப்போதுதான் எனக்கு வித்தியாசம் தெரிகிறது. அவர் முக லட்சணமே ஒரு பெரிய குலத்தைச் சேர்ந்தவர் என்று காட்டுகிறது! நான் வெளியே எங்கேயாவது சொல்லிவிடப் போகிறேன் என்று இந்த சேகவர்கள்..."

அவன் சொல்லிக் கொண்டிருக்கும் போதே அந்த "பூம்" சத்தம் மெல்லியதாக ஒலித்தது.

தண்டு இறங்கியவர்களுக்கு அது ஒரு எச்சரிக்கை சத்தம்! உடனே சர சர என்று அங்கே கூடியிருந்தவர்களிடையே நடமாட்டம் ஏற்பட்டது. வண்டிகள் பூட்டப்பட்டன. பல்லக்குகள் எழுந்தன.

"இந்தா! டெப்சன்! நீ பல்லக்கில் ஏறு... சொன்னதைக் கேளு! ஏறு...

டெப்சன்னை அவள் உள்ளே ஏற்றினாள். ஆபரணங் களை அணிவித்தாள். முகத்தைச் சுற்றி மெல்லிய திரை களைப் போட்டு வைத்தாள்.

Edited By A.K

பின்னர் தாரா அவசர அவசரமாக ஒரு பணிப்பெண் உடையை அணிந்து தலையை எல்லாம் பரத்தி விட்டாள்!

பல்லக்கும் பரிவாரமும் புறப்பட்டன.

சிறிது தூரம் நடையிட்டிருக்க மாட்டார்கள்! நான்கு குதிரை வீரர்கள் வந்து அவர்களைச் சூழ்ந்து கொண்டார்கள்.

குழுவின் பொறுப்பில் இருப்பவர் குன் துலா (துலா சந்திரன்) என்ற அனுபவஸ்தர்! நரைத்த மீசை இரு புறமும் வழிய, அந்த வீரர்களைத் தைரியமாகப் பார்த்து நின்றார்!

முதல் வீரனும், அதைத் தொடர்ந்து, அந்தக் கணக்குப் பிள்ளையும் இறங்கினார்கள்.

"இங்கே ஒரு ஓடக்காரப் பெண் இருக்கிறாளா பார்க்க வேண்டும்!" என்றார் வீரன்.

"அப்படி யாரும் இல்லை" என்றார் குன் துலா.

வீரன் அந்தக் கோஷ்டியை ஒரு நிதானப் பார்வை பார்த்தான்.

"யார் நீங்கள்?"

"யாத்திரிகர்கள்."

"எங்கிருந்து வருகிறீர்கள்?"

"சோன்புரி"

"எங்கே போகிறீர்கள்?"

"இங்கே தேவசேனா வாட் போய்விட்டு வடக்கே சங்கமேஸ்வர வாட் போகிறோம்!"

"ஓ! லம்பாங் வரை போகிறீர்களா?"

"ஆமாம்! நேர்ச்சி இது!"

இதற்குள் இரு கோஷ்டியிலிருந்து இரு பிராம்மணர்கள் முழு குடுமியும், விபூதியுமாக, அந்த வீரர்கள் முன் வந்து ஆசிர்வாத மந்திரங்களைக் கூற ஆரம்பித்தார்கள்.

Edited By A.K

''நிறுத்துங்கள்!'' என்று கூறிக் கொண்டே வீரன், பல்லக்கை நோக்கிப் போனான்.

மகாமந்திரி ஸ்ரீராமதாசர் இறந்து விட்டதைப் பார்த்து ராமகம்பீரன் விம்மி அழுதான்.

அந்தப் பெரியவரிடம் அவ்வளவு பாசம் ஏற்பட்டிருக்கும் என்பதை அறிய முடியவில்லை.

சொந்தத்தில் யாரையோ இழந்தது போலத் தோன்றியது.

இத்தனை நாளும் கலகலப்பாக கிடந்த கிடங்கு திடீரென்று சூன்யமாகிவிட்டது.

விசித்து வெகுநேரம் கீழே கிடந்தான். சமயத்தில் வேதனை தாங்காமல் புரண்டான்.

நேரம் சென்றது! அந்தப் பெரியவர் சொன்னதெல்லாம் நினைவுக்கு வந்து. எழுந்து அவர் மேனியைப் பார்த்தான். காலும் கையும் மடங்கிக் கிடக்க, அவற்றை அவன் பயபக்தியோடு நீட்டி விட்டான்.

கால்களைச் சற்றே அகற்றி வைத்தான்! அப்போது தான் அவர் தேகம் சுவர் ஓரத்தில் சரியாக நிற்கும் என்று நினைத்தான்.

மனசில் துக்கம் ஏற்பட்டது.

ஒரு பெரிய மகானின் உடலை என்ன மரியாதையாய் நடத்த வேண்டும் – என்ன பக்தியாய் அவருக்குக் கடைசிக் கிரியைகள் நடத்த வேண்டும்!

அதை விட்டு, அவரை இப்படி ஏதோ அனாதைப் பிணத்தை நடத்துவது போல் நடத்தும்படியாகிறதே!

கண்களில் அருவியாக நீர் வழிந்தது.

அதே நேரம் அவன் காதில் பெரியவர் குரலும் ஒலித்தது.

''நான் இறந்த பிறகு என் உடலைப் புனிதம் என்று பார்க்காதே! அதை ஒரு கட்டை என்றே நினை. அதை உபயோகி! எப்படியும் வெளியேறு!''

Edited By A.K

இதே வார்த்தைகளை அவர் பல முறை கூறிவிட்டார்.

மனதைத் திடப்படுத்திக் கொண்டான்! இனி உபாயத்தால் வெளியேற வேண்டும் என்று உணர்வு ஆர்ப்பரிப்பாக எழுந்தது.

அதுவும் கீழே கிடந்த அந்த மகானின் உடலைப் பார்க்கும்போதெல்லாம் மனசில் அந்த ஆத்திரம் பீறி வந்தது.

"சுவாமி! எனக்கு வழி காட்டியவர் தாங்கள்! தங்களை என்றும் மறவேன்! தங்கள் அறிவுரைப்படியே செய்வேன்!" என்று கண்ணீர் பொங்கக் கூறி, 'அவரது பாதங்களைத் தொட்டு கண்களில் ஒத்திக் கொண்டான்.

ஒரு நாள் முழுவதும் செல்ல,

பெரியவரின் உடம்பு விறைத்து விட்டதா என்று தொட்டுப் பார்த்தான்.

ஒரு நாள் போயும் விறைப்பு முழுமையாக வர வில்லை! கிடங்கின் தட்பவெப்பங்கள்தான் அந்த உடல் விறைப்பாவதைப் பாதிக்கிறது என்று தெரிந்து கொண்டான்.

இரண்டு நாள் போகவிட்டான். உடம்பில் விறைப்பு வந்திருந்தது.

"சுவாமி! இந்த அநியாயத்தைச் செய்கிறேன்" என்று கூறி,

பெரியவரது உடலை சுவர் ஓரமாக நிறுத்தி வைத்தான்.

மாலை உணவு படைக்கும் நேரத்தில்தான் அவன் தப்பிச் செல்ல முனைய வேண்டும் என்று நினைத்தான்.

மாலை உணவுகளை பெறுவதற்காகக் காத்திருந்தான்.

கிட்டத்தட்ட இருட்டு நேரத்தில்தான் அந்த உணவு கீழே இறக்கப்படும் என்று நினைத்தான்!

Edited By A.K

அதற்கு முன் தன் உடலை எச்சரிக்கை நிலையில் வைத்துக் கொள்வதற்காக அப்பியாசங்களில் ஈடுபட்டான்.

மேலே உச்சி மோட்டு துவாரத்தில் ஒளிமங்குவது தெரிந்தது. நன்கு பழக்கப்பட்ட பிறகுதான் அந்த வித்தியாசங் களைக் கண்டு கொள்ள முடியும்!

ஆவலோடு காத்திருக்கத் தொடங்கினான்.

நாழிகை ஊர்வது போலத் தோன்றியது.

"பகவானே! ராமபிரானே! தர்மத்திற்காக உழைக்க இருக்கிறேன்! என்னைக் காப்பாய்!" என்று மனதில் பிரார்த்தனை செய்து கொண்டான்.

இடைவிடாமல் "ராமா, ராமா!" என்று ஜபித்துக் கொண்டான்.

திடீரென்று மேலே சத்தம் கேட்டது. மேலே நிமிர்ந்து பார்த்தான்.

திட்டிவாசல் திறக்கப்டும் சத்தம் கிறீச்சென்று கேட் டது.

உணவு கீழே இறங்க ஆரம்பித்தது. சட்டென்று எழுந்தான் ராமகம்பீரன்.

சுவர் அருகே போய் அந்தப் பெரியவரின் உடலைச் சரியாக நிறுத்தினான்.

உணவு மெல்ல இறங்கியது. அதைப் பார்த்தவாறு விநாடிகளைப் போக்கினான் அவன்.

கீழே அது இறங்கியதும், சட்டென்று, அவன் பெரியவர் உடலில் முட்டிக்கால் வைத்து தோள்மீது தாவினான்.

Edited By A.K

உடல் ஆட்டம் இட்டது! சுவரைப் பலமாய் பிடித்து அதை நிலைப்படுத்தினான்.

இனிமேல் ஒரு எம்பு எம்பினால் போதும்!

திட்டிவாசல் பக்கமுள்ள விளிம்பைப் பற்றிவிடலாம்.

ராமகம்பீரன் மனத்தில் ராமனை நினைத்தான்.

மேலே பார்த்தான்.

திட்டி வாசலில் வந்துள்ள வேலையாள் . ாவு வைத்த உ.ரியை ஆட்டுவது தெரிந்தது.

''உணவைச் சீக்கிரம் எடுத்துக் கொள்ளுங்கள்!'' என்பதன் அடையாளம் அது!

இதுதான் தருணம் என்று நினைத்தான்! மேலே ஒரு எவ்வு!

அதற்காகப் பெரியவர் தோளின் மீது ஒரு திடீர் அழுத்தத்தைக் கொடுத்தான்.

அடுத்த கணம் அவர் எதிர்பாராது நடந்தது.

சடக்கென்று ஏதோ முறியும் சப்தம். பெரியவரின் கால் எலும்பு, கனம் தாங்காமல் முறிந்திருக்க வேண்டும்.

கீழே விழுந்தான் ராமகம்பீரன்.

# 18

...சடலம் கறுத்துப் போயிருந்தது. வாய் கோணிக் கிடந்தது. கண்களில் ஜந்துக்களின் நெளிவுகள் தெரிந்தன. துர்வாசம் வீசத் தொடங்கி விட்டது...

''சுவாமி!'' என்று மனம் பதறி ராமகம்பீரன் அழைத்தான்.

சுவாமியின் சடலம்தான் அது! எனினும் அதன் மீது புனிதம் என்ற நுட்பமான ஒளிமயம் உறையிட்டிருந்தது. அவன் கண்களுக்கு அப்படித்தான் பட்டது.

Edited By A.K

பெரியவரின் சடலத்தை எடுத்து நிறுத்திய போதும் சரி, அதன் தோளில் ஏற முயற்சித்த போதும் சரி, கம்பீரனது உள்ளத்தில் பிரார்த்தனைகளாக நெளிந்து சென்றன.

அவர் உடலைக் கூடப் பார்ப்பதற்குக் கூசி, அவ்வப் போது இடுங்கிய கண்களால்தான் பார்த்தான்.

ஆனால், விதி ஏமாற்றிவிட்டதே! இப்படி வயதான பெரியவருக்கு எலும்புகள் எல்லாம் இற்றுப்போயிருக்கும் என்பதை இருவரும் யோசிக்கவில்லையே!

இப்போது எலும்பு உடைந்து கால் தொங்கிவிட்டதே!

ராமகம்பீரன் பெரிதும் வியாகூலம் அடைந்து, அந்த மகாமந்திரி ஸ்ரீராமதாசரின் சடலத்தைக் கீழே பாறைத் தரையில் கிடத்திவிட்டு, தனது கிடங்குக்குப் போய்ச் சேர்ந்தான்.

வாழ்க்கை மேலும் அந்தகாரமாகியது. இருட்டு அவனுக்கு ஒரு பாதுகாப்பான அடைப்பு! அதிலும் ஒரு மூலையில் அமர்ந்து, உதடுகளை சிலுப்பி அரற்றிக் கொண்டே இருந்தான்.

அவனது பீமனான மனசு கூட நெக்கு விட ஆரம்பித்திருந்தது.

சிரத்தைகள் குறைந்தன. முயற்சிகள் மழுங்கின. 'இனி தப்புவோம்' என்கிற நினைப்பு கூட அவனை விட்டு விலகி வெகுதூரம் போய்விட்டது.

இரண்டு நாட்கள் எதுவும் உண்ணவில்லை. உறியில் வரும் உணவை எடுத்து நீரில் போட்டுக் கொண்டிருந்தான்.

நடப்பது நடக்கட்டும் என்ற சித்தாந்தம் தலை தூக்கி விட்டது.

மூன்றாம் நாள்தான் அந்த நெடியை உணர முடிந்தது. இறந்த சடலம் உள்ளே புழுக்கத் தொடங்கியது. சதைகளின் அழுகல் துர்வாசத்தைத் தர ஆரம்பித்தது.

Edited By A.K

இனி தாங்காது என்ற நிலை வந்ததும் சடக்கென எழுந்தான். துவாரத்து அருகே வந்து அடுத்த கிடங்கை எட்டிப் பார்த்தான்.

துர்வாசம் வீசி வந்து அவன் முகத்தை அறைந்தது.

மனசு சங்கடப்பட துவாரத்தின் வழியே அடுத்த கிடங்குக்கு வந்தான்.

பெரியவரின் சடலம் கறுத்துப் போயிருந்தது. வாய் கோணிக் கிடந்தது. கண்களில் ஜந்துக்களின் நெளிவுகள் தெரிந்தன.

"சுவாமி!" என்று சொல்லி மனதுள் அழுதான். "தாங்கள் கூறியபடி எல்லாம் செய்தேன். தோல்வியாகிவிட்டது. இனி அந்தக் கடவுள் மீதுதான் பாரத்தைப் போடப் போகிறேன்!" என்றான்.

மேலே அப்போது சலசலப்பு கேட்டது.

"ஐயா ஐயா! கோபாலையா!" என்று ஒரு இளம் பையனின் குரல் கேட்டது.

"இந்தக் கிடங்கிலே இருந்தவன் இறந்து போயிருக்கிறான்" என்று பெரிய ஸ்தாயியில் கத்துவது கேட்டது. "ஒரே நாத்தம் அடிக்குது! சகிக்கலை!" என்றான் தொடர்ந்து.

மேலே நடமாட்டங்கள் கேட்க, மெல்ல துவாரத்திற்கு வந்து அதன் வழியே நுழைந்து தன் கிடங்குக்கு வந்தான் கம்பீரன்!

யோசனை தோன்ற, கீழே விழுந்திருந்த கற்களை எடுத்து துவார வாசலை அவசர அவசரமாக மூட ஆரம்பித்தான்.

ஒருவிதமாக அதை மூடியதும். யோசித்தான். கிடங்கின் அந்தப் பகுதி ஒரு ஓரமாகத்தான் இருந்தது. பார்ப்பவர்

Edited By A.K

கண்களில் அது சட்டென்று படாது எனவே நிச்சிந்தையாக வந்து தனது கிடங்கின் தளத்தில் அமர்ந்து கொண்டான்.

அரை நாழிகையில் சத்தங்கள் கேட்டன. ராமகம்பீரன் துவாரம் அருகே சென்றான். ஒரே ஒரு கல்லை எடுத்து ஒரு இடுக்கு உண்டாக்கினான். அதன் வழியாகப் பார்க்க பதினைந்து வயது பையன் ஒருவன் கீழே இறங்கி இருந்தான். பிணத்தில் துர்வாசம் தாங்காமல் அங்கங்கே துப்பிக் கொண்டிருந்தான்.

மேலே இருந்து யாரோ தீவர்த்தியை காண்பித்துக் கொண்டிருந்தார்கள். கீழே அரைகுறையாக வெளிச்சம் விழுந்தாலும், முதன் முறையாக கிடங்கை கம்பீரன் சரிவரப் பார்க்க முடிந்தது.

மூச்சை நிறுத்திக்கொண்டு, அந்தப் பையன் (நல்ல பருமனாக இருந்தான்) ''அண்ணே! தாத்தா செத்துப் போயிட்டாரு!'' என்று கத்தினான்.

''நல்லாப் பார்த்தியா?'' என்று மேலே இருந்து ஒரு குரல் கேட்டது.

''பார்த்துட்டேன்! ஆள் செத்தாச்சு'' என்று மறுமொழி கூறினான் பையன்.

''சரி! மேலே வா! ஐயாகிட்டே சொல்லுவோம்!''

அங்கே தொங்கிய கயிற்றில் இருந்த சுருக்கு வட்டத்தில் அந்தப் பையன் கால்களை ஊன்றினான்.

கைகளால் கயிற்றைப் பிடித்துக் கொண்டு, ''ம் தூக்குங்க!'' என்றான்.

கயிறு மேலே தூக்கப்பட்டது.

ராமகம்பீரன் யாவற்றையும் நிறுத்திய சுவாசத்துடன் பார்த்துக் கொண்டிருந்தான்.

Edited By A.K

பையனின் பார்வை இடது பக்க மூலைக்குச் செல்லக்கூடாதே என்பது அவன் கவலை!

அங்கே போனால், அந்த இடிந்த பகுதியைப் பார்த்து விடுவான். தற்போது அது மூடியிருந்தாலும் அது என்ன என்று ஒரு ஆர்வம் உண்டாகிவிடும். அதனால் ஏதாவது விபரீதம் நடந்து விடலாம்!

பையன் மேலே போய்விட்டான். இனிமேல் என்ன? சடலத்தை மேலே எடுக்கப் பார்ப்பார்கள்!

அதையும் எடுத்துவிட்டால் அவ்வளவுதான்!

மகாமந்திரி ஸ்ரீராமதாசரின் பெயர் வெறும் நினைப்பு தான்.

யார் அவரைப் பற்றிக் கவலைப்படப் போகிறார்கள்?

எப்படித் தூங்கினான்? தெரியாது.

அவனை அறியாமல் தூங்கிவிட்டு, அந்தச் சத்தங்கள் கேட்டதும்தான் துள்ளி எழுந்து அமர்ந்தான்.

மெதுவாக நகர்ந்து இடுக்கின் பக்கம் சென்று, அடுத்த கிடங்கைப் பார்த்தான்.

பையன் கீழே இறங்கி இருந்தான். மூக்கைச் சுற்றிவர துணியை இறுக்கக் கட்டியிருந்தான்.

கீழே ஒரு கனமான வெள்ளைத் துணி விரித்துக் கிடந்தது துண்டுக் கயிறுகள் அங்குமிங்குமாகக் கிடந்தன. கையில் துணி ஒற்றை சுற்றிக்கொண்டு, அந்தச் சடலத்தைக் கீழே விரித்திருந்த துணிமேல் தள்ள ஆரம்பித்தான்.

மேலே இருந்து, "ஆச்சா! ஆச்சா!" என்று இரு குரல்கள் மாறி மாறிக் கேட்டன.

"சும்மா அவசரப்படுத்தாதீங்க! ஆமாம்! நீங்க கீழே இறங்கி வாங்க தெரியும்! நாத்தம் குடலைப் பிடுங்குது!" என்றான் பையன் எரிச்சல் குரலில்.

Edited By A.K

அந்தத் திடீர் யோசிப்பு கம்பீரனுக்கு எப்படி வந்தது என்று தெரியவில்லை.

அவன் உடம்பில் ஒரு ஆவி புகுந்து கொண்டது போல் தோன்றியது!

அவனது அத்தனை சோர்வுகளும் போனாற் போலத் தோன்றியது.

பையன் அந்தச் சடலத்தைத் துணியில் நகர்த்திப் போட்டு விட்டான். இனி அதைப் பொதியாகக் கட்டுவதில் ஈடுபட்டான்.

கம்பீரன் அதே நேரத்தில் துவாரத்தின் கற்களை ஓசைப்படாமல் ஒவ்வொன்றாக எடுத்துக் கீழே வைக்கத் தலைப்பட்டான்.

அதனால் சமயத்தில் சத்தம் எழ, பையன் பதட்டத்துடன் திரும்புவது தெரிந்தது.

நல்லவேளை, துவாரம் இருந்த பகுதியில் நிழல்தான் இருந்தது. வேறு வெளிச்சம் செல்ல முடியாத நிலை. எனவே பையனின் கண்கள் திரும்பியும் அதைப் பார்க்க முடியவில்லை.

ராமகம்பீரனுக்கு வியர்த்துக் கொட்டியது. அவன் மூச்சுகள் பீறி வந்தன. இரு கைகளையும் மாறி மாறி உபயோகித்து வேகமாகக் கற்களை உருவினான்.

பையன் இப்போது சடலத்தை ஒரு பொதியாக மூடி விட்டான். அதை இறுக்கமாகக் கட்டுவதில் முனைந் திருந்தான்.

"ஆச்சா!" என்று மேலிருந்து குரல் ஆத்திரத்தில் வந்தது.

"சும்மாக் கத்தாதீங்க! புதுக் கயிறைக் கொடுத்திருக்கீங்க! அதை முடிச்சுப் போடறதுக்குள்ளே கையில சதை பிய்ஞ்சு ரத்தம் வருது!" என்று எரிச்சலாகக் கத்தினான் பையன்.

Edited By A.K

"சொன்னா எதிர்த்துப் பேசாதேடா! காரியத்தைப் பாரு!" என்றது மேலிருந்து ஒரு அதிகாரக் குரல்.

கம்பீரன் துவாரத்தின் வழியே நுழைந்துவிட்டான்.

அடுத்த கிடங்கின் தரையில் கால் வைத்து, உடலையும் இழுத்து வந்து விட்டான்.

நெஞ்சுக்குள் மூச்சு திக்கு முக்காடியது. ஓசை எதுவும் செய்யாமல் அடி மேல் அடி எடுத்து வைத்தான்.

பையன் அந்தப் பொதியின் கடைசி முடி போடுவதில் முனைந்திருந்தான்.

அவன் பின்னால் கம்பீரன் நின்று ஒரு கணம் தயங்கினான். முகத்தில் ஒரு குரூரம் விரிவாகப் படர்ந்தது.

மறு கணம் அவன் கைகள் இரண்டும் வீச்சாகப் பறந்தன.

பையனின் கழுத்தில் கப்பென்று பிடித்துக் கொண்டன.

பையன் திறக்க முயன்ற வாய் அப்படியே அடைபட்டு விட்டது.

கம்பீரன் கழுத்தை மேலும் அழுத்தினான்.

பையன் கையிலிருந்த துணி உதிர்ந்தது. அவன் கண்கள் பிதுங்கின.

அடுத்த கணத்துள் கம்பீரன் யோசித்துவிட்டான் ஒரு இளம் உயிரை அனாவசியமாக மாய்க்க, அவனுக்கு விருப்பமில்லை.

பையனின் கழுத்தை ஒரு கையால் அழுத்திக்கொண்டு, மற்றொரு கையால் பையன் உதிர்த்த அந்தத் துணியைக் குனிந்து எடுத்தான். பையனின் வாயில் அதைக் கத்தையாகச் செலுத்தித் திணித்தான்.

துண்டுக் கயிறுகளை எடுத்து பையனின் கைகளை பின்புறமாக இறுக்க கட்டினான். கால்களையும் கட்டினான்.

Edited By A.K

மேலே இருந்து "என்னடா! ஆச்சா?" என்று கேட்டது அதிகாரக் குரல்.

கம்பீரன் யோசித்தான்.

தன் கையைத் தன் வாயில் வைத்து முக்காலும் மூடியவாறு,

"பொழுங்க! என்ன அவஷரம்!" என்று பாதி மட்கிய தொனியில் இரைந்தான்.

"நாத்தம் அவன் மென்னியை அடைக்குது! பேசறான் பார் குழறிக்கிட்டே!" என்று மேலே சிரிப்புக் குரல் கேட்டது.

விநாடிகள் வெட்டி ஓடின. பொதியின் முடிச்சை இலேசாகத் தளர்த்தி, பொதியில் போதுமான இடைவெளி உண்டாக்கினான் கம்பீரன்.

அந்த இடைவெளி வழியே பெரியவரின் சடலத்தை வெளியே எடுக்க முயன்றான். சடலம் ஏற்கெனவே விறைத்து விட்டதால் வெளியே எடுப்பது எளிதான காரியமாக இல்லை!

பெரியவரின் சடலத்தில் கால்களை வைத்து அழுத்தி கை எலும்புகளை உடைக்க வேண்டி வந்தது.

மனம் சங்கடப்பட்டாலும் அவனுள் எழுந்த ஆத்திரம் அவனை விறுவிறு என்று காரியத்தில் விரட்டியது.

சடலம் கடைசியாக வெளிவந்தது.

கம்பீரன் கணமே கண்களை மூடினான். சடலத்தைத் தொட்டு நமஸ்கரித்தான்.

பையன் இப்போது கீழே கிடந்தவாறு அவனை நோக்க,

கம்பீரன் வாயில் விரலை வைத்து அவனை எச்சரித்தான்.

பின்னர் மின்னல் போல் அந்தப் பொதியுள் அவனே புகுந்து அந்த இடைவெளியில் மூடிக் கொண்டான்.

'எல்லாம் சரி' என்று தோன்றியதும் மேலே தொங்கிய கயிற்றைச் சுண்டி இழுத்தான்.

"பையன் சுண்டறான்!" என்றது ஒரு குரல்.

"வாயிலே கொழுக்கட்டையாடா வச்சிருக்கே!" என்றது இரண்டாவது குரல்.

"ஒரே நாத்தம் இங்கே! மேலே கூட நாம நிற்க முடியல்லே! இழு! சுண்டறானே!"

இருவரும் அந்தப் பொதியை மேலே இழுக்கத் தொடங்கினார்கள்.

# 19

**'குபுக்' கென்று நீருக்கு வெளியே ஒரு தலை தெரிந்தது. பின், மீண்டும் மூழ்கி மறைந்தது. யாரோ முக்குளித்து அங்கங்கே மூச்சுகளுக்காகத் தலையை வெளியே தூக்குகிறார்கள்...**

மேலும் இரண்டு தண்டுகளில் மறைவான வாசகத்திற்குப் பிறகு, ஓடப் பெண் டெப்சன் நீர் கண்களில் பரிபூரணமாக நிறைந்துவிட்டது.

ஏனெனில், சித்தன் கிராமத்தின் அருகே அவர்கள் வந்துவிட்டார்கள்!

நெருக்கி அடித்து வனமாய் வளர்ந்திருந்த மாமரக் காட்டுக்குள் அவர்கள் தண்டு இறங்கியது.

டெப்சன்னால் தன் உணர்ச்சிகளைத் தாங்க முடியவில்லை. காந்தகம் பாய்ந்த விழிகளால் வானம், பூமி, நதி என்று எல்லா இடங்களையும் வீசிப் பார்த்தாள்.

அந்தப் பழைய பிரயாணமும், அந்தப் பிராணியும் மனத்தில் இன்ப ஸ்வரங்களாக வந்தார்கள். தண்டு இறங்கிய

Edited By A.K

இடத்தில் அவளால் இருக்க முடியவில்லை. மனம் சிறகடித்தது. கால்கள் ஜதியிட்டன!

"குன்தாரா! இதோ வருகிறேன்! சீக்கிரம் வருகிறேன்!" என்று அவளை விட்டு மேற்கு நோக்கி ஓடினாள்.

இருட்டும் சமயம் அது!

மெல்ல மெல்ல நிறம் மாறும் இருட்டில், மணக்கும் மாமர அடிவாரங்கள் வழியே யார் கண்ணிலும் படாமல் ஒளிந்து ஒளிந்து டெப்சன் சென்றாள்.

மேனாம் நதியின் பரந்த ஊதா நீர்ப் பரப்பு தெரிந்ததும் இதயம் துள்ளியது. கரை அருகே போய், அந்தப் புனித நீர் தனது காலில் வருடும்படி நின்று கொண்டாள்.

'ஓ! அந்த இரவில் இந்த நடுப்பகுதி வழியாகத்தானே ஓடத்தை ஓட்டி வந்தேன்.

அந்த அதிகாரி ஜாடை காட்டி என்னை இந்தக் கரை நோக்கித் திரும்பச் சொன்னார். நானும் ஓடத்தைத் திருப்பினேன்.

அப்போது, ஓடப்பாடல்தானே பாடிக் கொண் டிருந்தேன்! ஆமாம்! மனம் கரைந்து பாடினேன்! உள்ளம் தான் இசை! உள்ளமே அதைப் பாடியது!

ஆ! மனத்தில் ஒளிக்காமல் சொல்ல வேண்டும்! அவரது கம்பீர உருவத்தைக் கண்டுதானே அப்படிப் பாடினேன்!

என்ன அழகாக இருந்தார்? நூறு மன்மத சொரூபம்.

கண்களில் கருணை புத்தர்கள் ஆயிரம் இருந்தார்கள். மேனியெங்கும் அர்ச்சுனர்கள் சஞ்சரித்தார்கள்.

வதனம் முழுதும் தாமரை வனம்!

ஆ! அப்படி ஒரு லாவண்ய ஆடவனை எங்கே போயக் காண முடியும்?

Edited By A.K

அவர் யார்? எனக்கும் அவருக்கும் சம்பந்தம் என்ன? என்னவோ என் ஓடத்தில் ஏற்றினார்கள். இங்கே கொண்டு இறக்கினார்கள். சேவகர்கள் அழைத்துச் சென்றார்கள்.

எனது கனவுகள் இந்தக் கரையோடுபட்டுப் போய் விட்டன. அதற்கு மேல் அதை நினைத்துப் பிரயோசனம் என்ன?...

திரும்பத் திரும்ப அதே நினைவுகள்! அதே எண்ணங்கள்!

டெப்சன் மெய்மறந்து வெகு நேரத்தை நதிக்கரையில் செலவழித்தாள். அந்த இளம் ஓடப் பெண்ணுக்கு வாழ்க்கையில் மொத்த நினைவுகள் நிறையக்கூடக் கிடையாது.

அவளது எளிமை போல் அவைகளும் சொற்பமானவை.

நத்தைச் சிப்பிக்குள் மோதி நட்சத்திரத்தில் விழும் மழைத்துளி போல் அந்தக் கிராமப் பெண்ணின் மனத்துள் ஒரு நினைவு புகுந்துவிட்டது. அதையே சுற்றிச் சுற்றிக் கனவுகளைக் கட்டி வந்தாள் அவள்.

திடீரென்று சுயநினைவு வர எழுந்தாள். இருப்பிடம் திரும்பினாள். ஆச்சரியமாக ரத்னதாரா உணவு அருந்தாமல் அவளுக்காகக் காத்திருந்தாள்.

"எங்கே போனாய் டெப்சன்? என்னைப் பற்றிய நினைவே இல்லையா?" என்றாள் தாபத்துடன்.

"இருந்தது இளவரசி! அதனால்தான் சீக்கிரம் வந்தேன். இல்லாவிடில் இரவு பூராவும் அங்கேயே இருந்திருப்பேன்." பிரமையிலேயே கூறினாள் டெப்சன்.

இருவரும் உணவு அருந்தப் போனார்கள். பெரிய பெரிய தாமரை இலைகளில் பணிப்பெண்கள் உணவு பரிமாறினார்கள்.

Edited By A.K

இருவருமே அளைந்தவாறு உண்டார்கள். திரும்பி கூடாரங்களுக்கு வந்தார்கள்.

வெளிப்புறத்தில் இராப்பூச்சிகளின் சிள் இரைச்சல் சுருதி போலக் கேட்டது.

"குன் தாரா! ஒரு பார்வை மட்டிலும் வேண்டாம்! அது கிடைக்காவிட்டாலும் கூட மனம் பூத்துக் குலுங்குகிறது!" என்றாள் டெப்சன். இன்னும் பிரமை அவளை விட்டுக் கழலவில்லை.

"ஏன் டெப்சன்! இந்தப் பக்கம் வந்ததிலிருந்து ஒரே ஆர்ப்பாட்டமாக இருக்கிறாய்! இங்கே உனக்கு ஏதாவது நடந்ததா?" என்று கேட்டாள் தாரா.

"ஆமாம், தாரா இங்கேதான் ஓடத்தில் ஒருவரை ஒரு நாள் ஏற்றி வந்தேன்! இங்கே கொணர்ந்து இறக்கினேன்!"

"யார் அவர்?"

"ஊரும் தெரியாது. பேரும் தெரியாது. ஆனால் மன்மத ரூபம் உள்ளவர்! மனசில் ஒரு பாத்திரமாயப் பதிந்து விட்டார்."

"ஊரும் பேரும் தெரியாதபோது, அவரை நினைத்து என்ன பயன்?"

"அதில் ஒரு சுகம் இருக்கிறதம்மா! நாம் அவரையா ரசிக்கிறோம்! அவர் சார்பாக மனத்தில் ஒரு மாளிகை எழுப்புகிறோம். சொப்பன மாளிகை அது! அதில் அவ்வப் போது உலாவி நம்மையே நாம் ரசிக்கிறோம் இல்லையா?"

"டெப்சன்! என்ன அழகாகப் பேசுகிறாய் நீ! என் மனத்தையும் கலைத்து விடாதே! அப்புறம் நானும் சொப்பனத்தில் ஆழ்ந்து அழுதுவிடப் போகிறேன்!"

"குன் தாரா! அப்படி அழுதால் என்ன? அழுவதால் இன்பம் கொடுக்கக்கூடியது எது தெரியுமா?"

Edited By A.K

''எது!''

''காதல்தான்!''

''அழுகையிலேயே அது இன்பம் கொடுக்கும். சோகிப் பதிலேயே சொர்க்கம் கொடுக்கும். அது இந்தக் காதல் ஒன்றுதான்!''

''ஓ! காதலைப் பற்றி நிறைய தெரிந்திருக்கிறாயே!''

''ஏன் குன்தாரா! என்னோடு சிறிது தூரம் வருவீர்களா? இங்குள்ள கிராமத்தைப் பார்க்க வேண்டும் என்று ஆசை!''

''ஏன்? ஒரு வேளை அவர் இங்கும் இருப்பார் என்று நினைக்கிறாயா?''

''அப்படி நினைத்தால் தப்பில்லை குன்தாரா! மனசில் மட்டும் ஒருத்தருக்கு சுத்தமாக காதல் உதித்துவிட்டால் எதிர் பாராதது எல்லாம் நடக்கும்.''

இருவரும் இலைச் சருகுகளை மிதித்து நடந்தார்கள். இடைவெளிகளில் சந்திரிகை சிந்தியிருந்தது. இராஜ ஜந்துக்கள் தொடர்ந்து ரீங்கரித்தன. மாமர வனத்திற்கு வெளியே வந்ததும் தோப்புகளும், தோட்டங்களும் தெரிய வந்தன.

ஒரு இடைவெளியில் வெகு தூரத்தில் கிராமம் தெரிந்தது. அதன் இரவுச் சமையலின் புகைகள் இன்னும் மேல் நோக்கிப் போய்க் கொண்டிருந்தன.

அப்போது திடீரென்று கேட்ட அந்தச் சத்தம்தான் டெப்சன் கவனத்தைக் கவர்ந்தது.

இடது புறம் கூர்ந்து பார்த்தபோது முதலில் முணு முணு என்று கேட்டது. பிறகு சலங்கை ஒலியாக மாறியது.

'இருங்கள் குன் தாரா! கொஞ்சம் பொறுங்கள்!'' என்றாள். சரசரவென்று மரங்கள் ஊடே புகுந்து முன்னால் போனாள்.

Edited By A.K

போகப் போக வேறு அரவங்களும் கேட்டன. மனசு அவளை அறியாமலே திக்திக் என்று அடித்தது. ஏதோ நிகழப் போகிறது என்ற உள் உணர்வும் இருந்தது.

தழை கொடிகளை விலக்கி ஒரு வெறியோடு முன்னேறினாள். பிறகு சடீரென்று அவள் நிற்க வேண்டி வந்தது.

எதிரே தெரிந்த பொதி அதில் வெறும் இருள் என்று அவள் நம்பிக் கொண்டிருந்தாள். ஆனால் அது ஒரு பெரிய கட்டடம் என்று இப்போது தெரிந்தது.

இவ்வளவு பெரிய கட்டடம் இப்படித் தனியாக இங்கே எப்படி வந்தது? சற்று நிதானித்தபோது அது பழைய கட்டடமாகத் தெரிந்தது. சின்னக் கோட்டை போலவும் தோன்றியது.

அங்கே வாசலில் ஒரு காளை வண்டி நின்று கொண்டிருந்தது. காவலாளி வாயிலில் கனமான கதவுகளை இரு கைகளாலும் திறந்து, வண்டியை உள்ளே போகவிட்டுக் கொண்டிருந்தான். அதன் சலங்கைதான் முன்னர் கேட்டது என்று தெரிந்து கொண்டாள்.

திறந்த பெரிய வாசல் வழியாக உள்ளே முற்றமும் தெரிந்தது. அதில் கிடந்த பொதி ஒன்றை வண்டியில் ஏற்றிக் கொண்டிருந்தான்.

அந்த இளம் பெண்ணின் இதயம் அடித்துக் கொண்டது! ஒருவேளை, அந்தப் பொதி ஒரு சவப் பொதியாக இருக்குமோ!

யாருடைய பிணமாவது உள்ளே இருக்குமோ!

அவசர அவசரமாக நடந்த அந்தக் காரியத்திற்குப் பிறகு, வண்டி வெளியே வந்து கிழக்கு நோக்கிப்போக ஆரம்பித்தது.

Edited By A.K

டெப்சன் மனசு ஆர்ப்பரித்தது.

சட்டெனத் திரும்பி, துறுதுறு என்று வந்த வழியே ஓடினாள். தாராவைச் சந்தித்தாள். "குன் தாரா! நான் ஆற்றங்கரை போய் வருகிறேன். வாருங்கள் உங்களைக் கூடாரம் சேர்த்துவிட்டுப் போகிறேன்" என்றாள்.

இருவரும் ஓடினார்கள். கூடாரப் பகுதி வந்ததும், "குன் தாரா! இங்கே இருங்கள். நான் போய்ப் பார்த்து விட்டு வருகிறேன்!" என்றாள்.

பின்னர், செடி கொடி தழை என்று பாராமல் தலை தெறிக்க ஓடினாள்.

மனசில் அந்தத் தவிப்பு கூடிக்கொண்டு போனது. நிச்சயம் ஏதோ பார்க்கப் போகிறோம் என்ற உணர்ச்சி வீசி அடித்து வந்தது.

மேனாம் நதிக்கரை தெரிந்தபோது ஓட்டத்தை மெதுவாக்கினாள்.

அங்கே அந்த மாட்டு வண்டி வந்து நின்றிருந்தது. நிழல்களாகப் பலர் தெரிந்தார்கள். அவர்கள் சேவகர்கள் என்று தெரிந்தது.

பொதியை அவர்கள் எடுத்து ஓடத்தில் வைத்தார்கள். ஓடம் உடனே நகர்ந்தது.

அதன் பின் நதிக்கரை வெறுமை ஆகியது. டெப்சன் சுற்றிவரப் பார்த்து எச்சரிக்கையுடன் நதிக்கரை நோக்கிப் போனாள்.

ஓடம் மறுகரை நோக்கிப் போய்க் கொண்டிருந்தது.

அதையே அவள் உற்றுப் பார்த்தாள். மனத்தில் பல சஞ்சலங்கள் எழுந்தன.

ஓடம் நடு நதியைச் சென்று அடைந்தது. பின்னர் அதன் அசைவுகள் குறைந்து விட்டன!

Edited By A.K

ஓடமும், ஓடக்காரர்களும் இப்போது சிறிய பொம்மைகள் போல தோன்றினார்கள்.

அடுத்து அவர்கள் ஏதோ செய்வது தெரிந்தது.

தண்ணீரில் ஏதோ விழுவதும் அதிலிருந்து நீர் தெறிப்பதும் தெரிந்தது.

அதை அடுத்து அந்த ஆட்கள் ஓடத்தைத் திருப்பினார்கள். அவள் நிற்கும் பழைய கரைக்கே ஓடத்தைச் செலுத்தினார்கள்.

டெப்சன் விடவில்லை. நதியின் பரப்பையே உற்று நோக்கிக் கொண்டிருந்தாள்.

அவள் மனசில் 'சிவ சிவ சிவ' என்று ஒரு ஜபம் எழுந்தது.

சிவன் நினைத்தால் வேண்டியது நடக்கும் என்று சிறு வயதிலேயே சொல்லிக் கொடுத்திருந்தார்கள்.

நீர்ப் பரப்பையே அவள் பார்த்தவாறு இருக்க, திடீரென்று தெற்கில் சற்று தூரம் தள்ளி நீரில் சலனங்கள் எழுந்தன.

குபுக் என்று வெளியே ஒரு தலை வருவது போல் தோன்றியது.

அடுத்து அது மீண்டும் மூழ்கி மறைந்தது.

சிறிது நேரத்திற்குப் பிறகு இன்னும் தெற்கில் அந்தத் தலை எழுவது தெரிந்தது.

யாரோ முக்குளித்து அங்கங்கே மூச்சுகளுக்காக தலையை வெளியே தூக்குகிறார்கள் என்று உணர்ந்தாள்.

ஓடக்காரர்கள் கரை நோக்கி வந்து கொண்டிருந்தார்கள். வேறு எதையும் அவர்கள் பொருட் படுத்தவில்லை.

Edited By A.K

டெப்சன்னை ஏதோ சக்தி தள்ளுவது போலிருந்தது. சடக்கென எழுந்து நதிக்கரை வழியே தெற்கு நோக்கி ஓடத் தொடங்கினாள்.

# 20

**வா**னம் எங்கும் நட்சத்திரப் பரல்கள் செறிந்து கிடந்தன. ஒரு மதிமயக்கமான மங்கல் வெளிச்சம் நதிப்பிரதேசம் எங்கும் பரந்து கிடந்தது. வசீகரமான காற்று அவளை மோதிவிட்டுச் சென்றது.

ஓடப்பெண் டெப்சன் சின்ன மூச்சுகளை இழைத்த வண்ணம் ஓடினாள்.

சின்ன வட்டங்களாகப் பூத்திருந்த அவள் மார்பகங்கள் சிருங்காரமாகக் குலுங்கின.

மனசில்தான் எத்தனை நினைவு, எத்தனை கனவு!

எப்படியாவது ஏதாவது நேரும் என்கிற நினைவு யாருக்குத்தான் இல்லை?

அவளுக்கும்தான் இருந்தது! நிறைய இருந்தது.

அந்தத் தண்ணீரில் இறக்கப்பட்டவர் அந்தப் பயணியாக இருக்கக்கூடாதா? நிலவு பொழிந்த நாளில் அவளது ஓடத்தில் பிரயாணம் செய்தாரே கம்பீர முகத்துடன்! அந்தக் கம்பீரப் பிரயாணியாக இருக்கக் கூடாதா!

வாழ்க்கையில் எத்தனையோ அபூர்வங்கள் நிகழும்! அதிசயங்கள் நிகழும்! எத்தனை கேள்விப்பட்டிருக்கிறாள் அவள்! அவளுக்கு அது நிகழக்கூடாதா!

அவள் ஓடும்போது மேலும் இரண்டு முறை அந்த உருவத்தின் தலை நீர்ப்பரப்புக்கு மேலே வந்துவிட்டு மீண்டும் மூழ்கியது.

Edited By A.K

சீக்கிரம் அங்கே போனால் நல்லது. ஒருவேளை அவனுக்கு ஏதாவது உதவி செய்ய வேண்டி வந்தாலும் வரலாம்.

கால்நாழிகை ஓடியவள், கரையோரம் ஓடம் ஒன்று கட்டப்பட்டு இங்கும் அங்கும் தலை ஆடுவதைப் பார்த்தாள்.

கால்களைச் சேர்த்து ஓடத்துள் தாவினாள். கயிற்றை அவிழ்த்து விட்டாள்.

அடுத்த கணம் நதி நீரை வியூகமாகக் கிழித்தபடி ஓடத்தை ஓட்டிச் சென்றாள். ஒவ்வொரு துடுப்புக்கும் ஓடம் ஒரு துள்ளுத் துள்ளி முன்னேறியது.

உத்தேச இடத்தை நெருங்க நெருங்க இதயம் மத்தளமாக அடித்தது. நெருங்கிவிட்டாள்! அந்த உருவம் தலை தூக்கியது. அவளைப் பார்த்தது போலிருந்தது. மறுவிநாடி நீரில் மூழ்கிவிட்டது. ஆனால் இந்தமுறை அதிக நாழி மூழ்கி இருக்கவில்லை! சீக்கிரமே வெளியே தலை தூக்கியது. அப்போது "ஐயா ஐயா!" என்று அவள் மென்குரலில் அழைத்தது தகுந்த பலனைக் கொடுத்தது. நிலை நீச்சலில் நின்றவாறு உருவம் அவளை உற்றுப் பார்க்க, அதை அடையாளம் காணமுடியாததால் ஏற்பட்ட தயக்கங்கள் அவளிடம் ஏற்பட்டன! தாடியும், மீசையுமாய் தோள் எலும்புகள் தெரிய... யார் இது? கொடூரக் குற்றவாளியாக இருப்பானா?

ஆனால், கண்கள்! அந்தக் கண்கள் மட்டும் நல்ல களையாகத் தெரிந்தன.

அன்றைக்கு ஓடத்தில் வந்த பயணி இவரா? அல்லது...

அவள் சிந்தனைகள் தொடர, அந்த உருவம் மீண்டும் தண்ணீருக்குள் போய்விட்டது.

அவன் எழுவதற்காக அவள் காத்திருந்தாள். திரும்ப அவன் வெளிவந்ததும், "ஐயா!ஐயா! பாருங்கள்! உங்கள் உதவிக்காக வந்திருக்கிறேன். படகில் ஏறுங்கள்!" என்று குரலை உயர்த்தி அழைத்தாள் அவள்!

Edited By A.K

உருவம் இந்த முறை சிறிது நேரம் யோசிப்பது தெரிந்தது. மாற்று நீச்சல் போட்டு ஓடத்தை அணுகியது. அவனை மேலும் கீழும் பார்த்தவாறு ஓடத்தை பிடித்துக் கொண்டது.

பின்னர் ஓடத்தில் தொத்தி ஏற ஆரம்பித்தது. முதல் இரண்டு முறை ஏற முடியவில்லை. மூன்றாம் முறைதான் ஏற முடிந்தது.

கட்டிய துணிதான் உருவத்தின் மெலிந்த உடலில் இருந்தது! எலும்புகள் கண்ட இடங்களில் எல்லாம் முண்டாகத் தெரிந்தன.

உள்ளே வந்த அவன் நம்பிக்கை இல்லாமல் அங்கும் இங்கும் பார்வையைச் சுழற்றினான்.

பிறகு ஏதோ தீர்மானித்தவனாக ஓடத்தின் அடிப் பலகையிலேயே அமர்ந்து கொண்டான். அவனுக்குப் பெரும் களைப்பு! நெஞ்சைப் பிடித்துக் கொண்டு நீண்ட மூச்சுகளாக அடுக்கிக் கொண்டே கீழே உடம்பை நீட்டிப் படுத்து விட்டான்.

டெப்சன்னுக்கு சந்தேகங்கள் வந்து கொண்டேதான் இருந்தன.

அந்தப் பயணி பழைய கம்பீரப் பயணிதானா? அல்லது வேறா?

அடிக்கடி அவனைப் பார்த்தவாறு துடுப்புப் போட்டுக் கொண்டிருந்தாள்.

கரை வரும் வரை யோசித்துக் கொண்டேதான் இருந்தாள்.

கரை வந்ததும், வெளியே தாவி படகை இழுத்து, முளையில் கட்டி விட்டாள்.

''ஐயா, ஐயா!'' என்று பலமுறை அவனை அழைத்தாள்.

கண்களை மூடி அவன் தூங்கியவன்தான்! ஆழ்ந்த உறக்கம் அவனை ஒரு உறைபோல் மூடிவிட்டது. புற உலகச் சத்தம் எதுவும் அவன் காதில் புகவில்லை.

டெப்சன் அந்த இடத்தை விட்டுப் புறப்பட்டாள். ஓட்டமும் நடையுமாக கூடாரக் குடியிருப்பை அடைந்தாள்.

உண்மையில் ராமகம்பீரன் நித்திரையில் ஆழ்ந்த ஆழங்களுக்குள் போயிருந்தான்.

அங்கே ஒரு நிசப்தம் நிலவியது.

நிர்மானுஷ்யப் பிரதேசமாக இருந்தது.

சமாதி போன்ற அனுபவ நிலை அவனை அணைத்துக் கொண்டது.

உடம்பில் அத்தனை நாளும் தேங்கிக் கிடந்த அலுப்பு முழுதும் ஆர்ப்பரிப்பாய் எழுந்து அவன் தேகத்தைக் கீழே தள்ளி சலனமற்றதாக ஆக்கி இருந்தது.

பல நாழிகைகள் ஓடி இருக்க வேண்டும். அந்தக் குரல் அவனது அடிவார நிசப்தத்தில் மெல்லிதாக விழுந்தது.

யாரோ தொட்டு அசைக்கும் உணர்வும், மெல்ல மெல்ல தேகத்தில் எழுந்து கொண்டிருந்தது.

இரண்டும் தொடர்ச்சியாக சிறிது நேரம் நீடிக்க, பக்கென்று அத்தனை உணர்வுகளும் அவனைப் பற்றிக் கொண்டன.

திடுக்கிட்டவாறு கண்களை விழித்தான்.

நல்லவேளை! இருட்டு இன்னும் விலகவில்லை. அருகில் நிற்கும் உருவெளிதான் சற்று திகைப்பையும் எச்சரிக்கையும் கொடுத்தன.

எழ முயன்றான். முடியவில்லை. சில பிரயத்தனங்களுக்குப் பின் எழுந்து படகின் பலகையிலேயே அமர்ந்தான்.

Edited By A.K

''ஐயா! இதை உடுத்திக் கொள்ளுங்கள்!'' என்று அந்தப் பெண் விதரணையுடன் கொடுக்க,

அப்போதுதான் உடம்பு இன்னும் நடுங்குவதை உணர்ந்து கொண்டான்.

ஈரம் பொதிந்த மெல்லிய ஒற்றைத் துணிதான் அவன் இடுப்பை மூடி இருந்தது. இப்போது புது ஆடை அவசியமாகியது.

உடுத்திக் கொள்ளவும், போர்த்திக் கொள்ளவும் ஆடைகளைக் கொடுத்திருந்தாள்.

அவன் அவளை வினோதமாகப் பார்த்தான். இவள் யார்? வெறும் ஓடக்காரியா? சூழ்ச்சிக்காரியா?

''யாரம்மா நீ!'' என்றான் முதல் குரலாக! தொண்டைதான் என்ன கனத்தது! வெளி உலகில் சுத்தமான காற்றில் இப்போதுதான் முதன் முறை பேசுகிறான்.

வாய் உச்சரிப்பே கடினமாக இருந்தது. நாக்கு வழுக்கி ் குழறியது.

எழுந்த புதிய துணியை உடுத்தினான்! மேலே போர்த்திக் ௌ காண்டான்.

''யாரம்மா?'' என்றான் மீண்டும். இப்போது தெளிவாக.

''ஓடக்காரி!''

''உனக்கு என்மேல் ஏன் அக்கறை?''

''உபகாரமாகத்தான் வந்தேன்! நீங்கள் ஆற்று நடுவில் தத்தளித்துக் கொண்டிருந்தீர்கள்.''

''இங்கே பக்கத்தில் வேறு யாராவது இருக்கிறார்களா?''

Edited By A.K

"இல்லை."

"நீ எங்குள்ள பெண்?"

"வடக்கே தள்ளி புன்னைக் காட்டைச் சேர்ந்தவள்"

"இது என்ன ஊர்?"

"சித்தன் கிராமம்"

அதைக் கேட்டதுமே அவன் புருவக் கோடுகள் மேலே தூக்கின! இரண்டு மெலிந்த வரிகள் நெற்றியில் ஓடின.

திரும்பவும் அவன் யோசனையில் ஆழ்ந்து போவது தெரிந்தது. மெல்ல நிமிர்ந்த போது, "உன்னை நான் எங்கே யாவது பார்த்திருக்கிறேனா?" என்றான் சந்தேகத்துடன். பார்வை அவள் மீது கூர்மையாகப் பதிந்தது.

"அதைத்தான் நான் கேட்கிறேன் ஐயா! தங்களையும் நான் பார்த்தது போல இருக்கிறது! ஒரு இரவு நடு ஜாமத் தில் ஓடத்தில் வந்தது தாங்கள்தானே! உங்கள் முன்னும் பின்னும் சேவகர்கள் இருந்தார்கள். உங்களை இந்தக் கிராமத்துக் கரையில்தான் கொண்டு சேர்த்தேன்! ஆனால் இந்தத் துறையில் அல்ல! அது வடக்கே தள்ளி இருக்கிறது. கூண்டுச் சிறைகளுக்கு நெருக்கத்தில்."

ராமகம்பீரன் கண்களைக் கொட்டினான். "உனக்கும் அந்தச் சேவகர்களுக்கும் ஏதாவது சம்பந்தம் உண்டா?" என்று பரபரப்புடன் கேட்க,

"இல்லை ஐயா! நான் வெறும் ஓடக்காரி! என்னை அவர்கள் வேலைக்கு அமர்த்திக் கொண்டார்கள்! தாங்கள் என் ஓடத்தில் வந்தவர்தானா?"

கம்பீரன் உடனே பேசவில்லை.

பல எச்சரிக்கைகள் அவனுள் எழுந்து கொண்டிருந்தன.

Edited By A.K

"ஐயா, சொல்லுங்கள் ஐயா! தாங்கள் இத்தனை காலம் எங்கே இருந்தீர்கள்? ஏன் தங்கள் உடல் மெலிந்து விட்டது! காய்ச்சலில் இருந்தீர்களா? அல்லது....இந்தப் பக்கம்தான் கிடங்கு இருக்கிறது என்பார்கள்! அதில் உங்களை வைத்திருந் தார்களா?"

"ஏது! நிறைய விஷயங்களை அறிந்திருக்கிறாயே!"

"அறிய நேர்ந்தது ஐயா! நான் சாதாரண ஓடக்காரி! என் பெயர் டெப்சன்!"

அவள் குரல் தழுதழுத்தது. கண்கள் சிலிர்த்து ஈரமாகி விட்டன.

இத்தனை நாளும் யாரை மனத்தில் ஒரு தெய்வபிம்பம் என்று நினைத்து வந்திருந்தாளோ அந்த மனிதர் இப்போது எலும்பும் தோலுமாய் இருப்பது மனத்தைப் பெரிதும் பாதித்தது.

"இந்த நடுநிசியில் இங்கே எப்படி வந்தாய்?"

"ராத்திரி முதல் ஜாமத்திலேயே இங்கு வந்துவிட் டேன்! உங்களை ஆற்று நடுவில் இருந்து ஓடத்தில் ஏற்றிக் கொணர்ந்து வந்தது நான்தான். நீங்கள் களைத்துப் போய் வெகு நன்றாக உறங்கினீர்கள். நான் எங்கள் குடியிருப்பு போய் உங்களுக்குத் துணிகளை எடுத்து திரும்ப வந்திருக் கிறேன்" என்றாள் அவள்.

கம்பீரன் யோசித்தான். ஒருவேளை படகிலிருந்து அவன் தப்பித்ததை கரையிலிருந்து சேவகர்கள் பார்த்து விட் டார்களோ!

அவனைத் திரும்பக் கரைக்குக் கொண்டு வரத்தான் இந்த ஓடக்காரியை அனுப்பியிருக்கிறார்களோ!

இந்தப் பெண் அவனை ஏமாற்றுகிறாளோ!

Edited By A.K

அல்லது...

அதே நேரம் ஒரு எதிர் விவாதமும் மனத்தில் எழுந்தது.

இங்கே கரை வந்த பிறகு அந்த ஓடத்திலேயே பல நாழிகை உறங்கிவிட்டானே, அப்போது எதிரிகள் அவனைப் பிடித்திருக்க வேண்டுமே! ஏன்செய்யவில்லை?

ஒருவேளை கரையை விட்டு வெளியே வரும் வரை காத்திருக்கிறார்களோ!

கம்பீரன் மனத்தில் சந்தேகங்கள் அடுக்கடுக்காக வளர்ந்தன.

''பெண்ணே! இந்த ஆடைகள் உனக்கு ஏது?''

''நாங்கள் ஒரு குடியிருப்பில் இங்கே தங்கி உள்ளோம்! அவர்களிடம் கேட்டு வாங்கி வந்தேன்.''

''இந்த தேசத்து மன்னவர் தற்போது யார்?''

''தற்போது யார் என்று எனக்குத் தெரியாது! உங்களுக்கு ஓடம் விட்ட மறுநாளே நானும் இந்த ஊரை விட்டு ஓட வேண்டி வந்தது.''

திடுக்கிட்டான் அவன். ''ஏன், என்ன காரணம்?''

''அரச சேவகர்கள் என்னைக் கொல்லும் நோக்கத்தில் மறுநாள் வந்து விட்டார்கள்! நான் காம்போஜ நாட்டை நோக்கி ஓடிவிட்டேன்!''

''ஏன் கொல்ல வந்தார்கள்?''

''எனக்குக் காரணங்கள் தெரியாது! அது தங்கள் சம்பந்தப்பட்டதாக இருக்கலாம்! அப்படித்தான் என் ஊகம்!''

இந்தப் பெண் சாமர்த்தியசாலி என்று நினைத்தான் கம்பீரன்.

Edited By A.K

மேலே அவளிடம் பேசவில்லை.

எழுந்தான்

"ஐயா! இப்போதே நடக்காதீர்கள்! தாங்கள் பலவீனமாக இருக்கிறீர்கள்! காலையில் தங்களுக்கு உணவு கொண்டு வருகிறேன்! அதுவரை இங்கே இருங்கள்" என்று கெஞ்சும் குரலில் கூறினாள் அவள்.

அவளை அவன் நீண்ட ஒரு பார்வை பார்த்தான்.

"கொஞ்சம் இரு! இதோ வந்துவிடுகிறேன்!" என்று இயற்கை உபாதையைத் தெரிவிப்பது போல் கூறினான்.

நடக்க ஆரம்பித்தான். நிற்கும் நிலை சரியாக வரவில்லை. தடுமாற வேண்டி வந்தது.

காலையும் சரியாக வைக்க முடியவில்லை. அகற்றி அகற்றி வைக்க வேண்டி வந்தது. உடம்பு இவ்வளவு ஒத்துழைக்காது என்பது அவனுக்குத் தெரியாது.

இருந்தாலும் பல்லைக் கடித்தவாறு நடக்கத் தொடங்கினான்.

கரையில் உள்ள மர அடர்த்தி பக்கம் சென்றான். பின்னர் உள்ளே நுழைந்து மறைந்து விட்டான்.

வருவான் வருவான் என்று டெப்சன் காத்திருந்தாள்.

கிட்டத்தட்ட ஒரு நாழி ஓடிவிட்டது என்று உணர்ந்தாள்.

காலை புலர்ந்து கொண்டிருந்தது.

அவளால் அந்த ஏமாற்றத்தைச் சகித்துக் கொள்ள முடிய வில்லை. கம்பீரன் வரவே இல்லை.

Edited By A.K

# 21

ஆறு யுகங்கள் அதன் பருவங்களோடு ஓடிவிட்டன. இப்போது சியாமின் வட எல்லையில் இருக்கும் அந்த நாட்டில் கோடை புத்தம் புதிதாக உதித்திருந்தது.

எங்கும் வெள்ளிக் கசிவுகள் போல வெயில் எரித்துக் கொண்டிருந்தது. அது போன்ற ஒரு கோடை ரத்னதாராவுக் குப் புதுமை. 'அம்மா! நரகத்தில் எண்ணெய்க் கொப்பரை வேகும் என்பார்களே, இப்படித்தான் அனல் வீசுமோ?''

ஒரு பெரிய வித்தியாசம்! திடீர் என்று வடக்கு மலை களிலிருந்து வாடை தோன்றி, இந்த எல்லை நாட்டில் பிரவே சித்து விடுகிறது. ஆகா! உடம்புக்கு அது என்ன இதமாக இருக்கிறது!

அந்த நகரத்தை சியாங்ரே என்றார்கள். அந்த ராஜ்யத்தை 'லன்னத்தாய்' என்றார்கள்! விசித்திர விசித் திரமான பெயர்கள். ஆனால், உள்ளே தோண்டினால் சம்ஸ்கிருதத்தையோ, தமிழையோ பார்த்துவிட முடியும்.

ஒரு சமாதானம் ரத்ன தாராவுக்கு! இங்குள்ள ராஜ்யங்கள் எங்கே போனாலும், பரத கண்டத்தில் இருப்பது போலத்தான் இருந்தது.

சியாங்ரே நகரத்தில் அரண்மனையின் ஒரு பகுதியில் அவளைத் தங்க விட்டிருந்தார்கள்.

அவள் இருந்த இடத்திற்கு 'கிழக்கு உப்பரிகை' என்று பெயர் வைத்திருந்தார்கள். அந்த உப்பரிகையில் அந்த சாயந்திர வேளையில் அமர்ந்து, அடுக்கடுக்காக மலைக் கும்பங்களைப் பார்த்திருந்தபோதுதான், ''குன்தாரா'' என்று சொல்லி டெப்சன் ஓட்டமாக வந்தாள்.

''அடேயப்பா! உன்னைப் பார்த்து எத்தனை நாளாயிற்று, டெப்சன்! என்னை மறந்து விட்டாயா?'' என்று ஆதுரத்துடன் கேட்டாள் தாரா.

Edited By A.K

"நான் என்ன செய்வேன்? விஷயங்களைத் தெரிந்து கொள்ள வேண்டாமா? நம் கோஷ்டியோடு வந்த தலைவர் நரசிம்ம பூபதி யமகாதகர்! இத்தனை நாளும் நாம் எங்கே போகிறோம், ஏன் போகிறோம் என்பதை அறிய வொட்டாமல் வைத்திருந்தாரே! இப்போது தெரிந்துவிட்டது!" என்றாள் டெப்சன் பிரசன்னமான முகத்துடன்.

"ஏன், என்ன விஷயம்?" என்றாள் தாரா.

"பெரிய விஷயம், குன் தாரா! நரசிம்ம பூபதி என்பவர், சாதாரண யாத்திரிகர் அல்ல! காம்போஜ நாட்டின் ஒற்றுத் தளபதி அவர்! அதனால்தான் சியாம் நாடு தாண்டும் வரை மிக எச்சரிக்கையாக வந்திருக்கிறார். எதிரிகள் நாடு ஆயிற்றே!"

"சரி! என்னை ஏன் இங்கே அழைத்து வந்திருக்கிறார்?"

"கப்பல் விபத்திலிருந்து, தங்களைக் கடல் கொள்ளைக்காரர்கள் கைப்பற்றினார்கள் அல்லவா! கொள்ளையர்கள் தங்கள் ராஜ உருவத்தைப் பார்த்து, காம்போஜ அதிகாரியிடம் தங்களைச் சேர்ப்பித்தார்கள். இதற்குள் கப்பலில் அகப்பட்டிருந்த உங்கள் தளபதி 'துங்கனு'ம் மற்றும் பலரும் காம்போஜ அதிகாரிகளிடம் சிக்க நேர்ந்தது. அவர்களை விசாரித்ததில், தாங்கள் பரத கண்டத்தில் சோழ குல அரசகுமாரி என்றும், இங்கே சியாம் ராஜா இந்திராதித்தன் மகனுக்குத் திருமணம் செய்து வைப்பதற்காக அழைத்து வரப்படுகிறீர்கள் என்பதையும் அறிந்து கொண்டிருக்கிறார்கள்."

"ஓ! டெப்சன்! அது தெரிந்தவர்கள் என்னை சியாம் ராஜ்யத்தில் தானே விடவேண்டும்?"

"குன்தாரா! காம்போஜியத்துக்கு சியாம்நாடு எதிரி! அதனால் 'லன்னத் தாய்' ராஜ்யத்துக்குத் தங்களை அனுப்ப

Edited By A.K

நினைத்தார்கள். இது சியாம் நாட்டுக்கு வட எல்லையில் இருக்கிறது. லன்னத் தாய்க்குப் போவதற்கு சியாம் நாட்டைக் கடக்க வேண்டும். அதைத்தான் நாம் செய்தோம்!'' என்றாள் டெப் சன்.

தாராவின் முகம் கருமையாகியது. இமைகளில் ஒரு சோகம் எழுந்தது.

''ஓ! அதற்குள் வருத்தம் வந்துவிட்டதா? குன்தாரா! ஒன்றும் கவலைப்பட வேண்டாம்! லன்னத்தாய் அரசர் வயதானவர். அவர் தங்களை மணம் புரியப் போவதில்லை! ஆனால், அதற்கு மாற்றாக இரு இளவரசரைத் தேர்ந்து எடுத்திருக்கிறார்.'

''யார் அவர்?''

''பயோ நாட்டு இளவரசர் நரசிம்மவர்மர்...''

ரத்னதாரா முகம் சோகமாகக் கூம்பியது.

''ஏன் குன்தாரா! இளவரசர் நரசிம்மர் அழகானவர் என்று கேள்விப்பட்டேன்! தங்களுக்கு இதில் என்ன மனக் குறை?'' என்றாள் டெப்சன்.

பெருமூச்சுடன் ரத்னதாரா பேசினாள். ''டெப்சன்! ஒரு பெண்ணின் மனம் ஒரு பெண்ணுக்குத் தெரியாதா! அதுவும் நீ அறிவுள்ளவளாக இருக்கிறாய்!'' என்றாள் வருத்தமான குரலில்.

''குன்தாரா!'' என்று கீழே அமர்ந்து அவள் கைகளை டெப்சன் பற்றினாள்.

கம்மிய குரலில், ''ஏதாவது சொல்லி விடாதீர்கள், குன்தாரா! நானே மனசில் அல்லல் பட்டுக் கொண்டிருக்கிறேன். தங்களுக்கு இந்த வரன் பிடிக்கவில்லையா?'' என்றாள் ஆதுரத்துடன்.

Edited By A.K

"டெப்சன்! சியாம் ராஜ்ய இளவரசருக்கு என்று உறுதி செய்யப்பட்டவள் நான்! இப்போது இன்னொரு ராஜ்ய இளவரசருக்கு என்றால் மனம் ஒப்புமா?" என்றாள் மனம் கரைந்தவாறு.

"ஏன் குன்தாரா! தாங்கள் சியாம் ராஜ்ய இளவரசனை யும் பார்த்ததில்லை! பாயோ ராஜ்ய இளவரசனையும் பார்த்ததில்லை. இதில் யாரைத் திருமணம் செய்தால் என்ன?'

"சியாம் இளவரசரின் ஓவியத்தைப் பார்த்திருக்கிறேன்"!

"எப்போர்து? எங்கே?"

"எங்கள் நாட்டில்தான்! சித்திரசேனன் என்ற ஓவியர் கொண்டு வந்து காண்பித்தார்."

"ஓ! அப்படியானால் ஓவியம் கண்டே மனசில் காதலிக்க ஆரம்பித்து விட்டீர்களா?"

"ஏன் டெப்சன்! ஒரு அழகான உருவத்தைப் பார்த்தால் மனம் அதில் லயித்து விடாதா?"

"ஆமாம் இளரவசி!"

"நானும் ஓவியத்தைப் பார்த்தேன்! அவரிடம் ஒரு அதி ஆச்சரியமாக ஒரு ரூப லாவண்யம் இருந்தது!"

"ஓ! அவரை நினைத்துதான் கடல் கடந்து இங்கே வந்தீர்களா?"

"ஆமாம்! அது உண்மைதானே டெப்சன்!"

"இப்போது என்ன செய்யப் போகிறீர்கள்? நீங்கள் வந்த பயணம்தான் ஆபத்துக்குள்ளாகி தாங்கள் எப்படியோ உயிர் தப்பித்திருக்கிறீர்கள்! தங்கள் கப்பல் சுகோதோய் நகரம் வரை சென்றிருக்க வேண்டும். அப்போது நிச்சயம்

Edited By A.K

சியாம் இளவரசரைப் பார்த்திருப்பீர்கள்! விபத்து நேர்ந்த தால் தங்களுக்கு நிறைய விபரீதம் நேர்ந்துவிட்டது! இப்போது இனிமேல் சியாம் ராஜ்ய இளவரசரைச் சந்திப்பது கடினம்!''

''ஏன் டெப்சன்!''

''சியாங்ரே அரசன் தங்களை சியாம் அனுப்ப மாட்டார்! கம்போஜியர்கள் அதை எதிர்ப்பார்கள்! சியாங்ரே மன்னருக்கு சியாம் நாட்டு நட்பும் வேண்டும்; காம்போஜிய நட்பும் வேண்டும்! சண்டை பூசல் எதுவும் விரும்பாதவர் அவர்!''

''நான் வேண்டுகோள் விடுத்தால் கேட்க மாட்டாரா?''

''கேட்பது துர்லபம்! அதுவும் காம்போஜம் விண்ணப் பித்திருக்கும் போது.....''

ரத்னதாரா மேலே பேசவில்லை. மெல்லமாக வான வெளியைப் பார்த்தாள். கிழக்கே மலை அடுக்குகள் ஒவ் வொன்றாக இருட்டில் மறைந்து கொண்டிருந்தன. சிலுசிலு என்று வாடை ஊசிகளைப் போல் குத்தத் தொடங்கியது.

தாராவின் மன உணர்ச்சிகளைப் புரிந்து கொண்ட வள் போல டெப் சன் அவள் பின்னால் போனாள்.

''பெண்களுக்குச் சுதந்திரம் இல்லை!'' என்றாள் தணி வான குரலில்!

தாரா திரும்பவில்லை.

''பெண்களின் ஆசைகள் அவர்கள் மனங்களோடு தான் இருந்துவிடவேண்டும். வாழ்க்கையில் பெரும்பாலும் அவை நிறைவேறாது!'' என்றாள் மீண்டும் டெப் சன்.

தாரா இன்னும் பேசவில்லை.

கூரிய பார்வையாக கிழக்கு நோக்கித் திரும்பி இருந்தாள்.

Edited By A.K

சிறிது நேரம் ஒரு நிசப்தம் கனத்தது.

"டெப்சன்!" என்றாள் தாரா திரும்பியவாறு. அவள் கண்கள் கலங்கி இருந்தன.

டெப்சன் திடுக்கிட்டாள்.

"டெப்சன்! நான்.... அந்த விபத்திலே இறந்திருக்க வேண்டும்!"

டெப்சன் கண்களும் இளகின.

"டெப்சன்! என்னை இப்படி ஒரு பதுமை ஆக்கி அவரவர் இஷ்டம் போல விளையாடுகிறார்களே! என் பெற்றோர்களே இதை ஆரம்பித்து வைத்தார்கள்!" என்று ஆற்றாமையுடன் கூறிய ரத்னதாரா குபுக் என்று கண்ணீர் விட்டுக் குலுங்க ஆரம்பித்தாள்.

அவளை உடனே அணைத்துக் கொண்டாள் டெப் சன். அப்போது அந்த ஒடக்காரியின் கண்கள் இரக்கத்தைக் காட்டின. ஆனால் உதடு மென்மையாகப் புன்னகை இட்டது.

"குன்தாரா! குன் தாரா! தாங்கள் இளவரசிதான்! நான் தங்களுடன் உறவு கொண்டாடக் கூடாது! எனினும், எனக்கு உடன்பிறவா சகோதரி தாங்கள்! அல்லது உங்கள் உயிருக்கு உயிரான தோழி! தாங்கள் இப்படி மனம் பதற லாமா? வேண்டாம்! நிறுத்துங்கள்! நிறுத்துங்கள்!" என்று ஆறுதலான வார்த்தைகளைக் கனிந்த குரலில் வீசினாள் டெப் சன்.

சிறிது நேரம் தாரா விசித்தாள். பின்னர் ஏற்பட்ட மௌனம் சிறிது நேரம் தொடர்ந்தது.

இருவரும் உறைந்தது போல இருந்தார்கள்.

டெப்சன் மெல்ல தாராவின் கைகளைப் பற்றினாள்.

Edited By A.K

பிறகு சகுனம் பார்ப்பவர் போல, தாராவின் முகக் குறிப்புகளைப் பார்த்து விட்டு, "தாரா! நான் சொல்வதைச் சற்றுக் கேட்பீர்களா?" என்று கேட்டாள்.

மௌனம் மெல்லமாகச் சரிந்தது. தாரா திரும்பினாள்.

"தாரா! நானும் மனத்தில் எத்தனையோ ஆசைப்பட்டவள்தான்! அத்தனையும் வெறும் ஆசைகள் மட்டுமல்ல! சரியான வார்த்தை உபயோகிக்க வேண்டுமானால் அவை காதல்கள்தான்! ஆமாம், குன்தாரா! தாங்கள் ஆயிரம் காதல்களைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா?" கண்களை அழுத்தி அவள் மீது செலுத்தியவாறு, டெப்சன் கேட்டாள்.

தாரா தன் விழிகளை முழுதுமாகத் திருப்பினாள்.

"என்னது! ஆயிரம் காதல்களா?"

"ஆமாம் தாரா! நாங்கள் எங்கள் தேசத்தில் அதைப் பற்றி அடிக்கடி பேசிக் கொள்வோம். ஆயிரம் காதல்கள்!"

'இதென்ன புதுமையாகச் சொல்கிறாள் டெப்சன்!'

"ஆமாம் புதுமைதான்! உங்களுக்குப் புதுமை! உங்கள் தேசத்தவருக்கும் புதுமை! எங்களுக்கு அது அனுபவம். அது பழக்கம். அதுவே வாழ்க்கை!" என்று டெப்சன் சுடர்க்கும் விழிகளை மேலும் சுடர் தட்டிக் கொண்டு சொன்னாள்.

"என்ன டெப்சன்! புதிர் போடுகிறாயா?"

"புதிர் இல்லை! உண்மை!"

"என்ன, சொல்!"

"ஆயிரம் காதல்கள்! நம் மனம் இருக்கிறதே! அதனால் ஒரு காதல்தான் முடியும் என்று நினைக்கிறோம்! அது தவறு. ஆயிரம் காதல்கள் செய்யமுடியும்."

கடைசி வார்த்தையை முடித்து உதட்டை மடித்து நிறுத்தினாள் டெப்சன்.

Edited By A.K

படீர் என்று ஒரு மின்னல் ரத்னதாரா மீது சாய்ந்து ஓடியது.

மனசில் சிறு வயதிலிருந்தே போட்டிருந்த வேலி ஒன்று டபீர் என்று பெயர்ந்து ஆயிரம் கதவுகளைத் திறந்து விட்டது போல இருந்தது.

"ஆமாம் குன்தாரா! நம் மனத்தால் ஆயிரம் காதல் கொள்ள முடியும்! அதைப் புரிந்துகொள்ளாமல் இருக்கிறோம். புரிந்துகொண்டால் இப்போது நிரந்தரமாக துக்கம் என்று வாழ்க்கையை வெறுத்து சதா துயரத்தில் மூழ்குகிறோமே, அது இல்லாமல் போய்விடும்."

ரத்னதாரா விரித்த கண்களை மூடவில்லை. டெப் சன்னை ஒரு விசித்திரப் பிறவி போல் உற்றுப் பார்த்தாள்.

"ஆயிரம் காதல்! ஆமாம், மனம் ஒரே ஒரு காதலில் நிற்பது கடினம்! அது ஒரு லட்சியம்! அதை சீதை, நளாயினி போன்றவர்கள் நிறைவேற்றலாம்! நம்மால் முடியாது குன்தாரா!" என்று கணீரென்று சொல்லி நிறுத்தினான் டெப்சன்.

# 22

என்றைக்காவது ஏதாவது நடக்கும் என்று ரத்னதாரா நினைத்துக்கொண்டே இருந்தாள். அது ஒரு நாள் பூர்த்தி ஆயிற்று. ஆனால் தாரா அதை விரும்பினாளோ, என்னவோ!

அன்றைய தினத்தை அவளால் மறக்க முடியாது. அன்று 'வான் சுக்ர' தினம். (சுக்ரவாரம் - வெள்ளிக்கிழமை) ராஜ பூபதி மேங்ரே அவளை அழைக்கிறார் என்று செய்தி வந்தது.

காலையிலிருந்தே அவளைப் பரிமள நீரில் குளிப் பாட்டி, கூந்தலில் சந்தனப் புகை போட்டு சுத்தமாக்கி இருந் தார்கள். சியாம் நகைகள் சிலவற்றையும் அவளுக்கு அணி வித்து, இடுப்பில் ஒரு வர்ண சேலையை உடுத்தி மார்பின்

Edited By A.K

குறுக்காக வலது தோளில் மற்றொரு வர்ணத் துகிலை உடுத்தி இருந்தார்கள்.

"குன்தாரா! மன்னருக்குப் பின்புறத்தையே காட்டக் கூடாது! வரும்போது பின்புறமாகவே நடந்து வா! டெப்சன் உன்னைக் கவனித்துக் கொள்வாள்!" என்று கூறினாள் மூத்த பரிசாரகப் பெண். அவர்கள் வாயெல்லாம் வெற்றிலையாக வழிந்தது. அடிக்கடி வெளியே போய் பாண்டங் களில் 'புளிச்' என்று துப்பிய வண்ணம் உள்ளே வந்தார்கள்.

"மன்னரிடம் கேள்வி கேட்கக் கூடாது! அவர் சொல்லும் ஒவ்வொரு வார்த்தைக்கும் 'தன்யன் ஆனேன்!' என்று தலை குனிந்து சொல்" என்றார்கள்.

"இன்னொன்று தாரா! கண்களால் மன்னரை ஏறிட்டுப் பார்க்கக் கூடாது. தரையைப் பார்க்க வேண்டும்! அவர் பாதங்களை வேண்டுமானால் பார்!" என்றாள் இன்னொரு பரிசாரகி.

ஆக, அவள் படபடப்பை அதிகமாக்கி, மழமழ என்று கண்ணாடி போல மரத்தினால் இழைத்த வாசல் நிலைகளின் வழியே அவளைக் கொண்டு போய், அரச சபையில் நிறுத்தினார்கள்.

அப்போதுதான் நாடகம் ஒன்று முடிந்திருந்த நேரம். இளம் நடனப் பெண்கள் பூத்த புன்னகையோடு வெளியே வந்தார்கள்.

இளவரசி ரத்னதாரா தேவி வந்திருப்பதாக உள்ளே அறிவித்தார்கள். இரு இளம் தாதிகள் அவளை அடிமேல் அடி வைக்க வைத்து, அழகான பளிங்குத் தரையில் நடக்க வைத்தார்கள். மன்னர் முன்னே கொண்டு போய் நிறுத்தினார்கள்.

"பிரய மகளே!" என்று மகாராஜா மேங்ரே அழைத்தது கனத்த குரலில் கேட்டது. அவள் கால்கள் நடுங்கின.

Edited By A.K

"நமஸ்தே மகாராஜா!" என்று அரும்பிலும் மெல்லி தான குரலில் கூறி, வில் போன்ற உடலைப் பாதியாக வளைத்து இரு கரங்களைக் கூப்பினாள் தாரா.

'மாயிதாரா!' என்று கனத்த சாரீரக் குரல் மீண்டும் கேட்டதும், மன்னரின் குரல் என்று தெரிந்தது. மீண்டும் தாழ் வணங்கி தனது நன்றியைத் தெரிவித்தாள் தாரா.

"எங்கள் முன்னோர்கள் வாழ்ந்து வந்த கண்டத்தி லிருந்து இங்கே வந்திருக்கிறாய். இங்கே விபத்தில் அகப் பட்டு, அந்தப் பகவான் சிவாவின் அருளால் தப்பி எம்மிடம் வந்திருக்கிறாய்! உனது சோழ ராஜ வம்சத்தை அறிவேன். உங்கள் தேசத்துப் பெரிய பெரிய கப்பல்களில்தான் சீனப் பட்டு, சீனக் கற்பூரம், சீனச் சக்கரை எல்லாம் எங்களுக்கு வருகின்றன. உன்னை எங்கள் விருந்தாளியாக வைத்துக் கொண்டதில் மிகவும் சந்தோஷம். உனது தந்தை போன்றவன் நான்! உன்னை எம் தேசத்துச் சிறு நாடுகளில் ஒன்றான பாயோ நாட்டு மன்னனுக்கு மணம் செய்து கொடுக்க நிச்சயித்துள்ளேன்! உனக்குச் சம்மதந்தானே?" என்றார் மன்னர் மேங்ரே.

"தன்யன் ஆனேன், மகாராஜா" என்றாள் தாரா. பட்டு இழையான குரலில்.

மன்னர் மகிழ்ச்சியில் சிரிப்பது கேட்டது. "நல்லது, சீக்கிரம் ஒரு முகூர்த்த நாளில் செய்து வைக்கிறோம். பாயோ நாட்டு அரசன் நரசிம்மவர்மன் படித்தவன். இளைஞன். ஒழுக்கமுள்ளவன்! நீ அவனை அடைவதால் மங்களம் பெறுவாய்! என்றார் மேங்ரே.

தாரா திரும்பி வரும்போது, பின் புறமாக நடந்தாள்.

ஒரே ஒருமுறை பார்வை அந்த மாமன்னர் மீது விழுந்தது. அகன்ற முகத்துடன் சிரித்த வண்ணமாக என்ன கம்பீரத்தில் இருந்தார் மன்னர்!

Edited By A.K

அப்பா! அந்த அரச சபை ஒரு அழகான மரப் பேழையாகத் தோன்றியது. தூண்கள், விளிம்புகள், சாளரங்கள் எல்லாமே வித வித மரங்களை இழைத்து, பூ வேலைகள் செய்து கண்ணுக்கு ரம்மியமாக என்ன அழகுடன் ஜொலித்தன!

இரண்டு நடைகளை அவள் தாண்டி வந்த பிறகு, டெப்சன் அவள் அருகே சேர்ந்துகொண்டு மெல்ல வலது கையில் கிள்ளினாள்.

'ஆ! டெப்சன்!' என்று அவளைப் பார்த்ததும் அணைத்துக் கொண்டாள் தாரா. இருவரும் பின்னர் முறு வலித்துக் கொண்டு, கிழக்கு உப்பரிகையை அடைந்தார்கள்.

அன்று முழுவதும் இருவரும் பேச்சில் திளைத்தார்கள். ஒரே சிரிப்பும் களிப்பும் அங்கே களி நடமிட்டன.

சேனாதிபதி சுந்தர பாண்டித் தேவர் எட்டுப் பெண்கள் சூழ நந்தவனத்து நீர்த் துறையில் நீராடல் செய்து கொண்டிருந்தார்.

நீர் மட்டும் அலைகளாக அவர்கள் மீது தடவில்லை; சொர்க்கமே அலைகளாக வந்து தழுவிக் கொண்டு ஓடியது.

கஸ்தூரியும், மலர்ப் பொடிகளும், வர்ணப் பொடி களும் எங்கும் சிதறி, அந்தத் தடாகத்தையே சுகந்த பரிமளங்க ளாக மாற்றியிருந்தன.

அப்போது மாயி சுதா என்ற அலி அங்கே வந்து தாழ்ந்து வணங்கி, "சவத்தி! மகராஜ்! தங்களைக் காண குன் சுப்ரமணியர் வந்திருக்கிறார்" என்று தெரிவித்தாள்.

பாண்டித்தேவர் படக்கென்று எழுந்து, "சரி, குளியல் போதும்" என்று எல்லோரையும் பார்த்துச் சொல்லி விட்டுப் படிகளில் ஏறினார். இரு இளம் பெண்கள் ஓடிவந்து, அவர் உடம்பில் உள்ள ஈரத்தைத் துடைத்து எடுத்து, அவ ருக்குப் புதிது அணிவித்தார்கள்.

Edited By A.K

சோர்ந்து போன உடலுடன் ஆசனத்தில் சாய்ந்திருந்த சுப்ரமணியர், "சுந்தர சுவாமி! விசாரணைகள் அனைத்தும் செய்து விட்டேன்! ராம கம்பீரன்தான் தப்பிப் போய்விட்டான்! மகாமந்திரி ராமதாசரின் சடலம்தான் கிடங்கில் கிடந்தது" என்றார் கணீரென்ற அழுத்தத்தில்.

பாண்டித் தேவரால் அமர்ந்திருக்க முடியவில்லை. "என்ன!" என்று சொல்லி எம்பி நின்றார். "இந்த அநியாயம் எப்படி நடந்தது?"

சுப்ரமணியர் அதிகம் பேசும் நிலையில் இல்லை. அத்தனை சோர்வில் இருந்தார்.

எனினும், அவர் சொற்பமாக ராமகம்பீரன் தப்பிச் சென்ற விதம் எப்படி என்பதைத் தமது ஊகத்தின்படி விளக்கி னார்.

"கவலை வேண்டாம் தேவரே! எங்கும் அவரைத் தேட ஆட்கள் ஓடியிருக்கிறார்கள். சீக்கிரம் பிடித்து விடுவார்கள்!" என்று கூறினார்.

இந்த உரையாடல் நடந்து பல மாதங்கள் ஆகி விட்டன. ஆனால், இதைத்தான் தினமும் நினைத்துக் கொண்டிருந்தார் பாண்டித்தேவர். காரணம் இதுவரை ராமகம்பீரன் பற்றி எந்தச் செய்தியும் வரவில்லை.

பாண்டித் தேவரின் ஜலக்கிரீடை தினமும் வழக்கம் போல் தவறாமல் நடந்து வந்தது. ஆனால், அவற்றின் நேரம் தான் நாளுக்கு நாள் குறைந்து கொண்டே வந்தது. தேவருக்கு நீண்ட கவலைகள் தோன்றி, நெற்றியில் சுருக்கங்கள் கூட வந்துவிட்டன.

அன்று மாலை குளித்துவிட்டு வரும்போது, பிரபல ஜோஸியர் சம்புகங்காதரர் அவருக்காகக் காத்திருந்தார்.

"என்ன சுவாமி! நல்ல நேரத்தில் யாத்திரை போய் விட்டீரே!" என்று கூறி, அவர் முன்னால் அமர்ந்தார் பாண்டித்தேவர்.

Edited By A.K

சம்பு கங்காதரர் வடக்கு வன்னத்தாயில் உள்ள பிரசித்திப் பெற்ற சிவன் கோயில்களுக்குப் புனித யாத்திரை போய் வந்திருந்தார்.

பாண்டித்தேவர் கையில் விபூதிப் பிரசாதம் கொடுத்து, கெண்டியில் கொணர்ந்திருந்த புனித நீரை அவர் மீது தூவலாகத் தெளித்தார், கங்காதரர்.

"என்ன சொல்லுங்கள்! அடியேன் காத்திருக்கிறேன்!" என்று பவ்யமாகக் கேட்டபடி கங்காதரர் எதிரே அமர்ந்து கொண்டார்.

"ஒரு எதிரி ஒற்றுக்காரர் சுவாமி, அவரை நமது கிடங்கில் போட்டு வைத்திருந்தோம். அவர் தப்பிப் போய் ஆறு மாதமாகிறது. அவர் எங்கே இருக்கிறார் என்று உங்கள் ஜோஸ்யத்தில் சொல்ல முடியுமா?" என்றார் தேவர்.

கங்காதரர் கீழே சோழிகளை உருட்டிக் கணக்குப் போட்டுக் கொண்டிருந்தார். கண்களை மூடி தியானத்திலும் இருந்தார். பிறகு, "அவன் ஒற்றனா?" என்று கண்களைத் திறந்து கேட்டார்.

பாண்டித் தேவருக்குத் தயக்கம் வந்தது. "ஒற்றன் இல்லை! ஒரு விதத்தில் ஒரு ராஜ குடும்பத்தைச் சேர்ந்தவன் தான். ஆனால் எதிரி!" என்றார் சாமர்த்தியமாக.

திரும்பவும் சோழியை உருட்டிய ஜோஸியர், "இன்னும் உயிரோடுதான் இருக்கிறான்!" என்றார்.

"எங்கே சுவாமி?"

திரும்பவும் சடங்கில் ஆழ்ந்தார் ஜோசியர்.

"ஒரு இடம் என்று நிரந்தரமாக இல்லை! அங்கே இங்கே என்று போய்க் கொண்டிருக்கிறான்."

"அவனைப் பிடிப்பது எப்படி?"

திரும்பவும் சடங்கு!

Edited By A.K

''அவனை நேராகப் பிடிக்க முடியாது! தந்திரத்தால் பிடிக்கலாம்!''

''ஆளைக் கண்டு பிடித்தால் அல்லவா தந்திரத்தை உபயோகிக்கலாம்?''

''அப்படி அல்ல! அவனுக்கு வேண்டப்பட்டவர்கள் யார் என்று கண்டு பிடித்தால் அவனைக் கண்டுபிடிக்கலாம்!''

ஜோஸியர் போன பிறகு வெகுவாகக் குழம்பினார் பாண்டித்தேவர்.

இருட்டி ஒரு நாழிகையில் ஒற்றர் தலைவர் சுப்ரமணியர் வந்து இறங்கினார். அவரிடம் ஒரு பரபரப்பு இருந்தது ''தேவரே! ஒரு முக்கியமான விஷயம்! என்றார்.

''லன்னத்தாய் ராஜ்யத்தில் இளவரசி ஒருத்திக்குப் பரிசம் போட நமக்கு அழைப்பு வந்ததே, ஞாபகமிருக்கிறதா?''

''ஆமாம்! அங்கே நாம் அரிமர்த்தனனை அனுப்பினோமே!''

''அவன் திரும்பி வந்திருக்கிறான். அங்கே பரிசம் போடும் சடங்கில் ஒரு பெண்ணைப் பார்த்திருக்கிறான். அது அந்த ஓடக்காரி டெப்சன் போல் தோன்றினாளாம்!''

''அங்கேயே அவளை விசாரிப்பது தானே?''

''அந்தப் பெண் அதற்குள் மறைந்து விட்டாளாம்!''

பாண்டித்தேவர் சற்றுப் பொறுத்துத்தான் பேசினார். ''இதை நம்பச் சொல்கிறீர்களா? அல்லது....''

''கொஞ்சம் நம்பிப் பார்க்கலாமே''

''இந்த ஓடக்காரி அங்கே எப்படிப் போய்ச் சேர்ந்தாள்!''

Edited By A.K

"அதுதான் தெரியவில்லை. நமது வீரர்கள் அவனைப் பிடிக்க வருகிறார்கள் என்று தெரிந்து தெற்கேதான் அவள் ஓடினாள். காம்போஜத்திற்குள் அவள் போய்விட்டதையும் அறிந்தோம்."

"பின்னர் எப்படித் திரும்பி வந்தாள்?"

"அதுதான் புரியவில்லை. அதில் ஏதோ மர்மம் இருக்கிறது."

"அதைத் தெரிந்து கொள்வது நல்லதாயிற்றே! சுப்ரமணியரே, நான் அன்றைக்கே சொன்னேன்; ராம கம்பீரனைப் படகிலிருந்து இறக்கியவுடனேயே படகுக் காரியைக் கொன்றிருக்க வேண்டும். அவளை உயிரோடு விட்டது தவறு!"

"நீங்கள் கவலைப்படாதீர்கள்! அவளால் எதுவும் செய்துவிட முடியாது. ஓடத்தில் வந்தது ராமகம்பீரன் என்று அவளுக்குத் தெரியாது. எனினும் அவளைப் பிடித்து வர ஏற்பாடு செய்யலாம்!" என்றார் சுப்ரமணியம்.

திருமண நாள் நெருங்கியது.

மேங்ரேயில் திருமணம் நடந்து மறுநாளே பாயோகத் துக்குத் திருமணப் பெண் தாராவை அழைத்துச் செல்வதாக ஏற்பாடு.

திருமணம் இனிதே நடந்தது.

தாராவுக்கு அடிக்கடி அழுகை குமிழ்ந்தது. தன் பெற்றோர்களை நினைத்தாள். தனது நாட்டையும், பால்ய நாட்களையும் நினைத்தாள். தனது வாழ்க்கை முற்றிலும் ஒரு புதுத் தடத்தில் போகிறதே என்று நினைத்தாள்.

மறுநாள் புறப்பட வேண்டும்.

மேங்ரே அரசர் திருமண 'வெள்ளாட்டி'யாக டெப்சன் தவிர இதர பரிசார ஆண் பெண் இருபது பேரையும் அனுப்பி வைத்தார்.

Edited By A.K

புறப்படும்போது, தாரா விழிகளில் நீருடன் மன்னரிடம் வந்தாள். தலை நிமிராமல் தரையில் பார்த்துக் கொண்டு, "மகாராஜா, ஒரு வேண்டுகோள்!" என்றாள்.

"என்ன வேண்டும்? தைரியமாகக் கேள்!" என்றார் அவர்.

# 23

"என்ன வேண்டும்?" என்று மன்னர் மேங்க்ரே கேட்க,

"மகாராஜா! அந்தத் தோட்டக்காரர் எனக்கு வேண்டும்! பூச்செடி வளர்ப்பதில் கெட்டிக்காரராக இருக்கிறார்" என்று கூறினாள் தாரா.

"இதற்கா இவ்வளவு தயக்கம்? அழைத்துச் செல்" என்று கூறினார் மன்னர்.

உடனே அந்தத் தோட்டக்காரரைத் தேடி ஆட்கள் சென்றார்கள். அவர் வந்து கலந்து கொண்ட பிறகு தாராவின் நீளமான கோஷ்டி பயோ நகருக்குப் புறப்பட்டது.

இரண்டாம் நாள் மாலையில் பயோவை அவர்கள் அடைந்தார்கள். பளீர் பளீர் என்று ராஜ அரண்மனை மின்னியது. அமைதியான வீதிகள். அழகு அழகான வீடுகள் பெரிய நீல நிறத் தடாகம், அதன் வடக்கே தோப்புகள் எல்லாம் நிறைந்து சொப்பன நகரமாகத் தோன்றியது.

அரண்மனை முழுதும் பளபள என்று பட்டுத் துணிகள் நிரம்பியிருந்தன. கற்பூர வாசனை எங்கும் கமழ்ந்தது. சீன ஜாடிகள், சீன பொம்மைகள், சீன பூந்தொட்டிகள்தான் அதிகம் கண்ணில் நிறைந்தன.

தாதிகளின் முகங்கள் பெரும்பாலும் சீனக்களை கொண்டிருந்தது. பேச்சுக் கூட சீனம் கலந்த வாடை வீசியது. இடுங்கின கண்களோடு அவர்கள் பார்ப்பதே விநோதமாக இருந்தது.

Edited By A.K

நரசிம்மன் என்ற பயோ அரசன் பார்ப்பதற்கு அழகாக இருந்தான். எனினும், சீன ஜாடைகள் சில இடங்களில் தெரிந்தன. கண்கள் விரிந்து இருந்தாலும் ஓரங்கள் சற்றே இடுங்கி இருந்தன. முகம் வட்டமாக இல்லாமல் கன்னங்கள் அதுங்கி இருந்தன.

மனசுள் பல ஆதங்கங்கள் இருந்தாலும், பயோ அரசரிடம் தாரா மிக கண்ணியமான முறையில் நடந்து கொண்டாள். வெளிப்படையாக எதையும் காட்டவில்லை. ஒரு நல்ல மனைவி போலவே நடந்து கொண்டாள்.

டெப்சன் அங்கே ஆடை அறைக்கு அதிகாரியாக அந்தப்புரத்தில் சேர்ந்து கொண்டாள்.

மனசில் டெப்சன்னுக்கு ஒரு நிம்மதி இருந்தாலும், சமீப காலத்தில் ஒருவித நெருடல் உள்ளே தோன்றியிருந்தது.

ரத்னதாராவிடம் ஏதோ மாறுதல் வந்திருக்கிறது. முன் போல அவள் பேசினாலும் அதில் முழு ஒட்டுதல் இல்லை. குறை தோன்றியது.

ஒருவேளை கணவரை அடைந்துவிட்ட காரணம் இருக்குமோ! அல்லது, ஒரு குறுநில மன்னரின் ராணி ஆகிவிட்டார் என்ற காரணம் இருக்குமோ! புரியவில்லை.

வெள்ளிக்கிழமை விஷ்ணுகோவிலுக்குப் போன போது அர்ச்சனை முடிந்ததும் டெப்சன் அவளைத் தேடிப் போனாள்.

பிராகாரத்தில் சென்ற தாரா எங்கே போனாள் என்று தெரியவில்லை. ஒரு நடைபாதை தவிர, இருமருங்கும் பூச் செடிகளும், கொடிகளும் பிராகாரத்தில் நிறைந்திருந்தன! இருட்டு மயமாக இருந்தது.

பேசும் குரல் கேட்டு, மகிழ்ச்சியில் துள்ளி, 'குன்தாரா!' என்று கூறி நடைபாதையில் வேகமாகப் போனாள்.

Edited By A.K

சடசட என்று செடிகள் வளைந்து விலகும் சப்தம். தாரா நடைபாதையில் திடீரென்று தோன்றி அவளை நோக்கி நிற்பது தெரிந்தது.

''என்ன, குன்தாரா! இங்கே யாருடன் பேசினீர்கள்?'' என்று கேட்டு அவள் கையைக் கோர்த்துக் கொண்டாள் டெப்சன்.

''யாரிடமும் இல்லையே!'' என்றாள் தாரா.

டெப்சன் கண்கள் சட்டென்று பிரிந்தன. தாராவை உற்றுக் கவனித்தாள்.

''ஏன் குன் தாரா! இங்கே பேச்சுக் குரல் கேட்டதே!'' என்றாள் கூர்மையான விழியுடன் அவளைப் பார்த்து.

''இல்லையே! டெப்சன்! சொப்பனம் கண்டாயா?''

''இல்லை தாரா! இங்கே'' ஏதோ சத்தம் கேட்டது.

''சத்தியமாக இல்லை. வா!...'' என்று மேலே நகர்ந்தாள்.

டெப்சன் தயங்கியவாறு மேலே அடிகளை வைத்தாள்.

இருவரும் சன்னிதியில் வழிபாடு முடித்தார்கள். பிறகு பல்லக்குகளில் ஏறினார்கள் அந்தக் கோவில் ஊர்ப்புறத்தே இருந்தது.

இப்போது பல்லக்கில் தனியாகப் போனபோது, நகரத்துள் எத்தனையோ கோயில்கள் இருக்க, அந்தத் தனிமை பிரதேசத்தில் உள்ள பழைமைக் கோவிலுக்குத் தாரா வழி பாட்டுக்குப் போவது ஆச்சரியமாக இருந்தது.

சிறிது தூரத்தில் ''நிறுத்துங்கள்!'' என்று தன் பல்லக்குத் தூக்குபவர்களிடம் டெப்சன் கூறினாள்.

பல்லக்கு நின்றது.

''கோவிலுக்குத் திரும்புங்கள். ஒரு பூத்தட்டை மறந்து விட்டேன்!'' என்று கூறினாள்.

Edited By A.K

பல்லக்கு அந்தப் பழங்கோவிலை நோக்கிப் புறப்பட்டது. வாசலில் பல்லக்கை இறக்கியதும் டெப்சன் உள்ளே வேகமாகச் சென்றாள். சன்னிதி சூன்யமாக இருந்தது.

டெப் சன் ஊடுருவி எங்கும் பார்த்தாள். சுற்றி வர பரந்த குட்டையான தூண்கள் நின்று கொண்டிருந்தன.

அவற்றின் பின்புறங்களை வளைந்து போய்ப் பார்த்தாள். யாரும் இல்லை.

சுருக்காகப் பிராகாரத்துள் நுழைந்தாள். 'சிள்ள்ள்...' என்று பூச்சி சத்தம் முன்னைவிட அதிகம் இழைந்தது. எண்ணெய் எரிந்த வாசம் காற்றோடு கலந்து வந்தது.

தடக் தடக்கிடும் இதயத்துடன் நடைபாதையில் நடந்தாள். இருபுறமும் பார்வையை மாற்றி மாற்றி ஓட்டினாள். பிரதட்சிணத்தை முடித்துவிட்டு, மீண்டும் சன்னிதிக்கு வந்தாள்.

அர்ச்சகர் அவளை விசேஷமாகப் பார்த்து, "பிரசாதம் வேண்டுமா? என்று கேட்டார்.

"வேண்டாம் சுவாமி!" என்றாள். பிறகு விஷ்ணுவுக்கு ஒரு கும்பிடு போட்டு வெளியே வந்தாள்.

பல்லக்கில் திரும்பி ஏறி அமர்ந்தாள். பல்லக்கு புறப்பட்டது. வேகமாகச் சென்றது.

சன்னிதி வீதியைத் தாண்டியதும், "ம்....தள்ளு, தள்ளு" என்று பல்லக்கு தாங்கிகள் கத்தினார்கள்.

அரண்மனைக்குப் போகிற வரை டெப்சன் காத்திருந்தாள்.......

இறங்கியவாறு, பல்லக்குத் தூக்கிகளைப் பார்த்து, "வழியில் ஏன் கத்தினீர்கள்?" என்று கேட்டாள் ஆர்வத்துடன்.

"யாரோ ஒரு ஊனக்கால் மனிதர் குறுக்கே வந்து விட்டார். அவரைத்தான் சத்தம் போட்டோம்!" என்றார்கள் அவர்கள்.

Edited By A.K

டெப்சன் அரண்மனைக்குள் போகும்வரை பேசாமல் இருந்தாள். பிறகு திடீரென்று ஒரு எண்ணம் பூத்தது.

ஓ!....அரண்மனைத் தோட்டக்காரர்தான் சற்றுமுன் கோவில் சன்னிதி வீதியில் பல்லக்குக்கு குறுக்கே வந்தாரோ! அவர் ஏன் அங்கே வந்தார்? ஒரு வேளை....

மறுநாள் டெப்சன் தாராவைக் கவனித்தாள்.

"என்ன சோர்வாக இருக்கிறாய்! முன்னைப் போல இல்லையே!" என்று டெப்சன்னைத் தாரா கேட்டாள்.

"ஒன்றுமில்லை, ஒன்றுமில்லை! எங்கள் பாட்டியை நினைத்துப் பார்த்தேன்!" என்றாள் டெப்சன்.

"இல்லை டெப்சன்! உன்னிடம் ஏதோ மாறுதல் இருக்கிறது!"

"அதே வார்த்தையை நான் உங்களிடம் கேட்க முடியும் குன் தாரா! நிறைய நீங்கள் மாறிவிட்டீர்கள்!" என்றாள் டெப்சன்.

"நானா?" திருப்பிக் கேட்டாள் தாரா. ஒரு மூச்சு நீளமாக வெளிவந்தது.

"ஏன் குன்தாரா! ஏன் அப்படிப் பதைத்து பார்க்கிறீர்கள்?" என்று மெதுவாகக் கேட்டாள் டெப்சன்.

"இல்லை டெப் சன்! நான் எப்போதும் போலத்தான் இருக்கிறேன். அடிக்கடி உன்னைச் சந்தித்துப் பேச முடியவில்லை! அவ்வளவுதான். அதற்குக் காரணம் தெரியாதா? நான் மணமானவள்! கணவனைக் கவனிக்க வேண்டாமா!"

"அது ஒன்றுதான் காரணமா?"

"ஆமாம்! வேறு என்ன?" என்றாள் விசேஷப் பார்வையுடன்.

Edited By A.K

டெப்சன் மௌனமானாள். அவள் கண்கள் தாராவை விட்டு வேறு புறம் திரும்பிப் பார்த்தன. அவைகளில் ஈரம் படிந்துவிட்டன.

தாரா தன் இளம் கண்களால் கூர்ந்து பார்த்தாள். டெப்சனின் முகத்தில் தாபத்தின் சின்னம் படர்ந்தாற் போல் இருந்தது.

''டெப்சன்!'' என்றாள் அவளது வலது கையை எடுத்துத் தன் மெல்லிய விரல்களால் கோத்துக் கொண்டு. ''நான் சொல்கிறேன் டெப்சன்! உனக்குத் திருமணம் முடிக்க வேண்டும்! அதனால்தான்.''

அவள் மேலே பேசவில்லை. ''எனக்கா? குன்தாரா! எனக்கு ஏதாவது ஏக்கம் வந்து விட்டது என்று நினைத்தீர்களா?''

''நினைக்க வேண்டாம்! இந்த வயதில் எல்லாம் இயற்கைதானே!''

''இயற்கைதான்! ஆனால், அதை மீறி இருக்க முடியும்!'' என்றாள் சிறிது வீம்பு தொனிக்கும் குரலில்.

''முடியும்! அப்படி மீற வேண்டுமா?''

''மீறினால் என்ன என்று பார்க்கிறேன். இப்போது வரவர என் மனது என் ஓடத்தில் வந்த அந்த ஒரே மனிதர் மீதுதான் லயிக்கிறது. வேறு யாருமே எனக்கு ஆண் பிள்ளைகளாகத் தோன்றவில்லை.''

''அப்படியா! அப்போது அவரையே கண்டுபிடித்து ஏற்பாடு செய்வோம்.''

''அவரைச் சந்திப்பது அபூர்வம்!''

''அதனால் என்ன! 'மனதில் வரித்துக் கொண்டு நினைத்தால் எல்லாம் கைகூடும்' என்று மகான்கள் நமக்கு உபதேசித்திருக்கிறார்களே! பார்ப்போம்.''

Edited By A.K

டெப்சன் அதற்கு மேல் பேசவில்லை. விடைபெற்றுத் தனது இருப்பிடம் போய்விட்டாள்.

மறுநாள் காலையில் எழுந்துவிட்டாள். அரண்மனைத் தோட்டத்துக்குள் நுழைந்தாள். அங்கே தோட்டக்காரன் இன்னும் வரவில்லை என்பது புரிந்து தோட்டத்து மேற்கு ஓரத்தில் அமைந்த அவன் குடிசைப் பக்கம் நோக்கிப் போனாள்.

''தோட்டக்காரரே!'' என்று அழைத்தாள்.

இரண்டு முறை அழைத்ததும், ''இதோ வருகிறேன், மகாராணி!'' என்று குரல் கொடுத்தவாறு குடிசையின் மூங்கில் பிளாச்சுக் கதவைத் திறந்து, ஒருவர் வெளியே வந்தார். அவளைப் பார்த்துத் திகைத்தவாறு சற்று நின்று விட்டு, பிறகு கண்களைத் தாழத் தணித்தார் அவர்.

டெப்சன் அவரைக் கூர்ந்து கவனித்தாள். பிறகு, அடிமேல் அடி வைத்து வந்தாள்.

அவரது தாடி நீண்டு வளர்ந்திருந்தது. அதில் அங்கங்கே நரை ஓடியிருந்தது.

''இங்கே வாருங்கள்! இது என்ன பூ பாருங்கள்!'' என்று அவள் கூற, அவர் நடந்து வந்தார். அப்போது அவர் விந்தி நடப்பது தெரிந்தது. அவர் முதுகும் சற்றே கூனி இருந்தது.

நடைக்கு உதவியாக ஒரு ஊன்று கோல் கையில் வைத்திருந்தார். ஊன்றி ஊன்றி வந்த அவர், ''அது வாடா மல்லி அம்மா!'' என்று கூறினார்.

அவருக்கு ஐம்பது வயது இருக்கும் என்று தோன்றியது. குரலிலும் ஒரு கரகரப்பு இருந்தது.

''அந்தி மந்தாரை இங்கே தோட்டத்தில் இருக்கிறதா?'' என்று கேட்டாள் அவள்.''

''இருக்கு அம்மா! தண்ணீர் தொட்டிப் பக்கத்திலே பாத்தி போட்டிருக்கு!'' என்றார் அவர்.

Edited By A.K

டெப்சன்னுக்கு மனத்துள் ஓரளவு நிச்சயமாகியது.

'இவர் வயதானவர்தான். இவரைப் பற்றியா சந்தேகப் பட்டோம்' என்று நினைத்தாள்.

"சரி! அதைக் கேட்கத்தான் வந்தேன்!" என்று அவள் சொல்ல, அவர் அவளை ஒரு கணமே பார்த்துத் திரும்பினார்.

டெப்சன் திடுக்கிட்டாள்.

# 24

டெப்சன் அந்தத் தோட்டக்காரனின் கண்களைப் பார்த்ததும், ஒரு பரிச்சய உணர்வு ஏற்பட்டது. இந்தக் கண்களை எங்கோ பார்த்திருக்கிறோம்! எங்கே, எங்கே என்று மனம் தேடியது.

ஓடத்தில் வந்த பிரயாணியின் நினைவுதான் ஓங்கியது. ஆனால் அவர் இளைஞர் ஆயிற்றே! இவரோ வயோதிகர் ஆயிற்றே!

திரும்பி அந்தப்புரத்தை நோக்கிப் போய் விட்டாள் அவள்.

சில நாட்கள் வரை மனம் குழம்பிக் கொண்டிருந்தது. மனம் அந்த நினைப்பை விடமாட்டேன் என்று கூறியது. உள்ளே அரித்துக் கொண்டிருந்தது.

ஓர் இரவு இருட்டி ஒரு நாழிகைக்குப் பிறகு மெல்ல அந்தப்புரத்தை விட்டு வெளி வந்து பூங்காவுள் நுழைந்தாள்.

தோட்டக்காரனின் குடிசைப் பக்கம் போகும்போது மெல்லிதாகப் பாட்டு கேட்டது. குரல் இனிமையாகக் குழைந்தது. 'தாய்' ராமாயணத்தில் உள்ள பாடல் என்று தெரியும்.

மெல்ல நடையிட்டுக் குடிசையின் பின்புறம் போனாள். தென்னம்பாய் கட்டிய ஓரத்தில் இடுக்கு வழியே உள்ளே நோக்கினாள்.

Edited By A.K

எண்ணெய் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. அதன் வெளிச்சம் தோட்டக்காரனையும் அவன் கையில் வைத்திருந்த ஓலைகளையும்தான் பிரகாசப்படுத்தியது.

'அப்பா' என்று நெஞ்சில் ஒரு இறுக்கம் ஓடியது! கண்களை இன்னும் பிரித்துப் பார்க்க, அது அந்தத் தோட்டக்காரன்தான். வயதானவன் அல்ல! இளைஞன். குறுந்தாடி ஒன்று முளைத்து முகத்தை மிக கம்பீரமாகக் காண்பித்தது. யார் இவன்?

கண்களை மெல்ல எல்லாப் பக்கமும் ஓட்டினாள்.

மண் சுவரைப் பார்த்ததும், 'தடுக்' என்று பார்வை நின்றது. தாடி மீசையும், தலை ஜடையும், சுவரில் தொங்கிக் கொண்டிருந்தன.

"ஓவ்.... ஓவ்.... ஓவ்...." என்று மனம் கூவியது.

புரிந்துவிட்டது. வயோதிக வேஷத்திற்கு உபயோகப் படுபவை! இவற்றை அணிந்துதான் அந்த இளைஞன் ஒரு வயோதிகனாகி வெளியே வருகிறான். ஏன் இப்படிச் செய்கிறான்? தனது ஓடத்தில் வந்த பிரயாணி இவன்தானே!

அதே நேரம் டெப்சன்னின் மனசில் ஒரு உஷ்ண மான உணர்வும் எழுந்தது. அது இன்ன வகை என்று அவளுக்குத் தெரியும்.

பொறாமையின் ஆரம்பச் சின்னங்கள் அவை என்று தெரியும்.

ஓ! இவனையா அந்த குன்தாரா காதலிக்கிறாள்? பெரிய தந்திரக்காரியாக இருக்கிறாளே!

அவளால் நிற்க முடியவில்லை. உடம்பில் ஓர் ஆர்ப்பாட்டமான படபடப்பு கிளம்பியது.

Edited By A.K

சட்டென்று அந்த இடத்திலிருந்து விடுபட்டு எட்டத்திற்குப் போனாள். அங்கே ஒரு அடர்ந்த அந்திமந்தாரை செடி அடர்வுக்கு அப்பால் தரையில் அமர்ந்துகொண்டாள்.

தன்னை நினைத்தாள். தாராவை நினைத்தாள். என்ன நெருக்கமான பிணைப்பில் இருக்கிறோம்! எங்கள் இடையே இந்த விரிசல் ஏற்படலாமா?

ஆமாம்! அதற்கு அவன்தானே காரணம்! எனக்குத் தெரியாமல் இவனோடு பழகியிருக்கிறாளே! லண்டனத்தாய் நகரில் இருக்கும்போதே இது நடந்திருக்கிறதே! எப்படி எனக்குத் தெரியாமல் நடந்திருக்கிறது?

அவளால் அவள் மனத்தைச் சமாதானப்படுத்த முடியவில்லை! அதே நேரத்தில் அந்த விஷயத்தைத் தள்ளிப் போடவும் முடியவில்லை.

எழுந்தாள். விறுவிறு நடையில் அந்தக் குடிசையை அடைந்து திடீரென்று அந்தப் பலகைக் கதவை விலக்கினாள்.

உள்ளே இருந்த தோட்டக்காரன் திடுக்கிட்டான். மறு கணம் பளீர் என்று துள்ளி எழுந்தான்.

''நில் அங்கே'' என்று அவள் கம்பீரமாகக் கத்தியது, அவனது செய்கையை நிறுத்தியது.

டெப்சன்னுக்கு அப்படி ஒரு தைரியம் வரும் என்று அவள் அறிந்ததில்லை. முகத்தில் தீட்சண்யமாக ஒரு கோபம் ஜொலித்துக்கொண்டு நின்றது.

''யார் நீ? உண்மையாகச் சொல்!'' என்றாள் அழுத்தமாக.

இதற்குள் தோட்டக்காரன் தத்தளித்து நின்றான். அவனது மேற் போர்வையை நோக்கி அவன் பார்வை சென்றது.

Edited By A.K

இனி அது பிரயோசனமில்லை. அகப்பட்டோம் என்ற எண்ணமும் அவனுள் ஓடுவது தெரிந்தது. ஒரு திண்டாட்ட நிலையில் நின்றுவிட்டான். மெதுவாக, தன்னைத் தளர்த்திக் கொண்டு, "குன் மாயி, வாருங்கள்! அமருங்கள்! நீங்கள் கேட்கும் கேள்விகளுக்கு எல்லாம் நான் உத்தரம் சொல்கிறேன்!" என்றான் பவ்வியமாக.

"உத்தரம் இருக்கட்டும், வயோதிகர் போல நீங்கள் நடிக்கத்தானே செய்தீர்கள்?" என்றாள் சாட்டை வீசும் குரலில்.

எதிரே நின்றிருந்த இளைஞனுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. மெதுவாக அவளை ஆசுவாசப் படுத்தப் பார்த்தான். ஆனால், அவள் எதற்கும் சமாதானம் அடைவாள் என்று தோன்றவில்லை.

கிளப்பிவிடப்பட்ட பிராணிபோல அவளிடம் ஆவேசம் இருந்தது. எந்த நிமிடமும் அவளால் ஆபத்து வரும்! கூப்பாடு போட்டுக் கத்திவிட்டால் போதும், அரண்மனைச் சேவகர்கள் அத்தனை பேரும் அவனைச் சூழ்ந்து விடுவார்கள்.

"குன் மாயி..... குன் மாயி" என்று அடிக்கு ஒருமுறை அவளைக் கெஞ்சியவாறு பேசினான் தோட்டக்காரன் அவன் கண்கள் குழைந்து, கிட்டத்தட்ட நீரில் மிதந்ததும் தான், அவளது உக்கிரம் குறைந்தது.

"இதென்ன, இப்படி ஓர் ஆவேசம் நான் பெற்றேன்!" என்று தன்னை கேட்டுக் கொண்டாள்.

இருந்தும் முறுக்கைத் தளர்த்தாது, "சரி, சொல்லுங்கள்! யார் நீங்கள் உண்மையில்?" என்றாள்.

Edited By A.K

அவன் ஓர் அரச குடும்பத்தைச் சேர்ந்தவன் என்றும், பெயர் விஜயராமன் என்றும், தான் சில காலம் அஞ்ஞாத வாசத்தில் இருக்கவேண்டும் என்றும், இல்லாவிடில் எதிரிகள் அவனைக் கொன்று விடுவார்கள் என்றும் கூறினான்.

"எந்த அரச குடும்பம்?" என்று கேட்டதற்கு,

"அதை இப்போது கேட்காதீர்கள்! உரிய நேரத்தில் கட்டாயம் சொல்வேன்! அதுவரை சற்றே பொறுங்கள்" என்றான்.

அதுசரி, அன்று அவளது ஓடத்தில் பயணம் செய்தது அவன்தானே!' என்று கேட்டதற்கு, "ஆமாம்! என்னை விரோதிகள் வேறு யாரோ என்று நினைத்துக் கிடங்கில் தள்ளினார்கள். அவர்கள் தேடி வந்தது என் அண்ணனை! அவன் என்னைப் போலவே இருப்பான். அதனால்தான் அந்தக் கோளாறு நடந்தது" என்றான். அதன் பிறகு அவன் ஒருவிதமாக வெளியே வந்து நதியில் மிதந்தபோதுதான் டெப் சன்னின் ஓடத்தில் இரண்டாம் முறையாக ஏறினான். அவளோடு சேர்ந்து கரை சேர்ந்ததும் உண்மைதான். ஆனால் அவனை யாராவது பிடித்து விடுவார்களோ என்ற பயத்தில்தான் அவளைவிட்டு அவன் ஓட வேண்டி நேர்ந்தது.

வழியில் பதுங்கியவாறு வடக்கே லன்னத்தாய் நகருக்குப் போனான். லன்னத்தாய் அரண்மனையில் தோட்டக்கார வேலை கிடைத்தது. ஏற்றுக் கொண்டான்.

அவனது பேச்சில் ஒரு கம்பீரம் இருந்தது. கவரும் அழகு இருந்தது. ஒரு கல்விமான் போல் பேசினான்.

அவன் என்ன செய்யப் போகிறான் என்று அவள் கேட்க, அவன் தன் பார்வையை மேலே தூக்கினான். ஏன் அதில் அப்படி ஒரு சோகம் வந்தது என்று தெரியவில்லை.

ஏதோ அவளிடம் சொல்ல வேண்டும் என்று அவன் முயல்வது தெரிந்தது. ஆனால் அதற்குள், அரண்மனை மதி லுக்கு மறுபுறத்தில் ஒரு சீட்டி ஒலி ஒரு முறை கேட்டது.

Edited By A.K

''இதோ இருங்கள்!'' என்று சொல்லிக் குடிசைக்கு வெளியே வந்தான் அவன்.

உள்ளே அவள் பல கணங்கள் திகைக்கும்போது மீண்டும் குடிசையுள் வந்து, ''குன் மாயி! எனக்கு சில அவசர வேலைகள் இருக்கின்றன. இன்னும் ஏதாவது சந்தேகம் இருந்தால் இன்னொரு நாள் வாருங்கள், பேசலாம்!'' என்றான்.

டெப்சன் வெளியே வந்தாள். இருட்டினூடே சரசர என்று நடந்து அந்தப்புரத்தை அடைந்தாள்.

இ ளில் அந்த இரு குதிரை வீரர்களும் சிறிது நேரம் வேகமா கப பறந்தார்கள்.

பயே நகரத்தின் வீதிகள் மறைந்த பிறகு தோப்புகளும் மறைந்து, வயல் நிறைந்த வெளிப்புறம் வந்ததும் குதிரை களைச் சற்று தளர விட்டார்கள்.

''ஏன் உதயா! நான் நேரில் வந்தால்தான் அது நடக்குமா?'' என்றான் அந்தக் கம்பீரமான குதிரை வீரன்.

''ஆமாம் ı: ı,'' என்றான் மற்றவன். சாதாரண தலைப் பாகை கட்டி, இடுப்பில் ஒரு வாள் செறுகியிருந்தான்.

''ஒருவேளை, இது ஒரு சூது என்று நினைக்கிறாரோ!'' என்றான் குதிரை வீரன்.

''ஆமாம் பிரபு! அவருக்கே பயம். என்னையே நம்புவதற்குப் பயப்படுகிறார் சுந்தர பாண்டித்தேவர் ஆள் என்றே என்னையும் நினைக்கிறார்!''

''ஆமாம் அவர் நினைப்பதும் சரிதான்! எதிரிகளிட மிருந்து நான் தப்பித்து வர முடியும். அதுவும் கிட்டத்தட்ட ஓராண்டு காலம் கழித்து என்னால் வரமுடியும் என்று அவர் எண்ணியிருக்க மாட்டார்.''

Edited By A.K

"ஆமாம் பிரபு! ராமகம்பீரன் என்று ஒருவர் இனி உலகில் இல்லை அவர் மறைந்து விட்டார் என்று நிச்சய மாகக் கூறுகிறார்" என்றான் உதயன்.

"பாவம்! அவரை நினைத்தால் வருத்தமாக இருக்கிறது. இப்போது நானே நேரில் போனாலும் அவர் என்னைப் புரிந்து கொள்வாரா?"

"நிச்சயம் புரிந்து கொள்ள வேண்டும் பிரபு!"

"வயதாகிவிட்டதே! அவர் பார்வை குறைந்திருக்க வேண்டுமே!"

"உண்மைதான்! ஆனால் உங்கள் குரலைக் கேட் டுக் கண்டுபிடித்து விடமாட்டாரா!"

"பார்ப்போமே!"

இருவரும் சிறிது தூரம் மௌனமாகச் சென்றார்கள்.

குளிர்ந்த மலைக்காற்று மிருதுவாக வீசியது. வானம் முழுதும் நட்சத்திரங்கள் செறிந்து கிடந்தன. அங்கங்கே ஓடை கள் சிலுசிலுத்து குமிழ்ச் சிரிப்புடன் நீர் ஓட்டங்கள் ஓடிக் கொண்டிருந்தன.

"பிரபு! இப்போது இருக்கும் இடத்தில் தங்களுக்கு ஆபத்து இல்லையே?" என்றான் உதயன்.

"இல்லைதான்! என் பெயரையே விஜயராமன் என்று கூறியிருக்கிறேன். ராமகம்பீரன் என்று அவர்களால் அடையாளம் கண்டுபிடிக்க முடியவில்லை! அதுவும் வயோதிக வேஷத்தில் இருக்கிறேன். எனினும், ரொம்ப நாள் நான் அங்கே இருக்க முடியாது! இப்போதே ஆபத்து நெருங்குகிறது" என்று கூறினான் குதிரை வீரனான ராமகம்பீரன்.

இருவரும் மேலும் பல நாழிகைகள் பிரயாணம் சென்றதும் ஒரு கிராமத்தை அடைந்தார்கள். அங்கே வீதியில்

Edited By A.K

ராமாயண நாடகம் நடந்து கொண்டிருந்தது. ஏராள ஜனங்கள் கூடியிருந்தார்கள்.

குதிரைகளை ஓரத்தில் கட்டிவிட்டு, சற்று நேரம் அந்த நாடகத்தைப் பார்த்தார்கள்.

இராவணன் சடாயுவோடு சண்டை போட்டுக் கொண்டிருந்தார். சடாயு வந்து தாக்கும்போதெல்லாம் மக்கள் ஆரவாரம் செய்தார்கள்.

ராமகம்பீரனும் துணை வீரனும் சற்று மெய்ம்மறந்து நாடகத்தைப் பார்த்திருக்கும்போது, கம்பீரன் பார்வை திடீரென்று மேடையின் ஓரம் மத்தளக்காரர் அருகே உதவியாளராக இருக்கும் தாளக்காரர் மீது விழுந்தது.

தொடையில் தாளம் போட்டுக் கொண்டே அந்தத் தாளக்காரன் கம்பீரனை நோக்கி ஒரு வெறியான பார்வை பார்த்துக் கொண்டு இருந்தான்.

சில கணங்கள்தான்! தாளக்காரர் சட்டென்று மேடையை விட்டுக் கீழே இறங்க, ராமகம்பீரன் உடனே உதயனின் கைப்பற்றி "வா! வா!" என்று அவசரமாக அழைத்தான்.

# 25

ராமகம்பீரன் சட்டென்று உதயனை வெளியே இழுத் தான். இருவரும் குதிரைகளை நோக்கிப் பாய்ந்தார்கள். தாவி ஏறிக்கொண்டு தெற்கே ஒரே வேகத்தில் காற்றை மோதிக் கொண்டு பறந்தார்கள்.

வெகுதூரம் சென்ற பிறகுதான் ராமகம்பீரன் பேசினான். "ராமாயணத்தை வெகு காலத்திற்குப் பின் கேட்கலாம் என்று எண்ணினேன்! அதற்கு எனக்குக் கொடுத்து வைக்கவில்லை. என் விதி அப்படி!"

"அதனால் என்ன பிரபு, பின்னால் நிறைய சந்தர்ப்பம் கிடைக்கும்! ராமாயணம் நிறையக் கேட்போம்" என்று கூறினான் உதயன்.

Edited By A.K

இருவரும் மேலும் பல முகூர்த்தங்கள் பிரயாணம் செய்து ஒரு தனியான பண்ணை வீட்டை அடைந்தார்கள். சாதாரண எளிய பண்ணையாக இருந்தது.

தென்னை ஓரை வேய்ந்த வீடு! முன்புறம் யாராவது வந்தால் உட்காருவதற்காகத் திண்ணைகள்.

வந்த இருவரும் குதிரையை விட்டு இறங்கி வீட்டைப் பார்த்தார்கள்.

வீட்டில் எல்லோரும் உறங்கி விட்டார்கள். எனவே, அவர்களுக்குத் தொந்தரவு கொடுக்கக்கூடாது என்று நினைத்துத் திண்ணையில் படுத்துக் கொண்டார்கள். வந்த களைப்பில் விரைவாக உறங்கிவிட்டார்கள்.

ஆழ்ந்த நித்திரையுள் இருந்த ராமகம்பீரனை யாரோ தட்டி எழுப்புவது போல் இருந்தது. சிரமப்பட்டுத்தான் விழித்தான். ஒரு பண்ணை வீட்டில் படுத்திருப்பது நினைவுக்கு வந்தது.

திடுக்கிட்டுப் பார்க்கும்போது உதயன் அவன் முகத்தருகே குனிந்து "பிரபு! பிரபு! சீக்கிரம் எழுந்திருங்கள்! ஆபத்து!" என்று கூறினான்.

கம்பீரன் கண்களைக் கசக்கிக் கொண்டு எழுந்தான்.

"பிரபு! குதிரை ஒரு முறை கனைத்தது. சுற்றிப் பார்க்கும்போது நடமாட்டம் தோன்றியது" என்றான் உதயன்.

கம்பீரன் கீழே கிடந்த வாளை எடுத்து இடையில் கட்டிக் கொண்டான். பிறகு சுற்றிவர மெதுவாகக் கண்களை ஓட்டிவிட்டான்.

பண்ணை வீட்டை அடுத்தாற் போல் தென்னைகளும், மாமரங்களும் நின்றன. கம்பீரன் உதயனை அழைத்துக் கொண்டு வீட்டின் பின்புறம் சென்றான். மெதுவாக ஒரு ஒரு அடியாக வைத்து இருவரும் குதிரையை நோக்கிப் போனார்கள்.

Edited By A.K

சற்று தூரத்தில் அவர்கள் குதிரையைக் கட்டி வைத்திருந்த இடம் தெரிந்தது. ஆனால், குதிரைகளைக் காணோம். ஆச்சரியத்துடன் அவர்கள் பார்த்தபோது திடீ ரென்று ஒரு கூச்சல் எழுந்தது.

அவர்கள் வெலவெலத்து நின்றார்கள். சுற்றிவரப் பத்துப் பன்னிரண்டு பேர் திடீரென்று தென்பட்டார்கள்.

சாதாரண மனிதர்களாகத் தோன்றினாலும், கைகளில் வாள் வைத்திருந்தார்கள்.

ராமகம்பீரனுக்குத் திடீரென்று மூச்சு நின்றது. மாட்டிக் கொண்டோமே என்று நினைத்தான்.

சண்டையிடலாம் என்று முதலில் தோன்றியது. ஆனால் பத்து பேர் சூழ்ந்து இருக்கும்போது அது முடியாத காரியம்.

வந்தவர்கள் கம்பீரனையும், உதயனையும் மடக்கிப் பிடித்தார்கள். இருவரையும் அழைத்துச் சென்று அங்கே இருந்த கிணற்றடிக் கல் மீது அமர்த்தினார்கள்.

பின்னர் நான்கு குதிரை வீரர்கள் 'தடதட' சத்தத்துடன் வந்தார்கள்.

'ஓகோ! இவர்கள்தான் தலைவர்களோ' என்று நினைத்தான் கம்பீரன்.

புழுதியைக் கிளப்பி வந்த குதிரைகள் பண்ணை வீட்டு வாசற்படியில் நின்றுகொண்டன. நால்வரும் உதயனிடமும், ராமகம்பீரனிடமும் பாய்ந்தார்கள். இருவரையும் இழுத்து வந்து ஒரு குதிரைமீது ஏற்றி அமர வைத்தார்கள். பிறகு, அவர்கள் பாதையில் செல்லத் தொடங்கினார்கள். சப்தம் எதுவும் வெளிவரவில்லை. எல்லாமே ஓசையில்லாமல் நடந்தன.

ஒரு முகூர்த்தம் சென்ற பிறகு ஒரு விடுதியை அடைந்தார்கள்.

Edited By A.K

"சுவாமி! அழைத்து வந்திருக்கிறோம்" என்று ஒருவன் சொல்ல, "சரி, அவர்களை விடுங்கள்! நீங்கள் போகலாம்!" என்று கூறிய ஒருவன் விடுதி வாசலுக்கு வந்தான்.

கம்பீரத் தோற்றத்தில் இருந்தான் அவன்.

அவனது உத்தரவைக் கேட்டதும் அந்த வீரர்களும், இதரர்களும் அந்த இடத்தை விட்டு உடனே அகன்றார்கள். கம்பீரனும் உதயனும் மட்டுமே நின்றார்கள். சுற்றிவர அவர்கள் நால்வர்கள்.

கம்பீரன் யோசனையில் ஆழ்ந்தான்.

"யார் இவன்?" என்று நினைக்கும் போதே "சுவாமி!" என்று குரல் கேட்டது.

கம்பீரன் திடுக்கிட்டு அந்தப் புதியவனைப் பார்த்தான்.

"சுவாமி! என்னைத் தெரிகிறதா?" என்றான் அவன்.

கம்பீரனுக்குச் சந்தேகம் ஏற்பட்டது. 'இதெல்லாம் எதிரிகள் சூழ்ச்சியோ!' என்று நினைத்தான்.

"யார் நீங்கள்? எனக்குத் தெரியவில்லையே!" என்றான் கம்பீரன்.

"தெரியவில்லையா சுவாமி! தாங்கள்தானே ராமகம்பீரன்?" சற்று அழுத்தத்துடன் கேட்டான் அவன்.

திடுக்கிட்டான் கம்பீரன், ஏனெனில், அவனை யாரோ அடையாளம் கண்டுபிடித்து விட்டார்கள். வேஷ மாறுதல் அவ்வளவு பொருத்தம் இல்லை போலும்!

இவர்கள் என்ன செய்யப் போகிறார்கள்? திரும்பவும் கிடங்கில் தள்ளப் போகிறார்களா? அதை நினைக்கவே உள்ளே ஒரு நடுக்கம் ஓடியது.

"யார் நீங்கள்?" என்று இரண்டாம் முறையாகக் கேட்டான் அவன்.

Edited By A.K

"சுவாமி! என்னைப் பாருங்கள்! என்னைத் தெரிய வில்லையா?" என்று சொல்லி முன்னால் வந்து நின்றான் அந்தப் புதியவன்.

கம்பீரன் அவனை உற்றுப் பார்த்தான்.

"நான் ராமகம்பீரனல்ல; விஜயராமன்!" என்றான்.

"சுவாமி! என்னைப் பாருங்கள். நான் ஸ்ரீலட்சுமண தாசன்! தெரிகிறதா? சிறு வயதில் என்னைப் பார்த்திருக்கிறீர் கள்! பிறகு நான் சுமத்ரா தீவுக்குச் சென்று விட்டேன். அங்கே கற்பூர வியாபாரம் செய்து கொண்டிருக்கிறேன். என்னை இன்னும் தெரியவில்லையா?" என்று ஆச்சரியத்துடன் கேட்டான் அவன்.

"ஐயா! என் பெயர் விஜயராமன்! ராமகம்பீரன் அல்ல. யார் அவர்? அவரை ஏன் தேடுகிறீர்கள்?"

அப்படிக் கேட்டானே தவிர, கம்பீரன் உள்ளூர யோசித்தான். ஆளைப் பார்த்தால் எப்போதோ பார்த்த உருவம் ஞாபகத்திற்கு வந்தது.

அதைப் போல அந்தப் புதியவனின் குரல் கூட அவனுக்குப் பரிச்சயம் போல் தோன்றியது. யாரென்று தெரியவில்லை.

"ஸ்ரீ ராமதாசர் என்ற பெயரைக் கேட்டதில்லையா?" என்று கேட்டான் அந்த இளைஞன்.

கம்பீரன் தன் ஞாபகத்தை வெளியில் காட்டவில்லை.

"யார் அவர்?" என்று கேட்டான்.

அதே நேரம் சடசடவென்று பல நினைவுகள் கம்பீரனுக்கு ஓடின.

'இதெல்லாம் வெறும் சூதாக இருக்குமோ! அவன் யாரென்று கண்டு பிடிக்கவே அவர்கள் இந்த மாதிரி சூழ்ச்சி செய்கிறார்களோ!'

Edited By A.K

ஸ்ரீ லட்சுமண தாசன் கம்பீரனின் கைகளைப் பற்றிக் கொண்டான். "சுவாமி! இத்தனை நாள் உங்களைத் தேடி அலைந்து விட்டேன். இந்த நாட்டைக் கெடுத்து விட்டார்கள் பாபிகள்! தாங்கள்தான் அதைச் சீக்கிரம் சரி செய்ய வேண்டும்!" என்று கூறினான்.

ஒரு நீண்ட மூச்சு விட்டுவிட்டு கம்பீரன் கூறினான். "ஐயா! தாங்கள் என்னை யாரோ என்று நினைத்திருக்கிறீர்கள்! அது தவறு. என் பேர் விஜயராம். நான் லன்னத்தாய் நாட்டைச் சேர்ந்தவன் என்றான் அழுத்தமாக.

லட்சுமணதாசனுக்கு முப்பது அல்லது முப்பதைந்து வயது இருக்கும். மார்பு விரிய, அழகாக நின்று கொண்டிருந்தான். கம்பீர உயரம். கண்களில் ஒரு காந்தம், "சுவாமி!" என்று நாத் தழுதழுக்கக் கூறிவிட்டு, அந்த லட்சுமணன் சற்று சந்தேகத்துடன் கம்பீரனைப் பார்த்தான்.

பிறகு "சுவாமி! தாங்கள் பேசும் விதம் எனக்குப் புரிகிறது. ஆனால், தங்களுக்கு நான் நண்பன். விரோதியல்ல! எனவே, என்னிடம் தாங்கள் எதையும் ஒளிக்க வேண்டாம்" என்றான்.

சிரித்தான் ராமகம்பீரன்.

"தாங்கள் சொல்வது போல் நான் எதையும் மறைக்கவில்லை. உண்மையைத்தான் கூறுகிறேன். எனக்குத் தங்களையும் தெரியவில்லை; தாங்கள் ஸ்ரீராமதாசர் என்று சொல்கிறீரே, அவரையும் தெரியவில்லை" என்று மிக இயல்பாகக் கூறினான்.

"சுவாமி! ராமதாசரைத் தெரியாதா? இந்த சியாம் நாட்டிலும் அதைச் சுற்றிலுமுள்ள எல்லா நாடுகளிலும் அவர் பிரசித்தமாயிற்றே! அவர்தான் மகாமந்திரியாக இருந்தார்!" என்றான் லட்சுமணன்.

"ஓகோ! அப்படியா? அவர் எங்கே இருக்கிறார்?" என்றான் கம்பீரன். தொடர்ந்து, "ஐயா லட்சுமணரே!

Edited By A.K

நீங்கள் தேடுவது நானல்ல! நான் பல வருடங்கள் சீன தேசத்தில் வாழ்ந்துவிட்டு இரண்டு மாதங்களுக்கு முன்புதான் லன்னத்தாய் வந்தேன். எனக்கு இங்கு நடக்கும் விவகாரங்கள் எதுவும் தெரியாது! நான் இப்போது தெற்கே போய்க் கொண்டிருக்கிறேன்!'' என்றான் கம்பீரன், குரலை அழுத்தி.

''சுவாமி! தெற்கே எதற்குப் போகிறீரோ?'' என்றான் லட்சுமணன் ஐயத்தோடு.

''காம்போஜம் போகிறேன் அங்கே ஓங்கார நகரில் அற்புதமாக ஒரு சிவாலயம் கட்டி வருகிறார்களாமே! (பிரசித்திப் பெற்ற அங்கோர்வாட்.) அதைத் தரிசிக்கப் போகிறேன்! நான் ஒரு சிவ பக்தன்! ஓங்கார நகரைப் பார்த்து விட்டுத் திரும்பி வடக்கே கைலாசமலைக்குப் போக இருக்கிறேன்'' என்றான் கம்பீரன்.

லட்சுமணதாசன் திகைப்போடு பார்ப்பது தெரிந்தது. ''சுவாமி நல்லது! நாங்கள் தங்கி இருக்கும் விடுதிக்கு வந்து விட்டுச் செல்லுங்கள்! அதுவே எனக்குப் போதுமானது! தங்களை எங்கள் ஆட்கள் வளைத்துப் பிடித்து வந்ததற்காக என்னைப் பொறுக்க வேண்டும்'' என்றான் லட்சுமணன்.

கம்பீரன் எவ்வளவோ எடுத்துச் சொல்லியும், அவனை மேலே போகவிடாமல் தான் தங்கியிருக்கும் விடுதிக்கு லட்சுமணதாசன் அழைத்துப் போனான். மீதி இரவை அவர்கள் அங்கே கழித்தார்கள்.

காலையில் எழுந்து குளித்து வெளியே வந்ததும் லட்சுமணதாசன் அவனுக்காகக் காத்திருந்தான்.

''இதைப் பாருங்கள்!'' என்று சொல்லி ஒரு மோதிரத்தை கம்பீரனிடம் நீட்டினான்.

கம்பீரன் அதைப் பார்த்தும் அவனை மீறிக் கண்களில் குபுக் என்று நீர் வந்தது. அது அவனது தாயார் தரித்திருந்த மோதிரம்! வர்ணக் கற்கள் நிறைந்தது. நடுவே சங்கு போன்ற உருவம் தெரிந்தது.

Edited By A.K

# 26

**மோ**திரத்தைப் பார்த்ததும் கண்களிலிருந்து அவனை மீறிக் கண்ணீர் பெருகிவர, ராமகம்பீரன் உடனே லட்சுமணதாசின் கைகளைப் பற்றிக் கொண்டு தேம்பினான்.

அதற்கு மேல் அவனது மாறுவேட நாடகத்தை நீட்டிக்க முடியவில்லை.

தன்னை யார் என்று வெளிப்படுத்திக்கொண்டு, அந்த மோதிரம் கிடைத்த விதத்தை லட்சுமணதாசனிடம் வினவினான்.

லட்சுமணதாசின் கண்களிலும் நீர் பெருக்கெடுத்து உதிர்ந்தது. ஒரு அபூர்வ சந்திப்பாக மகாராணியைப் பார்க்க நேர்ந்ததையும், அவள் அந்த மோதிரத்தைக் கொடுத்து, "என் மகன் கம்பீரன் எங்களை விட்டு எங்கேயோ ஓடி மறைந்திருக்கிறான். நாங்கள் இங்கே அவதிப்படுவது தெரியாது. அவனை எப்படியாவது சந்தித்து என் வருத்தத்தைத் தெரிவிக்க வேண்டும்! ஒருவேளை மாறுவேடம் பூண்டு தன்னை மறைக்க முயன்றால், இந்த மோதிரம் அவனை அழ வைத்துவிடும். அதன் மூலமே கண்டுபிடித்துவிடலாம்!" என்று கூறியிருந்தாள்.

"என் தாயாரைச் சந்தித்து எவ்வளவு நாள் ஆயிற்று?" என்று கேட்டான் ராமகம்பீரன்.

"ஒரு வருடம் ஆகிவிட்டது!" என்றான் லட்சுமணதாசன்.

ஒரு பரிதாபப் புன்னகை கம்பீரனிடம் தோன்றி மறைந்தது.

"லட்சுமணதாசரே! நான் ஒரு ஆண்டு கிடங்கில் கிடந்தேன்! உங்கள் அண்ணன் மகாமந்திரி ராமதாசரும் என்னுடன் இருந்தார்" என்றுசொல்ல லட்சுமணதாசனின் கண்கள் இரண்டும் திடுக்கிட்டுச் சலனமற்று நின்றன.

Edited By A.K

"அப்படியா சுவாமி! அப்படியா! அவர் இறந்து விட்டார் என்று நினைத்தோமே! கிடங்கிலேயா கிடந்தார்!" என்று புலம்பினான் அவன்.

கம்பீரனும் லட்சுமணதாசனும் இருநாட்கள் பேசினார்கள். ஒருவரது விருத்தாந்தம் மற்றவருக்குத் தெரிந்தது.

"சுவாமி! நான் ராமாயணப் பிரசங்கத்தை எடுத்துக் கொண்டது ஏன் தெரியுமா? ராமபிரான் மீது தங்களுக்கு இருக்கும் ஈடுபாடு எனக்குத் தெரியும். ராமகதை எங்கே நடந்தாலும் அங்கே அனுமார் இருப்பார் என்று கூறுவார்கள். தாங்களும் ராமகதை எங்கே நடந்தாலும் வந்துவிடுவீர்கள் என்று தெரியும். தங்களைத் தேடும் நோக்கத்தில்தான் நானும் என் கோஷ்டியும் ஒவ்வொரு ஊராகச் சென்று ராம கதை செய்தோம். தாங்கள் எங்கேயாவது நிச்சயமாகக் கேட்க வருவீர்கள் என்று நினைத்தோம். அதன்படி தங்களைக் கண்டு பிடித்துவிட்டேன், சுவாமி! நாட்டில் இப்படி ஒரு எதிர்க் கும்பல் வேலை செய்கிறது என்று தெரியாதே!" என்று வருத்தத்துடன் லட்சுமணதாசன் பிரலாபித்தான்.

"எனக்கும் தெரியாது! கிடங்கில் அகப்பட்டதும்தான் புரிந்துகொண்டேன்! அதுவும் உன் அண்ணன் ராம தாசரைக் கிடங்கில் கண்டதும் துடித்து விட்டேன்!" என்று கண் கலங்கக் கூறினான் கம்பீரன்.

லட்சுமணனுக்கு மனம் பொறுக்கவில்லை. அவனுக்கு இப்போதுதான் நாட்டு நடப்பு புரியத் தொடங்கி இருந்தது. ஏதோ நாடு க்ஷீணித்துக் கொண்டிருக்கிறதே என்று நினைத்தான். இப்போது காரணம் புரிந்துவிட்டது. மாமன்னர் இந்திராதித்தரை வேண்டுமென்றே நிரந்தரப் படுக்கையில் கிடத்திவிட்டு சேனாதிபதி சுந்தரபாண்டித் தேவரும், ஒற்றர் தலைவர் சுப்பிரமணியரும் நாட்டு நிர்வாகத்தை நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

Edited By A.K

"சுவாமி! இப்போதே புறப்படுங்கள்! நேரே சுகோதய நகருக்குப் போவோம்! நீங்கள் யாரென்று பிரகடனப் படுத்தினால்..."

"நிறுத்துங்கள், லட்சுமணா!" என்று கையைக் காட்டி அமர்த்தினான் கம்பீரன்.

"அது அவ்வளவு எளிதில் நடக்காது. சுந்தர பாண்டித் தேவர் நிறைய பேரைத் தம் பக்கம் சேர்த்து வைத்திருப்பார்! இவன் ஏமாற்றுக்காரன்! இவன் கம்பீரன் அல்ல!' என்று சொல்லி எல்லோரையும் நம்ப வைத்து விடுவார்!" என்று கூறினான் கம்பீரன்.

"அப்படியானால் எப்படித்தான் இவர்களை விரட்டுவது?" என்றான் லட்சுமணதாசன் ஆத்திரத்துடன்.

"சிறிது சிறிதாகத்தான் செய்ய முடியும். நாமும் தந்திரத்தைக் கையாள வேண்டும்! அதற்கு ஆலோசனை செய்வோம்! என்று கூறினான் கம்பீரன்.

அடுத்த இரண்டு நாட்களில் கம்பீரனும், லட்சுமணதாசனும் ஆலோசித்தார்கள். லட்சுமணதாசன் சமுத்திரத்தீவில் (சுமத்ரா) கற்பூர வியாபாரம் செய்து நிறைய சம்பாதித்திருந்தான். அதனால் தனக்கு ஒரு சின்னப் படையும் வைத்திருந்தான். அது அந்நாளைய வழக்கம். நாட்டிற்குத் தீங்கு நேரிட்டால் இந்தச் சொந்தப் படையை அரசாங்கத்துக்கு அவன் கொடுத்து உதவ வேண்டும்!

வியாபாரிகளைத் தவிர, செல்வம் மிகுந்த நாட்டியக்காரிகளும் சொந்த சேனை வைத்திருந்தார்கள்.

"என்ன? என்ன?" என்று பதட்டம் அடைந்தார் சுந்தர பாண்டித்தேவர்.

சேவகப் பெண்மணி தலை நிமிராத தரையைப் பார்த்துப் பேசினாள்.

Edited By A.K

''வடக்கே ஆபத்து வந்திருக்கிறது! தங்களை உடனே காணவேண்டும் என்று சொல்கிறார் நாயகர் சுப்பிரமணியர்'' என்று கூறி நிறுத்தினாள். குனிந்த நிலையில் அவளது முத்து ஆபரணங்கள் கீழே தொங்கியவாறு ஆடின. அவள் புஜங்கள் உருண்டு திரண்டு தெரிந்தன. அவளது கூந்தல் சீரான பட்டுப் போன்ற மடிப்புகளாகத் தெரிந்தது.

''சரி, நீ போகலாம்!'' என்றாள் தேவரின் அருகிலே இருந்த சித்ராவதி. பாண்டித்தேவரின் பொல்லாக் கண்கள் அந்த சேவகப் பெண்ணை ரசிப்பதை அவள் உணர்ந்து விட்டாள்.

''ஆ! இது சீன மது! இதன் ருசி தனி! அரிசியிலிருந்து செய்திருக்கிறார்கள். அருந்துங்கள்'' என்று ஒருவித கரும் பச்சை நிறத் திரவத்தை பளபளக்கும் செம்புக் கோப்பையில் ஊற்றிக் கொடுத்தாள் சித்ராவதி.

அவளது கண் அசைவின் பேரில் நான்கு நிருத்தியப் பெண்கள் தங்கள் அழகான கைகளையும் உடம்பையும் வளைத்து ஆட ஆரம்பித்தார்கள்.

ரத்தினக் கம்பளத்தின் மீது திடீரென்று நான்கு சர்ப்பங்கள் தோன்றி நெளிவது போல் தோன்றியது. அவர்களது ஆட்டம்!

சுந்தரபாண்டித் தேவர் ஒப்புக்காகப் புன்னகை காட்டி, ''ஓகோ! ஆகா!'' என்று அந்த நாட்டியத்தை ரசித்தார்.

சந்தனக்குழம்பு பூசிய மார்பகங்களை மெல்லிய துணிக்குள் பாதி மங்கலாக மறைத்துக்கொண்டு, மிருதுவாகச் சுழிந்த தொப்புளையும், இளம் வயிற்றையும் வளைத்துத் திருகியவாறு அந்த முன்னிரவு வேளையில் அவரை ஈர்க்கமுயன்ற சித்ராவதி ''நீங்கள் போகாதீர்கள்! எனக்கு ராத்திரி தூக்கம் வராது!'' என்று கொஞ்சலாக அவரிடம் முறையிட்டாள்.

Edited By A.K

அந்தக் கிழக்கு நாடுகளுக்குத் தங்கள் சிருங்காரக் கலைகளைக் காட்டி, பொருள் சேர்க்க வந்திருந்தவர்களில் ஒருத்தி இந்த சித்ராவதி. சியாம் தேசத்தில் பரத கண்டத்திலிருந்து வந்திருந்தாள். சீக்கிரத்தில் புகழ் பெற்று, எங்கும் அவள் நாட்டியத்திற்குப் பெரிய ஆவல் ஏற்படும்படி செய்து விட்டாள்.

சமீபத்தில் அவளது கண்ணின் கணைகளுக்கு இலக்காகிப் போனவர்தான் பாண்டித்தேவர். அவளிடம் மதி மயங்கி ஒரு செல்லப் பிராணி போல கிடந்தார்.

ஆனால் இன்று, அந்தச் சித்ராவதி இனிய ராகமாகப் பேசிய வார்த்தைகள் கூட அவர் செவியில் விழவில்லை.

அவர் மனத்தில் ஏற்கெனவே எண்ணங்கள் புதிய எரிச்சலுடன் தோன்றிக் கொண்டிருந்தன.

வடக்கு எல்லையில் நகரங்களையும் கிராமங்களையும் யாரோ சூறையாடுகிறார்கள் என்று செய்திகள் வந்த வண்ணம் இருந்தன.

சேவகர்களோ, தூதுவர்களோ யார் வந்தாலும் 'என்ன துர்ச்செய்தி வருமோ!' என்ற கவலைதான் அவரிடம் இருந்தது.

இன்று, ஒற்றர் தலைவரே அவரைக் காண வந்து விட்டார்! அதுவும் இராவேளையில்!

'சித்ரா, சித்ரா' என்று அந்த நாட்டிய மணியின் முக வாயை அஞ்சு விரல்களாலும் கொஞ்சலாகத் திருப்பினார் பாண்டித்தேவர்.

''ஒற்றர் தலைவர் வந்திருக்கிறார். மரியாதை கொடுக்க வேண்டும். போய் பார்த்துவிட்டு நொடியில் வந்து விடுகிறேன்!'' என்று நயந்து கூறி, தொங்கிக் கிடந்த அங்க வஸ்திரத்தை எடுத்து மேலே போட்டுக்கொண்டு அம்சமஞ் சத்தை விட்டுக் கீழே இறங்கினார்.

Edited By A.K

தடுமாறும் கால்களை அங்கும் இங்குமாக அகற்றி வைத்து வெளியே போனார்.

''மகாப்பிரபு! வாருங்கள்! வாருங்கள்! அவசர ஆலோசனை செய்ய வேண்டும்!'' என்று வெளிவாசலில் பல்லக்கு சகிதம் காத்திருந்த ஒற்றர் உப தலைவர் சங்கரபூஷணம் என்பவர் உடனே பாண்டித்தேவரை அழைத்துக் கொண்டு வீதி இருட்டுள் விரைவாகச் சென்றார்.

விதான வாசல் என்று சொல்லப்படும் அரண்மனையின் புறப் பகுதி வாசல் வழியே உள்ளே சென்று, தீபங்கள் பளீர் என்று எரியும் மந்திராலோசனை மண்டபத்தை பாண்டித் தேவர் அடைந்தார்.

''என் அருமை சுப்பிரமணியா! என்ன விஷயம் இது!'' என்று விரிந்த கைகளுடன் உள்ளே நுழைந்து சுப்ரமணியரை அணைத்து விட்டு ஆசனத்தில் அமர்ந்தார்.

அத்தனை முக்கிய சகாக்களும் அங்கே கூடியிருப்பது ஒரு எச்சரிக்கை அறிவிப்பாக இருந்தது.

"பிரபு! இனியும் பொறுக்க முடியாது! படைகளைத் தான் எடுத்துச் செல்லவேண்டும்! வடக்கே விஷ்ணு லோகத்தை அடுத்த கிராமங்களிலும் நகரங்களிலும் அந்த கருந்தாடிக்காரன் கொட்டம் அதிகமாகி வருகிறது. இந்த விஷயத்தைச் சொல்லத்தான் தங்களை அழைத்தேன். இந்த ராத்திரி வேளையில் தங்களுக்குத் தொந்திரவு கொடுத்தற்குப் பொறுத்தருளவும்!'' என்று கூறினார் நாயகர் சுப்பிரமணியர்.

''யார் அந்தக் கருந்தாடி?'' என்று சீறி விழுந்தார் பாண்டித்தேவர்.

''கொள்ளைக் கூட்டத் தலைவன்!'' என்றார் சுப்பிரமணியர்.

தேவர் கண்களை வெறித்தார்.

Edited By A.K

"ஆனால் மக்கள் அவனை மதிக்கிறார்கள். நேசிக்கிறார்கள். காரணம், பெரிய செல்வந்தர்களிடம் கொள்ளை அடித்து அதை ஏழை எளியவர்களுக்குப் பங்கு போட்டுக் கொடுக்கிறானாம். 'ஐயா, எங்கள் ஊருக்கு வாருங்கள்! எங்கள் ஊருக்கு வாருங்கள்!" என்று மக்கள் அவனுக்குத் தூது அனுப்புகிறார்களாம்!" என்றார் உபதலைவர் சங்கர பூஷ்ணம்.

மூன்னிரவில் வானத்தில் அந்த நிலாத் தட்டு கேட்பா ரற்றுக் கிடந்தது. ஒன்றிரண்டு கொழுந்து மேகங்கள் அவ்வப் போது அதை மூடிவிட்டு ஓடின! குப்தநதி என்ற சிற்றாற்றின் கரை ஓரம் போடப்பட்டிருந்த துணிக் கூடாரம் ஒரு சிறு மாளிகை போல் தென்பட்டது.

மாளிகையை அடுத்து குட்டிக் கூடாரங்கள் அங்கு மிங்கும் வெள்ளைப் புள்ளிகளாகக் கிடந்தன.

வண்டி மாடுகள், பசுக்கள் சகிதம் ஒரு வியாபார கோஷ்டியின் பரிவாரம் அங்கே தங்கி இருந்தது.

சிற்றாற்றின் கரையோரம் சிறிய துணிவிரிப்பு போல் மணல் வெளி இருந்தது.

அதில் காலை நீட்டிக் கிடந்த இருவர்களில் ஒருவனான லட்சுமணதாசன், "இவ்வளவு வேலைகளுக்கு இடையே திடீரென்று வியாழன் இரவு காணாமல் போகிறீர்கள், சனிக் கிழமை வந்து சேருகிறீர்களே!" என்று அங்கலாய்ப்புடன் கூறினான்.

அருகிலிருந்த ராமகம்பீரன் ஆச்சரியமாகத் திரும்பிப் பார்த்தான். அவன் மனசு நெருடியது. வியாழக்கிழமை இரவு அவன் மறைந்து போகும்போதெல்லாம், லட்சுமணதாசரிடம் கூறிக் கொள்ளாமல் போகிறோமே என்று நினைப்பது உண்டு.

அதை இப்போது உறுத்தலாக லட்சுமணதாசன் கேட்டுவிட்டானே!

Edited By A.K

"லட்சுமணதாசா— அதைச் சொல்ல வேண்டும் என்று பலமுறை நினைத்ததுண்டு! இன்று சொல்லிவிடுவது மேல் என்று நினைக்கிறேன். அதற்கு இப்போது வேளை வந்து விட்டது" என்று தொடங்கினான் ராமகம்பீரன்.

"வாரம் ஒரு முறையாவது என்மனம் சிருங்கார அனுபவம் பெறவேண்டியிருக்கிறது. அதனால்தான் மறை கிறேன்!" என்றான் கம்பீரன்.

"தங்களுக்கா சிருங்காரம்! தாங்கள் அதை ஏறிட்டும் நினைத்ததில்லையே!" என்று வியப்புடன் கேட்டான் லட்சுமணதாசன்.

"உண்மைதான்! நான் அற்பசொற்பமாக அதில் வீழ்ந்து விட மாட்டேன்! ஆனால் அது ஒரு விதி! மூன்று வருடங்களுக்கு முன் அரண்மனைக்கு ஒரு சித்திரக்காரர் வந்தார்! பரத கண்டத்திலிருந்து வந்திருந்தார். பரத கண்டத்தில் உள்ள பல கோயில்கள், தீர்த்தங்கள், காட்சிக ளைப் படங்களாக எழுதி வந்திருந்தார். அவற்றை அப்படியே என் தந்தை மகாராஜா வாங்கிக் கொண்டார். உள்ளே உக்கிராணப் பெட்டகத்தில் அவற்றை வைத்திருந்தார்கள். ஒரு நாள் நான் எடுத்துப் பார்த்தபோது ஒரு பெண்ணின் படம் எனக்குக் கிடைத்தது! சாந்தம் என்றால் சாந்தம்! மோகனம் எங்கும் மோகனம்! வசீகரம் என்றால் வசீகரம்! அது போன்ற தெய்வ அம்சத்து அழகியை நான் கண்ட தில்லை. ஏற்கெனவே பரத கண்டத்தின் மீது மோகம் கொண்டவன் நான்! பரத கண்டத்தைச் சேர்ந்த அவளிடம் நான் அப்படியே பித்தனாகிவிட்டேன்!

என் மனம் அதுபோல் வேரோடு விழும் என்று அறிந்ததே இல்லை. மறுநாள் காலையில் எழுந்தால் எதுவும் ஓடவில்லை. உணவு ஓடவில்லை. குளிக்க ஓடவில்லை. அடிக்கடி அந்தப் படத்தையே பார்க்க வேண்டும் போலிருக் கிறது. உன்மத்தம் பிடித்த அந்த நாட்களை நான் மறக்கவே முடியாது.

Edited By A.K

என்னை நான் அடக்கிக்கொண்டு ஓரளவு இயல்பான நிலைக்கு வந்து விட்டாலும் சமயங்களில் அவளைப் பற்றிய வேகம் பெரும் புயலாகவே இருந்தது.

பின்னர் என்னாலேயே இதைத் தடுக்க முடியாமல், என் அன்னையாரிடம் கூறினேன். அவர் எனக்கு எவ்வளவோ புத்திமதிகள் சொன்னார். கேட்டுக்கொண்டாலும் மனம் அடிக்கடி அந்தப் பிரமைக்குள் சிக்கிக்கொண்டது.

சித்திரக்காரர் எழுதிய அந்தப் பெண் யார்? அவளை பரத கண்டத்திலிருந்து தேடி அழைத்து வரும்படி என் அன்னையார் ஆட்களை அனுப்பித்தார்கள். ஒரு வருடம், ஒன்றரை வருடம் ஆகியும் பேச்சு மூச்சில்லை.

இந்நிலையில் என்னைக் கிடங்கில் தள்ளி, நான் அதிலிருந்து கஷ்டப்பட்டுத் தப்பித்துத் தலைமறைவாகி லன்னத்தாயில் உள்ள மாங்க்ரே நகரத்தைப் போய்ச் சேர்ந்தேன்.

அங்கே அரண்மனையில் தோட்ட வேலை செய்து வந்தேன். ஒரு வயோதிகர் வேடம் போட்டு என்னை மறைத்துக் கொண்டேன். அந்த அரண்மனைப் பூங்காவில் ஒரு நாள் ஒரு பெண் திடீரென்று தோன்றினாள்!''

''யார்? அந்த சித்திரத்தில் கண்ட பெண்ணா?'' என்று குறுக்கிட்டான் லட்சுமணதாசன்.

''அதில்தான் எனக்கு சந்தேகம்! அவளைப் போலவே இருந்தாள்! அவளைப் பார்த்ததுமே எனக்கு மீண்டும் அந்த பிரமிப்பு வந்துவிட்டது.

மலர்ச்செடிகளுக்குத் தண்ணீர் விடும்போது மலர்களில் அவள் முகம் தெரியும்! அவ்வளவுதான், மெய் மறந்து போய் நீர் விட்டுக்கொண்டே இருப்பேன்.

என் பழைய உபாதைகள் எல்லாமே எனக்கு மீண்டும் வந்து விட்டன. என்னால் அந்த உணர்ச்சிகளைத் தாங்க முடியவில்லை. இருட்டாகிவிட்டால் குடிசையில் விளக்கெண்ணெய் விளக்கு ஏற்றி அமர்ந்துகொள்வேன்.

Edited By A.K

என்னை அறியாமல் எனக்குப் பாட்டு வரும். அதை ஓலைகளில் எழுத ஆரம்பித்தேன். எழுதும்போதே என்வாய் அந்தப் பாட்டை முணுமுணுக்கும் சமயத்தில் என்னை அறியாமல் மெய்மறந்து பாட ஆரம்பித்து விடுவேன்.

அப்படி ஒரு இரவு பாடிக்கொண்டிருந்தபோதுதான் சத்தம் கேட்டுக் கண்களைத் திருப்பினேன்.

ரம்பை போன்ற அழகில் அந்தப் பெண் அங்கே குடிசை வாசலில் நின்று கொண்டிருந்தாள். என் சுவாசம் அடைபட்டது. பாட்டும் நின்றது'' என்று சொல்லி நிறுத்தினான் ராமகம்பீரன்.

# 27

"அந்தப் பெண் தெய்வ காரிகை போல குடிசை வாசலில் நின்றாள். என் கண்கள் குடைராட்டினமாகச் சுழன்றன.

அப்படி ஒரு நெருக்கத்தில் ஒரு அழகியைப் பார்த்த தில்லை. என் கண்கள் பிரமித்த நிலையில் அசங்காது நின்றன.'' என்று தொடர்ந்தான் ராமகம்பீரன்.

''.... அவளும் என்ன நினைத்தாளோ ஏது நினைத் தாளோ, என்னை விறைப்பது போலவும், முறைப்பது போலவும் ஆழமாக ஊன்றிப் பார்த்தாள்.

முறைக்கிறாளா? அப்படியும் சொல்ல முடியவில்லை. விழியின் கருவட்டத்தில் ஒரு மென்மையான கிரணமும் என்னை நோக்கி வந்தது. அதில் இதம் இருந்தது. சுகம் இருந்தது. அதைத் தாண்டியும் ஒரு மென்மையான உணர்வு மிதந்து இருந்தது.

'இந்தாருங்கள்! நீங்கள் யார்? உண்மையைச் சொல்லுங்கள்!' என்று ஒரு அழுத்தமான கேள்வி அவளிட மிருந்து வந்தது.

Edited By A.K

அதை நான் எதிர்ப்பார்க்கவில்லை.

கேள்வி வந்த நொடியிலேயே எனது ஆபத்தான நிலை எனக்குப் புரிந்து விட்டது.

'இளவரசி! என்னைப் பொறுத்தருள வேண்டுகிறேன்! தாங்கள் என்னைக் காப்பாற்ற வேண்டும்! உங்களை மிகவும் வேண்டிக் கொள்கிறேன்! நான் என்னைப் பற்றியவை எல்லாம் சொல்லி விடுகிறேன்!' என்றேன்.

'சொல்! நீ யார்? ஏன் இந்த வயோதிக வேஷம் போட்டாய்?' என்றாள்.

'நான் ஒரு கண்ணியமான வியாபாரக் குடும்பத்தைச் சேர்ந்தவன். எங்கள் பங்காளிகளுக்குள் சண்டை! எனவே என்னைக் கொல்வதற்கு அவர்கள் எத்தனித்தார்கள். நான் அவர்களிடமிருந்து கஷ்டப்பட்டுத் தப்பித்தேன். என்னைக் காப்பாற்றிக்கொள்ள இங்கே கிழத்தோற்றம் போட்டுக் கொண்டு தோட்டத்தில் இருந்து வருகிறேன். என் உண்மைப் பெயர் விஜயராமன்' என்று கூறினேன்.

அவள் அப்போதும் சிந்தனையிலேயே நின்றாள். கண்ணில் மிருதுவும் பார்த்தேன்; கடினமும் பார்த்தேன். என்ன முடிவு எடுப்பாளோ என்று கவலையாக இருந்தது.

திடீரென்று திரும்பி வெளியே போய்விட்டாள். அடுத்த நாள் நான் அரண்மனையை விட்டு ஓடிவிட்டேன். எனக்கு எப்படியும் ஆபத்து வரும் என்று உறுதி கொண்டு விட்டேன். ஒரு வாரம் சென்ற பிறகு, மெல்ல விசாரித்ததில் இளவரசி எந்த விதத்திலும் நடவடிக்கை எடுக்கவில்லை என்று தெரிந்தது. அதற்கு மாறாக 'தோட்டக்காரர் எங்கே போனார்?' என்று கேட்டதாகவும் கேள்விப்பட்டேன்.

திரும்ப ஒரு நாள் மாலையில் தோட்டத்தில் போய் நின்றேன்.

Edited By A.K

ஆச்சரியமாக இருந்தது. இளவரசி என் குடிசை முகப்பில் அமர்ந்திருந்தாள்.

அந்தி மயங்கி இருள் விழும் நேரம்! நிசப்தத்தில் அவள் பார்த்த பார்வை என்னைத் திடுக்கிட வைத்தது. என் வயோதிக வேடத்திலேயே கை கூப்பி நின்றேன்.

திடீரென்று பேசினாள்

'எங்கே போனீர்கள், இந்தச் செடிகளை வாட விட்டு விட்டு? அரசர் பார்த்தால் கோபிக்க மாட்டார்?' என்றாள் கோபத்துடன்!

ஆனால் அது கோபமாக இல்லை! அதன் ஓரங்களில் கனிவுதான் ஒட்டியிருந்தது. நிரம்பவும் வேண்டிக் கொண்டு விட்டு உடம்பை குறுக்கிக் கொண்டு குடிசைக்குள் நுழைந்தேன்.

'தோட்டக்காரரே!' என்று அவள் சிறிது நேரத்தில் அழைத்தாள்.

நடுக்கத்துடன் வந்தேன்.

'அன்று நீங்கள் பாடினீர்களே! அதன் ராகம் தெரியுமா?' என்று கேட்டாள்.

எனக்கு எதுவும் ஓடவில்லை. ராகம் பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறேன். பரத கண்டத்திலிருந்து பல பாடகிகள் இங்கு வந்து பாடுவார்கள். பாட்டு சொல்லிக் கொடுப்பார்கள். அவற்றில் நான் சிரத்தை செலுத்தினவன் அல்ல!

'எனக்கு எதுவும் தெரியாது' என்றேன்.

'இதற்குப் பெயர் ராஜதோடி' என்றாள் அவள்.

எனக்கு ஆச்சரியமாக இருந்தது. எப்படி ஒரு பாட்டைப் போய் இன்ன இனம் என்று சொல்கிறார்களே என்று நினைத்தேன். அதை அவளிடம் தெரிவிக்கவும் செய்தேன்.

Edited By A.K

கறவை வைபவம் முடிந்துவிட்ட பின், தாதிகள் பிரிந்து சொல்லும்போது ஒருத்தி என்னிடம் வந்து, உள்தோட்டத்துத் திண்ணையில் என்னை அமரச் செய்தாள்.

இந்தச் சிறு தோட்டத்தை ராணியின் தாதிகள்தான் பராமரித்தார்கள். அங்கே சிக்குண்ட ஒரு மணம் சுழன்று கொண்டிருந்தது. கல் தளத்தில் அமர்ந்து கொண்டேன்.

சிறிது நேரத்தில் அவள் வந்தாள். உடம்பு சிறிது மெலிந்திருந்தது. கண்களை விரிவாக்கி என்னை ஒரு முறை பார்த்தாள். தள்ளி கல் மேடையில் அமர்ந்து கொண்டாள்.

சிறிது நேரம் வலது சுட்டு விரல் நுனியால் மேடையில் கோலம் இட்டுக் கொண்டிருந்தாள்.

'ஒன்றுமில்லை! அந்த ராஜதோடி பாட்டைக் கேட்க வேண்டும் என்று தோன்றியது. அதற்காக உம்மை அழைத்தேன்!' என்றாள்.

நான் பாடும் அந்தப் பாடலின் வரிகளே மொத்தம் எட்டுதான்!

ஆனால், இசை அந்த எட்டு வரிகள் மீது மெல்லமாகத் தான் தவழ்ந்து போகும்.

இந்த எட்டு வரிகளிலும் அங்கங்கே நின்று, மனத்திலே ஊங்காரமாகப் பாட்டை இழுப்பேன்.

உண்மையில் வரிகளைவிட அந்த ஊங்காரத்தைத் தான் நான் அதிகம் பாடினேன்.

அந்தப் பெண் அப்படியே வெண்கலச் சிலை போல் அமர்ந்திருந்தாள். முகத்தில் மெறு மெறு என்று ஒரு பரவசம்! கண்கள் இயக்கம் துறந்து மயக்கமாகக் கிடந்தன!

ஆ! இந்த நிலையில்தான் ஒரு ஓவியன் இவளைச் சித்திரம் எழுதி இருக்கிறான் என்று தோன்றியது. ஆமாம்! என் சித்திரம் எனக்கு ஞாபகம் வந்துவிட்டது.

Edited By A.K

என் மனதில் அந்தக் கணமே ஒரு எண்ணம் உறுதி யிட்டு விட்டது.

ஒரு சித்திரத்தைப் பார்த்துவிட்டு எந்த ஒரு பெண்ணைத் தேடிகிறேனோ அவளே இவள் என்று தோன்றிவிட்டது. அதே துல்லிய நெளிவும், பாவமும், விழி அமைப்பும் கொண்டவள். ஒரு அணுகூட எங்கேயும் வித்தியாசமாக இல்லை. என் மனசில் அந்தக் கணத்தி லேயே அவளைக் கொஞ்சும் வசனங்களால் அழைக்க ஆரம்பித்து விட்டேன்.

அந்தப் பாடலை ஒரு முகூர்த்தம் வரை என்னால் இழுக்க முடிந்தது.

நான் முடித்தவுடன், அப்படி ஒரு நிசப்தம் அங்கே நிலவும் என்று எதிர்பார்க்கவில்லை.

பிறகு, அவள் பாட ஆரம்பித்தாள். பாடல் அல்ல! வார்த்தை எதுவும் கிடையாது. ஆனால் பாடலுக்குள் பொதிந்து நிற்கும் அந்த இசையின் உருவத்தைத்தான் அவள் வெளிக் கொணர்ந்து கொண்டிருந்தாள்.

பாட்டைப் பாடலாம்! அதனுள் இருக்கும் உயிரைப் பாட முடியுமா? மலரைப் பார்க்கலாம்! அதனுள் இருக்கும் நிறத்தை மட்டும் பார்க்க முடியுமா? அந்த மாயத்தைத்தான் அவள் செய்து கொண்டிருந்தாள்.

பாட்டுள் பதுங்கி இருக்கும் ஜீவனை என் முன் வரைந்து காட்டிக் கொண்டிருந்தாள்.

பாடலுக்கு அது ஒரு சூக்ஷ்ம சரீரம்!

அதைக் கண்ணால் பார்க்க முடியாது. வார்த்தையால் விவரிக்க முடியாது. உணர்ச்சியால் மட்டுமே உணரலாம். அது ஓர் ஆன்ம உணர்வாக இருக்க வேண்டும்.

சொல் இல்லாத வெறும் கீத இழைகளால் ஒரு மாய வெளியில் ஒரு மாய சொரூபத்தை அவள் வரைந்து

Edited By A.K

கொண்டிருந்தாள். அதை நான் மனக் கண்ணால் நன்கு பார்க்க முடிந்தது. அப்படி ஒரு பரவசத்தை நான் எப்போதும் அடைந்ததில்லை. பரவசமே இவ்வளவு எல்லைகளுக்குப் போகுமா என்பதை அதுவரை நான் அறிந்ததில்லை.

பரவசப் பிழம்பாகவே நான் மாறிவிட்டேன். சுவாசித்தேனா, இமைத்தேனா, எதுவும் எனக்குத் தெரியவில்லை!

அந்த சங்கீதத்தில் அதன் ஜனன இழைகளை மட்டும் விஸ்தார விரிப்பில் விவரித்து பல முகடுகளில் உச்சங்களுக்குச் சஞ்சாரம் செய்து கடைசியில் கீழே இறங்கி, இந்தப் பொய்யான உள்ளத்தில் இளவரசி நின்றபோது, எனக்கு வியர்வையாக வழிந்தது......''

# 28

**என்னருகே அந்த இளவரசி வந்து அமர்ந்தாள். அவள் இப்போது இன்னொருவர் மனைவியாக இருந்தும்கூட அவள் என்னவள்தான் என்று என் மனம் வரம்புமீறி ஆசைப்பட ஆரம்பித்தது.....**

ராமகம்பீரன் மேலே தொடர்ந்து சொல்லிக் கொண்டு போனான்.

''.......அவள் நெற்றி எல்லாம் குறு முத்துகள். ஒரு உலகத்தையோ, பிரபஞ்சத்தையோ சுற்றி வந்த இளைப்பு அவளிடம் தெரிந்தது. சிறிதே ஆசுவாசப்பட்டாள்.

பிறகு புன்னகையோடு ''தெரிகிறதா, அதுதான் ராகம்! நீங்கள் பாடினீர்களே, அதனுள் உள்ள ஜீவன் இது! இந்த ஜீவன் தெரிந்துவிட்டால், அதனால் எழுந்த பாடல்களை எல்லாம் இந்த இனம் என்று குறித்துச் சொல்லிவிடலாம்!'' என்றாள்.

பிரமிப்பு எனக்கு அடங்கவில்லை. ஒரு நூதன அனுபவத்தைப் பெற்றது போலிருந்தது. அது ஒரு மென்மையான, ஆனால் அழுத்தமான இன்பமாக இருந்தது.

Edited By A.K

எனக்கு சுயநினைவு வர சிறிது நேரம் ஆகியது.

''ஆகா! பாடல் இல்லாமல் அதன் சொரூபத்தை உங்களால் இவ்வளவு நேரம் பாட முடிந்ததே!'' என்று வினவினேன் நான்.

''எங்கள் நாட்டில் இதே ராகத்தை மூன்று நாட்கள் பாடக்கூட வித்துவான்கள் இருக்கிறார்கள்!'' என்று கூறினாள் அவள்.

''நீங்கள் எந்த நாடு? இங்கே பிறந்து வாழ்ந்தவர், இல்லையா?'' என்று கேட்டேன் ஆச்சரியத்துடன்.

''நான் இங்குப் பிறக்கவில்லை. பரதகண்டத்திலிருந்து வந்திருக்கிறேன்!'' என்றாள் அவள்.

''தாங்கள் யார்? எப்படி வந்தீர்கள்?'' என்று கேட்க, அவள் சிறிது நேரம் யோசித்தாள்.

பிறகு தனது கதை முழுவதையும் கூறினாள். சோழ வம்சத்துப் பெற்றோர் அவளை அனுப்பி வைத்ததும், கப்பலில் புறப்பட்டதும், மேனாம் முகத்துவாரத்தில் புயலில் சிக்கியதும் காம்போஜத்தில் அகப்பட்டு மாங்க்ரே வந்ததும் - யாவையுமே தெரிவித்தாள்.

அந்தக் கணமே அவள் எனக்காக நிச்சயிக்கப்பட்டவள் என்று தெரிந்துவிட்டது.

''நான்தான் ராமகம்பீரன்!'' என்று அவளிடம் சொல்லிவிட வேண்டும் என்று எண்ணினேன். ஆனால் மனத்தை அடக்கிக் கொண்டேன்.

குடிசை திரும்பிய பிறகு, மனம் குடைந்தது. ஆகா! நமக்குக் கிடைக்கவிருந்த மணமகளைப் பறிகொடுத்தோமே!' என்று நினைத்தேன். இப்போது அவள் இன்னொருவர் மனைவியாகி விட்டாளே என்று நினைத்தேன்.

Edited By A.K

அன்றிலிருந்து தினமும் அவள் நினைவு வர, மனம் வேதனையில் புழுங்க ஆரம்பித்தது. அல்லும் பகலும் எல்லா நேரமும் அவள் நினைவே வரத்தொடங்கியது.

'இனி வருந்திப் பிரயோசனமில்லை; அவளை விட வேண்டியதுதான்' என்று மனசில் தீர்மானித்து விட்டேன்.

அவள் பக்கத்தில் இருக்கும்வரை மனம் அவளை விடாது. எந்தச் சொல்லையும் கேளாது. எனவே, அவளை விட்டுப் போவது என்று தீர்மானித்தேன்.

ஒரு நாள் இரவு புறப்பட்டு விட்டேன்.

அந்தப்புரம் பின்புறத்தில் வாசல் எதுவும் கிடையாது. முன்புற வாசல் வழியாகத்தான் போக வேண்டும். என் சொற்ப ஆயுதங்களையும் உடைமைகளையும் கஞ்சியில் கட்டிப் புறப்பட்டேன்.

அரண்மனையின் புறத்தால் போகும்போது திடீரென்று என்னை அறியாமல் நின்றேன். அழகான மகிழ மரத்தின் அடி அது! அதன் வாசம் ஆளையே தூக்கிக் கொண்டு போய்விடும். அந்த வாசம் என்னை நிறுத்தவில்லை. மற்றொரு வாசனையை என் நாசி முகரவில்லை. ஆனால் செவி உணர்ந்து விட்டது.

அந்தக் கணமே மையலாகி நின்றுவிட்டேன்!

அரண்மனை சாளரத்தின் வழியே ராஜதோடி ராகத்தின் சிலு சிலு எனும் பட்டு இழைகள் மிதந்து வந்தன. அதன் சுகத்திற்கு ஈடு கிடையாது. கண்ணுக்குக் காணாத சரஸ்வதி நதி போல மாயமாக வந்தது போலிருந்தது.

பிரமித்து நின்றேன்! அந்தக் கணத்தில் என் இதர நினைவுகள் மறைந்து விட்டன.

ராஜதோடி என்று எப்படிப் பெயர் வைத்தார்களோ தெரியாது! கம்பீரநடையில் அது வந்தது.

அந்தப் பகுதியையே ஒரு மோகனச் சுழியில் அமிழ்த்தி விட்டது. எங்கும் சலனம் சிறிதும் கிடையாது.

Edited By A.K

அவள்தான்! அந்த இளவரசிதான் பாடுகிறாள்! அந்த அர்த்த ராத்திரியில் ஏன் பாடுகிறாள்?

என் கால்கள் மேலே போகாமல் மறுகின. கீழே அமர்ந்தேன். என் சஞ்சியும், மேல் துண்டும் கீழே உதிர்ந்தன.

ராகம் மென்மை என்பார்கள். மிருது என்பார்கள். ஆனால் அன்று அந்த ராகம் மூர்க்கமாகவே வந்து என்னைத் தாக்கி வீழ்த்தியது. சுவாசம் கூடச் சரியாக விட முடியவில்லை.

ராத்திரி முழுதும் அதே ராகம் அங்கே பிரகாசித்திருக்க வேண்டும். பொழுது விடிந்த பிறகும் அங்கே நான் அமர்ந்திருந்தேன்.

''என்ன தோட்டக்காரரே!'' என்று குரல் கேட்டதும் நான் திடுக்கிட்டுப் பார்த்தேன்.

இன்னும் பொழுது சரியாக விடியவில்லை. இருளின் தயக்கங்கள் அங்கங்கு தென்பட்டன.

என் அருகே அந்த இளவரசி வந்து அமர்ந்திருந்தாள். வெலவெலத்துப் பார்த்தேன்.

அருகில் சஞ்சியும், மற்ற இதர பொருள்களும் இருப்பதைப் பார்த்து, ''என்ன! ஊருக்குப் புறப்பட்டீரா?'' என்றாள்.

நான் பொய் சொல்லவில்லை. ''ஆமாம்'' என்றேன். ''என் பயணத்தை உங்கள் ராகம் நிறுத்திவிட்டது!'' என்றேன்.

''ஓ! எனக்குத் தூக்கம் வரவில்லை, பாடினேன்!'' என்றாள் அவள்.

அதிலிருந்து பேச்சுக்கள் தொடர்ந்தன.

பேச்சுக்கள்! பேச்சுக்கள்! இனிமையான பேச்சுக்கள்!

Edited By A.K

எங்கள் மனங்கள் மெல்ல மெல்ல வெளிவந்து கொண்டிருந்தன.

மறைவுகள் ஒவ்வொன்றாக எங்களை விட்டு அகன்று கொண்டிருந்தன. அதைத் தொடர்ந்து தடுப்புகள், கட்டுப்பாடுகள், பயங்கள் யாவுமே ஒவ்வொன்றாக எங்களை விட்டுப் போய்விட்டன.

நான் ஒரு மதிப்பு மிகுந்த குடும்பத்து இளைஞன் விஜய ராமனாகவும், அவள் சோழ இளவரசி ரத்னதாரா ஆகவும் எங்கள் உண்மை நிலைக்குள் புகுந்து கொண்டோம்.

என் மனத்தில் அப்போதும் ஒரு சின்னவருத்தம் இருந்தது: நான் என்னை ராமகம்பீரனாகக் காட்டிக் கொள்ள வில்லையே என்று!

எங்கள் மனங்கள் அந்த இடத்திலேயே ஒன்றுபட்டு விட்டன!

அந்தப் பெண் பரதகண்டத்திலிருந்து எனக்காகவே வந்திருக்கிறாள் என்ற நினைப்பு, என் கட்டுப்பாட்டை உடைத்து விட்டது.

அவள் இன்னொருவர் மனைவியாக இருந்தும்கூட அவள் என்னவள்தான் என்று என் மனம் வரம்பு மீறியும் எண்ண ஆரம்பித்தது.

நான் மீண்டும் குடிசைக்குத் திரும்பிவிட்டேன். தங்கி விட்டேன். ஆனால் வெளியே அடிக்கடி சென்று என் உற்றார் உறவினர்களைப் பார்த்துவிட்டு வர அவளிடம் சம்மதம் வாங்கிக் கொண்டேன்.

அந்தச் சம்மதத்தில் இதோ வந்திருக்கிறேன்!

நான் ஒவ்வொரு வாரமும் மறைந்து போவது பயோநகரம் சென்று அவளைத் தரிசித்து விட்டு வருவதற்குத் தான்'' என்று சொல்லி முடித்தான் விஜயராமன் என்ற சூட்டுப் பெயர் உள்ள ராமகம்பீரன்.

Edited By A.K

"ஆச்சரியமாகவும் விநோதமாகவும் இருக்கிறதே! என்றான் லட்சுமணதாசன்.

"சரி! இந்த உறவு உங்களை எங்கே கொண்டு விடப் போகிறது!" என்றான் அவன்.

"அதுவும் தெரியவில்லை! பலா பலன்களைத் தெரியாமலே அவளுடன் பழகி வருகிறேன்!" என்றான் ராம கம்பீரன்.

"இன்னொருவர் மனைவி மீது பாசம் வைக்கலாமா?"

"கூடாதுதான்!"

"இதனால் விரோதமும் குழப்பமும் ஏற்படாதா?"

"ஏற்படத்தான் செய்யும்! ஆனால் எங்கள் மனங்கள் திறந்த பிறகு அவற்றை அடைக்க வழியில்லை. ஒவ்வொரு சந்திப்பிலும் அவை அதிக அதிகமாகத்தான் திறந்து கொண்டு வருகிறது! என்ன செய்ய?" என்று நிறுத்தினான் கம்பீரன்.

இருவரும் சிறிது நேரம் பேசவில்லை.

கம்பீரன் பேசினான். "எனினும் என் கடமையை உணர்கிறேன்! என்னை அவளிடமிருந்து கஷ்டப்பட்டுத் தான் ஒவ்வொரு வாரமும் பிரித்துக் கொண்டு வருகிறேன். ராஜ்யத்தை மீட்டாக வேண்டுமே! நாம் சுகோதய நகரம் போகவேண்டுமே!"

எட்டு தினங்களுக்குள் சுகோதயத்தை அடைந்தார்கள்.

பிரசித்திப் பெற்ற விஷ்ணுபுரி வித்துவான்கள் வந்திருக்கிறார்கள்; ராமகதை கூறப் போகிறார்கள் என்ற பேச்சு எங்கும் நிலவ ஆரம்பித்தது.

சுகோதயம் நகரில் அன்று இரவு அதிகக் கூட்டம் கூடிவிட்டது.

Edited By A.K

வயோதிக வேடத்தில் மேடையில் இருந்தான் ராம கம்பீரன். தாளம் கொட்டுவது அவனது வேலையாக இருந்தது.

இரவில் ராம கதை மிகக் கோலாகலமாக முடிந்தது. நல்ல பாராட்டு கிடைத்தது. பலரும் வந்து அந்தக் குழுவைத் தழுவிக் கொண்டார்கள்.

அடுத்த நாளே அவர்கள் எதிர்பார்த்த உத்தரவு அவர்களுக்குக் கிடைத்தது.

ராஜ அரண்மனையில் இரண்டாவது கட்ட முற்றத்தில் 'ராமகதை' கூறுவதற்காக அரண்மனை அழைப்பு வந்து விட்டது.

அதைத்தான் கம்பீரனும், லட்சுமணதாசனும் எதிர்ப் பார்த்திருந்தார்கள்.

நகரின் அருகே உள்ள மேனாம் நதியில் படகு ஒன்றில் அவர்கள் அப்போது தங்கி இருந்தார்கள்.

இரவில் பேசிக்கொண்டிருந்த போது, கம்பீரனுக்கு அழுகை வந்தது. தனது தாயாரைப் பார்ப்போமோ, எந்த நிலையில் பார்ப்போம் என்று அவன் மனது அரித்துக் கொண்டிருந்தது.

# 29

"லட்சுமணதாசா! அரண்மனையில் என் தந்தையாரையும், தாயாரையும் அண்ணனையும் கைப்பிடிக்குள் வைத்துக்கொண்டு இந்த சுந்தரபாண்டித்தேவரும், ஒற்று சுப்பிரமணியனும் தங்கள் இஷ்டப்படி ஆட்சி செலுத்தி வருகிறார்கள்! இது உலகுக்குத் தெரியாது!" என்றான், கம்பீரன்.

"ஆமாம்! ஏன், எனக்குக்கூட அது தெரிய வந்ததில்லை! இப்போது நீ கூறிய பிறகுதான் எல்லாமே தெரிந்தது! எனது அருமை அண்ணனார் ஸ்ரீராமதாசர் ஆற்றில் இறக்கவில்லை. கிடங்கில் அடைபட்டுக்

Edited By A.K

கொடுமையாக இறந்தார் என்பதும் உன்னால்தான் தெரியவந்தது!'' என்றான் லட்சுமணதாசன்.

''நான் தப்பித்ததனால் எல்லாம் தெரிய வருகிறது! இன்னொன்றும் இப்போது யோசிக்கிறேன்! விஷ்ணு லோக நாட்டிலிருந்து ஒரு பெண்ணை நான் கல்யாணம் கட்டி ஆகவேண்டும் என்று என் தந்தை எனக்கு ஆணை இட்டாரே, அந்த விஷயத்தில் என்னைப் பலாத்காரப் படுத்துவதற்காக வாளை ஓங்கிக் கொண்டு வந்தாரே, அதெல்லாம் கூட அவரது சொந்தச் செயல்கள் அல்ல; பின் புலனாக சுந்தரபாண்டித்தேவர் இருந்து காரியங்களை நடத்தியிருக்கிறார் என்று இப்போதுதான் புலனாகிறது. ஏனெனில், என் தந்தை என்னைப் பெரிதும் மதிப்பவர்! என் விருப்பத்திற்கு எதிராகப் போகமாட்டார்!'' என்றான் கம்பீரன்.

''அப்படித்தான் இருக்க வேண்டும்! அந்த சுந்தரப் பாண்டித் தேவரின் ஆதிக்கம் அரண்மனையில் வெகு காலம் முன்னரே வந்திருக்க வேண்டும்!'' என்றான் லட்சுமண தாசன்.

''அது மட்டுமல்ல, லட்சுமணதாசா! உண்மையில் என் தந்தை என் அண்ணனைத் தவிர்த்து எனக்குப் பட்டம் கட்ட விரும்பினார். என் அண்ணனும் அதை மனப் பூர்வமாக ஆதரித்தார். ஆனால் அந்தத் தந்தை எப்படி மனம் மாறினார் என்பதை அதிசயத்துடன் யோசித்திருக்கிறேன். அதற்கும் இப்போது விடை கிடைத்துவிட்டது! எல்லாமே இந்தப் பாண்டித்தேவரும், ஒற்றுசுப்பிரமணியனும் சேர்ந்து செய்து வந்த வஞ்சகச் செயல்'' என்றான் கம்பீரன்.

மறுநாள் முன்னிரவு!

அரண்மனை இரண்டாவது கட்ட முற்றத்தில் கூட்டம் கூடிவிட்டது.

Edited By A.K

அரண்மனையில் ஊழியப் பரிவாரங்களும், அதிகாரி களும், அவர்கள் குடும்பங்களும் மகிழ்ச்சி நிறைந்த முகங் களுடன் கூடிவிட்டார்கள்.

வயோதிக உருவில் கம்பீரன், அந்தச் சிறிய மேடை யில் வந்து அமர்ந்தான். அவனால் கண்ணீரை அடக்க முடிய வில்லை!

அந்த முற்றத்தில் அவன் எத்தனை நாட்கள் உலாத்தி யிருப்பான்! தந்தை தாயார்களோடு எத்தனை நாட்டியங் களையும் பார்த்திருப்பான்! ஜால வித்தையிலிருந்து சங்கீதம் வரை எத்தனை வித கேளிக்கைகளைக் கண்டு மகிழ்ந் திருப்பான்!

முற்றம் சற்று விசாலமானது! சுற்றிலும் கட்டடங் களின் நடை ஓடியது! மேலே வானமும் நட்சத்திரங்களும் தெரிந்தன.

கதை ஆரம்பித்தது. பாடகர்கள் பாட ஆரம்பித்தார்கள். கம்பீரன் முகத்தை மெல்ல மெல்லத் தூக்கி, சுற்றி வரவும் பார்க்க ஆரம்பித்தான்.

வழக்கமாக அது போன்ற கேளிக்கைகளில் வலது புறத்து வரிசையில் முன்னணியாக அரச குடும்பத்தினருக் காக ஆசனங்களைப் போட்டிருப்பார்கள்.

இப்போது ஆசனங்களைக் காணவில்லை. அப்படியா னால் அவனது தாய் தந்தையர் வரமாட்டார்களா?

கதைக்குக் களை கட்டத் தொடங்கியது! கூட்டத்தினர் மெய்மறந்து கை தட்ட ஆரம்பித்து இருந்தார்கள்! சந்தோஷத் தில் கூச்சல் போடவும் ஆரம்பித்தார்கள்.

கம்பீரன் அருகில் முண்டாசு கட்டிய லட்சுமணதா சனிடம். "ஏன் மகாராஜா வரவில்லை? மகாராணி எங்கே? பட்டம் கட்டின அண்ணனாரைக் காணவில்லையே, எங்கே?" என்று கேட்டான்.

Edited By A.K

''அவர்கள் முற்றத்திற்கு வரவில்லை. அதோ, அந்தக் கட்டடங்களில் அமர்ந்து பார்க்கிறார்கள் என்று நினைக்கிறேன்'' என்று கூறினான் லட்சுமணதாசன்.

கட்டடங்களைப் பார்க்க ஆரம்பித்தான் கம்பீரன்! கட்டடங்களில் சில இடங்களில் வெளிச்சம் மங்கலாகத் தெரிந்தது. யாரையும் அவனால் பார்க்க முடியவில்லை.

கதை கடைசிவரை சென்று பட்டாபிஷேகத்தில் முடிந்தது. கூட்டத்தினர் எழுந்து நின்று கைதட்டினார்கள்.

பின்னர் கலைந்த கூட்டத்தினர் முற்றத்திலும், நடையிலும் கம்பீரனால் தன்னைக் கட்டுப்படுத்தியிருக்க முடியவில்லை.

அவசர அவசரமாக நடையில் ஏறி, ஒவ்வொரு வெளிச்சப் பகுதிகளாகப் பார்க்கத் தொடங்கினான்.

தாயாரைப் பார்க்க வேண்டும் என்று நினைத்த அவசரத்தில், தன் சுயபாதுகாப்பை அவன் மறந்து விட்டான்.

# 30

நீண்ட காலத்திற்குப் பிறகு ஒரு தாயாரைப் பார்க்காமல் மகன் இருக்க முடியுமா?

ஊகும்! நிச்சயம் இருக்க முடியாது! அதுவும் ராமகம்பீரன் போன்ற கடமை மிகுந்த மகன் இருக்க முடியாது!

அந்தப்புரத்து முற்றத்தில் ராமகதை நடந்தபோது, அவன் மனசுகள் உணர்ச்சி பிரவாகங்கள் பொங்கிய வண்ணம் வந்தன. கண்ணீரை அவனால் அடக்கக்கூட முடியவில்லை. முகத்தைத் துடைப்பது போல் கண்ணீரை அவன் துடைப்பதை அருகிலிருந்த லட்சுமணதாசன் அடிக்கடி கவனித்தான்.

'ஆ! அரண்மனையுள் இந்தக் 'கதை' ஏற்பாட்டை ஏற்றது தவறு! இப்போது இளவரசர் தன்னைக் காட்டிக் கொடுக்கும் தவிதவிப்பில் இருக்கிறாரே' என்று நினைத்தான்.

Edited By A.K

ஒன்று இரண்டு தடவை ராமகம்பீரனின் கைகளை நிமிண்டி 'எச்சரிக்கை' என்று தாழ்ந்த குரலில் சொல்லியும் பார்த்தான்.

கம்பீரன் கண்கள் அங்கே கூடியிருக்கும் பரிவாரக் கூட்டத்தைத் தாண்டி, வெறுமையாகக் கிடக்கும் தாழ்வாரத்தில் ஓடியது!

எங்கே அவன் அம்மா! எங்கே மகாராணியார்? அவருக்கு உடம்பு சரியில்லையா? எந்த அறையில் அவர் இருக்கிறார்?

ராணி எப்படியும் நல்ல பாதுகாப்பில் இருக்கிறார் என்பது அவனுக்கு நன்கு தெரியும். பாதுகாப்பு என்றால் அது ஒருவிதச் சிறைதான்! தன் தாயார் அப்படி ஒரு நிலையில் இருக்கிறார் என்பதை நினைக்க நினைக்க மனம் ஒரு இளந்தளிர் போலத் துடித்தது.

பாட்டுக்காரரோடு தனது அழகான குரலைச் சேர்த்துக் கொண்டு கம்பீரன் எடுப்பாகப் பாடியது, லட்சுமணதாச னுக்கு மேலும் கவலை கொடுத்தது.

பழக்கமுள்ளவர்கள் கம்பீரனது குரலைக் கண்டு பிடித்துவிடுவார்களே என்று பயந்தான்.

உற்ற சமயம் வந்தபோது திடீரென்று பாட்டுக்காரரை நிறுத்தி கம்பீரனே தனது சொந்த கவனமாக நான்கு வரிகளைப் பாடியது ஒரு உச்சசோதனையாகப் போய் விட்டது.

லட்சுமணதாசன் அப்போது மற்றவனிடமிருந்து திடீரென்று ஜால்ராக்களைப் பிடுங்கி, கணீர்கணீர் என்று நாதம் கொட்டி, கம்பீரனது குரலை மூழ்கடிக்க முயன்றான்.

நல்ல வேளை, கதை முடியும் வரை எந்த அசம்பாவிதமும் நடந்து விடவில்லை.

Edited By A.K

இனி அரை விநாடியும் தாமதியாமல் அரண்மனையை மட்டுமல்ல; அந்தத் தலை நகரையே விட்டு ஓடிவிட வேண்டும். இல்லாவிட்டால் ஆபத்து என்று லட்சுமண தாசன் நினைத்தான்.

மங்களம் பாடி கலைந்து எழுந்தபோது, பாராட்டுபவர் களிடையே கொஞ்சம் பேசியபோதுதான், திடீரென்று ராமகம்பீரன் காணாமல் போனது தெரிய வந்தது.

"பரமசிவா! மோசம் போனோமே! எந்தத் தீங்கும் இல்லாமல் எங்கள் இளவரசரை எம்மிடம் திருப்பித் தாருங் கள்!" என்று பிரார்த்தித்துக் கொண்டான்.

கலைந்த கூட்டத்தின் அரவத்துக்கும் நெரிசலுக்கும் இடையே புகுந்து அந்தப்புரத்தின் அந்தரங்கத்துள் கம்பீரன் புகுந்து விட்டான்.

இதயம் பட் பட் என்று அடித்துக் கொள்ள, இருட்டில் கண்களை ஊன்றிப் பார்த்து, ஒவ்வொரு அறையும் கூட முமாக அவன் விரைவாகச் செல்ல ஆரம்பித்தான்.

உள்ளே அத்தனைப் பகுதிகளும் அவனுக்குப் பாராமல் தெரியும். எனவே சுலபமாக ஒரு காற்றைப் போலவே அவனால் எங்கும் நுழைந்து போக முடிந்தது.

"அம்மா! அம்மா! எங்கிருக்கிறாய்?" என்று மனம் விம்மிக் கொண்டு கேட்டது.

அதே நேரம் மனசில் ஒரு எச்சரிக்கை மணி, "இந்தா! எல்லாப் பாதுக்காப்பையும் புறக்கணித்துவிட்டு உள்ளே போகிறாய்" என்று பயம் காட்டியது.

எதையும் அவன் பொருட்படுத்தவில்லை! அவனுக்குள் ஒரு வெறி கிளர்ந்து இருந்தது. என்னவானாலும் சரி, தாயாரைப் பார்த்தாக வேண்டும்.

அவன் காலடிகள் சர சர என்று தாமாகத் தடம் பிடித்துச் சென்றன. அந்தப்புரம் பாதி இருட்டாக இருந்தது.

Edited By A.K

கடைசியாக அந்தக் கூடத்தைப் பார்த்ததும் திக் என்று மனம் அடித்தது. காலடிகள் மெதுவாகின. ஏதோ புனிதத் துள் போவது போல தன் புலன்களை எல்லாம் நிசப்தத்தில் அடக்கி உள்ளே சென்றான்.

நட்டநடுவில் கிடந்த மஞ்சத்தின் மீது ஒரு உலகம் ஒரு நூல் கீற்று போல் கிடந்தது.

அவனுக்குச் சிறிது நேரம் பிடித்தது, அது அவனது தாயார் என்று புரிந்து கொள்ள!

அவள் தலை எல்லாம் தும்பை வெள்ளையாக நரைத்துக் கிடந்தது. கண்கள் ஆழத்தில் விழுந்து எதையும் சிரத்தை இல்லாமல் நோக்கிக் கொண்டிருந்தன.

உணர்ச்சிகள் பொங்கிவர, நடுங்கும் மேனியோடு கம்பீரன் நின்றான்.

''அம்மா'' என்று மெல்லிதாக அவன் குரல் தழுதழுப் புடன் உச்சரித்துக் கொள்ள, அங்கிருந்த ஒரே வயோதிகத் தாதி மட்டும் அவனை ஏறிட்டுப் பார்த்தாள். தட்டிலில் மகாராணியார் மெலிந்த உடலோடு நீட்டிப் படுத்திருந்தாள். நெற்றியில் மருந்து பூசப்பட்டிருந்தது. இரு கண்களும் குழி விழுந்து, கன்னம் வற்றி எலும்பு தெரிய பாதி இறந்து போனவளாகத் தென்பட்டாள்.

''அம்மா'' என்று தன்னையும் மீறி அழைத்து மஞ்சத்தின் அருகில் மண்டியிட்டு அமர்ந்து, அன்னையின் மெலிந்த நரம்புகள் தெரிந்த கைகளைப் பற்றினான்.

மகாராணியின் பார்வை மெதுவாகச் சலனமிட்டுத் திரும்பியது. கம்பீரன் முகத்தின் மீது சிரத்தையில்லாமல் லயித்தது. கம்பீரனின் இதயமோ படபடத்தது. மெல்லிய, மன்றாடும் குரலில், ''அம்மா! அம்மா! நான்தான்! உன் மகன்! ராமகம்பீரன்! என்னைப் பாரம்மா.....பாரம்மா!'' என்றான்.

Edited By A.K

மகாராணியார் பார்த்துக் கொண்டே இருக்க, பார்வையில் எந்த மாற்றமும் இல்லை. ராமகம்பீரன் என்று அவன் கூறியதும் அவள் கண்களின் கருவிழி சுருங்கி அவனைப் பார்த்தது.

ஆகாயம் வெளிர்வது போல நெற்றியில் திடீர் வெளிர்வு ஏற்பட்டது. சுருக்கம் விழுந்த உதடுகள் பிரிந்து ஏதோ சொல்வது போல் தோன்றின. ஆனால் சப்தம் எதுவும் வரவில்லை.

"கம்பீரன் அம்மா! நான் ராமகம்பீரன்!" என்றான், மீண்டும் வற்புறுத்தி!

தாயார் ஒரு முயற்சி எடுப்பது போல் தோன்றியது. 'ஆ' என்ற ஒரே ஒரு ஒலி அவள் வாயிலிருந்து குழறி வந்தது. 'கம்பீரா' என்ற அழைப்பின் கடைசி ஓசைதான் என்று அவனுக்குத் தெரியும். அவனுக்கு அது பழக்கப்பட்டது.

அவன் மயங்கி நிற்க, அதற்குள் நுண்ணிய காலடி ஓசைகள் அவனை ஒரு முறை உலுக்கி விட்டன. விருட்டென்று எழுந்தவனாக, தாயாரின் காலடிகளைத் தொட்டு வணங்கிவிட்டு அவசரமாகத் திரும்பினான்.

சுற்றிவர அலிகள் வாளும் வேலுமாக வாயிலை அடைத்து நிற்பது அவனைத் திடுக்கிட வைத்தது, ஒரு சுடூர முகத்து அலி, வாளை உறுவிய வேகத்தில் உள்ளே வந்தான்.

"தப்ப முயலாதே! மரியாதையாய் கட்டளைக்குக் கீழ்ப் படிந்து நட!" என்று ஒரு கடுமைக்குரல்.

கடந்த ஒரு நாழிகை வரை அவனது இயல்பான மனம் வேலை செய்யாததை அப்போதுதான் கம்பீரன் உணர்ந்தான்.

இப்போது தப்புவது கடினம்! வெளி நடை முழுதும் அலிகள் நிற்பது தெரிந்தது.

என்னதான் சாமர்த்தியம் காட்டினாலும் இத்தனை பேர்களையும் வெல்வது கடினம். அதே சமயம் இவர்களிடம் அகப்பட்டால்....

அவனது யோசனைக்கு இடமில்லை. அதற்குள் அலிகள் அவனை நெருங்கிச் சூழ்ந்து கொண்டார்கள். கண் இமைப்பதற்குள், அவன் இடுப்பில் இருந்த வாள் பறிக்கப்பட்டது. கைகளும், கால்களும் இறுகப் பிடிக்கப்பட்டன. அப்படியே ஒரு பதுமை போல அவனைச் சாய்த்தார்கள். அத்தனை பேருமாகத் தூக்கிக் கொண்டு தாழ்வார வழியே அவனை எடுத்துச் சென்றார்கள்.

கண்களையும், கைகளையும் கட்டி எங்கேயோ கிடத்தியிருப்பது தெரிந்தது.

அரண்மனையை விட்டு வெளியே செல்லவில்லை என்பது நன்றாகத் தெரியும். எங்கே அவனை வைத்திருக்கிறார்கள்? அது புரியவில்லை.

மனத்தில் வீரம் சற்றும் குன்றாமல் இருந்தும், அந்த வேளையில் இரைபோல் அகப்பட்ட அந்தத் தருணத்தில் வேறு எதையும் அவன் மனம் நினைக்கவில்லை.

மீண்டும் அகப்பட்டோமே, மீண்டும் அதே நரக வாழ்வு வாழப் போகிறோமே என்று தோன்றியது.

இந்த முறை ஏமாறமாட்டார்கள்! தனியாக ஒரு கிடங்கே அவனுக்கு உற்பத்தி செய்வார்கள். அல்லது, அவனைக் கிடங்கில் தள்ளாமலேயே யமலோகம் அனுப்பி விடுவார்கள்.

முன் பின் யோசியாமல் இப்படி அகப்பட்டுக் கொண்டோமே என்று எண்ணினான்.

இரவு எந்த வேளை என்று அவனுக்குத் தெரியாது! தூக்கமே அவனுக்கு வரவில்லை.

Edited By A.K

"தவறு! பெரும் தவறு நேர்ந்துவிட்டது" என்று அரற்றினான் லட்சுமணதாசன்!

எல்லோரும் அரண்மனைக்கு வெளியே வந்து அவரவர் குதிரைகளை சாடி, ராஜ வீதிக்குள் பறந்தார்கள்.

இருட்டு மை போல எங்கும் இழைந்திருக்க, நகரம் ஊழி நிசப்தமாகி இறந்தது போல கிடந்தது. குதிரைகள் எங்கும் ஓசைகளை உண்டாக்கி வீதிகளில் பறந்து கொண்டிருந்தன.

நகரத்தின் வெளிப்புறம் தோப்பு மயமான பிரதேசத்தில் வந்த பிறகுதான் லட்சுமணதாசன் அந்த விஷயத்தைக் கவனிக்க நேர்ந்தது.

அவர்கள் குழுவின் மத்தளம் கொட்டும் நடேசனைக் காணவில்லை.

"எங்கே நடேசன்?" என்று குதிரையை அடக்கி நிறுத்தி ஒரு கேள்வியைப் பறக்க விட்டான்.

அத்தனை சகாக்களும் தலைக் கயிற்றை இழுத்து குதிரைகளை நிறுத்தினார்கள். ஒருவரையொருவர் பார்த்தார்கள்.

'நடேசன்... நடேசன்' என்று ஒருவரையொருவர் கேட்டுக் கொண்டார்கள்.

லட்சுமணதாசன் முகத்தில் கடுமையும் குரோதமும் ஏறுவதை அவர்கள் கண்டு கொண்டார்கள்.

"ஓ! அவன்தான் நமது துரோகியா? என்று பற்களைக் கடித்தவாறு கேட்டான், லட்சுமணதாசன்.

அத்தனை சகாக்களும் கல்போல் சமைந்து நின்றார்கள்.

"நடேசனை யாரும் பார்க்கவில்லையா?" என்று திரும்பவும் கேட்டான் லட்சுமணதாசன்.

"சுவாமி! யாரும் அவனைக் கவனிக்கவில்லை எங்களுடன் வெளியே வந்தார்" என்றான் ஒருவன்.

Edited By A.K

லட்சுமணதாசன் தனது சினத்தை அடக்கிக் கொண்டான்.

"நல்லது! குதிரைகளை நாம் கம்பாங் கிராமத்தில் விட வேண்டாம்! நாம் அங்கே குதிரைகளை இரவல் வாங்கினது நடேசனுக்குத் தெரியும்! இவனிடம் விஷயத்தை தெரிந்து கொண்டு எதிரிகள் இதற்குள் அந்தக் கிரமாத்திற்குப் போயிருப்பார்கள்!" என்றான். குதிரைகளை மரங்களில் கட்டினார்கள். ஓட்டமும் நடையுமாக மேனாம் நதியின் கரை யைத் தேடி விரைந்தார்கள்.

அந்தப் பிரகாசமான அறை ராமகம்பீரனின் கண்களைக் குத்தியது.

இதற்குள் அவனது வயோதிக வேடத்தை எல்லாம் கலைத்துவிட்டிருந்தார்கள்! அவனும் அவனது குறுந்தாடிய ,மாக நின்றான். அவன் அறையில் நிசப்தமாக இருந்தது.

அருகில் யாரோ வரும் காலடி ஓசைகள் கேட்டன.

யாரோ ஒரு எதிரி!

அவனை ஏதோ செய்யப் போகிறார்கள்!

'இப்படிப் பைத்தியக்காரத்தனமாக அகப்பட்டோமே! அதுதான் விதியோ?' என்று நினைத்தான்.

இவர்கள் பிடியிலிருந்து மீளுவது கடினம் என்று உறுதியாகத் தோன்றிய சமயம், அருகே அவன் அண்மையில் "இளவரசரே!" என்று யாரோ அழைப்பது போலிருந்தது. அதில் நளினமும் நையாண்டித்தனமும் இருந்தது.

திடுக்கிட்டான் அவன்; ஏனெனில் அது பெண்குரல்!

Edited By A.K

# 31

**...... கம்பீரன் மெல்ல உள்ளே கால் வைத்து இறங்கினான். அவன் கீழே தணிந்ததும் உடனேயே மேலே மூடிவிட்டது. கப்பிய இருள் சூழ்ந்து கொண்டது. வெளியே பெட்டகத்தின் நாதங்கிகள் கொண்டியில் பூட்டப்பட்டு விட்டன. 'பைத்தியம்! ஒரு பெண்ணின் பேச்சைக் கேட்டு வசமாக அகப் பட்டாயே!' என்று மனசு கெக்கலி கொட்டியது......**

**யா**ர் அந்தப் பெண்?

அவனை ''இளவரசே!' என்று தெரிந்தவள் போல அழைத்தாளே! அப்படியானால் அவளுக்கு அந்த கம்பீரனை அடையாளம் தெரிந்து விட்டதா?

சங்கடத்தில் அகப்பட்டுக் கொண்டோமே, மறுமொழி சொல்லவா, வேண்டாமா என்று நினைத்தபோது, ஒரு இளம் கை அவன் கரத்தைப் பற்றியது! அவனை அழைத்துக் கொண்டு அடுத்த கட்டுக்குள் நுழைவது தெரிந்தது! அங்கே வெளிச்சம் குறைவாக இருப்பதை உணர முடிந்தது.

அவன் குழம்பி நிற்கும்போது, அவன் கண்களின் கட்டை இருவர் அவிழ்த்து விட்டார்கள்!

முழுதும் அவிழ கண்களுக்கு அந்தச் சொற்ப வெளிச்சம் கூடச் கூச்சம் கொடுத்தது.

கண்ணைப் பலமுறை சிறகடித்து விட்டு ஒரு நிதானத்துக்குக் கொண்டு வந்தபோது அந்தச் சித்திர வேலைப் பாடு உள்ள அறை ஒரு கனவு நிஜம் ஆவது போல் தோற்றம் எடுக்க ஆரம்பித்தது.

எதிரே ஆசனத்தில் இருபத்தெட்டு வயது மதிப்பில் இளம்பெண் ஒருத்தி நல்ல அழகுடன் அமர்ந்திருந்தாள்

அவளது புன்னகை ஒரு நெருப்புப் பொறி போலத் தெரிந்தது. கன்னங்கள் உலையிலிட்ட உலோகம் போல

Edited By A.K

ஜொலித்தன! அவளது மேனி முழுதிலுமே ஒரு அபிநய மான கலை ஓடியிருந்தது.

அவன் அவளைப் பார்ப்பதை விட, அவள் அப்படியே அவன் கண்களில் கண் பதித்து, லயித்துப் போன வண்டு போல் அப்படியே கிடந்தாள்.

''யார் இவள்? என்னை எப்படித் தெரிந்து கொண்டாள்?'' என்று நினைக்க, அவள் பார்வையின் தாகம் குறையாமல் மேலும் சிறிது நேரம் ஓடியது. பிறகு பட்டு போன்ற மெல்லிய இழையில், ''இளவரசே!'' என்று சொல்லி எழுந்து வந்தாள்.

அவனுக்குப் பின்னாலிருந்த சேடிகள் அறையை விட்டு வெளியே போனார்கள்.

''வாருங்கள்! அமருங்கள்! உங்களை வாழ்க்கையில் என்னால் திரும்பக் காண முடியுமா என்று ஏங்கிப் போய் விட்டேன்! உங்களுக்காகவே என் கண்கள் தவமிருந்தன! என் உயிரும், ஊனும், உடலுமே தவமிருந்தன. நீங்கள் என்னை அறிந்திருக்க மாட்டீர்கள்! ஆனால் உங்களை நான் நன்கு அறிவேன்! தங்களைப் போன்ற இள அழகும், யௌவனும், வசீகரமும் நிறைந்த ஆடவர். அதுவும் அரச வம்சத்து ஆடவர் என்னைப்போல ஒரு ஏழையை, அனாதையை எந்தப் பிரபலமும் பெறாத ஒரு அற்ப ஆத்மாவை எங்கேயாவது ஏறிட்டுப் பார்ப்பார்களா? அதை இந்த ஏந்திழை எதிர்பார்க்க முடியுமா! முடியவே முடியாது!''

உணர்வுடன் இழைத்துப் பேசி அவள், மெல்ல நடை இட்டு வந்தாள்!

யார் இவள்? இன்னும் தெரியவில்லையே!

''கைக்கட்டு இன்னும் அவிழ்க்கவில்லைதான்! எனினும் இப்படி வந்து அமருங்கள்!'' என்று அவனை அருகி லிருந்த ஆசனத்தற்கு அழைத்துச் சென்றாள்.

Edited By A.K

"என் மனக் கட்டில் அகப்பட்டவர் தாங்கள்! இருந் தாலும் கைக்கட்டு போட்டுத்தான் உங்களை இங்கே கொணர முடிந்தது! இல்லையா?"

கொஞ்சல் போல் உள்ளம் அத்தனையும் குழைத்து மெதுவாகப் பேசினாள் அவள்.

அவள் தொனியில் சுரக்கும் தாபத்தைப் பார்த்து, நிமிர்ந்து அவளை ஒரு முறை கம்பீரன் பார்த்தான்.

நீண்டு வழிந்த அவளது கண்களில் மினுமினுப்பு ஒளி கூடியிருந்தது. அது அத்தனையும் அவள் கண்கள் ஈரம் ஆன தால் வந்தது என்று தெரிந்தது. அவனுக்குத் திகைப்பு ஏற்பட்டது.

மனசுள் லேசாக சிறிதளவு இரக்கமும் கசிந்தது.

"அம்மணி! தாங்கள் யார்? ஏன் இதுபோலெல்லாம் என்னிடம் பேசுகிறீர்கள்? நீங்கள் என்னைத் தவறாக யாரோ என்று நினைக்கிறீர்கள்! நான் சாதாரண 'இராப்பாடி!' பாடிக் கதை சொல்வது என் பழக்கம்! எளியவனை ஏன் இதுபோலக் கட்டினீர்கள்? இங்கே கொணர்ந்தீர்கள்?" என்று பவ்வியமான குரலில் தழுதழுப்புடன் கேட்டான் அவன்.

"உம்..... உம்! இளவரசே! இளவரசே! தாங்கள் அப்படித்தானே தப்பிக்கும் காரணங்களைச் சொல்லுவீர்கள். எனினும், எங்களுக்குத் தெரியாதா! அதுவும் அரண்மனை யில் உங்கள் பணிப் பெண்களில் ஒருத்தியாக, ஒரு சேடியின் பெண்ணாக, நிழல் போல ஒருவருக்கும் உறுத்தாத வாழ்க்கை வாழ்ந்தவள் நான்! என் பதினான்காம் வயதில் தங்களை முதன் முதலாகப் பார்த்தேன்! அப்போதுதான் என் வாழ்க் கையில் பெருமூச்சு என்பதை முதன் முதலாக அறிந்தேன். ஏக்கத்தின் முதல் துளிரை என் மனத்தில் அப்போதுதான் பார்த்தேன். தாபத்தின் முதல் தணலை அப்போதுதான் என் னுள் ஸ்பரிசித்தேன். என் இன்பம் என்பது என்னிடம்

Edited By A.K

தோன்றுவது மட்டுமல்ல; அதில் பாதி இன்னொருவரிடம் இருந்தது என்று அறிந்தேன். அந்தப் பாதியை மற்றவர் தந்தால்தான் பெற்றுக்கொள்ள முடியும் என்பதை அறிந்தேன்.

ம்ம்—அந்த நாட்களை நான் மறக்க முடியுமா! நாட்கள் அல்ல அவை! ஏக்கம்! வெறும் ஏக்கம்! நீங்கள் விருட்டென்று எங்கேயாவது நடையிலோ, தாழ்வாரத்திலோ, மாளிகைப் படிகளிலோ போவதை ஒரு மாத்திரைக் கணமாவது பார்க்க வேண்டும் என்று எத்தனை துடித்திருப்பேன்! முள் போன்ற அந்த நினைவுதான் அல்லும் பகலும் என்னைக் குத்தியது! என்னால் அந்த வேதனைகளை இன்னும் கூட மறக்க முடியாது! தலைமைத் தாதிகளில் என் தாய் ஒருத்தி! அவளோடு தினமும் அந்தப்புரம் வந்து அவளுடன் சேர்ந்து பரிவாரப் பணிகளில் ஈடுபடுவேன்! ஓ! வெறும் ஜீவிதத்திற்காக நான் அதை அப்போது செய்யவில்லை. என் ஆன்மா வாழ்வதற்காகச் செய்தேன்!''

கண்களைப் பெரிதாக்கிக் குரலை வெகு அக்கறை காட்டும் பாணியில் குறைந்த ஸ்தாயியில் வயிக்க விட, அவள் வாய் பேசவில்லை, அவள் இதயமே பேசுகிறது என்று தோன்றியது.

ராமகம்பீரனது உள்ளம் இன்னும் வியப்பிலிருந்து மீளவில்லை!

யார் இவள்! இன்னும் தெரியவில்லையே! அரண்மனையில் நூற்றுக்கணக்கில் சேடிகள்! இவள் யாராக இருப்பாள்? யாராக இருந்தாலும், அவளைக் குறித்து நினைவு வைத்துக்கொள்ள அவனுக்கு சாத்தியம் இல்லை.

ஆனால், ஆச்சரியம்! அவனை யாரோ ஒரு பெண் மனதுள் நினைத்து ஒரு கனவு உலகத்தை வளர்த்து வந்திருக்கிறாளே! ஆச்சரியம்!

சரி, இவள் யார்? என்னை எப்படிப் பிடித்து வைத்திருக்கிறாள்? அதற்குரிய தைரியமும் அதிகார பலமும் எப்படி

Edited By A.K

இவளிடம் வந்தது? ஏன் இவள் என்னிடம் இவ்வளவு நைச்சியமாகப் பேசுகிறாள்! இதன் பின்னால் ஏதாவது சூழ்ச்சி இருக்குமோ!

அவளை மீண்டும் ஒரு முறை பார்த்தான் கம்பீரன்.

திரும்பவும் வியப்புதான் அவனுக்கு.

அவள் முகம் முழுதும் ஒரு பரவசம் பூசி இருந்தது. சந்திரிகை ஒன்றின் பழுத்த மினிர்வு கன்னங்களில் வழிந்தது. பிரமையோ, கனவோ காண்பது போல் ஒரு அற்புதச் சுடர்வு முகத்தில் கனன்று கொண்டே இருந்தது.

"உங்களிடம் நான் நிறையப் பேசியிருக்கிறேன் தெரியுமா? நிறைய்ய்ய! உங்களோடு சல்லாபித்திருக் கிறேன்! சயனித்திருக்கிறேன்! அணைத்திருக்கிறேன்! முத்தம் வழங்கியிருக்கிறேன். முத்து முத்தாக சரசம் ஆடியிருக் கிறேன். மோகத்தால் உங்களைத் துவம்சம் செய்திருக் கிறேன்....ஆமாம்! ......அத்தனையும் செய்திருக்கிறேன். என் கனவில். என் கற்பனையில். உங்களை அன்றி என் மனத்தில் வேறு யார் மீதும் இம்மியளவு ஈடுபாடு கிடையாது! நீங்கள்தான் என் மனசெல்லாம், அல்ப இடமில்லாமல் நிறைந்திருக்கிறீர்கள்.."

பெருமூச்சு ஒன்று அவளிடமிருந்து அவிழ்ந்து ஓடியது.

"ஆனால்— ஆனால்— அந்த நாளில் நான் இது போல் இப்போது உங்களைச் சந்திப்பேன், பேசுவேன் என்று கனவில் கூட எண்ணியதில்லை. உங்களை நெருக்கமாகப் பார்ப்பேன் என்று கற்பனையில் கூட நினைத்ததில்லை! என் மோகம் எல்லாம், என் பிரேமையெல்லாம் என் களங்க மில்லாத நேசமெல்லாம் வெறும் கனவுகளாகவே மறையப் போகிறது, அழியப் போகிறது, சுவடு இல்லாமல் கரைந்து விடப்போகிறது என்று எண்ணி வந்தேன். ஆனால் என் அதிர்ஷ்டம் என் முன் வினை, என் தவப் பயன்— தங்களை இங்கே நான் ஒரு தனி இடத்தில் பார்த்து, தனிமையாகப்

பேசச் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. இது ஒன்று போதும் என் வாழ்க்கைக்கு— ஆமாம். அது போதும்— அது போதும்."

திரும்பத் திரும்ப அவள் அந்த வார்த்தைகளைக் கூறினாள். இதயம் குலுங்கி அந்த வார்த்தைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு பொறுமலாக வந்து வீழ்ந்தன.

ஆச்சரியமும் சங்கடமும் மிகுந்தவனாக அவளைப் பார்த்திருந்தான் கம்பீரன்.

அவள் நிமிர்ந்து நோக்கி, "இளவரசே! நானும் பேசியவையும் உங்களுக்குப் புதிராகத் தெரிவோம்!... நான்பாட்டில் என் உணர்ச்சிகளை வரி வரியாக ராமாயணம் வாசிக்கிறேன்... அதை இதோ விடுவிக்கிறேன். அருமை இளவரசே! எனக்கு இந்த சந்தர்ப்பத்தை அளித்ததற்காக சிவபிரானுக்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன். இளவரசே, தெரியுமா? உங்கள் அரண்மனையிலேயே இருந்த அரசாங்கச் சூழ்ச்சிதான் உங்களை இங்கே பந்தப்படுத்தி என் முன்னால் கொண்டு நிறுத்தி வைத்திருக்கிறது....." என்றாள் அவள்.

"அம்மணி! இவ்வளவு வாஞ்சையாகப் பேசுகிறீர்களே, ஆனால் இன்னும் கூடச் சொல்கிறேன், நான் யார் என்று என்னைப் புரிந்து... கொள்ளவில்லை..." கம்பீரன் சொல்லும் போதே, "நிறுத்துங்கள்! நீங்கள் உங்கள் உடம்பை மறைத்துக் கொள்ளலாம்! உங்கள் குரலை மறைத்துக் கொள்ள முடியுமா? உங்கள் குரலை என் மனசில் பதிவு செய்து பூஜை செய்பவள் நான்! அதை மனசில் நினைத்து நினைத்து அந்தரங்கத்துள் சக்கரம் போட்டு ஸ்தாபிதம் செய்தவள் நான். அந்த நான்கு வரி பாடினீர்களே! 'தாயைப் பிரிந்து காடு செல்வதுதான் கஷ்டம்' என்று ராமன் கூறுவது போல் பொருளில் பாடினீர்களே! அதை அந்தப்புரத்தில் நீங்கள் பாடி எத்தனை முறை நாங்கள் கேட்டிருக்கிறோம்! எத்தனை முறை அலமந்திருக் கிறோம்! அதை நான் பாடவில்லை என்று சத்தியம் செய்து சொல்வீரா?..."

Edited By A.K

ஒரு முறை கண்ணை வாள் போல் சுழற்றி அவன் பார்வையுள் அழுத்தி நோக்கினான்.

''உங்கள் தாயார் மகாராணியார் 'இது என் மகன் கட்டிய பாட்டு' என்று எத்தனை முறை பெருமையுடன் எங்களிடம் கூறியிருக்கிறார். அதை இல்லை என்று சொல் லுங்கள் பார்க்கலாம்.....! இதோ யாரும் இளவரசரே! நீர் இப்போது சரியான இக்கட்டில் மாட்டியிருக்கிறீர்கள்! அதைப் புரிந்து கொள்ளும். தங்கள் தாய்ப் பாசத்தால் ஏற் பட்ட வினை இது! இதிலிருந்து மீள்வது கடினம். ஆனால் உங்களை நான் மீட்கலாம் என்று வந்துள்ளேன். என்னை நம்புங்கள்! நான் மீட்கிறேன் என்று சொல்வதைவிட உங்கள் மீது இருக்கும் என் காதலே உங்களை மீட்கிறது என்று நினையுங்கள்! ஆமாம்..... எனக்கு உங்கள் மீது மட் டும் காதல் இருந்திராவிட்டால், நான் உங்களை மீட்க வந்திருக்கவேமாட்டேன்!''

நிறுத்தினாள் அவள். அதற்குள் ஏதோ அரவங்கம் கேட்டு சட்டென்று எழுந்து காதுகளைத் திருப்பினாள்.

அவளிடமே ஒரு பரபரப்பு வருவது தெரிந்தது.

''இளவரசே! இளவரசே!'' என்று அழைத்தாள்.

''இங்கே பாருங்கள்! இங்கே ஒளிந்து கொள்ளுங்கள்!... தயங்காதீர்கள்! சீக்கிரம் ஒளிந்து கொள்ளுங்கள்'' என்று கூறினாள்.

அங்கே பெரிய பெட்டகம், வெள்ளிப்பூண் பிடித்த மூடியுடன் மூலை ஓரம் சுவர்களை நெருக்கி இருந்தது.

''இங்கே! இங்கே'' என்று அவசரமாக அவன் கைகளைப் பிடித்து இழுத்துச் சென்றாள் அவள்.

''பெட்டகத்தின் மூடியைத் திறந்து, இறங்குங்கள்!'' சீக்கிரம்!'' என்றாள்.

Edited By A.K

கம்பீரன் தயங்கினான். பதறி அவன் முன் வந்த அவள், "ஐயா! என் கண்ணீர்தான் என் மனசின் சுத்தத்தை வெளிப்படுத்தும். தயவுசெய்து மன்றாடி வேண்டிக் கொள்கிறேன்! உள்ளே ஒளிந்து கொள்ளுங்கள்! உங்களுக்காக மட்டுமல்ல, எனக்காகவும் கூட!" என்றாள் அவள்.

அவனுக்கு யோசிக்க அவகாசமில்லாது, அவன் உள்ளே இறங்குவதற்கான உதவிகளைச் செய்ய ஆரம்பித்தாள்.

கம்பீரன் மெல்ல உள்ளே கால் வைத்து இறங்கினான். அவன் கீழே தணிந்ததும் உடனேயே மேலே மூடிவிட்டது! கப்பிய இருள் சூழ்ந்து கொண்டது.

உள்ளே பட்டுத் துணிகள் கமகம என்று மணத்தன. சாய்ந்து கொள்வதற்கு அவை மிக இதமாக இருந்தன. வெகு நாட்களுக்குப் பிறகு ஒரு வசதி அவனுக்குக் கிடைப்பது போலத் தோன்றியது. அதே கணம் மனத்தின் ஒரு பகுதி வீசிக்கொண்டு அவனிடம் மல்லாட வந்தது.

"பைத்தியம்! ஒரு பெண்ணுடைய பேச்சைக் கேட்டாயே! வசமாக அகப்பட்டுக் கொண்டிருக்கிறாய்!" என்று நகையோடியது.

மூச்சு பெரிதாக இழைய, மேலே மூடியைத் தள்ளிப் பார்த்தான். ஆனால் அதன் நாதங்கிகள் ஏற்கனவே கொண்டியில் பூட்டப்பட்டு விட்டன.

"கடவுளே—ராமா!" என்று அவன் எண்ணும்போது, காரசாரமான காலடிகள் அறைக்குள் வருவது கேட்டது.

"எங்கே! எங்கே அந்தக் கம்பீரன்! எங்கே அந்தத் துரோகி? எங்கே, எங்கே? என்று ஒரு கர்ஜனை எழுந்து அங்குள்ள நிசப்தத்தைத் தாறுமாறாகக் கிழித்தது. இடி போன்ற குரல் அது!

Edited By A.K

என்ன அசூயையும், ஆத்திரமும் அதில் இருந்தன!

ஆனால் அதை கம்பீரனால் அடையாளம் கண்டு கொள்ள முடிந்தது.

யார்?

அந்த ஒற்றுத் தலைவன் சுப்பிரமணியன்தானே!

எவ்வளவு தழைந்து பேசுவான் அவன்!

தலையைக்கூட நிமிர விட மாட்டானே!

அப்படிப்பட்டவனா கோடை மழைபோல கொட்டிக் கொண்டு பேசுகிறான்.

அ! இந்தச் சமயத்தில் கம்பீரனின் கைகள் கட்டுப் பட்டிருக்கின்றனவே!

அவை மட்டும் திறந்திருந்தால்.....

"என்ன? சொல்லுங்கள்! காஞ்சனா! எங்கே அவன்? எங்கே? என் வாள்தினவு எடுக்கிறது! அவனை ஒழித்தால் தான் எனக்கு நிம்மதி" என்று இரைந்தான் அவன்.

என்ன நடக்கப் போகிறது என்று கம்பீரன் கவலை யோடு கேட்டான்.

நிசப்தம்தான்!

யாரும் பேசவில்லை!

அப்போது காலடிகள் அந்தப் பெட்டகத்தை நோக்கி வருவது தெரிந்தது.

"என்ன பேசாமல் நிற்கிறீர்கள்? சொல்லுங்கள்" என்று மீண்டும் கர்ஜனை!

மீண்டும் நிசப்தம்.

பிறகு, "ஒற்றர் தலைவரே!" என்று ஆரம்பித்தாள் காஞ்சனா.

Edited By A.K

# 32

சிறிது நேரம் ஒற்றுத் தலைவன் சுப்பிரமணியத்துக்கும், சந்திராவதி என்ற அந்தப் பெண்ணுக்கும் விவாதம் நடந்தது.

அந்தப்புரத்துள், அவள் இருப்பிடத்துள் ஒற்றுத்தலைவர் சகஜமாக நுழைந்ததை சந்திராவதி விரும்பவில்லை.

''நீங்கள் வந்தது தவறு. உங்கள் சொந்த அதிகாரத்தைச் செலுத்தி உள்ளே நுழைந்திருக்கிறீர்கள். உடனே நீங்கள் இந்த இடத்தை விட்டுப் போய்விடவேண்டும்!'' என்று வாதித்தாள்.

சந்திராவதியை அப்படி ஒரு ஆத்திரத்தில் சுப்பிரம ணியர் பார்த்ததில்லை! அவரது மீசையும் நெஞ்சும் சேர்ந்து படபடத்தன. கடைவாய்ப் பல்லும் நரநரத்தது.

அது தவறுதான். அவர் உள்ளே வந்திருக்கக்கூடாது தான்! ஆனால் ஒரு எதிரியைத் தேடி வரும்போது சந்திராவதி ஆட்சேபிப்பாள் என்று அவர் எதிர்பார்க்கவில்லை. ஏன் அவள் அப்படிச் செய்கிறாள்?

மனத்தில் ஆத்திரம் ஒன்று கொதித்து, உலைபோல் எரிந்தது.

எனினும், காற்று வேகத்தில் குதிரை ஓட்டுபவன் பெரும் பள்ளத்தைப் பார்த்ததும் கடிவாளத்தை இழுப்பது போல் சுப்பிரமணியரும் தன் நாவிற்கும், கோபத்திற்கும் கடி வாளம் போட்டுக்கொண்டார்.

சேனாபதி சுந்தரபாண்டியத் தேவரின் ஆசை நாயகியிடம் சண்டை சச்சரவு வைத்துக் கொள்ள முடியுமா?

நாட்டை இப்போது ஆள்பவர் அவர்தானே! பயந்தாங் கொள்ளி ராஜகுமாரனை அரசர் பட்டம் கட்டி, பழைய மகாராஜா, ராணி இருவரையும் காவலில் வைத்து இன்றைக்கு நாட்டை ஏகச் சக்ராதிபதியாக ஆள்பவர் சுந்தர பாண்டித் தேவர்தானே!

Edited By A.K

அதுமட்டுமா? இன்னும் சில நாட்களில் பழைய மகாராஜா, மகாராணிகளை விஷம் வைத்துக் கொன்று விடுவார்! அவர்களுக்கு சிகிச்சை செய்கிறோம் என்கிற பெயரில் தனது சொந்த மருத்துவர்களை நியமித்து, சிறிது சிறிதாக விஷம் கொடுத்து வரும் வைபவம் நடந்து வருகிறது! அந்த இருவரும் மெல்ல மெல்ல யமன் உலகத்தை அணுகிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் காரியம் முடிந்த பிறகு, பொம்மை ராஜாவாக இருக்கும் பரமாதித்தனையும் ஏதோ ஒருவிதத்தில் அதே உலகிற்கு அனுப்பிவிடுவார்! பின்னர் சுந்தரபாண்டித் தேவர்தான் நாட்டின் பூபதி...

அப்படிப்பட்ட அவரது ஆசைக் கிழத்தியிடம் தகராறு வைப்பதா?

எனவே தனது வேகத்தை வெகுவாக அடக்கி, குரலை மிக சகஜமாக்கி, "தங்களுக்கு ஆபத்து ஏதும் வரக்கூடாது என்றுதான் இங்கே வந்தேன்..." என்று அவர் சொல்ல,

"தெரியும் தளபதியே! உங்கள் கரிசனமும் அக்கறையும் நன்றாகத் தெரியும்! எனினும் உங்களுக்குத் தெரிவிக்கிறேன். இங்கே யாரும் வரவில்லை!" என்று கண்டிப்பு வார்த்தைகளில் விழியையும் சேர்த்து அழுத்திக் கூறினாள் சந்திராவதி. ஒற்றுத்தலைவன் உடனே வெளியேறினார்.

எனினும் மனம் அடங்கவில்லை.

தமக்கு வந்த செய்திகள் பிரகாரம் அந்தத் 'துரோகி' கம்பீரன் அங்கேதான் இருந்து கொண்டிருக்கிறான். ஆனால் இந்தச் சந்திராவதி ஏன் இப்படிப் பேசுகிறாள்? தெரியவில்லையே! உள்ளே அவன் இருப்பது அவளுக்குத் தெரியாதா?

மனசில் நிறைய தூசிக் காற்றுகள் பறக்க, அந்தப் புரத்து முற்றத்தைத் தாண்டியதும், அங்கே வாசலில் சித்தமாக இருந்த ஒற்று வீரர்களிடம் கண்களை ஜாடை காட்டி,

"நீங்கள் இங்கேயே இருங்கள்! யாராவது வந்தால் பிடித்துக் கொள்ளுங்கள்! அவனைக் கூச்சல் போடவிடாமல் வாயைப் பொத்தித் தூக்கி வந்துவிடுங்கள்! வெளியே பத்துபத்து வீரர்கள் கொத்த காத்திருக்கிறது! பயப்படா தீர்கள்!" என்று சொல்லிவிட்டு அந்த இடத்தை விட்டு விரைவாக மறைந்து போனார்.

சீனத்து அரிசி மதுவும், சமுத்திரத்தீவில் (சுமத்ரா) உள்ள தேனில் வடித்த மதுவும் மாற்றி மாற்றிப் பரிமாறப் பட்டன. நீள நீள இழைகளாக வந்த பாட்டு மனங்களை ஊடுருவியது. இளம் சீன 'உண்ணான்' பெண்கள் மெல்லிய இடைகளை நிரம்ப மெல்லமாக ஆடவிட்டு, கைகளையும் நெளியவிட்டு ஆடினார்கள். உள்ளே பரிமளம் நிரம்பிய வாசம், புஷ்பம், புதை இவைகளிலிருந்து உண்டாகிக் கொண் டிருந்தது.

மெத்து மெத்தென அழகான பட்டு மஞ்சத்தில் சுந்தர பாண்டித் தேவர் பாற்கடல் பெருமான் போல சயனித்திருந் தார். அவரது தோளை சந்திராவதி வருடிக் கொண்டிருந்தாள். முகத்தில் அவளுக்கு ஒரு வைரப் புன்னகை வீச, முகத்தில் புதுக் களை கூடியிருந்தது.

சமுத்திரத் தீவின் மது பாண்டித் தேவருக்கு நிரம்பப் பிடித்தது. அதைக் குடுவையிலிருந்து தனது வளைக் கைகளால் ஊற்றி, கிண்ணம் கிண்ணமாகக் கொடுத்தாள் சந்திராவதி.

பாண்டித் தேவருக்கு இந்த ஆறு மாதங்களில் வயோதிகம் ஒன்று தடும் என்று இறங்கியிருந்தது! அதீத சுகம் துய்த்ததால் இருக்க வேண்டும்.

இப்போது பார்வை சுகம், ஸ்பரிச சுகம் இரண்டிலும் தான் அவர் மனம் பீறி அடித்துச் சென்றது.

அந்த இரண்டு சுகங்களையும் அள்ளி வழங்கினார் சந்திராதேவி.

Edited By A.K

பாண்டித்தேவர் நடனப் பெண்களின் நெளிவுகளை ரசித்துக் கொண்டே, தேவியின் வழுமையான அங்கங்களின் ஸ்பரிசம் செய்து கொண்டிருந்தார்.

"ம்! நான் இல்லை என்று சொன்னால் இவர் போக வேண்டியதுதானே! என்னையே சந்தேகிப்பது போல பார்வை பார்க்கிறார். எனக்கு எரிச்சல் தாங்கவில்லை! இந்தப் பெண்கள் கூடத்துள் எப்படி நுழையலாம் என்று கேட்டேன். என்னவோ சொன்னார்— என்னால் தாங்க முடியவில்லை. கண்ணீர் வந்துவிட்டது. அழாத குறை..." என்று சொன்ன சந்திராவதி கண்களை அங்கேயே முன் துணியால் துடைத்து அவர் நடந்து போனதைத் திரும்ப நடித்துக் காட்டினாள்.

அவளது முகம் சுருங்குவதற்கு விடுவாரா பாண்டித் தேவர்!

வாழ்க்கையில் எத்தனையோ பெண்களைப் பார்த்தாலும், சிலர் மீது தானே பிரியம் விழுகிறது? அதுவும் ஒருத்தி மீது அதிக மோகம் விழுந்து விடுகிறது!

அதன் காரண காரியங்களை விளக்க முடியாது. அந்த ஒருத்திக்காக வெறியே பிடித்து அலைவான் ஒரு ஆண்!

அப்படித்தான் சந்திராவதி மீது அசாத்திய மோகத்தில் வீழ்ந்திருந்தார் சேனாபதி சுந்தர பாண்டித்தேவர்.

"நீ ஏன் அவனை அத்தனை பேச்சுப் பேசவிட்டாய்?" என்று பாண்டித் தேவர் கேட்க, "விடுவேனா!" ஒரு வாங்கு வாங்கினேன்! என் அந்தப்புரத்துள் வர உங்களுக்கு எப்படி அனுமதி என்று? பேசாமல் கூசாமல் அப்படியே போய் விட்டார்! இனிமேல் இங்கே வரமாட்டார் என்று நினைக்கிறேன்—" ஒரு விஷயம் சொல்லட்டுமா?" என்று கொஞ்சலும் சிணுங்கலுமாகக் கேட்டாள் சந்திராவதி.

"என்ன? சொல்லு!" என்று அவள் நெஞ்சை நெருக்கிக்கொண்டு பாண்டித்தேவர் கேட்டார்.

Edited By A.K

"சொல்கிறேன்! அவர் மீது வெடுக்கென்று விழ மாட்டீர்களே!" என்றாள் சந்திராவதி, ஏதோ பொல்லாப்பை விரும்பாதவள் போல.

"நிச்சயம் மாட்டேன்! சொல்!" என்றார் தேவர். அவரது பாகையைச் சற்று நிமிர்த்திக் கொண்டார்.

"ஒன்றுமில்லை! எல்லா ஆண்களுக்கும் உள்ள குணம் தான்! அவருக்குப் பொல்லாக் கண்! தயவுசெய்து அவரை நான் இருக்கும் இடத்திற்குக் கொண்டு வராதீர்கள்! அது என்னவோ, என்னை யாராவது நேராகப் பார்க்காமல் திருட்டுத்தனமாகப் பார்த்தால் கோபம்தான் வருகிறது" என்று சொல்லி, அவர்க்குத் தெரியாத விதமாக நடனப் பெண்களைப் பார்த்து கண் சிமிட்டினாள்.

"ஓ! சுப்ரமணியன் அப்படிப்பட்டவனா? யோக்கியன் என்று நினைத்தேன்!" என்றார் தேவர்.

"ஆமாம்! உங்களைப் போல எல்லோரும் பால் போல் இருப்பார்கள் என்று நினைக்கிறீர்களா? இப்படி இருந்தால்... நாளைக்குப் பதவி வரும்போது எப்படி ஆளப்போகிறீர்களோ?" என்றாள் வெகு அக்கறை காட்டி.

"அதெல்லாம் கவனித்து விடமாட்டேன்? இனிமேல் அவன் இந்தப் பக்கம் வரக்கூடாது என்று உத்தரவு போட்டு விடுகிறேன்! சரிதானா?" என்றார் தேவர்.

"ஏதாவது பக்குவம் இல்லாமல் சொல்லி அவர் மனத்தைப் புண்படுத்தி விடாதீர்கள்! உங்கள் இருவரின் நட்புக்கு நான் ஒரு யமனாக வரக்கூடாது....ஆமாம்!" என்றாள் அவள்.

"அதுவும் எனக்குத் தெரியாதா? ரொம்ப நாசூக்கு வைத்துச் சொல்லி விடுவேன்.....கவலைப்படாதே..."

Edited By A.K

"சொல்லும்போது.....என் வாசலில் யாருக்கும் தெரியாமல் ஒற்றர்களையும் நிறுத்தி வைத்திருக்கிறார். அதுவும் செய்யக்கூடாது என்று சொல்லிவிடுங்கள்!" என்றாள் அவள் புருவத்தை உயர்த்தி!

ஒரு கணம் அவர் கண்கள் அவளை நோக்கி வெறித்தன.

"அதை வேறு செய்கிறானா? வெகுதூரம் போய் விட்டானே! நாளை கவனித்து எல்லாவற்றையும் நிறுத்தி விடுகிறேன், பார்!" என்றார் சுந்தரபாண்டித்தேவர்.

அந்தக் கூடமும், அறையும் ராஜகம்பீரனுக்கு உலாவுவதற்கும், தங்குவதற்கும் போதுமானதாக இருந்தது.

ஒரு பக்கம் புஷ்பிக்கும் வர்ணப் பூக்கள் கொண்ட செடிகள் நின்று கொண்டிருந்தன.

மதில் சுவருக்கு அப்பால் ஒரு சின்னப் பகுதி நீல வானமும் கம்பீரனுக்குத் தெரிந்தது.

இது நூதன பாதுகாப்பாக இருந்தது.

இன்னும் அவன் மீது சந்திராவதி கொண்டிருக்கும் மையல் அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

ராஜபவனி வரும் நாட்களில் அவனை அவள் வெகு ஆர்வத்தோடு கவனித்திருக்கிறாள். அது மட்டுமல்ல!

அவன் எங்கெங்கு செல்கிறான் என்பதை அறிந்து அங்கங்கே பிரசன்னமாகி அவனைக் கவனித்திருக்கிறாள். அவனது ஒவ்வொரு நுட்பச் செய்கையையும் அவள் ஒரு தாகத்தோடு பருகி இருக்கிறாள்.

அவனது அந்தப் பழைய நாள் வாழ்க்கையை அவ்வளவு துல்லியமாகச் சொல்கிறாளே! அங்கே தங்கி பத்து நாட்கள் ஓடிவிட்டன.

Edited By A.K

அதில் அவள் மனநிலை தெளிவாகப் புரிந்துவிட்டது. ஏனெனில், அடுத்த கூடத்தில் அவள் பேசும் பேச்செல்லாம் நன்றாகக் காதில் விழுகிறது. ஆ! பாண்டித் தேவரை என்ன மாகக் கைக்குள் போட்டு வைத்திருக்கிறாள்! அவள் சொன்னால் அவர் ஆடுகிறார்.

தேவர் குரல் கேட்டால் கம்பீரனுக்கு நிலை கொள்ளா மல் வந்தது. வழி கிடைத்தால் அடுத்த கூடத்துள் குதித்து அவரை சீவிப் போட்டிருப்பான். வழியில்லை! அவனிடம் ஆயுதமும் இல்லை! நிராயுதபாணியாக இருந்தான்

சரி, அவனை அவள் ஏன் விடுவிக்காமல் இருக்கிறாள்? வெளியே போக வேண்டும் என்று அவன் எவ்வளவு துடித்துக் கொண்டிருக்கிறான்? அவனை ஏமாற்றுகிறாளா? இங்கே யாரும் பார்க்காத தனி அறையில் ஏன் வைத்திருக்கிறாள்?

இத்தனை நாட்கள் நிகழ்ந்த நிகழ்ச்சிகளிலிருந்து அவன் அதை ஊகித்துவிட்டான். அவள் அவனை கம்பீரன் என்றே நிச்சயித்துவிட்டாள். அவனும் பலமுறை பலவீனமாக மறுத்துவிட்டு கடைசியில் மறுக்காமல் இருந்துவிட்டான். இனி....

கதவு திறந்தது. பன்னீர்ப்பூ, சம்பங்கி, மல்லிகை வாடைகள் கலந்து உள்ளே பெருக்கம் எடுத்தன.

சந்திராவதி அவன் அருகே வந்து அமர்ந்தாள்.

"இளவரசே! உங்களுக்கு ஒரு நல்ல செய்தி சொல்ல வந்திருக்கிறேன்!" என்றாள்.

மெல்ல நிமிர்ந்து, ஒரு சலனமில்லாப் பார்வையை அவள் மீது செலுத்தினான். இன்னும் கூட அவன் விழிகள் ஈரத்தில் நனைந்திருந்தன.

அவன் மனத்தில் அங்கீகாரம் கிடைக்கவில்லை என்று அவள் ஏங்குகிறாள்! அது நன்கு தெரிந்துதான்! இன்று

Edited By A.K

அவள் நிறையக் கண்ணீர் விட்டிருக்க வேண்டும். கண்கள் கழுவி 'பளிச்' என்று பளிங்கு சுத்தமாக இருந்தன.

"என்ன செய்தி?"

"நீங்கள் நாளைய இரவு புறப்படுகிறீர்கள்! அதற்கான ஏற்பாடுகள் எல்லாம் செய்து விட்டேன்!"

ஏறிட்ட அவனது பார்வை அப்படியே நின்றது.

"நீங்கள் இன்னும் கூட என்னை நம்பவில்லை, இல்லையா?" என்று கேட்டாள். குரல் தணிந்து கரைந்து சோகம் சிலும்பி வந்தது.

கண்ணில் நீர் கூடிவிட்டது. சில விநாடிகளில் கண் எல்லாம் கடல்! இது நாள் வரை அடக்கி வந்துவிட்டாள். இனியும் முடியவில்லை.

தரையில் பட்ட மீன்போல இதயம் துள்ளித் துள்ளிக் குதித்தது. பரிதாபமாக விம்மல்கள் அவளை ஒரு ஆட்டம் காட்டின! அவளது பூரா உடலும் தாங்காமல் குலுங்கிக் குலுங்கி வீழ்ந்தது.

பலமுறை அவள் பேச வேண்டும் என்று முயன்றாள். ஆனால் விம்மல்கள் அவள் வாயைத் திறக்க முடியாமல் ஆட் கொண்டன.

எனினும், ஒருவாறு அவள் அமர்ந்ததும் "இளவரசே!" என்றாள்.

காலையில் முதல் வெயிலின் பளிச்சில் இருந்தது அந்தக்குரல்.

"என்னை நம்புங்கள்! வாழ்க்கையில் ஒரே ஒரு முறை தான் காதல் கொள்ள முடியும்! அதுதான் தூயதான காதல்! ஆனால் எத்தனையோ முறை மோகங்கள் வந்து மறையும்! அவைகளைக் காதல் என்று பலரும் எண்ணி விடுவார்கள். அல்ல; அவை வெறும் உடல் வேட்கைகள். எனவே,

Edited By A.K

மோகங்கள் பல; காதல் ஒன்றேதான்! அந்தக் காதலை, தூயதான பிரேமையை, தன்னலமில்லாத நேசத்தைத்தான் தங்கள் மீது நான் வைத்துள்ளேன். அதனால்தான் உங்களை நான் காப்பாற்றினேன். இல்லாவிடில் இதற்குள் எரிந்து சாம்பலாயிருப்பீர்கள். உங்கள் மீது இருந்த அபார நேசத்தால்தான், எனக்கு ஆபத்து இருந்தும் தங்களைக் காப்பாற்றினேன். இதற்கெல்லாம் தாங்கள் எனக்குப் பிரதி நன்றி செய்ய வேண்டாமா?'' என்று கேள்வியை நிறுத்தினாள்.

''நிச்சயம் பிரதி நன்றி செய்ய வேண்டியதுதான்! அதற்கு நான் கடமைப் பட்டிருக்கிறேன்!'' என்றான் கம்பீரன்.

''அப்படியானால் என்னை மணம் செய்வதாக வாக்களியுங்கள்!'' என்றாள் அவள்.

அவள் கண்கள் ஒரு பேரழுத்தத்துடன் அவன் மீது அழுந்தின.

முகம் முழுதும் காதல் உத்வேகம் ஒரு பெரிய வெளிச்சத்தின் பரப்பை ஏற்படுத்தியது.

அந்த நிலையில் அவள் அழகு பன்மடங்கு கூடி. சூரியப் பிரகாசமாய் விளங்கியது.

கம்பீரன் திகைத்தான்.

# 33

சந்திராவதியின் சந்திரவதனத்தை ராமகம்பீரன் ஏறிட்டு ஒரு பார்வை பார்த்தான். அவள் கண்களில் ஈரம் விழுந்து, வெளிச்சம் ஊமை வெயில் போல மழுங்கி ஜொலித்தது.

அவள் உள்ளத்தை அது பிரதிபலிக்கிறது என்று நன்கு தெரிந்தது.

Edited By A.K

முகம் முழுவதிலும் ஒரு கனிவும் தவிப்பும் நிறைந் திருந்தது.

நல்ல அழகி இவள்! உண்மைதான்! எந்தப் பண்டித னும் கூட இவள் காலடியில் விழுந்து விடுவான். ஒரு விக்கிர கத்தின் அத்தனை கலைகளும் இவளிடம் தென்படுகின்றன. இவள் பார்வையே மது ஊற்றிக் கொடுக்கிறது. சிரித்தால் போதும், ஒரு கடின இதயத்தின் எல்லாச் சிந்தனைகளும் சிதறி விடும்

''அம்மணி!'' என்று தொடங்கினான் அவன்.

''இளவரசே! இளவரசே!'' என்று துள்ளி அருகில் வந்தாள் அவள்.

''அம்மணி என்று அழைக்காதீர்கள்! என் பெயர் சந்திராவதி! சந்திரா என்று அழையுங்கள்! உங்கள் குரல் ஒரு சித்திரம் போல அழகு தொகுத்துக் கொண்டு வரட் டும்! தயவு செய்து அப்படி அழையுங்கள்!'' என்று கெஞ்சலும் கொஞ்சலுமாகப் பேசினாள்.

''சந்திரா!'' என்றான் அவன்.

அந்த வார்த்தை அவளை பிரமையில் அடிவாரங் களில் இழைத்தன.

அவளது மூச்சுகள் மெல்லியதாக இழைத்தன.

''உங்கள் மனக்கிடக்கையை நான் அறிவேன். இதற்கு முன் பலரிடமும் இதை அறிந்திருக்கிறேன். ஆனால் நான் ஒருவன் எத்தனை பேரை மணம் புரிவது?'' என்று சொல்லிக் கனிந்த இருவிழிகளால் அவளை நோக்கினான்.

''தாங்கள் ஒரு தூய்மையான பிரேமை கொண்டு இருக்கிறீர்கள். உண்மைதான்! அது இல்லாவிடில், இத்தனை ஆபத்துகளிடையே என்னைப் பாதுகாக்க முற்பட்டிருக்க மாட்டீர்கள். ஆனால் நான் கேட்கிறேன், சொல்லுங்கள்! நான் எத்தனை பேரை மணக்க முடியும்?'' என்று மீண்டும் கேட்டான் அவன்.

Edited By A.K

சந்திராவதி கண்கள் விரிய அவனைப் பார்த்தாள். முகத்தில் ஒரு மேக மூட்டம் பரவியது போய் நிழல் படர்ந்துவிட்டது. கண்களில் தாபங்கள் அனைத்தும் சேர்த்து இரண்டு முத்துக்களாகச் சேர்த்து நின்றன.

ஒரு பார்வைதான் பார்த்தாள். பிறகு விழியைத் திருப்பி சூன்யத்தில் நிறுத்தினாள். உறைந்தவள் போல் அந்த நிலையிலேயே நின்றாள்.

நிசப்தம் என்றால் படு நிசப்தம்.

கம்பீரன் மனமே கலங்கியது.

"பெருமானே! என்னை ஏன் ரூபலாவண்யத்துடன் படைத்தாய்? எனக்கு ஏன் கற்றவனாகும் வழியை ஏற்படுத்தினாய்? என்னை ஏன் ராஜவம்சத்தில் படைத்தாய்?" என்று மனத்துள் நொந்து கொண்டான், அவன்.

"கேளுங்கள்! எனக்கு உதவி செய்வதற்குக் கடமைப் பட்டிருக்கிறேன். ஆனால், என்னால் நிறைவேற்ற முடியாத நிபந்தனையை விதிக்காதீர்கள்!" என்றான் தழுதழுப்போடு.

சித்திரமாக இருந்தவள் திரும்பினாள். "ஏன் இளவரசே! நான் ஒரு நடனக்காரி! அதனால்தானே அப்படிச் சொல்கிறீர்கள்!" என்றாள் விசனத்துடன்,

"பல காரணங்கள் உண்டு! அதில் தாங்கள் சொன்னதும் உண்டு!" என்றான் இளவரசன்.

"அப்படியானால் நீங்கள் நான் சொல்வதை ஏற்க மறுக்கிறீர்கள் என்றுதானே அர்த்தம்!"

"ஆமாம்."

"அப்படியானால் நான் உங்களைக் காப்பாற்ற விரும்பவில்லை."

நிதானத்தில் ஒரு பார்வையை அவள் மீது திருப்பினான் அவன்.

"உங்களிடமிருந்து இந்த மறுமொழியை எதிர்பார்க்கத் தான் செய்தேன்!" என்றான் அவன்.

Edited By A.K

"சரி, அப்படியானால் நீங்கள் செய்வதைச் செய்து கொள்ளுங்கள்! இந்தக் கணத்திலிருந்து என் பாதுகாப்பி லிருந்து விலகிவிட்டீர்கள்!" என்று கம்பீரமாகக் கூறிய அவள், அங்கு நிற்காமல் தடதடத்து வெளியே வந்தாள்.

பல கதவுகளைத் தாண்டி அந்தத் தனி அறைக்கு வந்தாள்.

அங்கிருந்த மெத்தை ஆதனத்தில் தபீர் என்று விழுந்தாள். பிறகு விசிக்க ஆரம்பித்தாள்.

இருட்டும் பொழுதில் தாதியர்களில் பெரும்பாலோர் அந்தப்புரத்து மாளிகையை விட்டு முற்றம் தாண்டி, காவலர் வரிசைககளுக்குப் போய்ச் சேருவார்கள்.

காவலர் வரிசை என்பது அந்தத் தாதியர் வாழும் இல்லங்கள்! வரிசையாக ஒன்றை ஒட்டி ஒன்றாக நீண் டிருக்கும்.

அன்று இரவில் புறப்பட்ட தாதிப் பெண்களிடையே ஒரு புதுப்பெண் இருப்பதை அந்தப் பெண்கள் கண்டு கொள்ளவில்லை!

எப்போதும் போல அந்தப்புரத்துக் காவலைத் தாண்டி, முற்றத்திற்கு வந்து, அங்கிருந்து காவலர் இல்லத்திற்கு வந்தார்கள்.

அந்தத் தாதியரில் சிலர் வெளியே கிருஷ்ணன் கோவிலுக்குச் செல்ல விரும்பினார்கள்.

பெண் வேடமிட்ட கம்பீரனுக்கு அது ஒரு சுலப வழியாகத் தோன்றியது.

"பெருமானே! வெளியிலே போய் விட்டால் தப்பித்து விடலாமே!" என்று எண்ணினான் அவன்.

தாதியர் கோவிலுக்குப் புறப்பட்ட போது, அவர்கள் பின்னே அவனும் நடந்து சென்றான்.

Edited By A.K

அரண்மனையின் அத்தனை காவலையும் தாண்டி விட்டார்கள்.

கடைசியில் வெளிப்புற வீதிக்கு வந்ததும் கம்பீரனுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சி கொஞ்சம் நஞ்சமல்ல!

இன்னும் சற்று நடந்து போய் விட்டு, இவர்களிட மிருந்து பிரிந்து விடுவோம் என்று எண்ணினான்.

எனவே, தன் நடையைச் சற்றே தாழ்த்தி நடந்தான்.

அப்போது அவன் எதிர்பாராதது நடந்தது. தாதிகளில் ஒருத்தி அந்தச் சின்னக் கும்பலிலிருந்து விடுபட்டு அவனை நோக்கி விடுவிடு என்று வந்தாள்.

அவன் திக்குமுக்காட, அவன் அருகே வந்த அவள், "இளவரசே!" என்றாள்.

திடுக்கிடும் விழிகளோடு அவன் திரும்பிப் பார்க்க, எதிரே தாதி உடை அணிந்து சாதாரணப் பெண் போல் இருந்தது சந்திராவதி என்று புரிந்து திடுக்கிட்டான்.

"போதுமா! நான்தான் உங்களை வெளியே கொணர்ந்து விட்டிருக்கிறேன். காவல்களைத் தப்பித்து விட்டீர்கள்! இவ்வளவும் தங்கள் மீது உள்ள பிரேமையால்தான் செய்திருக்கிறேன். தங்களிடமிருந்து எதையும் எதிர்பார்க்க வில்லை. நீங்கள் போகலாம்!" என்றாள் கம்பீரமாக.

அதே நேரம் அரண்மனை வாயிலிலிருந்து ஒரு காவலாளி அந்த இருவரை நோக்கி அவசரமாக வந்து கொண்டிருந்தான். அவனைத் தொடர்ந்து இன்னொரு சக காவலாளியும் வேகமாக வந்து கொண்டிருந்தான்.

சற்றுமுன் வாயிலைக் கடந்து போன அந்தத் தாதியர் களை அவர்கள் கவனித்திருந்தார்கள். அவர்களில் எல்லாப் பெண்களுக்கும் பின்புற தலையில் பூக்கொத்து இருந்தது. ஆனால் ஒருத்திக்கு இல்லாததை அவன் உணர்ந்து விட்டான்.

Edited By A.K

அடுத்த கணம் அவன் துள்ளி எழுந்தான்.

ஏற்கெனவே ஒற்றற் குழு சில நாட்களாக அரண் மனைக்குள் கெடுபிடியில் இருப்பது அவனுக்குத் தெரியும்.

யாரோ ஒருவரை அவர்கள் தேடிக் கொண்டிருப்பது தெரியும்.

இதை மனசில் வைத்துப் பார்த்த போது, அந்த ஒரு பெண் மட்டும் பூ இல்லாது போனதும் அவனுக்கு மனசில் நெருடல் கொடுத்தது.

அதனால்தான் அவன் "டேய்! வா வா! ஒரு ஆள் பெண் வேடத்தில் தப்பிக்கிறான்!" என்று கூறினான்.

அவன் ஓட, அவன் பின் மற்றவன் ஓட, அவர்கள் கம்பீரன் நின்ற இடத்துக்குத் தடதட என்று வந்து விட்டார்கள்.

"இவன்தான்" என்று பெண் வேடமிட்ட கம்பீரனைப் பார்த்துக் கூற, கம்பீரன் ஒரு துள்ளுத் துள்ளிக் குதித்து வீதியில் ஓட ஆரம்பித்தான்.

காவலர்கள் பின்தொடர ஒரு நீள ஓட்டப் பந்தயமே நடந்தது.

வழியில் பாதுகாப்புக் காவலர்கள் பலர் அந்த ஓட்டக் காட்சியைப் பார்த்து விட்டு, அவர்களும் கலந்து கொண்டார்கள்.

ராமகம்பீரன் தலை தெறிக்க ஓடினான். அந்தப் பகுதி களை ஏற்கெனவே நன்கு அறிந்தவன் அவன். மேனாம் நதி வெகு அருகில் இருக்கிறது என்று அவனுக்குத் தெரியும். அங்கே படகுக்காரர்கள் குடியிருப்பதால் ஏராளமாக படகு கள் இருக்கும் என்று தெரியும். சின்னச் சின்ன சந்துகளும் முடுக்குகளும் அங்கே நிறைய உண்டு.

அந்தப் பகுதிகளை நோக்கிப் பறந்தான் அவன்.

பொதுவாக அந்தப் பகுதிகள் இரவில்தான் விழித்துக் கொள்ளும். சந்தடி நிறைந்த பிரதேசமாக மாறிவிடும்.

Edited By A.K

இரவில்தான் உலை வைத்து சமையல் செய்து ஆனந்தமாக உட்கொள்ளுவார்கள்.

எனவே சந்தடி நிறைந்த அந்தப் பகுதியில் இருட்டில் நுழைந்து, சீக்கிரமே பல திருப்பங்களில் நுழைந்து காவலர்களின் பார்வையிலிருந்து தப்பிவிட்டான்.

ஒரு முகூர்த்த நேரத்தில் அந்தப் படகுக்காரப் பகுதியே கொந்தளித்தது. படைவீரர்கள் நிறையக் குவிந்துவிட்டார்கள். கைகளில் தீவர்த்தி ஏற்றி, அங்குள்ள குறுகலான தெருக்களை வெளிச்சப்படுத்தினார்கள்.

ஒவ்வொரு குடிசைகளுக்குள்ளும் நுழைந்து, ஆளைத் தேடுவதில் ஈடுபட்டார்கள்.

# 34

ராமகம்பீரன் அந்த மேனாம் நதி வழியே ஒரு தப்பிக்கும் வழி கிடைத்துவிடும் என்று எண்ணினான். ஆனால் அது தவறு என்று சீக்கிரமே தெரிந்துவிட்டது!

ஏற்கெனவே ஒற்றர் தலைவர்களுக்கு அவனைப் பற்றிய விவரங்கள் நிறைய தெரிந்திருக்க வேண்டும். அவன் அந்த அந்தப்புரத்தில் சந்திராவதியோடு இருந்திருக்கிறான் என்பதும் தெரிந்திருக்கவேண்டும். எனவேதான் அவர்கள் எப்போது அவன் வெளியே வருவான் என்றுகாத்திருக்கிறார்கள். அவன் தப்பிவிடக்கூடாது என்று பலத்த பாதுகாப்பு திரட்டியிருக்கிறார்கள்.

கம்பீரனும் நிச்சயம் அந்த இரும்புப் பாதுகாப்புக்குள் அகப்பட்டிருப்பான். ஆனால், அவன் பெண் வேடத்தில் வெளியேறியது சிறிதே ஒற்றர்களைத் தயக்கத்தில் வைத்து விட்டது. எனினும், சீக்கிரமே விஷயம் புரிந்து அவனைப் பிடிப்பதில் முனைய, அவனும் அவர்கள் எதிர்பார்த்தது போலவே மேனாம் படகுத் துறைக்குள் நுழையவே அவர்களுக்கு எல்லாம் சுலபமாகிவிட்டது. அவனை அங்கே எதிர்பார்த்தே பாதுகாவலர்களை நிறுத்தியிருந்தார்கள். இப்போது அவன்

Edited By A.K

அங்கே நுழைந்திருக்கிறான் என்று தெரிந்ததும், நிறைய வீரர்கள் அங்கே ஏவிவிடப்பட்டார்கள்.

உண்மையில் ஒவ்வொரு மறைவிடமாகத் தாண்டித் தாண்டி ஓடுவதில் அவன் திணறி விட்டான்!

மேனாம் கரைக்கு வந்ததும், படகில் ஏறி ஓடிவிடலாம் என்று நினைத்தான். ஆனால் எங்கும் படகுகளே இல்லை. தவிர, நதியின் சற்று தூரத்தில் அரசரின் ஆற்றுப் படையினர் பெரிய படகுகளில் நங்கூரம் பாய்ச்சி நின்றிருந் தனர். இத்தனைத் தடைகளுக்கு இடையே கம்பீரன் தவித்து நின்றுவிட்டான்.

படகுத் துறையில் நிறைய படகு வீடுகள் இருந்தன. கரையோரத்தில் தண்ணீரில் நிறைய மூங்கில் கொம்பு களைப் பரப்பி ஒருவித தெப்ப மேடை போல் செய்திருந் தார்கள். அவற்றின் மீது பத்துப் பன்னிரண்டு வீடுகள் மரப் பலகைகளால் அமைத்து அவரவர் குடியிருந்தார்கள். இந்தத் தெப்பங்கள் அதன் வீடுகளோடு நதியில் போய் விடாத வண்ணம் அவைகளுக்கு நங்கூரம் பாய்ச்சி இருந்தார்கள்.

இந்தத் தெப்ப கிராமங்ள் வரிசையாக நதியோரம் படர்ந்திருந்தன. இவற்றின் இரண்டுக்கு மத்தியில்தான் ராம கம்பீரன் ஒளிந்திருந்தான். இந்தத் தெப்பங்களின் வீட் டுக்குப் பின்புறம் மூங்கில் மேடையிலேயே மண் வைத்து செடி கொடிகளை வளர்த்திருந்தார்கள். அந்தப் பகுதியில் தங்குவது அவனுக்கு வெகு வசதியாக இருந்தது.

இரண்டு மூன்று நாட்கள் சென்ற பின்னரே அந்தக் குறுகலின் இடைவெளியில் படுத்திருக்கும்போது கண் மூடியது!

அது தூக்கம் போல்தான் தோன்றியது. எனினும், மயக்கமாக மாறும் என்று தெரியாது.

Edited By A.K

பின்னர் அவனது கண் விழித்தபோது ஒரு அகல் விளக்கு முணுக்முணுக் என்று எரிந்து கொண்டிருந்தது.

திடுக்கிட்டுச் சுற்றிவரப் பார்க்க அங்கே அந்த அறையில் மிச்சம் இருந்த இருட்டின் ஊடே ஒரு முகம் மிதந்து வருவது போலிருந்தது.

'திடும்' என்று அவன் எழுந்திருக்க முயன்றபோது, "இருங்கள்! இருங்கள்!" என்று அந்தப் பெண் பேசுவது கேட்டது.

குரல் பழக்கம் போல் தோன்ற, மிரண்ட விழிகளோடு அவன் அங்கும் இங்கும் பார்வைக் கோடுகளை ஓட்டினான். அவனது வலக் கையை ஒரு இதமான கை பிடித்தது.

அருகே அந்தப் பெண் அமர்ந்திருப்பது தெரிந்தது. 'யார் இவள்? எங்கேயோ பார்த்திருக்கிறோமே' என்று எண்ணிய போது, "நான்தான்!" என்றாள் அவள்.

"யார் நீங்கள்!"

"ரத்ன தாராவின் தோழி நான்!" என்றதும், அரண் மனையில் அவளைப் பார்த்த நினைவு வந்துவிட்டது. அது மட்டுமல்ல! படகில் வந்து அவனைக் காப்பாற்றியவளும் அவள்தானே!

டெப்சன் என்பவள் தானேஇவள்! இவளும் அவனது தோட்டக் குடிசையுள் வந்து அவள் "நீ யார்?" என்று மிரட் டினவள்தானே என்று எண்ணினான் அவன்.

"இந்தாங்க! நீங்கள் எழுந்து ஓட முயற்சிக்க வேண் டாம்! சரியாக மாட்டிக் கொண்டிருக்கிறீர்கள்! உங்களை நான்தான் காப்பாற்றினேன்!" என்று கூறினாள் டெப்சன்.

அவளது விழிகள், அதில் தேங்கி வழிந்த அன்பு, குரலில் தோன்றிய கனிவு எல்லாம் அவன் மீது மாய ஸ்பரிசங்கள் போல் விழுந்தன.

Edited By A.K

''நல்லவேளை! தங்களைத் தேடிவர ரத்னதாரா என்னை அனுப்பினாள்! தாங்கள் வாக்கு அளித்தபடி ஒவ்வொரு வாரமும் வருவதில்லையாமே......'' என்று ஆவலாதி கூறினாள் அவள்.

அவள் வார்த்தைகளில் அவன் அடைக்கலம் அடையலாம் என்று நன்கு தெரிந்துவிட்டது.

அந்தத் தெப்ப வீடுகளில் ஒன்றில் ஒரு ரகசிய அறைக்குள், இருப்பது அவனுக்குச் சீக்கிரமே தெரிந்தது. தன்னை வெளிக் காட்டிக்கொள்ளாமல் அங்கேயே இருந்து விட அவன் தீர்மானித்தான்.

ஒருவாரம் சென்ற பிறகுதான், டெப்சன் அந்தச் செய்தியைக் கொணர்ந்தாள்.

சந்திராவதியைப் பொது இடத்தில் தண்டனை கொடுக்க ராஜ்ய அதிகாரிகள் முடிவெடுத்து விட்டார்கள்.

தண்டனை - சிரச்சேதம்.

எதிரிக்கு அடைக்கலம் கொடுத்திருந்தாள், எதிரிக்கு உதவினாள் என்பதே அவள் மீது சாட்டப்பட்ட குற்றம்.

''டெப்சன்! எனக்கு ஒரு உதவி புரியுங்கள்! நான் அந்தத் தண்டனையைப் பார்க்க விரும்புகிறேன். என்னை மாறுவேடம் இட்டாவது அங்கே அழைத்துப் போங்கள்!'' என்று கூறினான் ராமகம்பீரன்.

திடுக்கிட்டாள் டெப்சன்! அப்படிச் செய்வது பெரிய ஆபத்து என்று வாதாடினாள். ஆனால் கம்பீரன் அதற்குச் செவி கொடுப்பதாகத் தெரியவில்லை. அதற்கு எதிராக வாதாடினான்.

குறிப்பிட்ட நாளில் அந்தப் பெரும் வெட்ட விளியில் ஜனத்திரள் ஏராளமாகச் சூழ்ந்துவிட்டது.

Edited By A.K

உயரமான மேடை அமைத்திருந்தார்கள். எல்லோரும் எங்கேயிருந்தும் பார்க்கலாம்!

மாலை நேரத்தில் அந்தச் சிரச்சேதம் நடப்பதாக இருந்தது. வீரர்கள் எங்கும் குவிந்திருந்தார்கள். மேடையைச் சுற்றி வர அவர்கள் வியாபகந்தான்!

அவர்களுக்கு அப்பால்தான் ஜனத்திரள் நின்று கொண்டிருந்தது. டெப்சன்னின் முதிய தாய் வேடத்தில் கம்பீரன் அங்கே வந்திருந்தான். டெப்சன் சுற்றி வரப் பார்த்துப் பதட்டத்துடன் நின்றாள்.

ஏனெனில், கம்பீரன் அங்கே வந்திருப்பது தெரிந்தால் அவளுக்கும் அதே சிரச்சேதம்தான் நிகழும் என்று அவளுக்குத் தெரியும்.

ஆச்சரியம்! சேனாபதி சுந்தரபாண்டித் தேவரின் ஆசைநாயகிக்கே இப்படி ஒரு தண்டனை கிடைத்ததா?

அதைத்தான் எல்லாரும் பேசிக் கொண்டிருந்தார்கள்.

"நீதி எல்லாருக்கும் ஒரே நீதிதானே! சுந்தரபாண்டித் தேவரின் தயவைப் பெற்றுக் கொண்டு இவள் இதுபோல அக்கிரமம் செய்யலாமா?" என்று பலர் கேட்டார்கள்.

"ஆமாம்! அந்த எதிரி யார்? கருந்தாடிக்காரரானா? அங்கங்கே ஊர்களைச் சூறையாடுகிறான் என்கிறார்களே! அவனா? ஜனங்கள் பயந்து சாகிறார்கள்!" என்று வியாக்கியானம் செய்தார்கள் பலர்.

"ராஜா இந்திராதித்தன் உடல் நிலை சரியில்லாமல் இருக்கிறார்! அவர் மகன் பரமாதித்தன் நன்றாகவே ஆண்டு வருகிறார். இந்த அமைதியான பரிபாலனத்திற்கு எதிரே இந்தக் கருந்தாடி கலகம் பண்ணி வருகிறானே!" என்றார்கள் பலர்.

"ஆமாம்! அந்த ராமகம்பீரன் என்ன ஆனான்? இரண்டு ஆண்டு ஆகப் போகிறதே! அவன் பிரிவால்தான்

Edited By A.K

ராஜாவும் ராணியும் நோயில் வீழ்ந்திருக்கிறார்கள்!" என்று கூறினார்கள் பலர்.

டெப்சன்னுக்கு இந்தப் பேச்சுகள் எல்லாம் அவ்வப் போது காதில் விழுந்து கொண்டிருந்தன.

'ஜனங்கள் எவ்வளவு பாமரத்தனமாக இருக்கிறார்கள்! நாட்டில் நடந்ததெல்லாம் அவர்களுக்குத் தெரியாமல் இருக்கிறதே! இப்போது ராஜாவும் ராணியும் சேனாபதியின் கைப் பாவைகளாக இருக்கிறார்கள். உண்மையில் சேனாதிபதிதான் கொடுங்கோல் ஆட்சி செய்கிறார் என்பது இவர்களுக்குத் தெரியாமல் இருக்கிறதே!' ஆச்சரியத்தோடு சிந்தனை செய்தாள் டெப்சன்.

திடீரென்று மேளங்கள் கேட்டன. எக்காளங்களும் ஒலித்தன.

சந்திராவதியை அழைத்து வருகிறார்கள் என்று தெரிந்தது. ஜனங்கள் நெரிசலோடு அவளைப் பார்ப்பதற்காக மேடையைப் பார்க்க முயன்றார்கள். கூட்டம் ஒரு அலையாக முன்னால் பாய்ந்தது.

சந்திராவதியை மேடையில் ஏற்றியதும் 'ஓ' என்று ஓர் இரைச்சல்!

ஜனங்கள் கையை மேலே தூக்கி அவளைக் கொல்வது போல் முஷ்டிகளைக் காண்பித்தார்கள்.

சந்திராவதியை மேடையைச் சுற்றி ஒவ்வொரு இடமாக நிறுத்தி ஜனங்களிடம் காண்பித்தார்கள்.

சந்திராவதியின் முகம் மிகுந்த அமைதியோடு இருந்தது. ஜனங்கள் அவளுக்கு எதிராக ஆரவாரம் செய்வதை இரக்கமாக அவள் பார்ப்பது தெரிந்தது.

சுந்தர பாண்டித் தேவர் அந்தக் கொடும் காட்சியைப் பார்க்க வரவில்லை. தன்னிடம் ஆசை காட்டி வாழ்ந்தவள்

தனக்கு மோசம் செய்து விட்டாளே என்று ஆத்திரத்தோடு நினைத்திருந்தார், அவர்!

"ஹூம் அவளை ஒரு முறையாவது பொறுத்திருக் கலாம்! ஆனால் ஒற்றர் தலைவரும் இதரர்களும் சம்மதிக்க வில்லை! இவள் இறந்தே ஆகவேண்டும் என்று கூறினார் கள். பாண்டித்தேவராலும் அதை எதிர்க்க முடியவில்லை. ஒப்புக்கொள்ள வேண்டி வந்தது.

தாமே மனதார, உயிர் ஆற நினைத்த பெண் தம் முன்னே மரணம் அடைவதைப் பார்க்க அவர் விரும்ப வில்லை.

ஒற்றர் தலைவர் சுப்பிரமணியன்தான் அங்கே குதிரையில் நடுநாயகமாக வீற்றிருந்தார்.

மாலைப்பொழுது அப்போது சரிந்து கொண்டிருந்தது.

சந்திராவதியின் உடலில் மஞ்சள் போர்வையை போர்த்தினார்கள்!

பெரிய மரத்துண்டு முன்னால் அவளைக் கொண்டு சென்றார்கள்.

சுப்பிரமணியன் தலை ஆட்டவே, அவள் கால் கைகளைக் கட்ட ஆரம்பித்தார்கள்.

நெரிசலில் முன்னும் பின்னும் இழுக்கப்பட, டெப் சன் ஒரு சமயம் திடீரென்று பார்த்தபோது முதிய தாயாராக வேடம் போட்டுப் பக்கத்தில் நின்றிருந்த கம்பீரனைக் காணவில்லை.

'மோசம் போயிற்றே! எங்கேயாவது அரச வீரர்களின் பிடியில் சிக்கிக் கொள்ளப் போகிறாரே!' என்று துடிதுடிப்புடன் திகைத்தாள் அவள்.

திரும்ப ஆரவாரம் எழ, அவள் கலக்கம் மிகுந்த கண்களோடு மேடையை நோக்கினாள்.

Edited By A.K

கொலையாளி ஒருவன், பருத்துத் திரண்ட உடம்போடு மேலே ஏறியிருந்தான். அவன் கையில் கோடரி போன்ற பெரிய கொடுவாள் இருந்தது.

சாயும் சூரிய ஒளி அதன் மீது விழுந்து பல திசைகளில் அது மின் வெட்டு அடித்தது.

சுப்பிரமணியனை நோக்கி கொலையாளி பெரிய கும்பிடு போட்டான். பிறகு கூடியிருந்தவர்களை நோக்கி ஒரு கும்பிடுபோட்டான்.

மரத்துண்டு அருகே போய், மேலே நோக்கி பிரார்த்தனை செய்து கொண்டான்.

ஜனங்களின் பார்வைகள் எல்லாம் அம்புகள் போல் அந்த மேடையை நோக்கி ஓடியிருந்தன.

பேச்சுகள் யாவும் நின்று துல்லிய நிசப்தம் நிறைந்து விட்டது.

ஒருவரும் சிறிது கூட அசையவில்லை.

இந்தப் பெரிய ஜனத்திரள் முழுதுமே கல்லில் உறைந்தவர்கள் போல் நின்றார்கள்.

அப்போது மேடை ஓரம் யாரோ எத்தனித்து ஏறுவது போல் தெரிந்தது. அவனும் வீரர்களில் ஒருவன்தான் என்று எல்லோரும் நினைத்தார்கள்.

ஆனால் ஏறியது ஒரு வயதான பெண்மணி என்பதைக் கண்டதும் திடுக்கிட்டார்கள்.

இவள் யார் என்று நினைக்கும் போதே, அந்த உருவம் தனது புடவையைக் களைந்து விட்டது.

மேடை மீது கம்பீரன் தனது கருந்தாடியுடன் கம்பீரமாக நின்றான்.

Edited By A.K

# 35

மேடை மீது ஒரு கம்பீர புருடன் நிற்கிறான்; அவன் கம்பீரனை (ராம கம்பீரன்) ஒத்து இருக்கிறான் என்பது கூட்டத்தின் பெரிய பகுதிக்குப் புரிந்திருக்க வேண்டும்.

"ராம கம்பீரன்!" என்ற ஒரு சின்ன ரீங்கார முணு முணுப்பு எங்கும் ஒரு தாழ்ந்த தொனியாக எழுந்தது.

தவித்துப் போய் பலரும் அங்கே பார்த்த வண்ணமே நின்றார்கள்.

கூட்டத்தில் அந்த அமளி துமளி எழுப்பிய அலைகள் அங்குமிங்கும் தத்தளித்தன.

எதிரே மேடை மீது திடீரென்று துளிர்த்து நின்ற கம்பீரனைக் கண்டதும், ஒற்றர் தலைவன் சுப்பிர மணியத்தின் கண்கள் புடைத்துக் கொண்டு வெளி வந்தன.

சீறிக்கொண்டு ஒரு சீற்றம் பீறி எழுந்தது.

"பிடியுங்கள் அவனை!" என்று அதிகாரக் குரலை வீசினார்.

அவருக்கு மெய்க்காப்பாக இருந்த தற்காப்புப் படை திடும் என்று கிளம்பியது.

ஈட்டிகள் உயரே நீட்டிக் கொண்டன. திமு திமு என்று காலடி ஓசை!

மேடையின் படிகளில் அவர்கள் வியாபித்து விட்டார்கள். அவர்களது தலைகள் மேலே எம்பி எம்பிச் சென்றன.

அடுத்த நிமிடம், மேடை மீது ஒரு கொத்தாக அவர்கள் நிற்க, ஒற்றர் தலைவன் சுப்பிரமணியன் கையில் தகதகக் கும் வாளுடன் மேலே ஏறினார்.

"ம்... ஏன் நிற்கிறீர்கள்? அவனைப் பிடியுங்கள்!" என்று உறுமினார்.

Edited By A.K

கம்பீரன் திகைப்பது போல சில அடிகள் பின்னே வைத்தான். ஒரு கணம் நின்றான். மறுகணம் அவன் செய்வது செப்பிடு வித்தை போல இருந்தது.

''ஹை!'' என்று ஒரு சத்தம் அவனிடமிருந்து பீறியது. மறுகணம் அந்தக் கொலையாளி கையில் இருந்த கட்டாரி இடம்மாறி கம்பீரன் கையில் இருந்தது. கம்பீரன் அதைக் கொலையாளியிடமிருந்து பிடுங்கியது இமை வெட்டும் நேரத்தில் நடந்து முடிந்து விட்டது.

ஏன் அப்படி ஆக்ரோஷம்? கம்பீரன் நினைத்தான்.

ஏதோ மலை முகட்டிலிருந்து ஒரு குளம் அவிழ்ந்து சொரிவது போல் இருக்கிறதே!

ஆகாயம் முழுதும் சீன வெடிகள் பரவி வெடிப்பது போல இருக்கிறதே!

மனதில் அதன் காரணம் ஓரளவு புலனாகியது. அந்தச் சீன தற்காப்பு வேலைகளைச் சீனாவில் சென்றே கற்று வந்தவன் அவன்.

அதைப் பொதுமக்கள் இதுவரை பார்த்திருக்க மாட்டார்கள்.

இப்போது அதை நேரில் கண்டதும் அவர்கள் மெய்ம்மறந்து திகைத்து விட்டார்கள்.

''பிடியுங்கள்..... பிடியுங்கள்!''

சுப்பிரமணியத்தின் குரல் பலவீனமாக அந்த கரகோஷத்தின் ஓரத்தில் கேட்டது.

மெய்க் காப்பு கோஷ்டி தூக்கிய ஈட்டிகளுடன் பெருந் திகைப்பில் நின்று கொண்டிருந்தது.

சுப்பிரமணியம் கோபத்திரனோடு அதன் முன்னால் வந்து நின்றார்.

Edited By A.K

கடு கடு என்று கடைவாய் புடைத்தது.

"பிடியுங்கள்" என்று கம்பீரனை நோக்கிக் கையை நீட்டினார்.

படை ஒரு திரளோடு முன்னுக்குச் சென்றது.

நிசப்தம் ஒரு வீச்சாக அந்த ஜனக்கூட்டம் முழுதும் பாய்ந்தது.

அத்தனை பெரிய மனிதக் கடல் அப்படி ஒரு நிசப்தத் துல்லியத்தைக் காத்ததில்லை.

கீழே கூட்டத்தின் சிடுக்கில் டெப் சன் தவித்துக் கொண்டிருந்தாள். அவள் முகம் முழுதும் வியர்த்தது. என்ன நடக்கப் போகிறது என்று கலக்கம் அவள் இதயத்தை பெரிதாக ஓசைப்படுத்தியது. கண்களை விடுத்த அம்புபோல் செலுத்தி ஒரே ஏகாக்கிரம நிலையில் மேடையையும் கம்பீரனையும் பார்த்திருந்தாள்.

மேடையில் மெய்க்காப்புப் படையில் முதல் வரிசை ஈட்டிகள் முன்னே நீட்டிக் கொண்டிருந்தன.

"துரோகி! நகராதே! நகர்ந்தால் யமனுலகம் போவாய்!" என்று கர்ஜித்தார் சுப்பிரமணியர்.

கம்பீரன் நின்றவிடத்தில் அடித்த ஆப்புபோல் நின்றான்.

மிகவும் பயங்கரமான கணங்கள் அவை!

ஒரு கணம் கம்பீரனது வஜ்ஜிரமான நெஞ்சில் கூட சிறிது ஊசலாட்டம் தோன்றியது.

வேகம், வேகம்! வேகத்தில் அது நடந்துவிட்டது. ஆமாம்! சந்திராவதிக்கு கிடைத்துள்ள தண்டனைதான் அவனை முடுக்கிவிட்டது!

Edited By A.K

அவனுக்காக, அவன் தப்பிப்பதற்காகத் துணிந்து காரியத்தில் இறங்கியவள் அவள்!

அந்தத் துணிவு இப்போது அவளது உயிருக்கே ஆபத்தாக வந்து முடிந்துள்ளது.

சிரச்சேத தண்டனை பெற்றிருக்கிறாள் அவள்.

ஆமாம்! ஒரு கொடூர முறையில் அவள் இறக்கப் போகிறாள்.

இது அநியாயம் இல்லையா?

தனக்காகத் தியாகம் செய்ய முன் வந்த அவளுக்கு அவன் ஏதாவது உதவி செய்ய வேண்டாமா?

அவனுக்காக ஒரு உயிர் அநியாயமாகப் போகப் போகிறதே, அந்த நேரத்தில் அவன் வாளாவிருப்பது தகுமா?.... தகுமா?

கேள்விகள் அவனைக் குடைந்து துரத்தின.

உண்மை வீரனின் கையும், காலும் இப்படிப்பட்ட நேரத்தில் நிச்சயம் சும்மா இராது! பலாபலன்கள் என்ன என்று சிந்திக்காது! ஏதோ ஒரு கேந்திர ஸ்தானத்தை யாரோ தொட்டுக் கிளப்பியது போல் வெகுண்டு எழுந்து விடுவான், அந்த உண்மை வீரன். உலக அதர்மத்தை அழிக்க வந்தவன் அவன்தான் என்று ஒரு தர்ம ஆவேசம் அவனிடம் வந்துவிடும்.

அப்படிச் சீறி எழுந்தவன்தான் கம்பீரன்! அவனால் சும்மா நிற்க முடியவில்லை. டெப்சன்னை விட்டு மெல்ல விலகி மேடை அருகே போய் அதில் தொத்தி ஏறிவிட்டான்.

மீதி நடந்ததெல்லாம் பொதுக் காட்சியாக எல்லோரும் பார்த்ததே!

ஆ!...

இப்போது ஒருவன் நான்!

இவர்கள் ஒரு சைன்னியம்!

இவர்கள் எதிரே ஒருவனாக நிற்க முடியுமா?

நின்றாலும் எவ்வளவு நாழிகை நிற்க முடியும்?

இந்தச் சமயத்தில் துணை ஏதும் இல்லையே!

துணை இருந்தாலும் அது மேடை ஏறி வர வழி இல்லையே!

நினைப்புகள் மெல்ல சின்னச் சஞ்சலங்களை அவன் மனத்தில் உண்டாக்கின.

துணை...

துணை.... தர்மம்தான்.

நான் செய்த நற்செயல்கள்தான்! பார்ப்போம்!

கட்டாரியை 'வீச்' என்று மேலே தூக்கினான். ஒரு சுழற்றம்! கட்டாரி தெரியவில்லை! அப்படி ஒரு ஊழி வேகம்!

அதுதான் பொது மக்களைத் திணற வைத்தது.

என்ன நடந்தது என்று யோசிக்கும் முன், மெய்க்காப்பு முதன் வரிசையினரின் ஈட்டிகள் கட்டாரியில் அடிபட்டு மேலே வானத்தில் கரணங்களாக ஏறிப் போயின.

அவை கீழே உதிரும்போது, ஜனங்கள் மெய்ம்மறந்து கை தட்டினார்கள்.

''படை வீரர்களே! வாருங்கள்! இந்தத் துரோகியைப் பிடியுங்கள்!'' என்று சுப்பிரமணியம் ஒரு கடுமையான குரலை பீறி விட்டார்.

மேலே மேடையில் ஒரு படைக் கூட்டம் நெருக்கி அடித்து ஏறியது.

Edited By A.K

மேடைக்கு மேலே உள்ள களபலி மேடையைச் சூழ்ந்து கொண்டது.

நிச்சயம் கம்பீரன் அகப்பட்டுவிட்டான் என்ற தீர்மானம்!

"சொல்லுங்கள்! ஜனங்களே! இந்தத் துரோகிக்கு என்ன தண்டனை விதிக்கலாம்?" என்று ஒரு செறுக்குக் குரலில் ஜனவெள்ளத்தைப் பார்த்துக் கேட்டான் சுப்பிரமணியன்.

"துரோகியா? யார் துரோகி?" என்று ஒரு கீச்சுக் குரல் அங்கே எழுந்தது.

மேடையில் ஒல்லியாக, மெல்லிதாக ஒரு பெண் உருவம் ஏறி இருந்தது.

அது அந்தப் பரந்த மக்கள் பரப்பின் மிக்க பலவீனமான தர்மக் குரல் போலவும், எப்போதும் அந்தக் குரல் பணிந்தே, தணிந்தே இருக்கக் கடமைப்பட்டதால் நிமிர்ந்து நிற்கக் கூடத் திறமை இல்லாது ஈனமாக நின்றது போலவும், இப்போது அது ஒரு ஏகோபித்த குரலாக அந்த மெல்லிய உருவத்தின் வாயில் இருந்து கிளம்பியது போலவும் தோன்றியது.

மனத்துள் அப்படி ஒரு தர்ம எண்ணம் ஒளிந்து கொண்டிருக்கிறது என்று கூட அந்தப் பொதுஜனங்களுக்குத் தெரியாது.

ஆனால், அந்த ஒல்லிய உருவம் அந்தப் புதைந்த எண்ணத்தைத் தனது சொல்லால் எடுத்துக் காட்டியதும், அந்தப் பெரும் திரள் ஒன்று சேர்ந்து எழுந்தது!

தளைகளைத் தெறித்து எறிந்து, சீறிக்கொண்டு வெளி வந்தது.

"துரோகி! அவன்தான்!" என்று ஒரே குரலில் சிங்கமாகக் கூவியது.

Edited By A.K

"கேளுங்கள்! பெரியவர்களே! இது நமது நாட்டு இளவரசர் ராமகம்பீரன்! இவரை நம்மிடமிருந்து மறைத்து கிடங்கில் போட்டு, 'எங்கேயோ காணாமல் போய் விட்டார்' என்று பொய் வதந்தியைக் கிளப்பியது இந்த ஒற்றுத் தலைவர் சுப்பிரமணியன்! இவருக்கு உறுதுணையாக இருந்தவர் சேனாபதி சுந்தரபாண்டித் தேவர்! இப்போது சொல்லுங்கள்! கம்பீரன் துரோகியா?" என்று சீறிய குரலாகக் கேட்டாள் டெப்சன்.

"இல்லை! இல்லை! இல்லை!" என்று எங்கும் கூக்குரல்.

"இந்த சுப்பிரமணியன் துரோகியா?" என்று அடுத்து ஆவேசத்துடன் கையைக் காட்டினாள் டெப்சன்!

"துரோகி! துரோகி! துரோகி!"

ஜனக் கூட்டத்தின் மனோபாவம் ஒரு தனி மனிதரின் மனோபாவம் போல் இருப்பதில்லை! மனிதர்கள் ஒரு கூட்டமாகி விட்டால் அந்த மொத்தத் தொகையில் மனோபாவம் முற்றிலும் மாறிவிடுகிறது.

ஆச்சரியமாக அவர்கள், 'துரோகி, துரோகி, துரோகி' என்று இரைந்து கொண்டிருந்தார்கள்! இடைவிடாமல் இரைந்தார்கள்.

மேடையில் சுப்பிரமணியன் கட்டளை வீசிக் கொண்டே இருந்தார்.

ஆனால் மெய்க்காப்பு வீரர்கள் யாரும் அதைக் கேட்ட தாகத் தெரியவில்லை. 'துரோகி, துரோகி' என்று ஜனங்கள் எழுப்பிய சப்தமோ அலைக்கு மேல் அலையாக தொனிக்கு மேல் தொனியாக ஒரு யுத்த கோஷம் போல் எழுந்து கொண்டிருந்தது.

அந்த ஒலி எழுச்சியில் சுற்றுப்புறமெல்லாம் நடுங்கின. காற்றே கிடுகிடுத்தது.

Edited By A.K

மேடையில் சுப்பிரமணியர் கண்கள் இங்கு அங்கு என்று ஒவ்வொரு திசையையும் நோக்கி ஓடின.

ஆனால், அவர் கட்டளைகள் எந்தப் பலனும் இல்லாமல் தாமாகவே துவண்டு விழுவதை அவரே பார்த்தார்.

அவர் சொல் கேட்டு ஆடும் அவரது படையே, இப்போது அந்த ஜன அதட்டலுக்கும், கோபத் தொனிக்கும் பயந்து செயல் இழந்துவிட்டது போல் தோன்றியது.

அவ்வளவுதான்! நிலைமையைப் புரிந்து கொண்டு விட்டார் சுப்பிரமணியர்.

சுந்தரபாண்டித்தேவர் இருக்கும் இடத்திற்குப் பாய்ந்தார்.

ஆனால், அந்தக் கணத்தில் ஜனங்களின் உள் ஆத்திரம் அப்படி ஒரு வெறிச் செயலாக மாறும் என்று யாரும் நினைக்கவில்லை.

ஆயிரம் கை படைத்த தர்ம தேவதையே தனது ஆயிரம் கைகளையும் நீட்டி சுப்பிரமணியரையும், பாண்டித்தேவரையும், பூமியிலிருந்து பறித்து எடுப்பது போலிருந்தது.

பிறகு, அவர்கள் உடல் ஒரு சண்ட மாருதத்தில் அகப்பட்டு அங்குமிங்கும் மோதுவது போல் மோதின.

கடைசியில் அவர்கள் அவயங்களே எங்கே போயின, எங்கே மறைந்தன என்று தெரியவில்லை.

* * *

ஒரு அரண்மனையே சிறைக் கூடமாக வைக்கப்பட்டிருப்பதை ஜனங்கள் பிறகுதான் அறிந்தார்கள்.

ராமகம்பீரன் தன் குடும்பத்தோடு ஐக்கியமானான். அவனது தாய் தந்தையர் சிறிது சிறிதாக விஷமிடப்பட்டிருந்தவர்கள், நல்லவேளையாக தகுந்த சிகிச்சைகள் செய்த பின் பிழைத்துக் கொண்டார்கள்.

Edited By A.K

ஆனால் இரண்டாவது மகன், அப்போதைய அரசரான பரமாதித்தன் ஒரு மாதத்தில் இறந்துவிட்டான்.

அவனது இடத்தில் ராமகம்பீரன் முடிசூட்டப் பெற்றான்.

நாடு முழுதும் இருளிலிருந்து விடுபட்டதுபோல் வெளிச்சமாகியது.

கம்பீரன் எதிரிகளான காம்போஜத்தைத் தோற்கடித்து, தன் நாட்டின் எல்லையைக் காப்பாற்றிக் கொண்டான்.

ஒரு நல்ல சுபிட்சத்தை நாடு முழுதும் கொணர்ந்தான். தன் மொழிக்கு 'எழுத்து' இல்லாததை ஏற்கெனவே சிடங்கில் இருந்தபோது கம்பீரன் உணர்ந்தான்!

மறைந்துபோன மகாமந்திரி ராமதாசரின் திட்டத்தை அனுசரித்து, சியாம் மொழிக்கு எழுத்து வடிவங்களை உண்டாக்கினான். பெரும்பாலும் வடமொழியை ஒத்துப் போயின எழுத்துக்கள்.

ராமாயணத்தின் மீது மிகுந்த பற்று இருந்ததால், தனது மொழியில் ராமாயணத்தை எழுதினான். (இது இன்னும் இருந்து வருகிறது)

ஏற்கெனவே ரத்னதாராவிடம் மனத்தைப் பறிகொடுத்தவன் அவன்.

முடிசூட்டிய சில காலம் வரையிலும் ரகசியமாக போய் பிட்னுபுரி அந்தப்புரத்தில் உள்ள தோட்டத்தில் அவளைச் சந்தித்து வந்தான். ஒருமுறை கையும் களவுமாகப் பிடிபட்டான்.

ஆனால் பிட்னுபுரி மன்னன், 'கம்பீரன் - ரத்னதாரா' இவர்களின் பழைய 'ஓவியு' முறைக்காதலை அறிந்து தனது தாரமான தாராவை கம்பீரனுக்கே தத்தம் செய்ய முன் வந்தான்.

Edited By A.K

தன் செய்கையே தவறு என்று உணர்ந்த கம்பீரன், அந்தச் சிற்றரசு மன்னரிடம், "என்னைப் பொறுத்தருள வேண்டும்" என்று கேட்டு வணங்கி விட்டு, அந்தக் கணத்திலிருந்தே ரத்னதாராவை தன் மனத்திலிருந்து நீக்க முற்பட்டான்.

பின்னர் ரத்னதாராவுடன் அதே கப்பலில் வந்த மற்றொரு பெண்ணை அவன் திருமணம் செய்து கொண்டான்.

அவள் மகாராணியாகி சியாம் நாட்டில் முதன்முதலாக கார்த்திகைத் திருநாளை ஏற்படுத்தினாள்.

பதினாலாம் நூற்றாண்டில் தொடங்கிய அந்தத் தீபத் திருநாள் இன்று பெரும் அளவில் சியாம் நாட்டில் கொண்டா டப்பட்டு வருகிறது.

சந்திராவதி, ஓடக்காரி டெப்சன் இவர்களின் ஒரு தலைக்காதலைப் புரிந்ததும், அவர்களையும் மனைவி களாக்கிக் கொண்டான், கம்பீரன்!

அந்தப்புரத்தில் சேர்ந்த டெப்சன் வெகுநாள் வாழ வில்லை. ஒரு கொள்ளை நோய் அவளைக் கொண்டு போய் விட்டது.

அவள் நினைவாக ஒரு பெரிய மாளிகை கட்டினான் அவன்.

சொந்த விஷயத்தில் இது போன்ற சிக்கல்கள் நீங்கியும், மக்களிடம் கவனம் செலுத்தி அவர்கள் மகிழ்ச்சியாக வாழ எண்ணற்ற வகைகளிலும் நன்மைகள் செய்து கொண்டு போனான், ராமகம்பீரன்.

அவன் தொடங்கி வைத்த 'ராமா' பெயர்தான் இன்று சியாம் முழுதும் வங்கி, ஓட்டல், தெருக்கள் எல்லாவற்றுக்குமே ராமா, ராமா என்ற அடைமொழிகளாக விளங்குகின்றன.

Edited By A.K

இந்தியாவுக்கு அப்பால் திளைத்துள்ள மற்றொரு ராம பூமியாக சியாம் மாறிவிட்டது.

*　　*　　*

கதையை முடித்தார். புத்தலாமா, அநாகரிகா!

மெய்ம்மறந்து கேட்டுக்கொண்டிருந்த நான், "அதிசய மான ஒரு அரச கதையைக் கூறிவிட்டீர்கள்! ஆனால் இந்த மண்ணில் ஆயிரக்கணக்கான வெவ்வேறு தேசத்து இளைஞர்கள் இரண்டாம் உலக யுத்தத்தில் மடிந்து இதோ சமாதி ஆகி இருக்கிறார்களே! இதன் காரணத்தைக் கூற வில்லையே?" என்றேன் நான்.

புத்தலாமா புன்னகை பூத்தார்.

"இந்தக் கதைக்கு இன்னும் ஒரு நூற்றாண்டு தள்ளி இருக்கிறது அது! மிக சுபிட்சமாகவும், செல்வமாகவும் நடந்து வந்த இந்த சியாம் ராஜ்யத்தில் பர்மியர்கள் படை எடுத்தார்கள். அப்போது ராமகம்பீரனது பரம்பரையினர் ஆண்டு வந்தார்கள். அவர்களை பர்மியர்கள் வென்றார்கள்! அந்த நாளைய வழக்கப்படி பர்மியர்கள் பெரிய கப்பம் வாங்கிப் போய் விட வேண்டும். ஆனால் அதற்குப் பதிலாக பர்மிய அரசரும், வீரர்களும் கண் மூடித்தனமாய்ப் புகுந்து, சியாம் தலை நகராகிய 'சுகோதய' நகரை நிர்மூலம் செய்தார்கள். அதில் குடியிருந்தோரைக் கொன்று வீழ்த்தினார்கள். பெண் களைக் கற்பழித்தார்கள்! வீடுகளை நெருப்பு இட்டுக் கொளுத்தி மண்ணோடு மண் ஆக்கினார்கள்! அவர்கள் செய்த கொடுமைகளை யாரும் மறக்கவே முடியாது. (இன்றும் தாய்லாந்தில் சுகோதய நகருக்குப் போனால் அந்த மாபெரும் சேதங்களைப் பார்க்கலாம்.)

நான்தான் ஏற்கெனவே சொல்லியிருந்தேனே ஒருவர் செய்த வினைகள் ஒருவரை விடுவதில்லை! எந்தக் காலத்திலும் எந்த ஜன்மத்திலும் துரத்திக் கொண்டு வரும்.

Edited By A.K

கற்பழித்து, கொலைபுரிந்து, தீ வைத்துச் சூறையிட்ட அந்தப் பர்மிய வீரர்கள் ஆயிரக்கணக்கானவர்கள்தான் இந்தத் தலைமுறையில் புது ஜன்மம் எடுத்தார்கள்! வெவ்வேறு தேசங்களிலிருந்து இதே மண்ணுக்கு வந்தார்கள். ஜப்பானியர் கைகளில் யுத்தக் கைதிகளாக அகப்பட்டு கொடூர முறைகளில் உயிர்களை இழந்தார்கள். சரித்திரத்தைக் குறை கூறாதே தம்பி! மனிதச் செயல்களைக் குறைகூறு! வினை எப்போதும் யாரையும் விடாது! அதை மனிதன் புரிந்து கொண்டு செயல்பட்டால் இன்பம் துன்பம் இரண்டுமற்ற அமைதியை அடையலாம்! இதைத்தான் புத்தபகவான் கூறினார். நாங்கள் அதை பிரசாரப்படுத்தி வருகிறோம். உனக்குப் பகவான் ஆசி பெருகட்டும்! ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி!'' என்றார் அவர்.

பிறகு எழுந்து சரசரவென்று நடந்தார். அந்த இரவு நிலவில் அவர் அந்த சமாதிக் கூட்டத்து வாசல் வரை போவது தெரிந்தது. பிறகு அவரது ஸ்தூல உடல் மெல்ல மெல்ல காற்றோடு கரைந்து போயிற்று.

சாய்ந்த நிலவு காய்ந்து கொண்டிருந்தது. பிரமை பிடித்தது போல உட்கார்ந்திருந்தேன்.

முதல் காலைப் பறவையின் குரல் கேட்டதும், பிரமை கலைந்து எழுந்து குவாய் ஓட்டலை நோக்கி நடந்தேன்.

முற்றும்

Edited By A.K



# ஸ்ரீ வேணுகோபாலன்

மனத்தை உருக்கும் விதத்தில் ஏராளமான சிறுகதைகளும், நாவல்களும் எழுதி வரும் ஸ்ரீ வேணுகோபாலன், நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு பட்டதாரி. இவரது முதல் கதை 1949ல் தினமணி கதிரில் பிரசுரமாகியது. அது முதல் இருபத்தெட்டு ஆண்டுகளாகத் தொடர்ந்து எழுதி வருகிறார் இவர்.

இவரது தொன்மை வாய்ந்த இந்த நாடகமான ''அமைச்சர் மதுரகவி''யைப் புகழ்பெற்ற டி.கே.எஸ். சகோதரர்கள் நடித்திருக்கிறார்கள். இவருடைய பல கதைகள் இந்திய மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

இவருடைய ''ஊதாப்பூ கண் சிமிட்டுகிறது'', ''நந்தா என் நிலா'' ஆகிய நாவல்கள் திரைப்படங்களாக வந்துள்ளன. இவர் ஊதாப்பூ இதழின் ஆசிரியராகவும் இருக்கிறார்.

Edited By A.K